பாசுரங்களின் தெளிவுரை



பெரியாழ்வார்.

ஸ்ரீ ஆழ்வார்கள் திருவடிகளே சரணம்.

மொழி பெயர்த்தவர் :—

ஸ்ரீமதி கனகவல்லி அம்மாள்
(Mrs. N. S. இராமசாமி அய்யங்கார்)
தேசபந்து வீதி
:-: கோயமுத்தூர்.

ஸ்ரீ ஆழ்வார்கள் அருளிச்செய்த
திவ்யப் பிரபந்த பாசுரங்களின் தெளிவுரை

★

பாசுரங்களின் தெளிவுரை

★

மொழி பெயர்த்தவர் :—

ஸ்ரீமதி கனகவல்லி அம்மாள்

(Mrs, N. S. இராமசாமி அய்யங்கார்)

தேசபந்து வீதி,

ராம் நகர், :: கோயமுத்தூர்.

முதற்பதிப்பு—1960

விலை ரூ, 1—12—0

ஆனந்தா பிரஸ், இடையர் வீதி, கோயமுத்தூர்.

திருவாய் மொழித்தெள்ளுரை

மதிப்புரை

எம்பெருமான் அருள்வடிவை உள்ளத்தில் வைத்து உருகி உருகி அன்பு செய்து, அந்த அன்புப்பரவசத்தில் ஆழ்ந்திருக்கும் பரம பக்தசிகாமணிகளே ஆழ்வார்கள், அவர்கள் அந்தக்கரணத் தினின்று எழுந்த ஆர்வ முழக்கமே திருவாய் மொழிப் பாசுரங்களாம் மார்புக்கோவிலில் மாதவனுருவை நாட்டி, ஆர்வத்தால் வழிபட்ட பூசைமலர்களான திருவாக்குகள் என்றும் அழகும் மணமும் கமழ் வன; ஆத்மாவுக்கு அமுதம் போன்றன. இப்பாசுரங்களை ஓத ஓத ஜீவன் ஸ்ரீமத் நாராயணனைச் சரண்புகுந்து, அவனருளே உணர்வாகி இன்புறும்.

உள்ளப் பொருளே, உலகப் பொருளே
வெள்ளப் பொருளே விண்ணின் விரிவே
எள்ளத் தனையும் எனைவிட் டகலா
துள்ளப் பொருளே ஒருவா சரணம்
உணர் வாய், உயிரின் உயிராய் உலகாய்
மணமாய் மலராய் மரமாய் விதையாய்க்
குணமாய்க் குணமற்றிடுநிர்க் குணமாய்
அணவுந் திருமால் அருளே சரணம்.

இவ்வாறு சரணாகதி நிலைவந்து விட்டால், பிறகு கவலையே யில்லை; தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகி, ஊனில் உயிரில் ஒன்றிய நாராயணனை உணரலாம். புருஷஸூக்தம் பொருளை அனுபவிக் கலாம்.

அவ்வாறு நாராயணசைதன்யத்தில் ஊறித்திளைத்தவர்களே நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கை, பெரியாழ்வார் போன்ற அருளாளர்.

இந்தபக்திபரவசம் சாதிமத நாடுநிற பலவேறுபாடுகளை கடந்தது.

ஆணில் அவனும், பெண்ணில் அவளும்
பூணில் மணியும் புலனில் உணர்வும்
காணில் அழகும் கனியில் அமுதும்
நாணேர் மணியும் நாரா யணனே!

இவ்வாறு அறிந்துணர்ந்த ஆழ்வார் பாசுரங்கள் ஆழக்கருத்தும், அள்ளக்குறையா அமுதச்சுவையுங்கொண்ட அமரவாக்குகளாகும், அவற்றிற்குப் பொருள் காணமுயன்றோர் பலர், எனினும் இன்னும் எத்தனையோ வகையாக அந்த அமுதவாக்கின் அருளழகை அனுபவிக்க இடமுண்டு.

இந்த நூலில், நமது **ஆழ்வாரம்மையார்** சில பாசுரங்களைத் தேர்ந்து தெளிவுபடுத்துகிறார். இந்நூலில் பெரியாழ்வாரின் வாத்ஸல்ய பாவனை ஆண்டாளின் மதுரபாவனை, குலசேகரரின் தாஸபாவனை தொண்டரடிப் பொடியின் பக்திச்சுவை, திருப்பாணரின் அன்புள்ளம் இவற்றை அனுபவிக்கிறோம். நம்மாழ்வார், திருமங்கை, மதுரகவி, பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் பேயாழ்வார், திருமழிசையாழ்வார் வைபவங்களும் வாக்கினிமையும், அடுத்த பாகமாக வெளிவரலாம். அறிவும் அன்பும், பொதுநலக்கருணையும் கொண்ட வக்கீல் **N.S. ராமசுவாமி** அய்யங்கார் மனைவியாரே இவ்வுரையாசிரியர் இந்த அம்மையார் அன்புரை அனைவரும் இன்புறத்தக்கதாகும் இத் **தொள்ளுரை** ஆழ்வார்வாக்கின் **உள்ளுரையாக** விளங்குகிறது

நல்ல முயற்சி, நாடெல்லாம் போற்றுக !

தூயர்பொலிக ! துயர்தீர் அன்பு
நேயர்பொலிக ! நிலவாழ்வுயர்க !
பேயர்ஓழிக ! பெருமாள் அருளும்
சேயர் வளர்க திசையெங்கிலுமே.

யோகசமாஜம்
சென்னை-20.

சுத்தானந்தபாரதி.

ஸ்ரீ

ஆழ்வார் எம்பெருமானுர் திருவடிகளே சரணம்

திவ்யப் பிரபந்தத் தெளிவுரையின்

முகவுரை

நமது தென்னுட்டில் தமிழ் வேதமாகிய இத்திவ்யப் பிரபந்தம் என்கிற தெய்வீக நூலை இயற்றி உலகிலுள்ள மனிதர்களுக்கு அறிவும், பக்தியும் ஊட்டிய... (வெளியிருளைப் போக்கிய பன்னிரண்டு சூரியர்களை)த்வாதச ஆதித்யர்களைக்காட்டிலும் அக இருளை ஒழித்துப் பெருமை பெற்ற ஆழ்வார்கள் பன்னிருவருடைய சரித்திரவைபவங்களுக்கு எல்லை காணமுடியாது. இவை அனேகம் வடமொழிக் கிரந்தங்களிலும் குருபரம்ப பராபிரபாவம் என்கிற மணிப்பிரவாள கிரந்தத்திலும் விரிவாகக்கூறப்பட்டுள்ளன. ஸ்ரீ வைகுண்ட நகரிலே செம்பொன் செய் கோயிலில் திருமாமணி மண்டபத்தில் ஆதிசேஷனது சொரூபமான சிறிய சிங்காதனத்தில் வீற்றிருந்து நித்திய முக்தர்களுடன் அளவிலாத ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற ஸகல கல்யாண குண பரிபூரணனை சர்வேஸ்வரன்.... இந்நிலவுலகத்தில் உள்ள உயிர்களும் அப்பெரும் பதவியை அடைந்து இன்புற்று வாழ எண்ணி.... அவ்வுயிர்கள் கர்மப் பெருங்கடலில் அமிழ்ந்து வருந்தி அலைவதை உற்று நோக்கி, அவர்களையும் அழிவிலா வீட்டை அடைவித்துக் கொள்ள வேண்டும் என்கிற இன்னருளாலே காரிருளில் திரிவார்க்குப் பொருள் விளங்கக் கைவிளக்குக் கொடுத்தாற் போல அக்ஞானம் என்கிற இருளில் அகப்பட்டவர்க்கு அர்த்தக் ஞானம் உண்டாகுமாறு சாஸ்திரம் என்கிற தீபத்தைக்காட்டிக் கொடுப்பதற்குத் திருமால் திருவுள்ளமிரங்கி.... தமது மற்றொரு தசாவதாரம் என்னலாம்படி வீறுபாடுடைய ஸ்ரீ பூமி நீளாதேவி ஸ்ரீ பஞ்சாயுதங்கள், ஸ்ரீவத்ஸம். கௌஸ்துபம். வனமாலை முதலிய சின்னங்களையும் அனந்தகருட விஷ்வக் ஸேனுதியரையும் பார்த்து, "நீங்கள் உங்களுக்கு ஏற்றபடி பூலோகத்தில் பிறந்து பிரபஞ்சத்தில் உள்ளாரை பிறவிப் பெருங் கடலினின்று கரையேற்றி வாருங்கள் என்று கட்டளை இட.... அவர்களும் அப்பணியை சிரமேற்கொண்டு தம்தம் அம்ஸத்துடன் ஆழ்வாராதியாக அவதரித்தார்கள். இவர்கள் எம்பெருமானுடைய கல்யாண குணங்கள் ஆகிய அமுத வெள்ளத்திலே மூழ்கி நன்ருக ஆழ்ந்திருப்பவர்கள் ஆதலால் இவர்களுக்கு

ஆழ்வார்கள் என்ற திருநாமம் வழங்கலாயிற்று. இவ்வாழ்வார்கள் ஜாயமான கடாக்ஷத்தவர்களாய் (பிறக்கும் போதே ஜான ஒளி உள்ள வர்களாய்) பகவத் பக்தியில் ஈடுபட்டு அதையே பற்றுக்கோலாகக் கொண்டு எம்பெருமான் வாஸம் செய்யும் அனேக க்ஷேத்திரங்களுக் குச் சென்று ஸேவித்தும் தொழுதும் பகவானுடைய லீலைகளையும் கல்யாண குணங்களையும் அன்புருகப் பாசுரங்களாக பாடி உலகத் தவர்கள் உய்யுமாறு ஓர் பொக்கிஷம் போல் கொடுத்தருளி இருக் கிறார்கள் இவைகளை ஸ்ரீவைஷ்ணவர் எல்லோரும் பிரதிதினமும் தங்களால் இயன்ற அளவு அனுஸந்தானம் (வாய்மொழியாகச் சொல்லுவது செய்து வருவது யாவரும் அறிந்ததே இத்திவ்யப்பிர பந்தம் மொத்தம் 4000 பாடல்கள் எனகணக்கிடப்பட்டிருக்கிறது இப்பாடல்களுக்கு பெரியோர்களான ஆசார்யாள் அனேகர் வியாக் யானம் (பொருள் உரை) இயற்றி, பாடல்களின் அர்த்தகங்களை விளங்கவைத்து எழுதி இருக்கிறார்கள். ஆகிலும் அவைகள் முதிர்ந்த அறிவும் சிறந்த கல்வியும் உள்ளவர்க்கு மட்டும் நன்குபயன்படுகிறது மற்றவர்களுக்குக் குழப்பத்தைக்கொடுத்து விடுகிறது இக்குழப்பத் தைக்கொடுத்து விடுகிறது இக் குழப்பத்தைத்தவிர்ப்பதற்கு இன்னும் சுலபமான நடையில் சிலபெரியோர்கள் எழுதி இருக்கிறார்கள். அவை களும் விரிவாக இருப்பதால் சாதாரணமா கன கல்வி கற்றவர்களுக் குப் பொருள் தெரிந்து கொள்ளத்திணர வேண்டி இருக்கிறது. இப்போதெல்லாம் இத்திவ்யபிரபந்தப்பாடல்களை சங்கீத வித்வான் கள் இன்னிசையுடன் கூட்டிகச்சேரிகளில் பாடுகிறார்கள் உதாரண மாக திருமாலை திருப்பாவை திருப்பள்ளியெழுச்சி நாச்சியார் திரு மொழி இவைகளில் உள்ள பாசுரங்களை (பாடல்களை) சங்கீத சபை களில் இராகதாளத்துடன் சேர்த்துப்பாடுவதை நாம் அடிக்கடி கேட் கிறோம். தவிர திருக்கோயில்களில் பகவானுக்க உகப்பாக இப்பாசு ரங்களை அனுசந்தித்து (பாடி) உத்ஸவங்கள் செய்வதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு மகிமை வாய்ந்த பாடல்களைபாடும் போது அதற்கு விளக்கமும் தெரிந்து கொண்டால் சுண்டக்காய்ச்சிய பசும் பாலில் கல்கண்டும் சர்க்கரையும் சேர்த்துப்பருகுவது போலல் லவா இருக்கும்? தற்காலத்தில் சிறு பெண்கள் பையன்கள் முதல் பெரியவர்கள் வரையில் திருவாய் மொழிபிரபந்தத்தில் ஆவல் உள்ள வர்களாக இருக்கிறார்கள் அவர்கள் எல்லோருக்கும் பயன்பட வேண் டும் என்கிற ஓர் ஆசையின் தூண்டுதலாலும் எம்பெருமானுடைய கிருபையினாலும் எனது சிற்றறிவிற்கு எட்டியமட்டில் — கங்கையில்

நீராடி விட்டு சிறிதளவு தீர்த்தமே முகர்ந்து கொண்டு வருவது போல திருவாய் மொழியாகிய அமுதவெள்ளத்திலிருந்த சில பாடல்களை மட்டுமே எடுத்து அவைகளை யாவரும் படித்துப்புரிந்து கொள்ளும் படியாகச் சுருக்கமாகவும் எளிய நடையிலும் உரை எழுதி புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேன். இப்புத்தகத்தைப்படிக்கும் சிறு பெண்கள் பிள்ளைகள்கூட எளிதில் புரிந்துகொண்டு திருப்திகொள் வார்கள் என்பது என் நம்பிக்கை. இன்னமும் இப்பாசுரங்களை ஆண் கள் பெண்கள் யாவரும் இராகதாளத்துடன் பயின்று சங்கீத உலகில் மேன் மேலும் பரவச்செய்ய வேண்டுமென்று மிக்க விருப்பத்துடன் கேட்டுக்கொள்கிறேன். திவ்யப்பிரபந்தப்பாடல்கள் தான் சிறியபுத்த கமும் ரெிய புத்தகமும் உரையுடனும் உரையில்லாமலும் அனேக புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றனறே ! இது ஒன்று எதற்கு ? என்ற கேள்விபிறக்கலாம், பகவானுடைய ஸௌந்தர்யத்தை எத்தனை தடவை எந்தவிதமாகக்கண்டுகளித்தாலும் திகட்டாதல்லவா ? அதேபோல அவனுடைய கல்யாணகுணங்களைப் பேசும் பாடல்களும் தெவிட்டாத தேனல்லவா ! ஆதலால் இப்படியும் ஒருபடி இருக்கலாமே என்று எழுதி என் கோரிக்கையை பூர்த்தி செய்திருக்கிறேன். இதில் அனே கம் பிழைகளும், தவறுதல்களும் நிறைந்திருக்கலாம் ஆனல் அறி வாளில் அவைகளை நீக்கிவிட்டு நல்விஷயங்களைமட்டும் கிரகிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன், தவிர இப்புத்தகத்திற்கு மதிப்புரை எழுதிக் கொடுத்த **ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** அவர்களுக்கும் என் மன மார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

என். எஸ். ஆர். கனகவல்லியம்மாள்.



பெரியாழ்வார்

சுபமஸ்து—ஸ்ரீயை நம:

ஆழ்வார்கள் அருளிச்செய்த

திவ்யப்பிரபந்த பாசுரங்களின் தெளிவுரை.

பெரியாழ்வார் வைபவ வரலாறு.

இவ்வாழ்வார் பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆனி மாதத்தில் ஸ்வாதி நக்ஷத்திரத்தில் வேயர் குலத்திலவதரித்து விஷ்ணு சித்தரென்று திருநாமமுடையவராய் வடபெருங் கோயிலுடையான் வடபத்திர சாயியினது கடாக்ஷத்தாலே அவ்வெம்பெருமானுக்குத் தொண்டு செய்தலே இயல்பாகவுடையவராய் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு எந்தக் கைங்கரியம் உகப்போ அதுவே நாம் செய்யத்தக்கது என்று ஆராய்ந்து பார்க்கும்போது, ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில் கம்ஸனுக்கு புஷ்பப் பணி செய்துகொண்டிருந்த மாலாகாரருடைய மனையிலே எழுந்தருளிப் பூமாலையை இரந்துபெற்று அணிந்துகொண்டானென்கிற கதையைப் படித்து புஷ்பம் ஸமர்ப்பிக்கையே எம்பெருமானுக்கு உகப்பு என்று நிச்சயித்து திருநந்தவனம் செய்து வடபெருங் கோயிலுடையானுக்குத் திருமாலை கட்டிச் சாத்திக்கொண்டிருந்தார்.

இப்படி இருக்கையில், பாண்டியகுலத்தரசனான வல்லபதேவனென்பவன், தர்மசீலனாய் மதுரையில் அரசாட்சி புரிந்துகொண்டிருக்கும் காலத்தில்....ஒரு சமயம்....நமக்கோ இஹ லோகத்தில் போகங்களுக்கு ஒரு குறைவும் இல்லை, இனி பரலோக நற்கதிக்கு முயல வேண்டும் என்று சிந்தித்து தமது புரோகிதரான செல்வநம்பியுடன் கூட ஆலோசித்து அனேக வித்துவான்களைத் திரட்டி சபை கூட்டி சபா மண்டபத்தின் முன்னிலையில் வித்தியா சுல்க்கமாக அளவற்ற பொருள்களை ஒரு சீலையில்முடிந்து உயரக்கட்டுவித்து பரப்பிரம்மத்தின் சொருபத்தை வேதப் பிரமாணங்களால் நிர்ணயித்துச் சொல்லுகிறவர் இந்தப் பொற் கிழியைப் பெறுதற்கு உரியர் என்று பிரசுரப்படுத்தினவளவில், ஸ்ரீவில்லிபுத்தூர் எம்பெருமானுடைய நியமனத்தால் ஸ்ரீ விஷ்ணு சித்தரும் உடனே புறப்பட்டு பாண்டிய ராஜனின்

பண்டித சபையில் எழுந்தருளி அரசனால் எதிர்கொண்டழைத்து திருவடி தொழுது பரமகௌரவத்துடன் உபசரிக்கப்பட்டு, சீரிய சிங்காசனத்தில் வீற்றிருந்து கமலாகாந்தனுடைய கருணையைச் சிந்தித்து அங்கே கூடியிருந்த வித்துவான்களுடன் வேதவாக்கியப் பிரமாணங்களை ஆக்ஷேப சமாதானங்களோடும், யுக்தி யுக்தமாகவும் எடுத்துக் காட்டி வெளியிட்டு வாதம் செய்து ஸ்ரீமந் நாராயணனே பரமபுருஷனென்றும், அவனைச் சரணமடைவதே சிறந்த மார்க்கம் என்றும் உபந்யாஸித்து பரதத்துவ ஸ்தாபனம் பண்ணி சகல வித்துவான்களும் வெட்கித் தலைகவிழ, வல்லப தேவனும் செல்வநம்பியும் நமஸ்கரித்துக் கொண்டாட, கம்பத்தின் உச்சியில் கட்டி இருக்கிற பொற்கிழி தானாகவே ஆழ்வார் முன்னே தாழ இழிய, இதுவும் பகவத் கிருபை என்று உவந்து அதனை ஆழ்வார் அறுத்து எடுத்துக்கொண்டருளினர்.

பிறகு அரசன் மஹோத்ஸவம் கொண்டாடி அவரைப் பட்டத்து யானைமேலேற்றி ஊர்வலம் செய்வித்தார். ஆழ்வாரும் அப்போது தமக்கு தரிசனம் தந்த திருமாலுக்கு திருப்பல்லாண்டென்னும், பிரபந்தத்தை (பாசுரங்களை) மங்களாசாஸனமாகப் பாடி ஸ்ரீவில்லிபுத்தூருக்கெழுந்தருளி, கிழியிற் கிடைத்த பொருளைக் கொண்டு வடபெருங் கோயிலுக்குக் கோபுரம் கட்டுவித்துப் பழைய படி நந்தவன கைங்கரியமே செய்துகொண்டு வருகையில், ஆழ்வார் கிருஷ்ணவதாரத்திலே மிகவும் ஈடுபட்டு அவ்வவதார சரிதைகளையே பிரதானமாகப் பாராட்டி அனுபவித்து, அவ்வனுபவத்தால் உண்டான ஆனந்தம் உள்ளடங்காமல் பெருகவே அதைப் பாடல்களாக வெளியிடத் தொடங்கி பெரியாழ்வார் திருமொழி என்னும் திவ்வியப் பிரபந்தத்தை அருளிச் செய்தார்—அவைகளில் சில பின்வருமாறு அமைந்திருப்பது.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

சுபமஸ்து.

திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் தெளிவுரை.

பாண்டிய பட்டர் அருளிச் செய்த

இவ்விரண்டு பாசுரங்களும் பெரியாழ்வாரின் பிரபாவத்தைச் சொல்லுகிறது.

பாசுரம்: **மின்னார் தடமதிள் சூழ்வில்லிபுத்தூரென்றொருகால்**
சொன்னார் கழற்கமலம் சூடினோம் - முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோம் கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து -

உரை: ஒளி நிறைந்து ஓங்கி நிற்கிற பெரிய திருமதிளாலே சூழப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் என்று ஒருதரம் உச்சரித்தாலும் அவர்களுடைய திருவடித் தாமரைகளை (எங்கள்) சிரஸின்மேல் சூடினோம். (தலையில் அலங்காரமாக அணிந்துகொண்டோம்) ஒரு சமயம் பெரியாழ்வார் மதுரையில் பாண்டிய அரசன் வல்லபதேவனுடைய ராஜ சபைக்கு எழுந்தருளி வேதப் பொருள்களை விளங்க உரைத்து வித்யா சுல்க்கமான பொன் முடிப்பை அறுத்துப் பெற்றுக்கொண்டாரென்று கீர்த்தியைப் பேசினோம். அவருடைய மகிமையைப் பேசினோம். இவற்றால் நற்கதியடையும் பாக்கியமும் பெற்றோம். ஓ நெஞ்சே சிந்தனைக்கும் நீ அனுகூலமாக இருக்கப்பெற்றதால் அதோகதியாகிய நரகக் குழியில் சேரும் வழியை அறவே நாசம் செய்தோம்.

பாசுரம்: **பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று**
ஈண்டிய சங்கமெடுத்தூத - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று -

உரை: பெரியாழ்வார் வித்வான்களுடைய சபைக்கு எழுந்தருளும் போது இவர்தான் பரதத்வ நிர்ணயம் செய்தருளப்போகிறார் என்று பாண்டிய அரசன் உபசரித்துக் கொண்டாடவும், வேதப் பொருள்களை யாவருக்கும் உணர்த்தும் உபகாரகரான பெரியாழ்வார் எழுந்தருளினார் என்று திரள் திரளான சங்கங்களை கைகளில் வைத்துக்கொண்டு பலர் ஊதவும். இருக்கையில் - அங்கே திரளாகச் சேர்ந்திருந்த

வித்வான்கள் அந்தக் கொண்டாட்டத்தைக் கண்டு பொருமல் இவரை வென்றுவிடவேணுமென்று பல பல வகையாகத் தர்க்கித்தும் வெற்றி பெருமல் தோற்றுப்போக ஸ்ரீமன் நாராயணனே பரதத்வம் என்று ஸ்தாபிப்பதற்கு வேண்டிய வேதப் பிரமாணங்களை எடுத்து விரிவாக உரைத்து பரதத்வ நிர்ணயம் பண்ணி - விரைவில் அதி சீக்கிரத்தில் பொன் முடிப்பை எவர் அறுத்துப் பெற்றுக்கொண்டாரோ? அந்த பெரியாழ்வாருடைய திருவடிகளே சரணம் என்பது -

ஸ்ரீ

எம்பெருமாள் திருவடிகளே சரணம்.

கண்ணன் கழலடிகளே சரணம் - அல்லது காப்பு.

அவதாரிகை : பாண்டிய ராஜன் பெரியாழ்வாருக்கு யானையின் மேலேற்றி மஹோத்ஸவம் செய்வித்தபோது அந்த உத்ஸவத்தைக் கண்டு ஆனந்திப்பதற்க்காக ஸ்ரீவைகுண்ட நாதன் எழுந்தருளி எதிரில் ஸேவை ஸாதிக்க ஆழ்வார் ஸேவித்து இந்த அருமருந்தான எம்பெருமானுக்கு யாவராலும் எத்தீங்கும் விளையாமலும் ஒரு அமங்களமும் நேரிடாதபடியும் மங்களமாகவே இருக்கவேணும் என்று இப்பல்லாண்டைப்பாடுகிருர்.

பாசுரம் : பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு *
பல்கோடி நூரு யிரமுந்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ண * உன்
சேவடி செவ்விதிருக் காப்பு.

உரை : மல்லர்கள் யாவரையும் அழித்த வலிமை வாய்ந்த தோள்களையுடையவனுயும் நீலமணி போன்ற நிறத்தையுடையவனுமானவனே ! பல பல வருஷங்களிலும், அனேக கல்பங்களிலும் இப்படி உண்டான உண்டாகும் காலமெல்லால் உன்னுடைய சிவந்த திருவடிகளின் அழகுக்கு எத்தீங்கும் நேரிடாதபடி குறைவற்ற ரக்ஷை உண்டாயிடுக.

பெரியாழ்வார் திருமொழி.

கண்ணன் திருவவதாரச் சிறப்பு.

அவதாரிகை : ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தைப் பரிபூரணமாக அனுபவிக்க ஆசைகொண்ட பெரியாழ்வார்இத் திருமொழியில் கிருஷ்ணனுடைய திருவவதார வைபவத்தையும், கண்ணன் அவதரித்த காலத்தில் திருஆயர்பாடியில் உள்ளவர்கள் சந்தோஷம் உள்ளடங்காமல் செய்த காரியங்களையும் அருளிச் செய்கிருர்.

முதற் பத்தில் - முதல் திருமொழி.- வண்ணமாடங்கள் -

பாசுரம் : வண்ணமாடங்கள் சூழ்திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெ சுண்ணம் எதிரெதிர் தூவிட
கண்ணன் முற்றம் கலந்தளராயிற்றே. 1

உரை : அழகு பொருந்தி அமைந்திருக்கின்ற மாடங்களாலே சூழப் பட்ட திருக்கோட்டியூரில் எழுந்தருளிஇருக்கிற கேசவன் என்கிற திருநாமமுடைய கல்யாணகுண பரிபூரணருன ஸ்ரீ கிருஷ்ணன் நந்த கோபருடைய இனிய திருமாளிகையிலே கோபாலனுக அவதரித்த வளவிலே ஆயர்பாடியிலுள்ளார் அனைவரும் அள்வுகடந்த ஆனந்த மடைந்து, ஒருவருக்கொருவர் எதிராக எண்ணெயையும், மஞ்சள் பொடியையும் ஒருவர் மேலொருவர் தூவிக்கொள்ளவே அவைகள் கீழே விழுந்து ஒன்று சேர்ந்து துகையுண்டு விசாலமாக லக்ஷணமான (நந்தகோபரின்) திருமாளிகையின் முற்றமானது சேறு மயமாகி விட்டது.

பாசு : ஓடுவார்விழுவா ருகந் தாலிப்பார்
நாடுவார் நம்பிரா னெங்குத்தானென்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களு மாயிற்றுய்ப் பாடியே. 2

உரை : கோகுலத்தில் உள்ளாரெல்லாருக்கும் தங்கள் தலைவரான நந்தகோபருக்கு பிள்ளை பிறந்ததாகக் கேள்விப்பட்டு அதிக சம்பிர மத்தால் அளவற்ற ஆனந்தமடைந்து இன்னது செய்வதென்று தெரி யாமல் போகவே அவ்வாயர்பாடியானது. சிலர் ஓடுவார்களும், சிலர் சேற்றில் வழுக்கி விழுவாரும், சந்தோஷ மேலீட்டினுல் உரக்க கோஷம் செய்வார் சிலரும் குழந்தை நம் கண்மணி எங்கே என்று தேடுவாரும், நமக்கு ரக்ஷகனை கண்ணன் எங்கே இருக்கிருன் என்று கேட்பார் சிலரும், பாடுவார் சிலரும் பலவகை வாத்தியங்கள் முழங்க அதற்குப் பொருத்தமாக நின்று கூத்தாடுவார் பலருமாக.... இப்படி ஐந்து லக்ஷம் குடியில் உள்ளவர்களோடு சொல்ல முடியாத கோலாகலத்தோடு கூடினதாக ஆயிற்று. 2

பாசு : பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத்தாம் புகுவார் புக்குப் போதுவார்
ஆணெப்பாரிவன் நேரில்லை காண். திரு
வோணத்தா னுலகாளு மென்பார்களே. 3

உரை : ஸ்ரீமானுன கிருஷ்ணன் .... கம்ஸன் முதலானவர்களின் கண்ணில் தான் படாதபடி தன்னைக் காத்துக்கொள்வதற்காக குழந்தை வடிவுடன் நந்தகோபருக்குப் புத்திரனுக அவதரித்த காலத்தில் நந்த கோகுலத்திலுள்ள ஆயர்களனைவரும் அந்தக்குழந்தையைப் பார்ப்பதற்காக நந்தகோபருடைய திருமாளிகையில் புகுந்து வந்துகொண்டும் பார்த்தவர்கள் திரும்பப் போய்க்கொண்டும் உலகில் ஆணுய்ப் பிறந்திருப்பவர்களில் இவனேடு ஒத்திருப்பார் யாரும் இல்லை. சிரவண நக்ஷத்திரத்தில் பிறந்த இவன் எல்லாரைக் காட்டிலும் விலக்ஷண புருஷன். சாமுத்திராகா சாஸ்திரங்கள் சரியானபடி அமைந்திருப்பதால் இவன் உலகம் முழுவதையும் ஆளக்கூடியவன் என்று சொல்லிக் கொண்டும் இருந்தார்கள். 3

பாசு :

உறியை முற்றத்துருட்டிநின் ருடுவார்
நறுநெய் பால்தயிர் நன்ருகத் தூவுவார்
செறிமென் கூந்த லவிழத் திளைத்து எங்கும்
அறிவழிந்தன ராய்ப்பாடி யாயரே. 4

உரை : கண்ணன் பிறந்த சந்தோஷம் உள்ளடங்காமல் கோகுலத்திலுள்ள இடையர்களில் சிலர் பால் தயிர்களைச் சேகரித்து வைத்திருக்கும் உறிகளை அறுத்துக்கொண்டு வந்து முற்றத்திலே உருட்டி விட்டு கூத்தாடினுர்கள். சிலர் மணம் மிகுந்த நெய்யையும், பால்தயிர் முதலியவற்றையும் மிகுதியில்லாமல் அபாரமாகத் தானம் செய்தார்கள். சிலர் நெருக்கமாகவும் மெத்தென்றும் இருக்கிற தங்கள் தலைமுடி அவிழ்ந்து கலைந்ததும் தெரியாமல் நர்த்தனம் செய்தார்கள், ஆக யிப்படி சேரியடங்களும் இருக்கின்ற ஆயர்களெல்லாரும் சந்தோஷப் பெருக்கினுல் இன்னதுதான் செய்வதென்று தெரியாமல் உன்மத்தம் பிடித்தவர்கள்போலானுர்கள். 4

பாசு :

கொண்ட தாளுறி கோலக் கொடுமழு
தண்டினர் பறியோலைச் /சயனத்தர்
விண்ட முல்லை யரும்பன்ன பல்லினர்
அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாடினுர் 5

உரை : கோகுலத்து இடையர்கள் தங்கள் ஜாதிக்கும் தொழிலுக்கும் தகுந்தபடி நெருக்கமாக முறுக்கிப் பிண்ணி யிருக்கிற உறிகளையும் அழகிய கூர்மையான மழுவென்றும் ஆயுதங்களையும், கைத்தடி, (பசு மேய்க்கிற தடிகளையும்,) தாழை மடலிலிருந்து உறித்த ஓலையினுல்

முடைந்த பாயையும் உடையவர்களாய் விரிந்த (மலர்ந்த) முல்லைய ரும்பு போன்ற தங்கள் பற்கள் வெளியே தோன்றும்படி சிரித்துக் கொண்டு ஆனந்தத்தோடு சந்தோஷ சூ ச க ம ா க (நெய்யாடல்) எண்ணெ தேய்த்துக்கொண்டு ஒருவரோடு ஒருவர் நெருங்கி வந்து தழுவிக்கொண்டு கூத்தாடி எண்ணெ ஸ்நானம் செய்தார்கள். 5

பாசு :

கையுங் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித்தாளுக் கங்காந்திட .
வைய மேழுங் கண்டான் பிள்ளை வாயுளே.

உரை : யசோதைப் பிராட்டியானவள் ஒருநாள் குழந்தைக் கண்ணனை குளிப்பாட்டும்போது வழக்கம்போலக் குழந்தையின் கையையும் காலையும் நீட்டி நிமிர்த்து குறுங்கண்ணுடைய பசுமஞ்சள்பூசி நல்ல வாசனைத் திரவியங்கள் சேர்த்துக் கடாரத்தில் காய்ச்சின தீர்த்தத்தினுல் கண்ணன் திருமேனிக்குப் பாங்காக நன்ருய் ஸ்னனம் செய்வித்து முடிவில் மஞ்சள் தேய்வைக்கொண்டு மெல்லிய நாக்கை வழிக்கும்போது அந்தக்குழந்தை வாயைத்திறக்க யசோதையானவள் அந்த வாயிலே ஸகல லோகங்களையும் கண்டாள். கண்ணன் யசோதைக்கு தன்னுடைய ஸ்வதந்திரமான இச்சையினுலே இப்படிக் காட்டியருளினுர்.

பாசு :

வாயுள் வையகங்கண்ட மடநல்லார்
ஆயர் புத்திரனல்ல னருந்தெய்வம்
பாய சீருடைப் பண்புடைப் பாலகன்
மாயனென்று மகிழ்ந்தனர் மாதரே. **7**

உரை : கண்ணனுடைய வாயில் சகல உலகங்களையும் **கண்ட** யசோதையானவள் ஆனந்தமடைந்து மற்றுமுள்ள பெண்டுகளையும் அழைத்துக்காட்ட கண்ணன் அருள்கூர்ந்து அவர்களுக்கும் அப்படியே காட்டிக்கொடுக்க....அவர்களும் யசோதையைப் போலவே கண்ணன் வாயில் சகல லோகங்களையும் பார்த்து ஆச்சரியப்பட்டு இவன் சாமானியமான இடைப்பிள்ளையல்லன் பெறுதற்கரிய பரம புருஷனை தெய்வம். பரவிய புகழும் குணங்களுமுடைய யிவன் ஆச்சரியமான சக்தியுடன் கூடிய பிள்ளை....சாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணனே இப்படி வந்து பிறந்திருக்கவேணுமென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு கொண்டாடிக் கூறினுர்கள்.

பாசு : **பத்துநாளுங் கடந்த விரண்டாநாள்**
எத்திசையும் சயமரங் கோடித்து
மத்த மாமலை தாங்கிய மைந்தனை
உத்தானஞ்செய் துகந்தன ராயரே **8**

உரை : பத்துநாளும் கழிந்து பன்னிரண்டாம் நாளான தினத்திலே ஸ்ரீ கிருஷ்ண சிசுவுக்கு நாமகரணம் செய்யவேண்டி எங்கு பார்த்தாலும் ஜயஸ்தம்பம் நாட்டி வெற்றித் தோரணங்களால் அலங்கரித்து....மதம் பிடிக்கும் தன்மையுள்ள மிருகமாகிய யானைகள் தங்கியிருக்கிற கோவர்த்தன மலையைக் குடையாகக் கையில் ஏந்தி நின்ற குழந்தையாகிய கண்ணனை....ஆய்ர்கள் தங்கள் தங்கள் கைகளிலே எடுத்து வைத்துக்கொண்டு ஆனந்தம் பொங்க பூரித்து நின்றார்கள். கோவர்த்தன பர்வதத்தை பாலகிருஷ்ணனாக இருக்கும்பொழுதே ஒரு சுண்டு விரலில் தாங்கக்கூடிய வலிமையுள்ள கண்ணன் மாயா சக்தியுடன் கூடிய குழந்தையாதலால் ஆயர்கள் கையில் தாங்குவதற்கு தம்மை (தன்னை மிக) இலேசாகச் செய்துகொண்டு மிக்க கிருபை கூர்ந்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்தருளினார். 8

பாசு : **கிடக்கில் தொட்டில் கிழிய வுதைத்திடும்**
எடுத்துக்கொள்ளின் மறுங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கி லுதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கிலாமையால் வான் மெலிந்தேன் நங்காய் **9**

உரை : யசோதை தன்னுடைய சமீபத்திலிருக்கின்ற ஸ்திரீகளைப் பார்த்து தனது குழந்தை பருவத்திற்கு மீறிய காரியங்களைச் செய்கிறான் என்பதைச் சொல்லுகிறாள். நங்கைமீர்காள்! நீங்கள் பருவத்திற்குத் தகுந்த செயல்களைச் செய்கிற குழந்தைகளைப் பெற்றிருப்பதால் ஒன்றும் குறைவில்லாமல் இருக்கிறீர்கள். என்னுடைய பிள்ளையைத் தொட்டிலில் கிடத்தினால் தொட்டிலானது ஒடிந்து சிதறிப்போகும்படி கால்களினால் உதைக்கின்றான், குழந்தையின் மெல்லிய தளிர்போன்ற கால்களுக்கு நோவு உண்டாகுமே என்று எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டால் திமிறிக்கொண்டு நழுவி இடுப்பை முறித்து விடுகிறான். இவ்விதச் சேஷ்டையினால் எனக்கே இடுப்பு முறியும்போது இக்குழந்தையின் சுகுமாரமான திருமேனிக்கு எவ்வளவு நோவு உண்டாகுமோ என்று அஞ்சி ஒரு செயலும் செய்ய முடியாதபடி மார்பில் அணைத்துத் தழுவிக்கொண்டால் கால்களினால்

எனது வயிற்றில் அழுந்த உதைக்கின்ருன். இப்படி இவன் தனது பருவத்திற்கு மீறிய காரியங்கள் செய்வதைத் தாங்குவதற்குப் போது மான சக்தி இல்லாமையால் நான் மிகவும் மெலிந்து இளைத்து விட்டேன் என்ருல் சகிக்கக் கூடவில்லை என்கிருள். ௯

பாசு : **செந்நெல் லார்வயல் சூழ்திருக்கோட்டியூர்**
மன்னு நாரணன் நம்பி பிறந்தமை
மின்னு நூல் விட்டுசித்தன் விரித்த இப்
பன்னு பாடல் வல்லார்க்கில்லை பாவமே. 10

உரை : செந்நெல் தானியங்கள் நிறைந்த கழனிகளாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே நித்தியவாஸம் பண்ணுகிற ஸ்ரீமன் நாராயணன் சர்வேஸ்வரன் திருவாயர்பாடியில் அவதரித்தபடியை யக்ஞோபவீதத்தால் விளங்குகிற பெரியாழ்வார் விஸ்தாரமாக அருளிச் செய்ததும் பக்தர்கள் எப்பொழுதும் உகப்பதுமான இத் திருமொழிகளை ஓதுபவர்கள் (பாடுபவர்கள்) ஸர்வபாவங்களினின்றும் நீங்கப்பெற்று பகவான் அருளுக்குப் பாத்திரமாக வாழ்வார்கள். 10

அடிவரவு : **வண்ணம் ஓடுவார் பேணி உறியை கொண்ட கை**
வாயுள் பத்து கிடக்கில் செந்நெல் சீதக்கடல்
பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியாழ்வார் திருமொழி.

முதற்பத்து இரண்டாம் திருமொழி
சீதக்கடலுள் திருமேனி வடிவழகு

அவதாரிகை : திருவாயர்பாடியில் அவதரித்த கண்ணபிரானுடைய திவ்விய மங்கள விக்ரக ஸௌந்தரியத்தை யசோதைப்பிராட்டி அனுபவித்தாற்போலே ஆழ்வார் தாமும் கண்ணனிடத்தில் உள்ள பக்திப்பெருக்கால் தம்மை யசோதையாகவே பாவித்து அத்தன்மையையடைந்து கண்ணனைத் திருவடியில் தொடங்கித் திருமுடியளவாக அனுபவித்துப் புகழ்ந்து பேசுகிருர்.

பாசு : **சீதக்கடலுள்ளமுதன்ன தேவகி**
கோதைக்குழலா ளசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே பவளவாயீர் வந்து காணீரே 1

உரை: குளிர்ச்சியான திருப்பாற்கடலிலே உள்ளமுதமாகப் பிறந்த ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு ஒப்பான தேவகீ தேவியால்....மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட கூந்தல் கத்தையை உடைய யசோதைப் பிராட்டிக்குக் (கொணர்ந்து) கொண்டுவிடப்பட்டவனும் அறிவு வளராத சிசுவானவனுமான கண்ணன்....(சாக்ஷாத் எம்பெருமானுடைய சிறந்த திருவடியில் தேன் வெள்ளம் இருக்கிறது என்று சொல்லப் படுகிறது) அவ்வெம்பெருமானுடைய அவதாரமேயானதால் அப்படிப் பட்ட தனது திருவடியில் ஊறுகின்ற தேனைப் பருகுவதற்காக திருவடிகளிலொன்றை யெடுத்துவாயிலே வைத்துச் சுவைத்துக் கொண்டிருக்க அதைக்கண்ட யசோதைப்பிராட்டி மிக மகிழ்ந்து இதைப் பிறரும் கண்டு மகிழவேணும் என்றெண்ணி அருகிலுள்ளவர்களை கொண்டாடி யழைத்து பவழம்போல் சிவந்த அதரத்தையுடைய பெண்களே! நீங்கள் இக்குழந்தை சுவைத்துண்ணும் தாமரை போன்ற திருவடிகளை வந்து பாருங்கள் பாருங்கள் என்று அவர்களுக்குக் காட்டுகின்ருள். 1

பாசு: முத்தும் மணியும் வயிரமும் நற் பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல் , எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள் ,
ஒத்திட்டிருந்தவா காணீரே ஒண்ணுதலீர்வந்து காணீரே 2

உரை: இன்னும் - திருமேனி எங்கும் நீல ரத்தின மணிபோன்ற வர்ணத்தையுடயவனுன கண்ணனுடைய திருவடிகளில் உள்ள பத்து விரல்களும்....முத்துக்களையும், ரத்னங்களையும், வஜ்ரங்களையும், மாற்றுயந்த பொன்னையும் மாற்றி மாற்றிப் பதித்து வைத்து இழைத்தாற் போலே ஒன்றோடொன்று ஒத்து அமைந்திருப்பதைப் பாருங்கள். ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்களே! வந்து காணுங்கள். குழந்தையின் பத்து விரல்களும் ரத்னங்களின் ஒளி விளங்கச் சேர்ந்து லக்ஷணங்களில் குறையொன்றும் இல்லாமலிருப்பதை வந்து பாருங்கள் என்கிருள். 2

பாசு: பணைத்தோ ளிளவாய்ச்சி பால் பாய்ந்த கொங்கை
அணைத்தார வுண்டு கிடந்தவிப் பிள்ளை ,
இணைக்காலில் வெள்ளித் தளைநின் றிலங்கும்.
கணைக்கா லிருந்தவா காணீரே காரிகையீர் வந்து
காணீரே. 3

உரை : மூங்கில் போன்ற தோள்களேயும் இளமைப்பருவத்தையுமுடைய ஆய்ச்சியான என்னுடைய பால் சொரிகின்ற கொங்கையை தனது சிறு கரத்தால் அணைத்துக்கொண்டு வயிறு நிரம்ப பாலுண்டு களித்துக் கிடக்கின்ற இந்தக் குழந்தையினுடைய இணை சேர்ந்து அழகுடன் அமைந்த (திருவடிகளில்) கணைக்கால்களில் வெள்ளித் தண்டையுடன் நின்று பிரகாசிக்கும் அழகைப் பாருங்கள் - அழகு மிகுந்த பெண்களே வந்து பாருங்கள். 3

பாசு : **உழந்தாள் நறுநெய் யொரோ தடாவுண்ண,**
இழந்தா னெரிவினு லீர்த்தெழில் மத்தின்
பழந்தாம்பா லோச்சப் பயத்தால் தவழ்ந்தான்.
முழந்தா ளிருந்தவாகாணீரே முகிழ் முலையீர் வந்து
காணீரே. 4

உரை : நான் மிகவும் பிரயாசைப்பட்டு பாலைக்கறந்து காய்த்துத் தோய்த்து வெண்ணை யெடுத்து உருக்கி மிடாக்களில் சேர்த்து வைத்திருக்கின்ற மணம் மிகுந்த நெய்யை ஒவ்வொரு மிடாவாக மிகுதியில்லாமல் வாரியுண்டான். இவன் இவ்வளவு நெய்யை உண்டால் ஜரிக்கமாட்டாது இப்பிள்ளையை இழந்தவளாவேன் என்கிற வயிற்றெரிச்சலினுல் கையைப்பிடித்து இழுத்து அழகிய மத்தில் சுற்றிக் கடைந்து பழகிய தாம்பாலே (கயிருலே) அடிப்பதாக நான் ஓங்க பயத்தால் அவ்வடிக்கு தப்புவதற்காகத் தவிழ்ந்து செல்கின்ற இவனுடைய முழங்கால்களிருக்கிற அழகைப் பாருங்கள். முகிழ்போன்ற முலையுடைய பெண்களே வந்து பாருங்கள். (கண்ணன் தாய் அடிக்கப்போகிருள் என்கிற அச்சத்தால் தயங்கித் தயங்கித் தவிழும் போது குழந்தையினுடைய முழங்கால்கள் மிகுந்த சோபையுடன் விளங்குகிறது என்பதாம்) 4

பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு
உறங்குவான்போலே கிடந்தவிப்பிள்ளை
மறங்கொளிரணியன் மார்வைமுன் கீண்டான்
குரங்குகளை வந்து காணீரே குவிமுலையீர் வந்து காணீரே. 5

முன்பு ஒரு காலத்தில் தன்னிடத்தில் துவேஷம் கொண்ட ஹிரணியனுடைய மார்பைப் பிளந்தவனும்(கண்ணன் பிறந்து கம்ஸன் முதலானவர்கள் கண்ணில் படாதபடி நந்தகோகுலத்தில் ஒளித்து வளருகிருனென்பதை அறிந்த கண்ணனது தாய் மாமனுகிய கம்ஸன்

அக்குழந்தையை கண்டறிந்து கொல்லும்பொருட்டு பல அசுரர்களை ஏவுகிற கிரமத்தில் பூதனை என்னும் ஒரு அரக்கி அழகான பெண்ணுருவத்துடன் கொடுமை செய்வதற்காக கோகுலத்தில் நந்தகோபருடைய மாளிகைக்கு வந்து அங்கு தூங்கிக்கொண்டிருக்கிற குழந்தை கிருஷ்ணனை எடுத்து தனது விஷம் தடவின முலையைக்கொடுத்துக் கொல்ல முயல) பகவானன குழந்தை அவ்வரக்கியின் ஸ்தனங்களை கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்கிற பாவனையிலே முலையைப் பசையறும்படி அவளுடைய உயிருடன் சேர்த்து உறிஞ்சி உண்டு அவளைக் கதறி உயிர் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்துவிட்டு ஒன்றுமறியாதவன்போல் தூங்குகிற பாவனையில் படுத்திருப்பவனான இக் கண்ணனுடைய திருத்துடைகள் இருக்கின்ற எழிலை வந்து காணுங்கள்! குவிந்த முலைகளையுடைய பெண்களே வந்து பாருங்கள். 5

பாசு: **மத்தக் களிற்று வசுதேவர் தம்முடை**
சித்தம் பிரியாத தேவகி தன்வயிற்றில்
அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய வச்சுதன்
முத்தமிருந்தவாகாணீரே முகிழ்நகையீர்வந்து காணீரே- 6

உரை: மதங்கொள்ளும் யானைகளைக்கட்டியாளும் தன்மையான ஸ்ரீ வசுதேவருடைய மனத்தைவிட்டுப் பிரியாத தேவகீ தேவியின் வயிற்றில் ஹஸ்தநக்ஷத்திரத்திற்குப் பத்தாவதான திருவோணத் திருநாளிலே அவதாரம் செய்த கண்ணபிரானுடைய (கண்ணன் பிறந்த.... அவனுக்கு உரிய நக்ஷத்திரத்தை நேராகச் சொன்னல் சத்துருக்கள் ஏதாவது அபிசாரம் முதலியவைகளால் கண்ணனுக்குத் தீங்கிழைப்பார்கள் என்கிற சங்கையால் அஞ்சி அத்தத்தின் பத்தாநாள் என்று ஆழ்வார் சொல்லுகிறார்) அக்கண்ணனுடைய சண்ணமிருந்தபடியைப் பாருங்கள் புன்சிரிப்பையுடைய பெண்களே! வந்து பாருங்கள். 6

பாசு: **இருங்கைம் மதகளி றீர்க்கின் றவனை**
பருங்கிப் பறித்துக்கொண் டோடுபரமன்றன்
நெருங்கு பவளமும் நேர்நாணும் முத்தும்
மருங்கு மிருந்தவாகாணீரே வாணுதலீர் வந்து காணீரே-7

உரை: ஒரு சமயம் கண்ணனுடைய மாமனாகிய **கம்ஸன் கண்ண**னைக்கொல்ல வேணும் என்கிற யோசனையில் மதுராபட்டணத்திற்கு கண்ணனையும் பலராமனையும் கபடமாக அழைக்க **அவ்வழைப்புக்**

கிணங்கி அவர்களும் மதுராபுரி சென்று மாமனுடைய அரண்மனைக் கேக அங்கு அவர்களைக்கொல்லும் பொருட்டு கம்ஸனுல் ஏவி விடப் பட்டு எதிர்த்து வந்த பெரிய துதிக்கையையுடைய மத்த கஜமான குவலயாபிடமென்கிறயானையையும் அதனைத்தன் வசமாக நடத்துகிற பாகனையும் கொன்று அந்த யானையின் கொம்புகளைப் பிடிங்கி எடுத் துக்கொண்டு கம்ஸனிருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு ஓடின பரமபுருஷனுன் இக்குழந்தையினுடைய.... நெருக்கிக் கோத்த பவழ வடமும், அழகிய அரை நாணும், முத்து வடமும் கட்டி இவற்ருேடே சேர்ந்த அரையும் (வயிற்றிர்க்குக் கீழ்பாகம்) இருக்கிற பிரகாசத்தைப் பாருங்கள். ஒளிபொருந்திய நெற்றியையுடைய பெண்களே வந்து பாருங்கள் :— 7

பாசு : **வந்த மதலைக் குழாத்தை வலிசெய்து**
தந்தக் களிறுபோல் தானே விளையாடும்
நந்தன் மதலைக்கு நன்று மழகிய
உந்தி யிருந்தவாகாணீரே ஒளியிழையீர்வந்து
காணீரே— 8

உரை : தான் சிறுகுழந்தையாக இருந்தாலும் தன்னேடு விளையாடு வதற்கு வருகின்ற சிறுபிள்ளைகளின் கூட்டத்தில் தனது வல்லமை யைக்காட்டி அவர்களை எல்லாம் அடக்கி அவர்கள் எல்லாரும் ஒரு பக்கமும் தான் மட்டும் ஒரு பக்கமுமாக....அப்பொழுதுதான் கொம்பு முளைத்தெழும் யானைக்குட்டிபோல் தானே முக்கியனுய் நின்று விளையாடுகிறவனும் நந்த கோபருக்கு மிகவும் அன்புடன் கட்டிய வறுமான பிள்ளையாகிய இக்கண்ணனுடைய மிக்க அழகியதான நாபி இருப்பதைப்பாருங்கள். ஒளிமிகுந்த ஆபரணங்களை அணிந்த பெண்களே வந்துபாருங்கள். (இங்கு நாபி என்பது தொப்புள் கொப் பூள் என்றும் கொள்ளலாம்.) 8

பாசு : **அதிருங் கடல்நிற வண்ணனை - ஆய்ச்சி**
மதுர முலையூட்டி வஞ்சித்து வைத்து
பதறப் படாமே பழந்தாம்பா லார்த்த
உதர மிருந்தவாகாணீரே ஒளிவளையீர்வந்து காணீரே- 9

உரை : உரத்துக்கோஷிக்கின்ற கடலினது நிறம் போன்ற நிறத்தை யுடைய கண்ணனுக்கு யசோதையானவள் இனிய முலைப்பாலூட்டி (அவன் கோகுலத்திலுள்ள இடையர்கள் மனைகளிலெல்லாம் சென்று பால், தயிர், வெண்ணெ, முதலியவற்றைத்திருடி உண்டதை இடைச்சி

களெல்லாம் வந்து யசோதையிடம் முறையிட்டுச்சொல்ல அக்குற்றத் திற்கு ஒரு தண்டனை கொடுக்க) தான் இவனை உரலில்கட்டப் போவதை இவன் அறிய வொண்ணுதபடி ஏமாத்தி நிதானமாக வந்து பழங்கயிற்ருல் (பழகின தாம்புக்கயிற்ருல்) உரலோடு சேர்த்துக் கட்டிவைத்த இவனுடைய வயிறும் இருந்தபடியைக் காணுங்கள். ஒளிமிகுந்த வளையல்களை அணிந்த பெண்களே! வந்துபாருங்கள் :— (கண்ணனை அதிரும் கடல் நிற வண்ணன் என்று சொன்னதால்.... அவன் யாருக்கும் அடங்காதவன் என்பது தெளிவு—) 9

பாசு : **பெருமாவுரலிற் பிணிப்புண்டிருந்து, அங்**
கிருமா மருத மிறுத்த விப்பிள்ளை
குருமாமணிப்பூண் குலாவித்திகழும்
திருமார் விருந்தவாகாணீரேசேயிழையீர் வந்து
காணீரே 10

உரை : கண்ணன் மிகப்பெரிய உரலோடு கட்டுண்டிருந்த.... அந்த நிலைமையிலே அவ்வுரலை யிழுத்துக்கொண்டே வீட்டின் வெளிப்புரம் சென்ற பொழுது அங்கிருந்த இரண்டு பெரிய மருதமரங்களின் நடு வில் உரலைபுகுத்து இழுத்து மரங்களை முறித்து.... நாரதர் சாபத்தால் மரமாய்க்கிடந்த நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் இருவர்களு டைய சாபத்தையும் நீக்கியருளின இக் கண்ணபிரானுடைய....மிகவும் சிறந்த (சிலாக்கியமான) கௌஸ்துவாபரணமானது அசைந்து விளங் கிக்கொண்டிருக்கிற திருமார்வு இருக்கிற சோபையைப்பாருங்கள், பொருத்தமான ஆபரணங்களை அணிந்த பெண்களே! வந்து பாருங்கள். 10

பாசு : **நாள்களோர் நாலைந்து திங்க ளளவிலே**
தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்
வாள்கொள் வளையெயிற் ருருயிர் வவ்வினன்
தோள்க ளிருந்தவாகணீரே சுரிகுழலீர்வந்து காணீரே 11

உரை : கண்ணன் பிறந்தபின்பு நாட்கள் ஒரு நாலைந்து மாதம் சென்ற வளவிலே (ஒரு சமயம் நந்தகோபர் மாளிகையில் கண்ணனைத் தொட்டிலில் தூங்கச்செய்துவிட்டு யசோதைய முனைக்குப்போயிருக்க) அச்சமயம் கம்ஸனுல் ஏவப்பட்ட அசுரனெருவன் வண்டியினது சக்கர உருவத்துடன் குழந்தை படுத்திருக்கிற தொட்டிலினருகிற் சென்று ஆவேசத்துடன் மேல்விழுந்து கொல்லமுயல அதையறிந்த குழந்தைக் கண்ணன்.... பசித்து பாலுக்கு அழுகிற பாவனையால்

தனது சிறிய கால்களை மேலே தூக்கித் தூக்கி அச்சகடத்தை உதைக்கவும் அவ்வுதைபட்டமாத்திரத்தில் அச்சகடு கீழே விழுந்து அசுரனாகவே அழிந்து போயிற்று. இப்படி சகடத்தையும் முறித்து ஒளி கொண்டு வளைந்த கோரப்பற்களையுடைய பூதனையினது அரிய உயிரையும் முடித்த என் கண்ணனின் தோளழகை வந்து பாருங்கள். சுருண்டகேசத்தையுடைய நங்கைமீர் வந்து பாருங்கள்— 11

பாசு: **மைத்தடங்கண்ணி யசோதை வளர்க்கின்ற**
செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை
நெய்த்தலை நேமியுஞ் சங்கும் நிலாவிய
கைத்தலங்கள் வந்து காணீரே கனங்குழையீர் வந்து
காணீரே — 12

உரை: மையிட்டு அழகுபடைத்த பெரிய கண்களையுடைய யசோதைப் பிராட்டியால் (குழந்தைக்குச் செய்ய வேண்டிய காரியங்களை பிறர் கையில் காட்டிக்கொடுக்காமல் தானே ஆதரவுடன் செய்து) வளர்க்கப்படுகின்றவனும். நல்ல நிலத்தில் முளைத்த கொடியில் மலர்ந்த கருநெய்தல் பூவின் நிறம் போன்ற நிறத்தையுடையவனுமான இந்த பாலகிருஷ்ணனுடைய.... கைகளில், கூர்மைபொருந்திய நுனியையுடைய திருவாழியின் ரேகையும். திருச்சங்கின் ரேகையும் பதிந்து அமைந்திருக்கின்ற உள்ளங்கைகளின் அழகைப்பாருங்கள், பொன்னால் செய்த குழைகளை (காதணிகளை) அணிந்தவர்களே! அருகில் வந்து பாருங்கள்—கைத்தலங்களில் சக்கரம், சங்கு இவைகளின் ரேகை பதிந்திருப்பது அக்குழந்தையின் தெய்விகத்தன்மையைக் காட்டுகிறது என்பதாம்— 12

பாசு: **வண்டமர் பூங்குழல் ஆய்ச்சி மகனாகக்**
கொண்டு. வளர்க்கின்ற கோவலக் குட்டற்கு
அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய
கண்டம் இருந்தவா காணீரே காரிகையீர் வந்து
காணீரே. 13

உரை: தேனைப்பருகுவதற்காக வண்டுகள் வந்து மொய்க்கும்.... அப்பொழுது மலர்ந்த பூக்களைச் சூடிய குழலையுடையவளான யசோதைப் பிராட்டியினால் (கண்ணன் தேவகி தேவியின் வயிற்றில் பிறந்து பிறகு கோகுலத்தில் யசோதையிடம் வந்து சேர்ந்த உண்மையை அறியாதவள் ஆதலால்) தனது மகனாகவே நினைத்துக்

கொண்டு வளர்க்கப்படுகிறவனும் நந்தகோபருடைய பிள்ளையுமான குழந்தைக் கண்ணனுடைய.... பிரளய காலத்தில் உலகம் முழுவதையும் அதனுள்ளே கிடக்கிற சேதநா சேதநங்களான ராசிகள் முழுவதையும் விழுங்கியுண்ட கண்டத்தின் (கழுத்தின்) அழகு இருப்பதைப்பாருங்கள். அழகு வாய்ந்த பெண்களே! வந்துபாருங்கள். 13

பாசு : **எந்தொண்டை வாய்ச்சிங்கம் வாவென் றெடுத்துக்கொண்டு**
அந்தொண்டை வாயமு தாதரித்து. ஆய்ச்சியர்
தந்தொண்டை வாயாற் றருக்கிப்பருகும். இச்
செந்தொண்டைவாய்வந்து காணீரே சேயிழையீர்வந்து
காணீரே— 14

உரை : கோவைக்கனிபோன்ற சிவந்த அதரத்தையுடைய இடைச்சிகள் (கண்ணனை) என் சிங்கக்குட்டியே! யானைக்குட்டியே! என்னிடம் வாவென்று எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு. அழகிய கோவ்வை போன்ற (கண்ணனுடைய) அதரத்தில் ஊறுகிற அமுதம் போன்ற நீரை விரும்பி தங்களது கொவ்வை போன்றவாயை கண்ணன் வாயோடு சேர்த்துப் பருகுகின்ற இந்த சிவந்த கோவைக்கனி போன்றவாயை வந்து பாருங்கள், அழகிய ஆபரணங்களை அணிந்தவர்களே! வந்துபருங்கள். 14

பாசு : **நோக்கி யசோதை நுணிக்கிய மஞ்சளால்**
நாக்கு வழித்து நீராட்டுமிந் நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்குமிருந்தவா காணீரே மொய்குழலீர்வந்து
காணீரே— 15

உரை : யசோதையானவள் கண்ணபிரானுடைய சுகுமாரமான மெல்லிய திருமேனிக்குத்தக்கபடி ஆராய்ந்துபார்த்து அரைத்த மஞ்சளைப்பாலே நாக்குவழித்து ஸ்நாநம் செய்விக்க அதற்கு அடங்கி இருக்கின்ற இக்கண்ணனின் வாக்கும், கண்களும், வாயும், துடிக்கும் அதரமும்(உதடும்)புன்சிரிப்பும், மூக்கும், இருக்கின்ற அழகைப்பாருங்கள். அடர்த்தியான கூந்தலையுடைய பெண்களே! வந்துபாருங்கள். 15

பாசு : **விண்கொ ளமரர்கள் வேதனைதீர. முன்**
மண்கொள் வசுதேவர் தம்மகனாய் வந்து
திண்கொ ளசுரரைத் தேய வளர்கின்றான்
கண்களிருந்தவா காணீரே கனவளையீர்வந்து
காணீரே— 16

உரை : கீழ்ப்பாட்டில் வாக்கும் நயனமும் வாயும் என்று கண்ணழகைச் சொல்லி இருந்தாலும் முகத்தினுடைய சேர்க்கையின் சோபையைக்காட்டின. இப்பாட்டில் விசேஷமாகக் கண்ணழகைக்காட்டுகிறார். சுவர்க்கம் முதலான உலகங்களை இருப்பிடமாகக்கொண்ட தேவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பதர்க்காக பூமியை இருப்பிடமாகக்கொண்ட (பூவுலகில் அரசகுலத்தில் பிறந்த) வசுதேவருக்குப் பிள்ளையாகப்பிறந்து வலிமைகொண்ட அசுரர்கள் மாண்டுபோகும்படி வளர்கின்ற இப்பிள்ளையினுடைய கண்கள் இருக்கும் அழகைக் காணுங்கள் பொற்க்கங்கணங்களைப்பூண்ட பெண்களே! வந்து காணுங்கள்— 16

பாசு : **பருவம் நிரம்பாமே பாரெல்லா முய்ய**
திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற
உருவு கரிய வொளிமணி வண்ணன்
புருவமிருந்தவா காணீரே பூண்முலையீர்வந்து
காணீரே— 17

உரை : தக்க வயது வருவதர்க்கு முனனமேயே (மிகச்சிறிய பிராயத்திலேயே) பூமியில் உள்ளவர்கள் எல்லாருக்கும் க்ஷேமத்தை உண்டு பண்ணுவதர்க்காக.... (பக்த்தர்களைக் காப்பாற்றுவதில்.... பருவம் நிரம்பும்வரையில் காத்திருக்கப்பொராமல் அதிசீக்கிரமே அருள் புரிவதற்காக) ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் வடிவுபோன்ற வடிவத்தை உடையவளான தேவகிப்பிராட்டிபெற்ற கரியநிறமும் ஒளிவீசுகிற நீலமணியின் வண்ணத்தையும் உடையவனான இக்கண்ணனுடைய புருவம் இருக்கிற அழகைப்பாருங்கள், ஆபரணங்கள் பூண்ட மார்பையுடைய பெண்காள் வந்துபாருங்கள். 17

பாசு : **மண்ணும் மலையும் கடலு முலகேழும்**
உண்ணுந் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு
வண்ண மெழில்கொள் மகரக் குழையிவை
திண்ணமிருந்தவா காணீரே சேயிழையீர்வந்து
காணீரே— 18

உரை : பிரபஞ்சங்களை பிரளயகாலம் வந்து சூரையாடும்பொழுது அப்பிரளயத்தில் பிரபஞ்சங்கள் அழிந்துபோகாமல் காப்பாற்றும் பொருட்டு பூமியையும், மலைகளையும், கடல்களையும் ஏழு உலகங்களையும், உணவு உண்பது போல உண்டு மகிழ்ச்சியுடன் திருவயிற்றிலே

வைத்து ரக்ஷித்த இக்கண்ண பிரானுடைய.... அழகிய நல்ல நிறம் கொண்ட மகாகுண்டலங்களினுடைய கண்ணைக்கவரும் காந்தி இருப்பதைப்பாருங்கள். பொருந்திய ஆபரணங்கள் அணிந்த பெண்களே வந்துபாருங்கள். 18

பாசு : முற்றிலும் தூதையும் முன்கைம்மேல் பூவையும்
சிற்றிலிழைத்துத் திரிதருவோர்களை
பற்றிப் பறித்துக்கொண்டு ஓடும் பரமன்றன்
நெற்றி இருந்தவாகாணீரே நேரிழையீர் வந்து காணீரே 19

உரை : தெருக்களில் கொட்டி இருக்கும் மணலையும் கல்லையும் கொண்டு சிறு விடுகள் கட்டுவது போலச் செய்துகொண்டு விளையாடித்திரியும் சிறியபெண்களை வலியக்கையைப்பிடித்துக்கொண்டு அவர்களுடைய மணல்கொழிக்கிற சிறிய சுளகுகளையும், மணற்சோறு சமைக்கும் சிறிய மண்சொப்புகளையும், முன்கைமேல் வைத்துக் கொஞ்சி விளையாடுகிற நாகணவாய்ப்பக்ஷியையும், இவற்றையெல்லாம் பலாத்காரமாகப் பறித்துக்கொண்டு ஓடுகின்ற தீம்பு செய்வதில்ச் சிறந்தவனை இக்கண்ணனுடைய வியர்வைதுளிக்கின்ற நெற்றி இருக்கும் அழகை வந்துபாருங்கள். நேர்த்தியான ஆபரணங்கள் அணிந்த பெண்காள் வந்துபாருங்கள்— 19

பாசு : அழகிய பைம்பொன்னின்கோல் அங்கைக்கொண்டு
கழல்கள் சதங்கை கலந்து எங்குமார்ப்ப
மழகன்றினங்கள் மறித்துத்திரிவான்
குழல்கள் இருந்தவாகாணீரே குவிமுலையீர் வந்து
காணீரே— 20

உரை : காண்பதற்க்கு மிக அழகானதும் பசும் பொன்னினுல்ச் செய்யப்பட்டதுமான கன்று மாடு மேய்க்கும் கோலை தனது அழகிய கரத்தில்ப்பிடித்துக்கொண்டு கால்களில் அணிந்திருக்கிற தண்டைகளும், சதங்கைகளும், சேர்ந்து போகுமிடமெல்லாம் ஒலிக்க இளங்கன்றுகளின் கூட்டங்களைச் சிதறிப்போக விடாமல் மடக்கி மேய்த்து திரியும்வனை கண்ணபிரானுடைய அசைந்து அலைந்து வினங்குகிற திருக்குழல்க் கத்தைகளின் அழகைப்பாருங்கள், குவிந்தமுலையுடையவர்களே! வந்துபாருங்கள்— 20

பாசு : சுருப்பார் குழலி யசோதை முன் சொன்ன
திருப்பாத கேசத்தைத் தென்புதுவைப்பட்டன்
விருப்பாலுரைத்த இருபதோடொன்றும்
உரைப்பார் போய் வைகுந்தத்தொன்றுவர் தாமே— 21

உரை: வண்டுகள் மொய்த்து நிறைந்த கூந்தலையுடையவளான (கூந்தலில் சூடியிருக்கிறமலர்மாலைகளில் கசிகின்ற தேனைக்குடிப் பதற்கு வண்டுகள் வந்து மொய்க்கும்) யசோதைப்பிராட்டியால் கண்ணன் அவதாரகாலத்தில் ஊர்ப்பெண்களையெல்லாம் அழைத்து கண்ணபிரானுடைய பாதாதி கேசபரியந்தம்ஒவ்வொரு அவயவங்களின் சவுந்தரியங்களையும் வர்ணித்துக் காட்டினபடியை அழகிய ஸ்ரீவில்லி புத்தூருக்கு அதிபரான ஆழ்வார் பாசுரங்களாகப்பாடியிருக்கிற இவ் விருபத்தொரு பாட்டுக்களையும் பாடவல்லவர்கள் இப்பூமண்டலத் தைக் கடந்து எம்பெருமானுடைய திருநாடான ஸ்ரீவைகுண்டத்திலே சென்று இன்பமுடன் பொருந்தப்பெறுவார்கள்— 21

அடிவரவு— **சீதம் முத்து பணை உழந்தாள் பிறங்கிய மத்த இருங்கை வந்த அதிரும் பெருமா நாள்கள் மைவண்டு எம் நோக்கி விண் பருவம் மண் முற்றில் அழகிய சுரும்பார் மாணிக்கம்**

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

பெரியாழ்வார் திருமொழியில்

அம்புலிகாட்டுதல்

முதற்பத்து—நான்காம் திருமொழி

தன்முகத்துச்சுட்டி

அவதாரிகை: கண்ணனுக்குத் தொட்டில்ப் பருவம்போய் தவழ்ந்து விளையாடும் பருவமானபின்பு அவன் நிலாமுற்றத்தே வந்து தவழ்ந்து புழுதியளைந்து விளையாடுகையில் யசோதைப்பிராட்டி அவனுக்கு உகப்பாகச் சந்திரனைவரச்சொல்லிப் பலகாலும் அழைத்த ப்ரகாரத்தை ஆழ்வார் தாமும் அனுபவித்துப் பேசி இனியராகும் பாசுரங்கள்—

பாசு: **தன்முகத்துச்சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்**
பொன்முகக் கிண் கிணியார்ப்பப் புழுதி யளைகின்றான்
என்மகன் கோவிந்தன் கூத்தினை யிளமாமதீ
நின்முகம் கண்ணுளவாகில் நீயிங்கே நோக்கிப்போ 1

உரை: இளமை தங்கிய அழகிய சந்திரனே! எனது குழந்தையாகிய இக்கோபாலகிருஷ்ணன்.... தனது நெற்றியில் விளங்குகிற சுட்டி யானது பலகாலும் தாழ்ந்து தாழ்ந்து அசையவும், அரையில் கட்டி யிருக்கிற அழகிய முகப்பையுடைய பொற்சதங்கைகள் கிண் கிண்

என்று சப்த்திக்கவும். முற்றத்தில் தவழ்ந்து வந்து புழுதி மண்ணில் அளைந்து விளையாடுகிறான். நீ கண்படைத்ததற்குப்பயன்பெற வேண்டுமேயானால் இக்குழந்தையின் விளையாட்டுகளை (சேஷ்டைகளை) இங்கே வந்து பார்த்து விட்டு இவன் கண்ணில்த் தென்பட்டு சந்தோஷப்படுத்திப் போவாயாக— 1

பாசு: **என்சிறுக்குட்டன் எனக்கோரின்னமுது எதம்பிரான்**
தன்சிறுக் கைகளால் காட்டிக்காட்டி யழைக்கின்றான் *
அஞ்சன வண்ணனோடு ஆடலாட வுறுதியேல் *
மஞ்சில் மறையாதே மாமதீ ! மகிழ்ந்தோடிவா 2

உரை: சிறு குழந்தைகளை.... மாலைப்பொழுதில் இடுப்பில் வைத்துக் கொண்டு சந்திரனை அழைக்கச் செய்வது உலகவழக்கமாதலால் அப்படியே யசோதையும் செய்கிறாளென்பது— அழகிய சந்திரனே ! (தாயாகிய) எனக்கு.... மதுரமாக இருக்கிற அமிர்தம் போன்றவனும், உபகாரகனும் எனது சிறு குழந்தையுமான கண்ணன்.... தன்னுடைய சிறிய கைகளால் பலகாலும் உன்னையே காட்டிக் காட்டி அழைக் கின்றான். மைபோன்ற நிறத்தையுடையனான இக்கண்ணபிரானுடன் விளையாடக் கருதுவாயாகில் மேகத்திற்குள்போய் மறைந்து கொள்ளாமல் மகிழ்ச்சியுடன் உகந்து ஓடிவா— 2

பாசு: **சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி பரந்தெங்கும் ***
எத்தனைசெய்யிறும் என்மகன் முகம்நே ரொவ்வாய் *
வித்தகன் வேங்கட வாணன் உன்னை விளிக்கின்ற *
கைத்தலம் நோவாமே அம்புலீ கடிதோடிவா 3

உரை: மாமதீ மகிழ்ந்தோடிவா என்று யசோதை அழைத்தும். சந்திரன் வரக்காணாமையாலே கர்வம் கொண்டிருக்கிறானென்று அது அடங்கப்பேசுகிறாள். சந்திரா ! நீ நாள் தோறும் தேய்வதும் வளர் வதுமாக இருக்கின்றாய் ? களங்கமுடையவனாகவும் இருக்கிறாய் ? உன்னுடைய ஒளி பொருந்திய மண்டலத்தை (வட்டத்தை) எப்போதும் நான்கு புறத்திலும் சுழன்று எல்லாத்திசைகளிலும் ஒளி நிரம்பியிருக்கு மாறு உன்னை எவ்வளவு அழகு செய்து கொண்டாலும், என் மகன் கண்ணபிரானுடைய முகத்திற்குச் சிறிதும் ஒப்பாகமாட்டாய் ஆகை யாலே நான் அழகிற்ச் சிறந்தவன் என்கிற செருக்கை ஒழித்து.... ஆச்சரியப்படத்தக்கவனும். திருவேங்கட மலையிலே நன்றாக வாழும வனுமான உன்னை அழைக்கின்ற குழந்தையினுடைய கைத்தலத்தில்

நோவு உண்டாகாதபடி விரைந்து ஓடிவா— (ஆழ்வார் பிற்காலத்த வரானபடியால்) திருவேங்கட மலையில் கோயில்கொண்டு எழுந் தருளியிருக்கிற ஸ்ரீநிவாஸனே இக்குழந்தை என்கிறார். 3

பாசு : சக்கரக் கையன் தடங்கண்ணால் மலரவிழித்து *
ஒக்கலைமேலிருந்து உன்னையே சுட்டிக் காட்டுங்காண் *
தக்கதறிதியேல் சந்திரா! சலஞ் செய்யாதே *
மக்கட்பெறாத மலட னல்லையேல் வாகண்டாய். 4

உரை : சந்திரா! இவனை நீ வெறுங்குழந்தையென்று நினைத்து அலட்சியம் செய்துவராமல் இருக்கிறாய்? அப்படிப்பட்ட குழந்தையல்ல சுதரிசனம் என்னும் சக்கரத்தைத் திருக்கையில் அணிந்த கண்ண பிரான், எனது இடுப்பின் மேல் இருந்து கொண்டு தனது விசால மான கண்களாலே மலரவிழித்துப்பார்த்து உன்னையே குறித்துக் காட்டுகின்றான். நீ உனக்குத் தகுதியானதை அறிந்தால்.... அன்றியும் பிள்ளைபெறாத மலடனாக இல்லையாகில் கபடம் செய்யாமலும் குழந் தையை வருத்தப்பட வைக்காமலும் அருகில் வந்து நில் — பிள்ளை பெறாதவர்கள்தான் பிள்ளையின் வருத்தம் அறியார்கள்? நீ அப்படி இல்லையே? ஆதலால் சீக்கிரம் வா— 4

பாசு : அழகிய வாயில் அமுதவூறல் தெளிவுறா *
மழலைமுற்றாத இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான்*
குழகன் சிரீதரன் கூவக்கூவநீ போதியேல் *
புழையில வாகாதே நின்செவி புகர்மாமதீ !. 5

உரை : தேஜோமயமாய் பெருமை பொருந்தி விளங்குகிற சந்திரனே! எனது குழந்தை அழகிய திருப்பவளவாயிலே ஊறுகின்ற ஜலமாகிய அமிருதத்துடன் கூடி உருத்தெரியாத மழலை முற்றாத மிக இளஞ் சொல்லால் உன்னைப் பலகாலும் கூவுகின்றான் (அழைக்கின்றான்) எல்லாரோடும் கலந்திருப்பவனும், ஸ்ரீ பதியுமான இக்கண்ணபிரான் கடலக் கடவ நீ வராமல் போவாயேயானால் உன் காதுகள் துளை இல்லாமல் செவிடாகப் போனவைகளாக ஆகாதோ? நிச்சயமாக ஆகும். ஆகையால் நீ காது படைத்தற்கு பயன் வேண்டுமேயானால் இக்குழந்தையின் இனிய இளஞ் சொல்லைக்கேட்டு உடனே ஓடி வருதலே செய்யத்தக்கது.— 5

பாசு : தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும் தடக்கையன் *
கண்துயில் கொள்ளக்கருதிக் கொட்டாவி கொள்கின்றான் *
உண்ட முலைப்பால் அறாகண்டாய் உறங்காவிடில் *
விண்தனில மன்னிய மாமதீ! விரைந்தோடிவா. 6

உரை: ஆகாயத்திலே பொருந்திய பெருமை தங்கிய சந்திரனே! கௌமோதகீ என்னும் கதையையும், திருச்சக்கரத்தையும், சார்ங்க மென்னும் வில்லையும், ஏந்தி இருக்கின்ற விசாலமான கைகளையுடைய இக்கண்ணபிரான்.... துயில் கொள்வதர்க்காக (தூங்குவதர்க்காக) கொட்டாவி விடுகின்றான், இப்போது இவன் உறங்காவிடில் உண்ட முலைப்பால் ஜரிக்காது ஆகையால் இவன் உறங்குவதர்க்குள் நீ விரைந்து ஓடிவந்து இவன் ஏந்தி இருக்கின்ற ஆயுதங்களின் அழகை ஸேவித்து இவனையும் சந்தோஷப்படுத்துவாயாக— 6

பாசு: பாலகனென்று பரிபவஞ் செய்யேல் * பண்டொருநாள்
ஆலினிலை வளர்ந்த சிறுக்கனவன் இவன் *
மேலெழப் பாய்ந்து பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல் *
மாலை மதியாதே மாமதீ மகிழ்ந்தோடிவா. 7

உரை: மாமதீ! (அழகிய சந்திரனே) இக்குழந்தை ஓயாமல் உன்னை அழைத்தும் இவனொரு சிறுபிள்ளை தானே? இவன் அழைத்தவுடன் ஓடி வரவேணுமோ என்று அலட்சியமாக நினைக்கிறாய்? நீ அப்படி குறைவாக நினைக்கலாகாது. முன்பு ஒரு காலத்தில் உலகங்களை எல்லாம்பிரளயம் கொள்ளாதபடி வயிற்றிலே வைத்துக்கொண்டு ஆலிலையிலே யோக நித்திரை புரிந்தவனாகப் புராணங்களிலே சொல் லப்படுகிற அந்தச் சிறுபிள்ளை தான் இவன். இவன் சீற்றம் கொண் டால் உன்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து உன்னைப் பிடித்துக் கொள்வான். ஆகையால் இம்மகா புருஷனான சிறுவனை அவமதிக்கா மல் விரைவாக ஓடிவா என்கிறான்— 7

பாசு: சிறியனென்று என்னிளஞ் சிங்கத்தை இகழேல் கண்டாய்
சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்
சிறுமைப் பிழைகொள்ளில் நீயும் உன்தேவைக்குரியைகாண்
நிறைமதி நெடுமால் விரைந்து உன்னைக் கூவுகின்றான்.

உரை: பூர்ண சந்திரனே! எனக்கு இளஞ்சிங்கக் குட்டி போன்ற வனும் யாவற்றுக்கும் மேலான ஈஸ்வரனுமான கண்ணபிரானை சிறிய வன் தானே என்று இகழ்ச்சியாக நினைத்து அவமதியாதே இவன் முன்பொருகால் சிறியனாக இருக்கும்பொழுது மஹாபலியிடம் சென்று செய்த காரியங்களை அந்த மஹாபலியையே கேட்டுத்தெரிந்துகொள் (முன்னொரு காலத்தில் பகவான் வாமனாவதாரம் செய்து மஹாபலிச் சக்கிரவர்த்தியிடம் சென்று மூன்று அடி மண்ணையாசித்து உலக

முழுவதையும் அளந்துகொண்டவரலாற்றைத் தெரிவிக்கிருள்) இப்படி மிகப்பெரியவனுன இவனைச் சிறியவனென்று நினைத்து அலட்சியம் செய்த மஹா அபசாரத்தை உணர்ந்துகொண்டு நீ இவனருகில் வந்து ஏதேனும் அடிமை (கைங்கர்யம்) செய்வதற்கு யோக்யதை பெறுவாயாக (ஆதலால்) உன்னை விரைவாக அழைக்கின்ற குழந்தையிடம் மகிழ்ச்சியுடம் ஓடிவா— 8

பாசு: தாழியில் வெண்ணெய் தடங்கையார விழுங்கிய *
பேழைவயிற் றெம்பிரான் கண்டாய் உன்னைக் கூவுகின்ருன்
ஆழிகொண் டுன்னையெறியும் ஐயுற வில்லைகாண் *
வாழ வுறுதியேல் மாமதீ மகிழ்ந்தோடிவா. 9

உரை: சந்திரனே! நான் வெண்ணைத்தாழியில் சேர்த்து வைத்திருக்கிற வெண்ணையை தனது பெரிதான கை நிறைய அள்ளி உண்ட பெருவயிற்றையுடையவனுன என் கண்ணன் உன்னைக்கூவுகின்ருன். இப்படி அழைத்தும் நீ வாராதிருந்தால் தனது திருச்சக்கரத்தாலே உன்னை வெட்டிவிடுவன் இதில் கொஞ்சமேனும் சந்தேஹமில்லை. (கண்ணன் தன் தரயாகிய யசோதை தாழிகளில் சேமித்து வைத்திருக்கிற வெண்ணையை அவள் அறியாதபடி மிகுதி இல்லாமல் வாரியுண்பான். இப்படி உண்டால் குழந்தைக்கு ஜரிக்கமாட்டேதே என்று அவன் கைக்கு எட்டாமல் உறியில் வைத்தால் கோபம் கொண்டு கல்லைவிட்டெறிந்து தாழிகளை உடைப்பான்) அது போல நீயும் வராவிடில் ஆழியால் உன்னையறுத்து விடுவான், இதில் நின்றும் தப்பி பிழைத்திருக்க விரும்புவாயாகில் மகிழ்ச்சியுடன் ஓடிவா— 9

பாசு: மைத்தடங்கண்ணி யசோதை தன் மகனுக்கு * இவை
ஒத்தன சொல்லி உறைத்தமாற்றம் * ஒளிபுத்தூர்
வித்தகன் விட்டுசித்தன் விரித்த தமிழிவை *
எத்தனையுஞ் சொல்ல வல்லவர்க்கு இடரில்லையே. 10

உரை: மையணிந்து விசாலமாக இருக்கின்ற கண்களையுடையவளான யசோதைப் பிராட்டியானவள் சந்திரனை நோக்கி தன்மகனுன கண்ணனுடைய கருத்திற்கும் சொல்லுக்கும் சேர்ந்திருப்பவற்றைப் பேசினபடியை ஒளிபொருந்திய ஸ்ரீவில்லிபுத்தூரில் உதித்தவரும் பகவான் விஷயத்தில் மங்களாசாஸன ஸமர்த்தருமான பெரியாழ்வாராலே திராவிட பாஷையில் அருளிச்செய்யப்பட்ட இப்பாசுரங்கள் பத்தையும் ஏதேனும் ஒருபடியாகச் சொல்லவல்லவர்கட்கு துன்பமெல்லாம் நீங்கி ஆனந்தம் விளையும் என்று சொல்லித்தலைக்கட்டுகிருர்— 10

அடிவரவு— தன் - என் - சுற்றும் சக்கரம் அழகிய தண்டு பாலகன் சிறியன் தாழி மை உய்ய—

பெரியாழ்வர் திருவடிகளே சரணம்—

பெரியாழ்வார் திருமொழியில்

முதற்ப்பத்து—ஏழாந்திருமொழி

தொடர்சங்கிலிகை

தளர்நடை நடப்பது

அவதாரிகை : சிறு குழந்தைகள் நடப்பதற்கு ஆரம்பிக்கும் பொழுது பாதங்களை நன்ருகப் பதியவைக்காமல் தத்தித்தடுமாறி தளர்நடை நடப்பது ஒரு விளையாட்டாகையால் அந்த நடையைக் கண்ணன் நடக்குமாறு யசோதைப் பிராட்டி வேண்டிக்கொண்டபடி ஆழ்வார் தாமும் தம்மை அவளாகவே பாவித்து அப்படியே வேண்டிக் கொள்ளுகிருர்.

பாசு : **தொடர்சங்கிலிகை சலார்பிலாரென்னத் தூங்குபொன்**
மணியொலிப்ப *
படுமும்மதப்புனல் சோரவாரணம் பையநின் றூர்வதுபோல்*
உடன்கூடிக் கிண்கிணியாரவாரிப்ப உடைமணி
பறைகறங்க *
தடந்தாளிணைகொண்டு சார்ங்கபாணி தளர்நடை
நடவாளே. 1

உரை : யானையானது மதத்தின் மிருதியால் கட்டுத்தறியை முறித்து விட்டு காலில் பூட்டிய இருப்புச் சங்கிலியை இழுத்துக்கொண்டு நடக்கையில் அச்சங்கிலியின் தொடர் சலார் பிலார் என்று சப்திக் கவும். பொன்கயிற்றில்கட்டி அதன் இருபுறத்திலும் தொங்கவிட் டிருக்கிற மணிகள் கண் கண் என்று ஒலிக்கவும், மூன்று வகையான மதநீர் பெருகவுமாக இருந்து கொண்டு மெல்ல நடந்து போவது போல— சார்ங்கமென்னும் வில்லைக்கையில் ஏந்திய பிள்ளையாகிய இக்கண்ணபிரான்.... காலில் அணிந்த சதங்கைகள் ஒன்ருேடொன்று கூடி சப்திக்கவும், இடையில் கட்டிய சிறுபொன் மணிகள் பறை போல் ஒலிக்கவும், நடக்கின்ற ஆயாஸத்தினுல் உடலில் வியர்வை நீர் பெருகவும், தனது சங்கு சக்கிரம் முதலிய ரேகைகள் பதிந்து

ஒன்றுக்கு ஒன்றே ஒப்பானதுமான பாதங்கள் இரண்டினுலும் தட்டுத் தடுமாறி தளர் நடையை நடக்கமாட்டானே (நடக்க வேணும் என்று) கண்ணனை வேண்டுகிருள்— 1

பாசு : செக்கரிடை நுனிக் கொம்பில்தோன்றுஞ் சிறுபிறை
முளைப்போல *
நக்கசெந்துவர்வாய்த் திண்ணைமீதே நளிர்வெண்பல்
முளையிலக *
அக்குவடமுடுத்து ஆமைத்தாலி பூண்ட அனந்த சயனன்*
தக்கமாமணிவண்ணன் வாசுதேவன் தளர்நடை
நடவானே. 2

உரை : செவ்வானத்திலே (அண்ணாந்து பார்த்தால்) மரத்தின் கிளைக்கு மேலே தோன்றுகிற சிறிய மூன்றும் பிறைச் சந்திரனுகிய முளையைப்போல கண்ணனது மிகவும் சிவந்த வாயாகிய மேட்டிடத்தில்.... குளிர்ந்த வெண்மையாகிய பல்லின் முளைகள் விளங்க—சங்கு மணி வடத்தை அரையில் தரித்தும் ஆமையின் வடிவமாகச் செய்யப்பட்ட ஆபரணத்தைக் கழுத்தில் அணிந்து கொண்டவனுமான—அனந்தாழ்வான் என்றும் அரவின் மேல் படுப்பவனும், சிறந்த நீலரத்னம் போன்ற நிறத்தையுடையவனும், வசுதேவரின் புத்திரனுமான குழந்தாய் சிரித்துக்கொண்டே நீ இளநடை நடக்கவேணும். 2

பாசு : மின்னுக்கொடியும் ஓர்வெண்திங்களும் சூழ்பரி
வேடமுமாய் *
பின்னல்துலங்கும் அரசிலையும் பீதகச்சிற் றாடையொடும் *
மின்னில் பொலிந்ததோர் கார்முகில்போலக் கழுத்தினிற்
காறையொடும் *
தன்னில்பொலிந்த இருடீகேசன் தளர்நடை நடவானே. 2

உரை : மின்னல்க் கொடியும் அதனோடு சேர்ந்திருப்பதும் களங்கமில்லாததும் (முழுவதும்) வெண்மையானதும் ஆகிய ஒரு சந்திரனும் அவ்விரண்டையும் சுற்றிக்கொண்டிருக்கும் (சந்திரனைச்சுற்றி சில காலங்களில் காணப்படுகிற) ரேகையும் போல.... கண்ணனது அரையிற்சாத்திய தங்கப் பின்னல்ச் சறடும். அரச இலைபோலச் செய்து துலங்குகின்ற திரு ஆபரணமும். இவ்விரண்டையும் சூழ்ந்து தரித்த சிறிய பொன்னுடையும் ஆகிய இவற்றோடும்.... மின்னலோடு கூடி

விளங்குகிற ஒப்பற்றகாள மேகம்போல. கழுத்தில் அணிந்த பொன்னி ஞல்ச் செய்த காறை என்னும் ஆபரணத்தோடும் கூடி (இவ்வாபர ணங்களின் சேர்க்கை இல்லாமலே) இயற்கையாகவே தனது அழ கினுல் பிரகாசிக்கின்ற இருஷீகேசன் என்கிற திருநாம முடைய இவன் தளர்நடை நடக்கின்ருன்— இப்பாட்டில் கண்ணனுக்கு சந்தி ரனேயும் கார்மேகத்தையும் உவமை சொல்லி இருக்கிறது— 3

பாசு : **கன்னற்குடந் திறந்தாலொத்தூறிக் கணகண சிரித்துவத்து ***
முன்வந்துநின்று முத்தம் தரும் என்முகில் வண்ணன் திருமார்வன் *
தன்னைப்பெற்றேற்குத் தன்வாயமுதம் தந்தென்னைத் தளிர்ப்பிக்கின்ருன் *
தன்னெற்றுமாற்றலர் தலைகள்மீதே தளர்நடை நடவானே 3

உரை : கருப்பஞ்சாறு நிறைந்த குடம் பொள்ளல் (பொத்தல்) விட்டு அப்பொத்தல் வழியாகச் சாறுபொசிவதைப்போல ஒத்து (தனது) வாயில் நின்றும் நீர் சுரந்துவடிய கண கண வென்று சப்த முண்டாகும்படி சிரித்துக்கொண்டு சந்தோஷத்துடன் என் முன்னே வந்து நின்று கொண்டு (எனக்கு) முத்தம் கொடுப்பவனும், மேகம் போன்ற நிறத்தை உடையவனும் திருமகளை (லக்ஷ்மீ தேவியை) மார் பில் கொண்டுள்ளவனும் என்மகனுமான இவன்— தாயாகிய எனக்கு தன்னுடைய அதர அமிர்தத்தைக் கொடுத்து அவனைப் பிள்ளையாகப் பெற்ற பாக்கியத்தையுடைய என்னைத் தழைக்கச் செய்கின்ருன். அப்படிப்பட்ட இவன் தன்னை எதிர்க்கிற சத்துருக்களுடைய தலை களின் மேலே அடிவைத்து தளர்நடை நடவானே ? சந்தேகமின்றி நடப்பான்— சத்துருக்களை (துஷ்டர்களை) எறிமிதித்து நாசம் செய்து விடுவான் என்பது— 4

பாசு : **முன்னலோர்வெள்ளிப் பெருமலைக்குட்டன் மொடுமொடு விரைந்தோட ***
பின்னைத்தொடர்ந்ததோர் கருமலைக்குட்டன் பெயர்ந்தடி யிடுவதுபோல் *
பன்னியுலகம் பரவியோவாப் புகழ்ப்பல தேவனென்னும் *
தன்னம்பியோடப் பின்கூடச்செல்வான் தளர்நடை நடவானே 4

உரை : முன்னே அழகியதும் ஒப்பற்றதுமான.... பெரியவெள்ளி மலை பெற்ற குட்டி (சிறிய குன்று) திடு திடு வென்று வேகங்கொண்டு இருக்க ஓடிக்கொண்டு.... அந்தக்குன்றின் பின்னால் தன் செருக் காலே அதனைப்பிடிப்பதற்காக தொடர்ந்து.... ஒப்பற்ற கருநிறமான ஒரு மலைபெற்ற குட்டி (குன்று) தானிருக்கும் இடத்தைவிட்டுப் பெயர்ந்து அடிவைத்து ஓடுவது போல.... உலகமெல்லாம் கூடி நன்றாக அலசி ஆராய்ந்து பார்த்து தோத்திரம் செய்தும் முடிவுகாணாத கீர்த்தியையுடைய பலராமன் என்கிற தன் தமயன் (நம்பிமூத்தபிரான்) முன்னே ஓடிக்கொண்டிருக்க அவனைப்பிடிக்க வேணுமென்று பின்னோடு விசையாக ஓடுகிற (செல்கிற) இக் கண்ணன் தளர் நடை நடவானோ ? நடக்க வேணும்— 5

பாசு : **ஒருகாலில் சங்கு ஒரு காலில் சக்கரம் உள்ளபடி**
பொறித்த மைந்த
இருகாலுங்கொண்டு அங்கங்கு எழுதினாற்போல்
இலச்சினைபட நடந்து
பெருகா நின்ற இன்ப வெள்ளத்தின்மேல் பின்னையும்
பெய்து பெய்து
கருகார்க்கடல் வண்ணன் காமர்தாதை தளர் நடை
நடவானோ 6

உரை : மிகவும் கருத்த நிறமுள்ள கருத்து குளிர்ந்திருக்கிற சமுத்திரம் போன்ற நிறமுடையவனும் காமதேவனுடைய அம்சமாகிய பிரத்யும் நனுக்கு பிதாவுமான இப்பிள்ளை.... பாதங்களின் உட்புறத்திலே ஒரு பாதத்திலே சங்கினுடையவும் மற்றொரு பாதத்திலே சக்கரத்தினுடைய வும் ரேகையின் வடிவத்தோடு கூடி பொருந்தி இருக்கிற திருவடி இணைகளால் அடிவைத்த இடங்களிலெல்லாம் சித்திரம் எழுதினாற் போல அடையாளமுண்டாகும்படி நடந்து அந்த தனது அடியின் வடிவழகைக்கண்டு பொங்குகிற ஆனந்தவெள்ளத்துடன் மேலும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கிக்கொண்டு தளர்நடை நடக்க வேண்டும்.... என்பது— 6

பாசு : **படர் பங்கய மலர்வாய் நெகிழப் பனிபடு சிறு துளிபோல்**
இடங்கொண்ட செவ்வா யூறி யூறி இற்றிற்று வீழ நின்று
கடுஞ்சேக்கழுத்தின் மணிக்குரல் போல் உடைமணி
கண கணென
தடந்தாளினை கொண்டு சார்ங்கபாணி தளர் நடை
நடவானோ 7

உரை: பெரிய தாமரைப்பூவானது மொட்டா இராமல் வாய்திறந்து மலரும் பொழுது அதில் நின்றும் பெருகுகின்ற குளிர்ச்சியுள்ள தேனினுடைய சிறு சிறு துளிகளைப்போல.... சார்ங்கபாணியாகிய என் கண்ணன்....பெருமை வாய்ந்த தனது சிவந்த வாயினின்றும் நீரானது இடைவிடாமல் சுரந்து நடுவே சொட்டு சொட்டாக கீழேவிழும்படி யாக நின்று பொல்லாத ரிஷபத்தின் (காளைமாட்டின்) கழுத்திலே கட்டப்பட்ட மணியினுடைய ஒலிபோலே தனது அரையில் கட்டிய மணி கண கணவென்று சப்த்திக்கும்படி பெரிதான திருவடிகளை வைத்து தளர்நடை நடந்து வரவேணும் நடக்க வேணும்— 7

பாசு: **பக்கம் கருஞ்சிறுப்பாறை மீதே அருவிகள் பகர்ந்தனைய**
அக்குவடமிழிந்தேறித்தாழ அணியல்குல் புடைபெயர
மக்களுலகினில் பெய்தறியா மணிக்குழவி யுருவின்
தக்கமாமணிவண்ணன் தளர்நடை நடவானோ **8**

உரை: கருநிறமான சிறிய மலைக்குன்றினுடைய மேடும் பள்ளமுமான இடங்களில் பாய்கிற நீரருவிகள் வெண்மையாகப்பிரகாசிப்பதைப்போல கரியநிறத்தையுடைய கண்ணனது அரையிற்சாத்தி இருக்கிற சங்குமணி வடம் உயர்ந்தும் தாழ்ந்தும் தொங்கிப்பிரகாசிக்கவும், அழகிய நிதம்பம் பக்கங்களிலே அசையவும் உலகத்திலுள்ள மனிதர்கள் பெற்றறியாத அழகிய குழந்தை வடிவத்தை உடையவனும் உயர்ந்த நீலரத்தினம் போன்ற நிறத்தையுடையவனுமான வாசுதேவன் (ஸ்ரீ கிருஷ்ணன்) தளர்நடை நடந்து வரவேணும்— 8

பாசு: **வெண் புழுதிமேல் பெய்து கொண்டளைந்ததோர்**
வேழத்தின் கருங்கன்று போல்
தெண் புழுதியாடித்திரிவிக்கிரமன் சிறுபுகர்பட வியர்த்து
ஒண்போதலர் கமலச் சிறுக்காலுறைத்து ஒன்றும்
நோவாமே
தண்போது கொண்ட தவிசின்மீதே தளர்நடை நடவானோ **9**

உரை: (தனது) பரந்த திருவடிகளைக்கொண்டு மூன்று உலகங்களையும் அளந்த இக்கண்ணன்....வெளுத்த புழுதிமண்ணை தன்மேலே வாரித்தூற்றிக்கொண்டு அளைந்த ஒரு கரிய குட்டியானை போல— தெளிவான புழுதியிலே விளையாடி சிறிது பிரகாசம் உண்டாகும்படி வியர்த்துப்போய்— தகுணத்தில் மலர்ந்த அழகிய தாமரைப்பூவிர்க்கு

ஒப்பான சிறிய பாதங்களில் ஏதாகிலும் உறுத்தி அதனால் நோவு உண்டாகாதபடி குளிர்ந்த புஷ்ப மெத்தையின் மீது மெல்ல தளர் நடை நடக்க வேணும் என்கிறார்— 9

பாசு: **திரை நீர்ச் சந்திரமண்டலம் போல் செங்கண்மால் கேசவன் தன்**
திரு நீர் முகத்துத் துலங்கு சுட்டி திகழ்ந்தெங்கும் புடை பெயர
பெருநீர்த்திரை யெழுகங்கையிலும் பெரியதோர் தீர்த்த பலம்
தருநீர் சிறுச்சண்ணம் துள்ளம் சோரத்தளர் நடை நடவானே 10

உரை: சிவந்த கண்களையும் கரிய நிறத்தையும் கேசவனென்னும் திரு நாமத்தையும் உடைய இவன்.... அலை நீரையுடைய சமுத்திரத்தின் நடுவில் அசைந்து தோன்றுகிற சந்திரமண்டலத்தின் பிரதிபிம்பம் போல மிக அழகுடன் ஒளி வீசுகிர தனது முகத்திலே விளங்குகிற சுட்டியானது எங்கும் பிரகாசித்துக்கொண்டு இடம், வலம், ஆகிய இரு பக்கங்களிலும் அசையவும்.... சிறந்த தீர்த்தமாகிய அலை எழுகின்ற கங்கையைக்காட்டிலும் மேலான ஒப்பற்ற புண்ணிய பலனைக் கொடுக்கின்ற ஜலத்தை உடைத்தான சிறிய சண்ணத்தில் நீர் துளித் துளியாகச் சொட்டவும் தளர்நடை நடக்கின்றான்— கரிய நிறத்தையுடைய கண்ணனது நெற்றியில் விளங்குகிற சுட்டிக்கு.... கருநிறக் கடலின் நடுவில் அசைந்து தோன்றும் சந்திரபிம்பம் ஏற்ற உவமையாகும்— 10

பாசு: **ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய அஞ்சன வண்ணன் தன்னை**
தாயர் மகிழ ஒன்னார் தளரத் தளர்நடை நடந்ததனை
வேயர் புகழ் விட்டு சித்தன் சீரால்விரித்தன உரைக்க வல்லார்
மாயன் மணிவண்ணன் தாள்பணியும் மக்களைப் பெறுவர்களே 11

உரை: இடையர் குலத்தில் வந்து அவதரித்த மைபோன்ற கரிய நிறத்தையுடைய கண்ணன் தன்னைக்கண்டு.... தாய்மார்கள் மன மகிழவும். சத்துருக்கள் வருந்தி நடுங்கவும் தளர்நடை நடந்தவாற்றை

வேயர் குடியிலிருப்பவர்கள் எல்லாராலும் புகழப் பெற்ற பெரியாழ்வார் சிறப்புடன் விவரித்துச்சொன்ன பரடல்களை (எப்பொழுதும்) சொல்லுபவர்கள்.... ஆச்சரிய குணங்களையுடையவனும் நீலமணி போன்ற நிறமுடையவனுமான (எம்பெருமானுடைய) திருவடிகளை வணங்கவல்ல பிள்ளைகளை பெறுவார்கள்—

அடிவரவு— **தொடர் செக்கர் மின்னுக் கன்னல் முன்னல் ஒருகால் படர் பக்கம் வெண் திரை ஆயர் பொன்—**

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

பெரியாழ்வார் திருமொழி

இரண்டாம்பத்து—மூன்ருவது திருமொழி

காதுகுத்தி காதனி இடுதல்

போய்ப்பாடுடைய

அவதாரிகை : யசோதைப் பிராட்டி கண்ணனுக்கு காது குத்தி காதணிகள் இட்டு கண்டு ஆனந்திக்க ஆசைப்பட்டு காதுகுத்தும் உத்ஸவத்திர்க்கு ஊரில் பெண்களை எல்லாம் அழைத்துவிட்டு வந்தவர்களை மரியாதை செய்வதர்க்காக பழவர்க்கங்கள் தாம்பூலங்கள் முதலியவைகளைச் சேகரித்து வைத்து.... கண்ணணைக் காதுகுத்த வாவென்று யசோதை அழைக்க.... அவன் காது நோகும் என்று அஞ்சி வர மாட்டேன் என்னவும் அவன் அஞ்சாமல் இருக்க சமாதானமான வார்த்தைகளைச் சொல்லியும், அபிமதமான வஸ்துக்களைக் காட்டியும் உடன்படுத்தி காதுகுத்திப் பெருக்கினபடியை ஆழ்வார் தம்மையும் யசோதையைப்போல பாவித்து அவனைக்குறித்து பாசுரங்களைப்பாடி இனியராகிருர், இத்திருமொழியில் பன்னிரண்டு பாசுரங்களில் முறையே எம்பெருமானுடைய த்வாதச நாமங்களையும் கூறி வருகிருர்—

பாசு : **போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான்**
பொருதிறல் கஞ்சன் கடியன்
காப்பாருமில்லை கடல்வண்ணா உன்னைத் தனியே
போய் எங்கும் திரிதி
பேய்ப்பால் முலையுண்ட பித்தனே கேசவ நம்பி உன்னைக்
காதுகுத்த
ஆய்ப்பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தார் அடைக்காய்
திருத்தி நான் வைத்தேன் 1

உரை: கண்ணனே! பெருமையடைந்துள்ள உன் தகப்பனுன நந்த கோபரும் நான் சற்று வெளியே போய் வருகிறேன் நீ பிள்ளையைக் காப்பாற்றிக்கொண்டிரு என்று சொல்லிச் சென்றவர் இன்னும் வர வில்லை. போர் செய்வதில் திறமைவாய்ந்த கம்ஸனே உன்மேல் கறுக் கொண்டிருப்பதனுல் எந்த சமயத்தில் யாரை அனுப்பி என்ன தீங்கு செய்வானே? தெரியவில்லை, கடல் போன்ற வடிவையுடையவனே! உன்னை உபாயமறிந்து காப்பதற்க்கு வல்லவர் வேறொருவரும் இப் பொழுது இங்கில்லை. நீயோவென்ருல் பயம் அறியாமல் தனியனுக கண்ட விடங்களிலும் திரிகின்ருய்? பல பிள்ளைகளுடன் கூடித்திறிகிற என்னை யார் அறிவார்கள் என்று நீ நினைக்கவேண்டாம்.(கடல் வண்ண னுன) உன் வடிவழகே உன்னைக்காட்டிக்கொடுக்கும், பூதனையின் விஷப்பால் உண்டதால் மதிமயக்கமுள்ளவனே! கேசவனே! பரி பூர்ணமானவனே! உனக்குக் காதுகுத்துவதர்க்காக இடைச்சியர்கள் ஆகிய பெண்டுகள் எல்லாரும் வந்திருக்கின்ருர்கள். நானும் அவர் களை பஹுமானிப்பதர்க்கு வேண்டிய வெற்றிலை பாக்கு முதலியவை களைச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறேன் ஆகையால் நீ விரைவில் வாவென்று அழைக்கின்ருள்— 1

பாசு: **வண்ணப்பவள மருங்கினில் சாத்தி மலர்ப்பாதக்கிண்**
கிணியார்ப்ப
நண்ணித் தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணு!
இங்கே வாராய்
எண்ணற்க்கரியபிரானே! திரியை எரியாமே
காதுக்கிடுவன்
கண்ணுக்கு நன்றுமழகு முடைய கனகக் கடிப்பும்
இவையா 2

உரை: உன்னைக்கிட்டிவணங்குகின்றவர்களுடைய மனதைவிட்டு நீங்காத நாராயணனே! நீ மிகச்சிவந்த நிறத்தையுடைய பவழவடத்தை அரையில் தரித்துக்கொண்டு தாமரைமலர் போன்ற பாதங்களி லணிந்த சதங்கைகள் ஒலிக்கும்படி இங்கே வாராய், (உன்மேல் அன்பில்லாதவர்களுக்கு) நினைப்பதர்க்கும் அருமையான சுவாமியே நூல்திரியை உன் காதுகளுக்கு எரிச்சல் உண்டாகாதபடி இடுவேன். (அப்படித் திரியிட்டுக் காது பெருக்கிக்கொண்டால் பின்பு நீ அணிந்து கொள்ள வேண்டியவையான கண்களுக்கு மிகவும் அழகியதான (தர்சநீயமான) பொன்மயமான காதணியும் இவையாகும் (பார் எவ்வளவு அத்புதமாக இருக்கிறது சீக்கிரத்தில் வா.) 2

பாசு : வையமெல்லாம் பெறும்வார் கடல் வாழும் மகரக்குழை
கொண்டு வைத்தேன்
வெய்யவே காதில் திரியை யிடுவன் நீ வேண்டிய
தெல்லாம் தருவன்
உய்ய இவ்வாயர் குலத்தினில் தோன்றிய ஒண்சுடராயர்
கொழுந்தே
மையன்மை செய்து இளவாய்ச்சிய ருள்ளத்து
மாதவனே! இங்கே வாராய் 3

உரை : நந்த கோகுலத்தில் வாழ்கின்ற நாங்கள் யாவரும் உஜ்ஜீவிக்கும்படி இந்த இடையர் குலத்திலே வந்து பிறந்தவனும்.... மிக்க ஒளியையுடையவனும்.... ஆயர்களின் கொழுந்து போன்றும் இருப்பவனே! இந்த உலகங்களை எல்லாம் (தனக்கு) விலையாகக் கொள்ளக் கூடியதும், பெரிய கடலிலே வாழ்கின்ற சுருமீனின் வடிவத்தை அமைத்துச் செய்யப்பட்டதுமான மகர குண்டலத்தை உன் காது பெருக்கியிடுவதர்க்காகக் கொண்டு வந்திருக்கிறேன். உன் காதுக்கு தினவு உண்டாகாமல் இருக்கும்படி உன் காதில் வெப்பமுடன் திரியை யிடுகிறேன். நீ இப்போது திரியையிட்டு காது பெருக்கிக் கொண்டால் பிறகு மிகச்சிறந்த மகாகுண்டலங்களையும் அணிந்து கொள்ளலாம் உனக்கு வேண்டிய பழங்கள் பணியாரங்கள் முதலிய பொருள்களை எல்லாம் கொடுப்பேன். மாதவனே! (ஸ்ரீபதியே!) மடமைப் பருவமுடைய இடைப்பெண்கள் மனதிலே கலக்கத்தை செய்து கொண்டு இங்கே வாராய் (இங்கே வா) என்பது-கண்ணனது வடிவழகு பார்த்த மாத்திரத்திலேயே கோபிகைகளின் உள்ளத்தை கலங்கச்செய்யும் இயற்கையுடையதாதலால் யசோதை அப்படி அழைக்கிருள்— 3

பாசு : வணநன்றுடைய வயிரக்கடிப்பிட்டு வார்காது தாழப்
பெருக்கி
குணநன்றுடையர் இக்கோபால பிள்ளைகள் கோவிந்தா!
நீ சொல்லுக்கொள்ளாய்
இணை நன்றழகிய இக்கடிப்பு இட்டால் இனிய
பலாப்பழம் தந்து
சுணநன்றணி முலையுண்ணத்தருவன் நான்
சோத்தம்பிரான் இங்கே வாராய் 4

உரை : இதோபார் ! இந்த இடைப்பிள்ளைகள் தங்களது நீண்டகாதை பெருக்கிப்பெரியதாகச் செய்து மிக நல்ல நிறத்தையுடையதும் வயிரக் கற்கள் பதித்துச் செய்ததும் ஆகிய கடிப்புகளை அணிந்துகொண்டு தங்கள் தாய்மார்கள் சொல்லியவற்றைச் செய்து நல்ல குணத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். கோவிந்தனே நீயோ வென்றால் தாயாகிய என்னுடைய சொல்லைக் கேழ்க்கிறதில்லை. நீயும் இவர் களைப் போல இருக்க வேண்டாமோ ? எனது சொல்லைக்கேட்டு.... ஒன்றேடொன்றெத்து மிகவும் அழகியதாக இருக்கிற இக்காதணியை அணிந்து கொண்டால் நான் உனக்கு நல்ல தித்திப்பான பலாப் பழங்கள் கொடுத்து இனிய எனது முலைப்பாலையும் நீ பருகும்படி கொடுப்பேன் அப்பா ! ஸ்வாமியே ! உன்னைக்கும்பிட்டு ஸ்தோத்திரம் செய்கிறேன் நீ இங்கே வரவேணும். 4

பாசு : **சோத்தம்பிரான் என்று இரந்தாலும் கொள்ளாய் சுரி**
குழலாரொடு நீ போய்
கோத்துக்குரவை பிணைந்து இங்குவந்தால்
குணங்கொண்டிடுவனே ? நம்பீ
பேர்த்தும் பெரியன அப்பம்தருவன் பிரானே ! திரியிட
வொட்டில்
வேய்த்தடம் தோளார் விரும்பு கருங்குழல் விட்டுவே
நீ இங்கே வாராய் 5

உரை : யசோதை இப்படி அழைத்தும் கண்ணன் வராமல் நேற்று நீ அழைத்தபொழுது நான் வரவும் வந்ததைக்குணமாகக்கொள்ளா மல் என்னை நீ அடிக்கவில்லையா ? இப்போழுது நான் வரமாட்டேன் என்ன.... யசோதை.... எம்பிரானே ! உனக்கு அஞ்ஜலி செய்து தோத்திரம் சொல்லி வரவேணுமென்று கெஞ்ஜிக்கேட்டுக் கொண்டா லும் நீ என் சொல்லைக்கேட்டு வருகிறதில்லை. எங்கும் நிறைந்த வனே ! நீ சுருண்ட கூந்தலையுடைய பெண்களுடன் தனி இடத்திலே போய் கைகோத்துக்கொண்டு குரவைக் கூத்தாடி பின்பு இங்கே வந்தால் (நீ அப்படிச் செய்ததை) எப்படி நான் குணமாகக்கொள்ளக் கூடும் ? உபகாரகனே ! திரியை நீ காதில் இட்டுக்கொண்டால் பெரிய பெரிய அப்பங்களை மறுபடியும் மறுபடியும் உனக்கு நான் கொடுப் பேன். மூங்கில் போன்ற பெரிய தோள்களையுடைய மகளிர் விரும்புகிற கரு நிறமான கூந்தலையுடைய விஷ்ணுவே ! இங்கே வா (வரவேணும் என்பது— 5

பாசு : விண்ணெல்லாம் கேட்க நீ அழுதிட்டாய் உன்வாயில்
விரும்பியதனை நான் நோக்கி
மண்ணெல்லாம் கண்டு என் மனத்துள்ளேயஞ்சி
மதுசூதனே என்றறிந்தேன்
புண்ணேதுமில்லை உன் காதுமறியும் பொறுத்து
இறைப்போது இரு நம்பீ !
கண்ணா ! என் கார்முகிலே ! கடல்வண்ணா ! காவலனே !
முலையுணாயே 6

உரை : யசோதை.... கண்ணனை காதில் கடிப்பிட வேணுமென்று அழைக்க.... அவன் அங்கேவராமல் தெருவில் போய் மண்ணையும் தின்றதால் அவள் கோபங்கொண்டு அவனை அடிக்க அவன் அழுகிறான். அப்போது யசோதை சொல்லுகிறாள். மண்ணைத்தின்ற தற்காக நான் உன்னை அடிக்கையில் நீ மேலுலகங்கள் எல்லாம் கேட்கும்படி பலத்த தொனியுடன் அழுதாய் ! அப்படி நீ அழும்போது நான் ஆதரத்துடன் உன் வாயிலே மண் உண்டதைப்பார்க்கும்போது வாயினுள்ளே உலகங்களை எல்லாம் முன் போலக்கண்டு என்மனஸ் ஸினுள்ளே பயப்பட்டு இவன் நம்மகனல்ல மதுசூதனனான ஸர்வேச் வரனே யாவனென்று தெரிந்து கொண்டேன். உன்னுடைய காதிலே புண் ஒன்றுமில்லை, இக்குண்டலத்தை இடும்போது உன்காது சிறிது மடங்கும் அதைமட்டும் சற்று நேரம் பொருத்துக் கொள்ளவேணும் என்று சொல்லி அழைக்க கண்ணனும் அதற்கு இசைந்து நிற்க.... யசோதை அவனை எங்கும் நிறைந்தவனே ! கண்ணனே ! நீருண்ட மேகம் போன்றவனே ! கடல் போன்ற நிறத்தை உடையவனே ! யாவரையும் காக்கவல்லவனே ! என்று பல படியாகக் கொண்டாடி குண்டலம் இடும் போது உண்டாகும் நோவை பொறுப்பதர்க்காக முலைப்பால் பருகும்படி அழைக்கின்றாள்— 6

பாசு : முலையேதும் வேண்டேனென்றோடி நின்காதில்
கடிப்பை பறித்தெறிந்திட்டு
மலையையெடுத்து மகிழ்ந்து கல்மாரிகாத்துப் பசு நிரை
மேய்த்தாய்
சிலையொன்று இறுத்தாய் ! திரிவிக்கிரமா ! திருவாயர்
பாடிப்பிரானே !
தலை நிலாப்போதே உன் காதைப்பெருக்காதே
விட்டிட்டேன் குற்றமே யன்றே 7

உரை : யசோதை அழைக்கவும் கண்ணன் வந்து முலையுண்ணத் தொடங்க அப்போது யசோதை அவன் காதில் கடிப்பை இடவும் காது நோகக் கண்ணன் மிகவும் கோபித்து முலையையும் மற்றுமுள்ள உன் பக்ஷணாதிகள் எதையும் நான் விரும்பமாட்டேன் எனக்கு ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி ஓடிப்போய் காதிலிட்டதையும் எடுத்து யெறிந்துவிட யசோதை மறுபடியும் அவனை அழைத்து அப்பனே ! நான் உன் காதிலிட்ட காதணியை பிடுங்கியெறிந்து விட்டு கோவர்த் தன மலையை குடையாகத் தூக்கிமகிழ்ந்து கல் மாரியினின்றும் இடையர் முதலானவர்களைக் காத்து-பசுக்களின் திரளை மேய்த்தவனே ! ஒப் பற்றதொரு சிவதனுஸ்ஸை சீதைப்பிராட்டியையமணம் புரிய முறித் தவனே ! திருவிக்கிரமனே ! திருவாயர் பாடிக்கு உபகாரகனே ! என்று பலவிதமாகப் புகழ்ந்து காதில் அணியை இடப்போகையில் அவன் இசையாமல் இருக்க.... அப்பா ! உன் மேல் குற்றமில்லை தலைநிற்காமலிருக்கிற இளங்குழந்தைப் பருவத்திலேயே உன்காதைப் பெருக்காது நான் விட்டு விட்டேன் அப்படி விட்டு வைத்தது என்னு டைய குற்றமே தான் என்று வெறுத்துக் கூறுகின்றாள்— 7

அவதாரிகை : எட்டாம் பாட்டில் முதல் இரண்டடி கண்ணன் பாசுர மாகவும் பின் இரண்டடி யசோதை பாசுரமாகவும் அமைந்திருக்கிறது-

பாசு : **என் குற்றமே என்று சொல்லவும் வேண்டாகாண்**
என்னை நான் மண்ணுண்டேனாக
அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்தும் அனைவர்க்கும்
காட்டிற்றிலையே
வன்புற்றரவின் பகைக்கொடி வாமன நம்பீ !
உன் காதுகள் தூறும்
துன்புற்றனவெல்லாம் தீர்ப்பாய் பிரானே !
திரியிட்டுச் சொல்லுகேன் மெய்யே 8

உரை : கண்ணன்.... தலை நிலாப்போதே உன் காதைப்பெருக்காது விட்டு விட்டேன் அது என் குற்றமென்று உன்னை வெறுத்துச் சொல்லுவது என் மேல் குற்றம் சுமத்துவதன்றோ என்ன....யசோதை பின்னேயார் குற்றம் என்ன.... கண்ணன்.... மண்தின்றாத என்னை நான் மண் உண்டதாகச் சொல்லி பழியை ஏற்றி என்மேல் அன்புடைய வள் போல என்னைப்பிடித்துக்கொண்டு என்வாயில் மண் இருக்கிறதா வென்று பார்த்து அது இல்லாதிருக்கையிலேயே என்னை அடித்தும் அதோடு நில்லாமல் பாருங்கோள் பெண்காள் என்று எல்லாருக்கும்

நீ காட்டவில்லையா நான்வரமாட்டேன் என்ன.... யசோதை.... பெரிய புற்றில் வசிக்கின்ற பாம்புக்கு விரோதியான கருடனைக் கொடியாக உடைய வாமன மூர்த்தியே! இப்படி நீயும் நானும் வாதாடிக்கொண்டு போது போக்கிக்கொண்டிருந்தால் உன் குத்தின காதுகள் தூர்ந்து விடும். உன்னை அடுத்தவர்களுடைய துன்பங்களை எல்லாம் போக்கு பவனே! எம்பிரானே! நீ காதில் திரியையிட்டுக்கொள். உன்னை அடிக்கமாட்டேன் நீ நம்புமாறு நிஜமாகவே (சத்தியமாகச்) சொல்லு கிறேன்—என்கிருள்— 8

பாசு: **மெய்யென்று சொல்லுவார் சொல்லைக்கருதித்**
தொடுப்புண்டாய் வெண்ணெயை என்று
கையைப்பிடித்துக்கரையுரலோடு என்னைக் காணவே
கட்டிற்றிலையே
செய்தன சொல்லிச் சிரித்து அங்கு இருக்கில் சிரீதரா!
உன் காதுதூரும்
கையில் திரியை யிடுகிடாய் இங்நின்ற காரிகையார்
சிரியாமே 9

உரை: கண்ணன் யசோதையை நோக்கி உன் பேச்சை நம்பக் கூடாது. இவன் வெண்ணெயைத் திருடி உண்டான் என்று சொல்லு வார் சொன்ன பேச்சுக்களை எல்லாம் கேட்டு.... நீ மெய்யென்று நினைத்து என்மீது பழிசுமத்தி என்கையைப்பிடித்து பலரும் கண்டு பரிகாசம் செய்யுமாறு ஒன்றும் திருடாத என்னை அழகிய வேலைப்பாடு உள்ள உரலில்கட்டவில்லையோ? நான்வரமாட்டேன் என்று கண்ணன் யசோதையின் மேல்குற்றம் சாட்டிச்சிரித்து நிற்க அதற்கு யசோதை நான் முன்பு செய்தவற்றை எல்லாம் சொல்லி புன்சிரிப்புச் செய்துகொண்டு தூரத்தில் நின்று பொழுதுபோக்கிக் கொண்டு இருந்தால் சிரீதரனே! உன் காதுகள் தூர்ந்து விடும் தவிரவும் உன் முன்னல் அன்பினல் உன்னை விட்டுப்போகாமாட்டாமல் நிற்கின்ற இந்தப் பெண்கள் சிரியாதபடி என்கையிலுள்ள இத்திரியை அணிந்து கொள்— 9

பாசு: **காரிகையார்க்கும் உனக்கும் இழுக்குற்றென்?**
காதுகள் வீங்கியெரியில்
தாரியாதாகில் தலைநொந்திடு மென்று விட்டிட்டேன்
குற்றமே யன்றே
சேரியிற்பிள்ளைகளெல்லாரும் காது பெருக்கித்
திரியவும் காண்டி
ஏர் விடைசெற்று இளங்கன்று எறிந்திட்ட இருடீ
கேசா என்தன் கண்ணே 10

உரை : கண்ணன்.... என்னுடைய காதுகள் வீங்கிப்போய் எரிச்சலெடுத்தால் பரிகாசம் செய்கிற பெண்களுக்கும் என்காதில் திரியிட நிற்கிற உனக்கும் நேர்ந்த சேதம் ஏதாகிலும் உண்டோ? என்று கேழ்க்க அதர்க்கு யசோதை நீ இன்னும் இளம்பருவத்தில் இருக்கும் போதே உன் காதைக் குத்தித்திரியைபிட்டிருக்கவேண்டும், அப்பொது குழந்தைக்குப் பொறுக்காதே தலைநோய் உண்டாகிவிடுமோ என்று நினைத்து முன்னமேயே காதுகுத்தாமல் இருந்துவிட்டேன் அப்படி அன்பினால் விட்டது என்னுடைய குற்றமல்லவா? அழகிய ரிஷபத்தின் வடிவுகொண்டு வந்த அரிஷ்டாசுரனை அழித்து சிறிய கன்றின் வடிவாய் வந்த வத்ஸாசுரனைக் குணிலாகக்கொண்டு விளா மரத்தின்மேல் வீசிய இருஷீகேசனே! எனக்குக் கண்போன்றவனே! இந்த இடைச்சேரியில் எல்லாப்பிள்ளைகளும் காது பெருக்கிக்கொண்டு திரிகிறதை நீ பார்க்கவில்லையா?— நீயும் அப்படிச் செய்துகொள் என்கிறாள்— 10

பாசு : **கண்ணைக்குளிரக்கலந்து எங்கும் நோக்கிக் கடிகமழ்**
பூங்குழலார்கள் *
எண்ணத்துள் என்றும் இருந்து தித்திக்கும் பெருமானே!
எங்களமுதே *
உண்ணக்கனிகள் தருவன் கடிப்பொன்னும் நோவாமே
காதுக்கிடுவன் *
பண்ணைக்கிழியச் சகடமுதைத்திட்ட பற்பநாபா இங்கே
வாராய் *

உரை : இடைப்பெண்கள் உன்திருமேனி முழுவதும் பொருந்தப் பார்த்து மனங் குளிரும்படி உன் கண்ணை அவர்களுடைய கண்களோடு சேர்த்து அவர்களுடைய வடிவம் முழுவதும் பார்த்து.... வாசனை வீசுகின்ற புஷ்பங்கள் அணிந்தவர்களான அப்பெண்களினுடைய எண்ணத்தின்படியே அவர்களுடைய மனத்தினுள்ளே எப்போதும் இருந்து கொண்டு ரஸிக்கின்ற பெருமையை உடையவனே! எங்களுக்கு அமுதம் போன்றவனே! நீ தின்பதற்கு நாவல் பழம் முதலிய பழங்களைத்தருவேன். காதணியை சிறிதும் நோவாதபடி உன் காதிலே இடுவேன் சகடமாகவந்த அசுரனைக் கட்டுக்குலையும்படி உதைத்து வதைத்த பத்மநாபனே! இங்கேவா— 11

பாசு : வாவென்று சொல்லி என் கையைப்பிடித்து வலியவே
காதில் கடிப்பை *
நோவத் † திரிக்கில் உனக்கிங்கிழுக்குற்றென் காதுகள்
நொந்திடும் கில்லேன்
நாவற்பழம் கொண்டு வைத்தேன் இவை † காணாய்
நம்பீ! முன் வஞ்சக மகளைச்
சாலப்பாலுண்டு சகடிறப்பாய்ந்திட்ட தாமோதரா!
இங்கே வாராய் * 12

உரை கண்ணன் யசோதையைப்பார்த்து.... நான் உன் காதில் திரியிடுகிறேன் வாவென்று சொல்லி என் கையைப்பிடித்துக்கொண்டு காதில் நோவு உண்டாகும்படி காதணியை வலிய அழுத்தி இட்டால் உனக்கு வந்த நஷ்டம் என்ன ? என் காதுகள்தான் நோகும். நான் அதைப்பொறுக்க வல்லவனல்லேன். என்று சொல்ல.... யசோதை சொல்லுகிருள், எங்கும் நிறைந்தவனே ! உனக்கு இஷ்டமான நாவற் பழங்களைக்கொண்டு வந்து வைத்திருக்கிறேன் இவற்றைப்பார் மற்றும் காது நோகும் பொறுக்கமாட்டேன் என்கிருய் ? முன்பு வஞ்சனையால் வந்த பூதனை மாளும்படி அவளது முலைப்பாலைப்பருகி.... சகடாசுரன் முறியும்படி கால்களைத் தூக்கி உதைத்த தாமேதரனே! உனக்கு இந்நோவு பொறுப்பது பெரிதோ ? இல்லவே இல்லை இங்கே வா—12

பாசு : வார்காது தாழப்பெருக்கியமைத்து மகரக்குழையிட
வேண்டி *
சீரால் அசோதை திருமாலைச்சொன்ன சொல் சிந்தையுள்
நின்று திகழ *
பாரார்தொல் புகழான் புதுவை மன்னன் பன்னிருநாமத்
தாற் சொன்ன *
ஆராத அந்தாதி பன்னிரண்டும் வல்லார் அச்சுதனுக்கு
அடியாரே * 13

உரை : யசோதை யானவள் கண்ணனது.... சுபாவமாகவே நீண்டு விசாலமாக இருக்கிறகாதுகளை பெரிதாகவளர்த்தி ஓரளவிலே நிற்கும் படி செய்து மகர குண்டலங்களையிடவிரும்பி ஸ்ரீ காந்தனான கண்ணனைச் சிறப்புடன் அழைத்த சொற்கள்.... தம்முடைய மனதிலே நிலையாகப் பொருந்தி விளங்க (அச்சொற்களை) பூமியில் நிறைந்த கீர்த்தியை யுடையவரும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அதிபருமான பெரியாழ்வார் பன்னிரு நாமங்களோடும் சேர்த்துச் சொல்லியழைத்த தும், ஓத, ஓத, திருப்த்தி பிறவாத அந்தாதித்தொடையினுலாகியது மான இப்பன்னிரண்டு பாட்டுக்களையும் ஓதுபவர்கள் எம்பெரு மானுக்கு அடியாராவார்கள்— 13

அடிவரவு— போய் வண்ணம் வையம் வணம் சோத்தம் விண் முலே என்மெய் காரிகைக் கண்ணே வா வார் வெண்ணேயளேந்த—

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

இரண்டாம் பத்தில்—நான்காம் திருமொழி

நீராட்டல் வெண்ணேயளேந்த

அவதாரிகை : இத்திருமொழியில் யசோதைப்பிராட்டி கண்ணபிரானுக்குக் காது குத்திப்பெருக்கி குண்டலம் இட்டபின்பு அவனுடம் புக்கு அனுக்கம் நீங்க அவனே நீராட்டவேணுமென்று ஆசைப்பட்டு அதர்க்கு வேண்டிய உபகரணங்களே எல்லாம் ஸித்தப்படுத்திவைத்து விட்டு கண்ணனே பலபடியாக நல்வார்த்தை சொல்லிப் புகழ்ந்து அழைத்து மஞ்ஜனமாட்டியதை ஆழ்வார் தாமும் அனுபவிக்க விருப் பம்கொண்டு தம்மை அவளாகவே பாவித்து அக்காலத்தில் அவள் பேசிய படியை எல்லாம்பாடி இன்புறுகிருர்—

பாசு : வெண்ணேயளேந்த குணுங்கும் விளேயாடு புழுதியும் கொண்டு *
திண்ணென இவ்விரா உன்னேத் தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன் *
எண்ணேபுளிப்பழம்கொண்டு இங்கு எத்தனே போதும் இருந்தேன் *
நண்ணலரிய பிரானே! நாரணு! நீராடவாராய் * **1**

உரை : யசோதை கண்ணனேப்பார்த்துச் சொல்லுகிருள் ஒருவராலும் தன்னுடைய சுயயத்தனத்தால் கிட்ட இயலாத சுவாமியே! முழங்கையளவும் விட்டு வெண்ணேயை வாரியுண்டு மேலெல்லாம் பூசிக்கொண்டதனுல் உண்டான மொச்சை நாற்றத்தையும் அத்துடன் தெருவில் விளேயாடுவதினுல் படிந்த புழுதியையும் வைத்துக்கொண்டு அதனுல் தினவெடுக்க இரவில் உடம்பை படுக்கையில் தேய்த்துக் கொண்டு படுத்திருக்கும்படி இன்றை இரவில் நிச்சியமாக உன்னே நான் விடமாட்டேன், நீ நன்ருகத்தேய்த்து ஸ்நானம் செய்வதர்க்கு வேண்டிய எண்ணேயையும் புளிப்புச் சுவையுள்ள (சியக்காய் போன்ற) ஓர்வகைப் பழத்தையும் ஸித்தமாகவைத்துக்கொண்டு இங்கே வெகு நேரமாக உன்வரவை எதிர்பார்த்து இருக்கின்றேன், நாரணனே! நீ விரைவில் நீராடவரவேண்டும்— 1

பாசு : **கன்றுகளோடச் செவியில் கட்டெறும்பு பிடித்திட்டால் ***
தென்றிக்கெடுமாகில் வெண்ணெ திரட்டி விழுங்குமா
காண்பன் *
நின்றமராமரம் சாய்த்தாய்! நீ பிறந்த திருவோணம் *
இன்று நீ நீராடவேண்டும் எம்பிரான்! ஓடாதேவாராய் 2

உரை : பல காலங்களாக நிலையாக நின்றிருந்த ஏழு மராமரங்களையும் ஒரு காலத்தில் (ராமாவதாரத்தில்) ஒருங்கே ஊடுருவ அம்பெய்து வீழ்த்தியவனே ! பசுவின் கன்றுகள் வெருண்டோடுவதைக் காண் பதற்காக நீ அவற்றின் காதுகளில் கட்டெறும்பைப் பிடித்துப்புக விட்டால் அதனுல் அக்கன்றுகள் சிதறி ஓடிக்காணமுடியாதபடி போய்விடுமே? அப்படிக்காணமுடியாதபடி போய்விட்டால் பின்பு உனக்கு இஷ்டமானபடி திரட்டிவிழுங்குவதற்கு வெண்ணெ கிடைப் பது எப்படிச் சாத்தியமாகும் ? கன்று இருந்தாலல்லவோ பால்கறந்து தயிர் தோய்த்துக் கடைந்து வெண்ணெ எடுத்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் கிடைக்காது இன்று நீ பிறந்த திருவோண நக்ஷத்திர சுபதினமாகும் நீ நன்ருக நீர் ஆடவேண்டும் எனக்கு சுவாமியான வனே ? நீ அப்படி எல்லாம் செய்து கொண்டு ஓடிப்போகாமல் நீராடவா ! 2

பாசு : **பேய்ச்சி முலையுண்ணக்கண்டு பின்னையும் நில்லாது**
என்னெஞ்சம் *
ஆய்ச்சிய ரெல்லாரும் கூடி அழைக்கவும் நான்
முலை தந்தேன் *
காய்ச்சின நீரொடுநெல்லி கடாரத்தில் பூரித்து
வைத்தேன் *
வாய்த்தபுகழ் மணிவண்ணு! மஞ்ஜனமாட நீ வாராய் * 3

உரை : பூதனையினுடைய முலையை அவளுடைய உயிரோடும் நீ உண்டுவிட அவ்வாறக்கிபட்ட பாட்டை நானறிந்தும் அஞ்சி ஓடவேண்டி இருக்க பின்னும் என்மனம் கேளாமலும். இடைச்சிகளெல்லாரும் ஒன்று கூடி அச்சமுறுத்துகிற பேச்சையும் கேளாமல் உன்மேல் கொண்ட அன்பினுல் நான் அப்படி எல்லாம் செய்யாமல் உனக்கு முலைதந்தேன் அல்லவா ? (இப்பொழுது) நெல்லி இலையைப் போட்டு காய்ச்சின நீரை (பெரிய) சருவத்தில் நிறைத்து வைத்திருக்கிறேன், பொருந்திய புகழையும் நீலமணி போன்ற நிறத்தையுமுடைய கண்ணனே ! நீராடவருவாயாக— 3

பாசு : கஞ்சன் புணர்ப்பினில் வந்த கடிய சகடம் உதைத்து *
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச வாய்முலை வைத்த பிரானே *
மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நாறு சாந்தும் *
அஞ்சனமும் கொண்டுவைத்தேன் அழகனே நீராட
வாராய் * 4

உரை : கம்ஸனுடைய கபடமான ஆலோசனையினாலே உன்னை நலிவதற்க்காகவந்த அஸுராவேசத்தால் கொடியதான சகடத்தைத் (திருவடிகளால்) உதைத்து முறித்து.... வஞ்சனையுள்ள பூதனை என்னும் அரக்கி முடியும்படி அவளுடைய முலையிலே வாயை வைத்த உபகாரகனே ! உன் திருமேனி நிறம் பெறும்படி சாத்துவதர்க்கு மஞ்சளையும் நீராடியபிறகு சாத்திக்கொள்ள செங்கழு நீர் மாலையையும். பரிமளமான சந்தனத்தையும், கண்களிலிடுவதற்கு மையையும் கொண்டு வைத்தேன், மிக்க அழகு வாய்ந்தவனே ! நீராடவாராய் 4

பாசு : அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலில் கலந்து *
சொப்பட நான் சுட்டு வைத்தேன் தின்னலுறுதியேல்
நம்பீ! *
செப்பிளமென் முலையார்கள் சிறுபுரம் பேசிச்சிரிப்பர் *
சொப்பட நீராட வேண்டும் சோத்தம்பிரான் இங்கே
வாராய் * 5

உரை : நம்பீ ! (பாலசேஷ்டைகளால் நிறைந்தவனே!) பொற்க்கலசம் போன்ற மெல்லிய முலையை உடைய பெண்கள்.... உன் மேலே அற்பமான குற்றங்களையும்.... இவன் அழுக்கு உடம்புடன் இருக்கிறுனென்றும் மறைவில் சொல்லி பரிகாசம் செய்வார்கள். அன்றியும்.... நான் பாலிலே வெல்லக்கட்டியை சேர்த்துக்கலந்த அப்பமும் அப்படியே சேர்த்த சிற்றுண்டையையும் நன்றாக சுட்டுவைத்திருக்கிறேன் நீ அவற்றைத்தின்ன விரும்புவாயாகில் நன்றாக நீராடவேண்டும். எனக்கு சுவாமியானவளே! உனக்கு ஓர் அஞ்ஜலி செய்கிறேன். இங்கே வா !— 5

பாசு : எண்ணெக் குடத்தையுருட்டி இளம்பிள்ளை கிள்ளியெழுப்பி *
கண்ணைப்புரட்டி விழித்துக்கழகண்டு செய்யும் பிரானே! *
உண்ணக்கனிகள் தருவன் ஒலிகட லோத நீர் போல *
வண்ணம் அழகிய நம்பீ! மஞ்ஜனமாட நீ வாராய் * 6

உரை : அகத்தில் உள்ளவர்கள் எல்லாரும் பரபரப்படையும் படியாக முதலில் எண்ணெ நிறைத்து வைத்திருக்கிற குடத்தை உருட்டிவிட்டு அதை அவர்கள் வழிப்பதும் துடைப்பதுமாக இருக்கும் போது தொட்டிலில்படுத்து தூங்குகிற சிறுகுழந்தையை வெடுக் கெனக்கிள்ளி வீரிட்டு அழும்படி எழுந்திருக்கச்செய்து (அருகில் வருகின்ற சிறுவர்களுக்கு) கண் இமையை மடித்து மாற்றிவிழித்து பயம்காட்டி இப்படி எல்லாம் மிக்க தீம்பு செய்பவனே! சுதந்திரனுன வனே! நீ உண்ணும்படி நல்ல பழங்களை உனக்குக்கொடுப்பேன், ஓயாமல் சப்த்திக்கின்ற கடல் அலைகளின் ஜலம்போன்று திருமேனி யின் நிறத்துடன் மிக அழகாக இருக்கப்பெற்ற உத்தம புருஷனே! நீராட வருவாயாக— 6

பாசு : **கறந்த நற்பாலும் தயிரும் கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெ**

பிறந்ததுவே முதலாகப் பெற்றறியேன் எம்பிரானே!

சிறந்த நற்ருய் அலர்தூற்றும் என்பதனுல் பிறர்முன்னே!

மறந்தும் உரையாடமாட்டேன் மஞ்ஜனமாட நீ வாராய்! 7

உரை : எம்பிரானே! காலா காலங்களில் கறந்த நல்ல பாலையும் தயிரையும் தயிரைக்கடைந்து எடுத்து உறிமேல் வைத்திருக்கும் வெண்ணெயையும் நீ பிறந்த வன்று தொடங்கி நான் கண்டறியேன் (என்னைக்காணுமல் நீயே உண்டுவிடுகிருய் என்பது) நான் உன்னைக் கண்டித்தால் குழந்தைக்கு எல்லாரினும் சிறந்த பெற்றதாயும் பழி சொல்லுகிருளே இவன் எவ்வளவு துஷ்ட சேஷ்டைகளை உடைய வனுக இருப்பானே? என்று பிறர் உன்னைக் குறைவாகச் சொல்லு வார்களே? என்ற அச்சத்திலை அயலாரெதிரில் மறந்தும் உனக்குக் குறைவைத்தரும் சொல்லைச் சொல்லமாட்டேன் திருமஞ்ஜன நீராடு வதற்கு நீ வரவேண்டும்— 7

பாசு : **கன்றினை வாலோலை கட்டிக் கனிகளுதிர எறிந்து** *

பின்துடர்ந்தோடி ஓர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினுய் போலும் *

நின்திறத்தேனல்லேன் நம்பி! நீ பிறந்த திருநன் நாள் *

நன்று நீ நீராடவேண்டும் நாரணு ஓடாதே வாராய் * **8**

உரை: கன்று துள்ளி ஓடுவதைக் காண்பதற்காக அதனுடைய வாலிலே ஓலையைக்கட்டி.... அசுரனுடைய மாயத்தன்மையினால் உன்னைக்கொல்ல வந்த ஒரு கன்றைக் குணிலாகக்கொண்டு அசுரா வேசமாக நின்ற விளாமரத்தின்மேல் பழங்கள் எல்லாம் கீழே உதிர்ந்து விழும்படி வீசி எறிந்து.... பின்பு தொடர்ந்து ஓடிப்போய் காளியனென்ற ஓர் சர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு ஆட்டினவ னன்றோ நீ? குறைவில்லாதவனே! நான் உன் விஷயங்களை அத்தைச் செய்தான் இத்தைச் செய்தான் என்றெல்லாம் சொல்லு வார். சொல்லக் கேட்டதல்லாது ஒன்றையும் நினைத்தறிவதற்கும் இயலாதவளாக இருக்கின்றேன். அது எப்படியோ இருக்கட்டும். இன்று நீ அவதரித்த திரு நக்ஷத்திர சுபதினமாகும் ஆதலால் நன் ருக நீராட வேண்டும். நாரணா ஓடாமல் வருவாயாக. 8

பாசு: **பூணித்தொழுவினில் புக்குப் புழுதியளைந்த பொன்மேனி***
காணப்பெரிதும் உகப்பன் ஆகிலும் கண்டார் பழிப்பர் *
நாணெத்தனையுமிலாதாய்! நப்பின்னை காணில் சிரிக்கும்*
மாணிக்கமே! என்மணியே! மஞ்ஜனமாட நீ வாராய் * 9

உரை: நீ நம் ஜாதிக்குத்தக்கபடி பசுக்களைக் கட்டியிருக்கிற கொட் டிலில் புகுந்து புழுதிமண்ணில் அளைந்து அழுக்கு உடம்புடனே இருந்தாலும் உனது மேனி பொன்னுக்கு புழுதியேறினாற்போல ஏற் ருற்போல மிக அழகுடன் விளங்குவதால் அதைப்பார்ப்பதற்கு நான் மிகவும் விரும்புவேன். என்றாலும் இவள் பிள்ளை வளர்ப்பது அழகா இருக்கிறது என்று உன்னைப்பார்ப்பவர்கள் எல்லாரும் என்னை ஏசு வார்கள் சிறிதும் லஜ்ஜை இல்லாதவனே! அன்றியும் நப்பின்னையான வள் நீ இப்படி இருப்பதைக்கண்டால் பரிகாசம் செய்வாளே? என் மாணிக்கமே என் மணியே நீ இப்போது இருப்பது போல் வெட்க மற்று நில்லாமல் உடனே நீராடவரவேணும் என்கிருள்— 9

பாசு: **கார்மலி மேனி நிறத்துக் கண்ணபிரானை யுகந்து ***
வார்மலிகொங்கை யசோதை மஞ்ஜனமாட்டிய வாற்றை *
பார்மலிதொல் புதுவைக்கோன் பட்டர்பிரான் சொன்ன பாடல் *
சீர்மலி செந்தமிழ்வல்லார் தீவினையாதுமிலரே * 10

உரை : நீருண்ட கருமேகத்திற்காட்டிலும் சிறந்த திருமேனி நிறத்தை உடைய கண்ணபிரானை.... கச்சுக்கு அடங்காமல் விம்முகின்ற ஸ்த னங்களை உடைய யசோதைப்பிராட்டி.... விரும்பியழைத்து நீராட்டிய வாற்றை.... பூமியிலே சிறந்த பழமையான ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர் வாஹகரான பெரியாழ்வார் அருளிச்செய்த அழகு நிறைந்த செந் தமிழாலாகிய இப்பாசுரங்களை ஓதுபவர்கள் சிறிதும் பாவமென்பதே இல்லாதவராவார்கள்— (இப்பாடல்களை ஓதுபவர்களுக்கு தீவினை என்பது கிட்டவும் அனுகாதென்பதாம்)

அடிவரவு— வெண்ணை கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

இரண்டாம்பத்தில்—ஆருவதுதிருமொழி

வேலிக்கோல் வெட்டி

அவதாரிகை : யசோதைப் பிராட்டி கண்ணனுக்கு நீராட்டி குழல் வாரின பின்பு பூச்சூட நினைத்திருக்கையில் கண்ணன் தம் ஜாதி ஆசாரத்திற்கேற்ப கன்று மேய்க்கிற பிள்ளைகளோடு தானும் போக நினைத்து கன்று மேய்க்கிற கோலைக்கொடு என்று தாயை நிர்ப்பந் தித்துக் கேட்க அவளும் இவனுக்கு பூச்சூடிக்காண வேண்டும் என்கிற ஆசையினுல் காக்கையைக் குறித்து கண்ணனுக்கு கன்று மேய்க்கும் கோல் கொண்டுவாவென்று அவனை வஞ்சித்துச் சொன்ன படியை ஆழ்வார் தம்மை அவளாக பாவித்துச் சொல்லி இன்புறுகிருர்.

பாசு : **வேலிக்கோல் வெட்டி விளையாடு வில்லேற்றி ***
தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற் பூண்டு *
பீலித்தழையைப் பிணைத்துப் பிறகிட்டு *
காலிப் பின்போவார்க்கு ஓர் கோல் கொண்டுவா
கடல்நிற வண்ணற்கு ஓர் கோல் கொண்டுவா * 1

உரை : காக்கையே! வேலிக் கால்களில் இருக்கிற சிறு கோலை வெட்டி எடுத்து அதை விளையாட்டுக் கருவியான வில்லாகச்செய்து அதில் நாணேற்றி வைத்துக்கொண்டும், சிறந்த ஆமைத் தாலியை (இடைச்சாதிக்குத் தக்கபடி ஆமைத்தாலி என்றும் ஒருவகை ஆபர ணத்தைத் தனது) பெரிய கழுத்திலே அணிந்துகொண்டும், மயில்

தோகைகளை ஒன்றுசேர்த்து பின்புறத்திலே கட்டிக்கொண்டும், நாணேற்றிய வில்லை வளைத்து விளையாடிக்கொண்டே பசுக்கூட்டங்களின் பின்னே போகின்ற இவனுக்கு ஒரு கோலைக் கொண்டுவா! கடலின் நிறம்போன்ற நிறத்தையுடைய இவனுக்கு ஒரு கோல் கொண்டுவா.

பாசு : **கொங்குங் குடந்தையும் கோட்டியூரும் பேரும் ***
எங்கும் திரிந்து விளையாடும் என்மகன் *
சங்கம் பிடிக்கும் தடக்கைக்குத்தக்க நல் *
அங்கமுடையதோர் கோல் கொண்டுவா! அரக்கு
வழித்ததோர் கோல் கொண்டுவா! * 2

உரை : வாசனை பொருந்திய திருக்குடந்தைநகரிலும், திருக்கோட்டியூரிலும், திருப்பேர் நகரிலும் இன்னும் மற்றுமுள்ள திருப்பதிகளிலெல்லாம் சஞ்சரித்து விளையாடுகின்ற என் பிள்ளையினுடைய.... பாஞ்சசன்னியம் என்கிற சங்கைத் தரிக்கிற பெரிய திருக்கைக்குத் தகுந்ததான நல்ல வடிவை உடையதாகிய ஓர் கோல் கொண்டுவா! நல்ல செந்நிற முண்டாகும்படியாக அரக்குப் பூசிய ஓர் கோல் கொண்டுவா ! 2

பாசு : **கறுத்திட்டு எதிர்நின்ற கஞ்சனைக் கொன்றான் ***
பொறுத்திட்டு எதிர்வந்த புள்ளின் வாய் கீண்டான் *
நெறித்த குழல்களை நீங்க முன்னோடி *
சிறுக்கன்று மேய்ப்பாற்கு ஓர் கோல் கொண்டுவா!
தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டுவா! * 3

உரை : மிகுந்த கோபத்துடன் தன்னை எதிர்த்துவந்து நின்ற கம்ஸனைக்கொன்றவனும், தன்னைக் கொல்வதற்கு எதிரிட்டு வந்த பகாஸுரனுடைய வாயை.... பகாஸுரன் தன்னை விழுங்கி உமிழுமளவும் பொறுத்துக்கொண்டிருந்து பின்பு கிழித்தவனும், அடர்த்தியாக இருக்கிற கூந்தல்கள் ஒடுகிற வேகத்தில் இரண்டு பக்கமும் அலையும்படியாக கன்றுகளுக்கு முன்னே போய் இளங்கன்றுகளை மேய்ப்பவனுமாகிய இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா ! தேவர்களுக்கும் தேவனான இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா !— 3

பாசு : **ஒன்றேயுறைப்பான் ஒரு சொல்லே சொல்லுவான் ***
துன்று முடியான் துரியோதனன் பக்கல் *
சென்று அங்கு பாரதம் கையெறிந்தானுக்கு *
கன்றுகள் மேய்ப்பதோர் கோல் கொண்டுவா! கடல்நிற
வண்ணற்கு ஓர் கோல் கொண்டுவா! * 4

உரை : பாண்டவர்களுடன் ஒரு போதும் சேர்ந்து வாழமாட்டோம் என்ற ஓரே விஷயத்தைச் சொல்லுபவனும், நியாயம் பேசும் மத்ய ஸ்தர்கள் எவ்வளவு இங்கிதமாகச் சொன்னாலும் பாண்டவர்களுக்கு ஊசிகுத்தும் இடமும் கொடுக்க மாட்டேன் என்ற ஒரு சொல்லேயே சொல்லுபவனும், நவரத்தினங்களும் நெருங்கப்பதித்துத் துலங்கு கிற கிரீடத்தை அணிந்தவனுமான துரியோதனனிடத்தில் தூது போய் அங்கு அவனுடன் பாரதயுத்தத்தை உறுதிப்படுத்திக்கொண்டு வந்த இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா! கடல் நிறவண்ணமுடைய இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா— 4

பாசு : **சீரொன்று தூதாய்த் துரியோதனன் பக்கல் ***
ஊரொன்று வேண்டிப் பெருத உரோடத்தால் *
பாரொன்றிப் பாரதம் கைசெய்து பார்த்தர்க்குத் *
தேரொன்றை யூர்ந்தாற்கு ஓர் கோல் கொண்டுவா!
தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டுவா! * 5

உரை : கண்ணபிரான் பாண்டவர்களுக்காக சிறப்பு வாய்ந்த தூதனு கத் துரியோதனனிடம் சென்று.... அதர்மமாக நீ பந்துக்களை வருந்தச் செய்து வாழவேணுமென்றிருப்பது தகாது உங்கள் இருவருக்கும் உள்ள பாகங்களைப் பிரித்துக்கொண்டு இருவரும் ஒத்துவாழுங்கள் என்று சொல்ல.... அதற்கு துரியோதனன் ஸம்மதியாமையால் அவர் களுக்கு பத்து ஊர்களையாவது கொடு....என்ன....அதற்கும் அவன் இசையாமையால் ஒரு ஊராவது கொடு என்று யாசித்துக் கேட்டும் அதற்கும் அவர்களுக்கு ஓர் ஊசி குத்தும் நிலமும் கொடேன். ராஜ்யம் உங்களுடையதே, வேண்டுமானல் பலத்தால் ஜயித்துப் பெற்றுக்கொள்ளட்டும் என்று சொல்லவே.... அந்த ஒரு ஊரையும் பெருததால் உண்டான சீற்றத்தாலே பூமியில் பொருந்திய பாரத யுத்தத்தைத் தொடங்குவித்து அர்ஜுனனுக்கு ஒப்பற்ற தேரை பாகனுக இருந்து நடத்தியவனுக்கு ஓர் கோல் கொண்டுவா! தேவர் களுக்கும் தேவனுக்கு ஓர் கோல் கொண்டு வா! 5

பாசு : **ஆலத்திலையான் அரவினணை மேலான் ***
நீலக் கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான் *
பாலப்பிராயத்தே பார்த்தற்கு அருள்செய்த *
கோலப்பிரானுக்கு ஓர் கோல் கொண்டுவா! குடந்தைக்
கிடந்தாற்கு ஓர் கோல் கொண்டுவா! * 6

உரை : பிரளய காலத்தில் உலக மெல்லாவற்றையும் உண்டு தமது திரு உதரத்தில் வைத்துக்கொண்டு ஒரு ஆலினிலையில் பள்ளிகொண்டிருப்பவனும், எப்போதும் திருவனந்தாழ்வான் மீது பள்ளிகொள்பவனும், கருநிறமான சமுத்திரத்தில் வெகு காலமாக யோகநித்திரை செய்பவனும், குழந்தைப்பருவம் முதல் தொடங்கி அர்ஜுனனுக்கு அருள் செய்தவனும், அழகிய வடிவத்தையுடையவனும் எமக்குத்தலைவனுமான இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா ! திருக்குடந்தை என்னும் திருப்பதியில் சயனித்திருப்பவனுக்கு ஓர் கோல் கொண்டுவா—6

பாசு : பொன்திகழ் சித்திரகூடப் பொருப்பினில் *
உற்றவடிவில் ஒரு கண்ணும் கொண்ட அக் *
கற்றைக்குழலன் கடியன் விரைந்து உன்னை *
மற்றைக்கண் கொள்ளாமே கோல் கொண்டுவா! *
மணிவண்ண நம்பிக்கு ஓர் கொண்டுவா! * 7

உரை காக்கையே ! பொற்குன்றுபோல் அழகியதாக விளங்குகிற சித்திரக்கூட மலைச்சாரலில் முன் இராமாவதாரகாலத்தில் ஸ்ரீராமனாகிய தான் சீதைப்பிராட்டியின் மடியிலே தலைவைத்துக்கொண்டு கண் வளரும் போது.... உன் சாதியிலொருவனான காகாசுரன் என்பவன் பிராட்டியின் திருமேனியில் பதிந்த கண்களையுடையவனாக வந்ததால் (செய்யத்தகாததைச் செய்ததால்) உனது இரண்டு கண்களில் ஒரு கண்ணை பறித்துக்கொண்ட கட்டுக்கூடந்தலை உடையவன் இவன்— ஆதலால் தனக்கு இஷ்டமானதை உடனே செய்யாமலிருந்தாயே யானால் உன் மேல் சீறி உனது மற்றொரு கண்ணையும் பறித்துக் கொள்ளாதபடி நீ விரைவில் ஓடிப்போய் கோல் கொண்டுவா ! நீல மணி போன்ற நிறமுடைய நம்பிக்கு ஓர் கோல் கொண்டுவா !— 7

பாசு : மின்னிடைச் சீதை பொருட்டா இலங்கையர் *
மன்னன் மணிமுடி பத்து முடன் வீழ *
தன்னிகர் ஒன்றில்லாச் சிலை கால் வளைத்திட்ட *
மின்னு முடியற்கு ஓர் கோல் கொண்டுவா! வேலை
யடைத்தாற்கு ஓர் கோல் கொண்டுவா! * 8

உரை : முன்பு ராமாவதார காலத்தில் மின்னல் போன்று சிறுத்து சூக்ஷ்மமான இடையை உடைய சீதையை ராவணன் வைத்த சிறையி லிருந்து மீட்டுக்கொண்டு வருவதற்காக இலங்கையிலுள்ளவர்களுக்கு அரசனான ராவணனுடைய நவரத்தின கிரீடம் அணிந்த தலைகள்

பத்தும் ஒருங்கே அற்று :விழும்படி.... தன் நிகரில்லாத உயர்ந்த வில்லை வளைத்துப் பிரயோகம் பண்ணின....ஜ்வலிக்கின்ற கிரீடத்தை அணிந்த இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா! சமுத்திரத்தில் லங்கைக் குச் செல்ல அணைகட்டியவனுக்கு ஓர் கோல் கொண்டுவா !— 8

பாசு: **தென்னிலங்கை மன்னன் சிரம் தோள் துணி செய்து ***
மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு *
என்னிலங்கு நாமத்தளவும் அரசென்ற *
மின்னலங்காரற்கு ஓர் கோல் கொண்டுவா! வேங்கட
வாணற்கு ஓர் கோல் கொண்டுவா! * 9

உரை: இதில் துஷ்டர்களை ஒழித்து சிஷ்டர்களை வாழ்விக்குமவனை இவனுக்குக் கோல் கொண்டுவா! கொண்டுவாரவிட்டாலோ? உன்னையும் தண்டிப்பான் பிறகு பசுக்களைக் காப்பாற்றுவான் என்பதாம். மிக்க எழில்வாய்ந்த இலங்கை நகருக்கு அரசனாகிய ராவணனுடைய தலைகளையும் தோள்களையும் அம்பினால் துணித்துப் போகவிட்டு.... ஒளிவிசுகின்ற ஆபரணங்களை அணிந்த விபீஷண ஆழ்வானுக்கு.... உலகில் என் பெயர் எவ்வளவு காலம் விளங்குமோ? அவ்வளவு காலம் இந்த இலங்கா ராஜ்யம் உனக்கு நடக்கக்கடவது என்று அருள் செய்த.... மின்னல் போல் பிரகாசிக்கின்ற ஹாரத்தைத் தரித்த இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா! திருவேங்கடமலையில் வாழுமவனுக்கு ஓர் கோல் கொண்டுவா!— 9

பாசு: **அக் காக்காய் நம்பிக்குக் கோல் கொண்டுவாவென்று ***
மிக்காளுரைத்த சொல் வில்லிபுத்தூர்ப் பட்டன் *
ஒக்கவுரைத்த தமிழ்ப் பத்தும் வல்லார் *
மக்களைப்பெற்று மகிழ்வர் இவ்வையத்தே * 10

உரை: காக்கையே! உத்தமனை இவனுக்கு கோலைக்கொண்டு வந்து கொடு என்று சிறந்த தவம் செய்தவளான யசோதை சொன்ன சொற்களை ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த பெரியாழ்வார்.... அந்த யசோதைப் போலவே சொன்ன.... தமிழினாலாகிய இப்பத்துப் பாசுரங்களையும் ஓதுபவர்கள்.... பகவத் பக்தர்களான நல்ல சிஷ்யர்களைப்பெற்றும் பாகவத பக்தர்களான நல்லபுத்திரர்களைப் பெற்றும் உலகிலே மகிழ்ந்திருக்கப்பெறுவார்கள்— 10

அடிவரவு— வேலி வொங்கு கறுத்து ஒன்றே சீர் ஆல் பொற்றிகழ் மின் தென்னிலங்கை அக்காக்காய் ஆநிரை—

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

இரண்டாம்பத்தில்—ஒன்பதாந் திருமொழி

வெண்ணெ களவாடல் முதலிய பாலக்கிரீடை விசேஷங்கள்

வெண்ணெ விழுங்கி

அவதாரிகை : யசோதைப்பிராட்டி கண்ணனெ நீராட்டிக் குழல்வாரி கன்றுமேய்க்கும் கோல்காட்டி பூச்சூட்டி அவனது அழகைக்கண்டு களித்து அவ்வழகனுக்கு திருஷ்டி தோஷம் வந்து விடப்போகிறதே என்று சங்கித்து அத்தோஷம் வராதபடி அந்திக்காப்பிட்டு தன்பக்கலில் படுக்கவைத்து தானும் உறங்கி பின் விடியற்காலெ எழுந்திருந்து வீட்டு வேலெகளெப்பார்க்கப் போக.... கண்ணன் தானும் எழுந்திருந்து ஊரார் வீட்டிலே புகுந்து.... வெண்ணெயை விழுங்குவதும்— பாத்திரத்தையுடைப்பதும், பக்ஷ்யபதார்த்தங்களெ (தின்பண்டங்களெ) திருடித் தின்பதும், சிறு பெண்களின் கை வளெயல்களெ கழட்டி நாவல் பழம் வாங்குவது மற்றும் பல தீம்புகளெச் செய்ய.... அந்தந்த வீட்டிலுள்ளார் வந்து யசோதையிடம் அச்செய்கைகளெ முறையிட்டுச் சொல்வதையும் யசோதை கண்ணனெப் பலவாராகச்சொல்லி அழைப்பதையும் ஆழ்வார் அவரவர்களின் தன்மையை அடைந்து இப்பாசுரங்களில் பேசி இனியராகிருர்—

யசோதையிடம் ஒரு இடைச்சி சொல்லுகிருள்.

பாசு : **வெண்ணெ விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடை**
யிட்டு அதனேசை கேட்டும் *
கண்ணபிரான் கற்ற கல்விதன்னெ காக்ககில்லோம்
உன் மகனெக் காவாய் *
புண்ணில் புளிப்பெய்தா லொக்கும் தீமை புரை
புரையால் இவை செய்யவல்ல *
அண்ணற்கண்ணனேர் மகனெப்பெற்ற அசோதை
நங்காய்! உன் மகனெக் கூவாய் * 1

உரை : உன் மகன் எங்களுடைய வீட்டில் வந்து நாங்கள் சேர்த்து வைத்த வெண்ணெயையெல்லாம் மிகுதி இல்லாமல் வாரி விழுங்கி விட்டு பின்பு அவ்வளவோடும் நில்லாமல் வெண்ணெ இல்லாத அந்த வெறும் பாத்திரத்தை (கலயத்தை) கல்லிலே போட்டு உடைத்து அதனுல் உண்டான ஓசையைக்கேட்டு நன்ருகயிருக்கிறது என்று களிக்கின்ருன். பிரபுவான இக்கண்ணன் படித்துள்ள திருட்டு வித்தையை தடுத்துக் காப்பதற்கு எங்களாலாகவில்லே. ஆகையால் நீ உன் பிள்ளேயை இப்படிக்கொத்த தீம்புகளேச் செய்யவிடாமல் தடுப்பாயாக— இன்னும் புண்ணிலே புளிரசத்தைப் பிழிந்தால்போல பொறுக்க முடியாத தீமைகளே ஒவ்வொரு வீட்டிலும் செய்கிருன். இவ்வளவு ஸமர்த்தனுகியவனும்.... நான் பகவான் என்கிறதை ஜாடையாகத் தெரிவிக்கின்ற கண்களே உடையவனுமான ஒரு புத்திரனேப்பெற்ற யசோதைப் பிராட்டியே! நீ உன் பிள்ளேயைக் கூவி யழைத்து இவ்விதமாய் தீமைகளேச் செய்யவொட்டாதபடி வீட்டிலே உன் பக்கத்திலேயே வைத்துக்கொள்— என்கிருள்— 1

யசோதை கண்ணனேப் புகழ்ந்து நல்வார்த்தை சொல்லி அழைக்கிருள்—

பாசு : **வருக வருக வருக இங்கே வாமன நம்பீ வருக இங்கே ***
கரியகுழல் செய்யவாய் முகத்துக் காகுத்த நம்பீ
வருக இங்கே *
அரியனிவன் எனக்கு இன்று நங்காய்! அஞ்சன
வண்ணு அசலகத்தார் *
பரிபவம் பேசத்தரிக்ககில்லேன் பாவியேனுக்கு
இங்கே போதராயே—2

உரை : கீழ்பாட்டில் ஒரு இடைச்சி வந்து உன் பிள்ளேயை நீ உன் வசம் அழைத்துக்கொள் என்று சொல்ல....யசோதை கண்ணனேப் பார்த்து முன் ஒரு காலத்தில் வாமனனுக அவதரித்த உத்தமனே! கருநிறமான கூந்தலேயும் செந்நிறமான வாயையும் ஒப்பற்ற முகத்தையுமுடைய ஸ்ரீராமமூர்த்தியானவனே! இங்கே விரைவாக வா— இங்கே விரைவாக வாவென்று அழைக்க....கண்ணன் செய்யும் தீமைகளே முறையிட்டுச் சொன்னவள்....நீ அவனே இப்படிப் புகழ்ந்து அழைக்கலாமோ? அச்சமுறுத்தியன்ருே அழைக்க வேண்டும் என்று சொல்ல.... யசோதை அவளே நோக்கி நற்குணம் நிறைந்த நங்கையே! இவன் எனக்கு இப்போது அருமையானவனுயிற்றே! என்று விடையளித்து மீண்டும் கண்ணனே நோக்கி மைபோன்ற நிறமுடைய திரு

மேனியுடையவனே! அசல் வீட்டுக்காரர்கள் உன்மேல் இப்படி அவமானகரமான சொற்களைச் சொன்னால் நான் பொறுக்கமாட்டேன். இப்படி தூஷணையான சொல்லைக்கேட்கும்படியான பாபத்தைப் பண்ணின எனக்கு இவ்வருத்தம் தீர பிறர் ஒன்றுஞ்சொல்ல இடமில்லாதபடி சீக்கிரமாக இங்கே வா! — 2

மற்றொரு இடைச்சி வந்து முறையிடுகிறாள்—

பாசு: **திருவுடைப் பிள்ளைதான் தீயவாறு தேக்கமொன்றுமிலன்**
தேசுடையன் *
உருகவைத்த குடத்தொடு வெண்ணெ உறஞ்சியுடைத்
திட்டுப் போந்து நின்றான் *
அருகிருந்தார் தம்மை அநியாயம் செய்வதுதான்
வழக்கோ? அசோதாய்! *
வருகவென்று உன் மகன் தன்னைக் கூவாய் வாழ
வொட்டான் மதுசூதனனே * 3

உரை: யசோதாய்! உன் மகன் செல்லப்பிள்ளை என்கிற செருக்கினால் இவ்வாறு தீம்பு செய்யும் வழியில் சிறிதும் தயங்குவதில்லை. தீம்பு செய்வதே தனக்கு புகழென்றும் நினைக்கின்றான். இப்பொழுது இவன் என் வீட்டில் வந்து உருகுவதற்காக அடுப்பில் வைத்திருந்த வெண்ணெயைத் தாழியோடே சிறிதும் மிஞ்சாதபடி உறிஞ்சிக் குடித்துவிட்டு கடைசியில் தாழியை அதனோசை கேட்பதற்காக பாறையில் போட்டு உடைத்துவிட்டு பிறகு தான் ஒன்றும் செய்யாதவன்போல் அருகில் வந்து நிற்கின்றான். உன் வீட்டிற்கு அருகில் இருப்பவர்களை இப்படி இஷ்டப்படி அக்கிரமம் செய்வது நியாயமாகுமோ? நீ உன் பிள்ளையை இப்படிச்செய்ய விடுவது நியாயமல்லவே ஆகையால் உன் மகனை வாவென்று சொல்லி அழைத்துக்கொள்ள வேணும். இல்லாவிட்டாலோ மதுசூதனனான இக் கண்ணபிரான் எங்களைக் குடி இருந்து வாழவொட்டான்— 3

யசோதை கண்ணனை வாவென்று அழைத்து எடுத்துக்கொள்ளுகிறாள்—

பாசு: **கொண்டல்வண்ணா! இங்கே போதராயே! கோயிற்ப்**
பிள்ளாய்! இங்கே போதராயே *
தென்திரை சூழ்திருப்பேர்க்கிடந்த திருநாரணா!
இங்கே போதராயே *
உண்டு வந்தேன் அம்மமென்று சொல்லி ஓடி அகம்புக
ஆய்ச்சி தானும் *
கண்டெதிரே சென்றெடுத்துக்கொள்ளக் கண்ணபிரான்
கற்ற கல்விதானே * 4

உரை : கீழ்ப்பாட்டில் வருகவென்று உன் மகனைக்கூவி அழைத்துக் கொள் என்று சில ஆய்ச்சிகள் முறையிட....யசோதைப் பிராட்டி கண்ணபிரானை அம்மமுண்ணுவதற்காக (பால் குடிப்பதற்காக உணவு உண்பதற்காக) பலபடியாகப் புகழ்ந்து....காளமேகம் போன்ற நிறத்தை உடையவனே! இங்கே வாராய்! திருவரங்கம் கோயிலில் வசிப்பவனான பிள்ளையே! இங்கே வா! தெளிவான அலைகளையுடைய நீரால் சூழப்பட்ட திருப்பேர் நகரிலே பள்ளிகொண்டிருக்கின்ற ஸ்ரீமன் நாராயணனே! இங்கே வாராய் என்று இப்படி எல்லாம் அழைக்க....அவன் தனது மகிழ்ச்சியான தோற்றத்துடன் உணவை இப்பொழுது உண்டு வந்தேனம்மா என்று சொல்லி ஓடி வந்து அகத்தின் உள்ளே புகுர....தாயான யசோதையும்....கண்ணன் வந்த வரவையும்....அவனது முக மலர்த்தியையும் கண்டு மகிழ்ந்து எதிர்கொண்டு சென்று அவனை தன் இடுப்பில் எடுத்துக்கொள்ளும் படிக்கு அந்தக் கிருஷ்ணன் தானாகவே கற்றுக்கொண்ட கல்வியின் பெருமைதான் என்ன ஆச்சரியம் என்று சொல்லி ஆழ்வார் இன்புறுகிறார்.— கண்ணன் செய்த தீமைகளை எல்லாம் தாயாகிய யசோதை மறந்து விட்டு அவனை எதிர்சென்றெடுத்துக்கொள்ளும்படி அவன் பண்ணின விசித்திரத்தில் ஈடுபட்டு இப் பருவத்திலேயே இவன் இவ்வளவு தந்திரனாக இருக்கிறானே என்று ஆழ்வார் தன்னில் தான் புகழ்ந்து பொலிகின்றார் என்பது— 4

பாசு : பாலைக்கறந்து அடுப்பேற வைத்துப் பல்வளையாள்
என் மகளிருப்ப
மேலையகத்தே நெருப்பு வேண்டிச் சென்று இறைப்
பொழுது அங்கே பேசி நின்றேன்
சாளக்கிராமமுடைய நம்பி சாய்த்துப் பருகிட்டுப்
போந்து நின்றான் *
ஆலைக்கரும்பின் மொழியனைய அசோதை நங்காய்!
உன் மகனைக்கூ வாய் 5

உரை : கண்ணபிரான் தன் தாய் வியக்கும்படி சில செய்கைகளைச் செய்து அவற்றால் அவளை மகிழ்வித்து மீண்டும் பழைய பிரகாரம் பிறர் அகங்களில் புகுந்து தீம்புகளைச் செய்ய....ஓர் இடைச்சி யசோதையின் பக்கலில் வந்து அவன் செய்த தீம்புகளைச் சொல்லி முறைப்படுகின்றாள் — ஆலையிலிட்டு ஆடும்படி முதிர்ந்த கரும்பின் ரசம் போன்று மதுரமான பேச்சையுடைய யசோதைப் பிராட்டியே! பல

வகையான வளையல்களை அணிந்துள்ள என் மகளானவள் பாலைப் பாத்திரங்களில் கறந்தெடுத்து அப் பாத்திரங்களை அடுப்பின்மேல் ஏற்றிவைத்து அவற்றுக்குக் காவலாக இருக்க....நான் அவற்றைக் காய்ச்சுவதற்காக நெருப்பு எடுத்துவரவேண்டி .... பக்கத்து மேலண்டை வீட்டிற்குப்போய் அங்கே ஒரு க்ஷண நேரம் அவர் களோடு பேசிக்கொண்டிருந்துவிட்டேன். அதற்குள்ளாக....ஸ்ரீசாளக் கிராமத்தை இருப்பிடமாக உடையவனாய் ஒன்றிலும் குறைவற்றவனான உன் மகன்....என் மகளிருந்தவிடத்திற் சென்று அந்தப் பால் பாத்திரத்தைச் சாய்த்து அதிலிருந்த பாலை முழுவதும் குடித்துவிட்டு ஒன்றும் அறியாதவன்போல இப்புறத்தே வந்து நின்றுகொண்டிருந் தான். இனி இவன் எங்கள் அகங்களில் இவ்வாறான தீமைகளைச் செய்யத் துணியாதபடி சிக்ஷிப்பதற்காக உன் பிள்ளையான இவனை நீ அழைத்துக்கொள்ள வேணும்— 5

பாசு: **போதர்கண்டாய் இங்கே போதர் கண்டாய் போதரே**
னென்னாதே போதர் கண்டாய்
ஏதேனும் சொல்லி அசலகத்தார் ஏதேனும் பேச நான்
கேட்கமாட்டேன் *
கோதுகலமுடைய குட்டனேயோ! குன்றெடுத்தாய்!
குடமாடு கூத்தா! *
வேதப்பொருளே! என் வேங்கடவா! வித்தகனே! இங்கே
போதராயே! * 6

உரை: அசோதை நங்காய் உன் மகனைக் கூவாய் என்று கீழ்ப்பாட்டில் இடைச்சி வேண்டினபடிக்கிணங்க அவள் தன் மகனை அழைக்கின்றாள். எல்லாருடைய (அகில ஜனங்களுடைய கொண்டாட்டங்களையும் உன்மேல் உடைய பிள்ளாய்! வாராய்! கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்தவனே! குடமெடுத்தாடிய கூத்தை உடையவனே! வேதங்களால் புகழ்ந்து கூறப்படுபவனே! என்னுடையவன் என்று அபிமானம் கொள்ளும்படி திருமலையில் நிற்பவனே! வியக்கத்தக்கவனே! நீ அசலகங்களுக்குப் போகாமல் என்னருகில் விரைந்து ஓடிவா (என்று யசோதை அழைக்க) அவன் வரமாட்டேன் என்ன....வரமாட்டேன் என்று சொல்லாதே இசைந்து வருவாயாக என்று யசோதை வேண்டியழைக்க....கண்ணன் நீ எதற்காக இப்படி வேண்டியழைக்கிறாய் என்று கேட்க....யசோதை....அசல் வீட்டுக்காரர்கள் இன்னது என்று எடுத்துக்கூறவொண்ணாத சில கடுஞ்

சொற்களை உன்னை நோக்கி தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டும் அவ்வளவில் நில்லாமல்....என் காதால் கேட்கவும் வாயாற்ச் சொல்லவும் ஒண்ணாத பழிப்புச் சொற்களை என் பக்கலிலே வந்து சொல்லுகிறார்கள். அவற்றை உன்மீது பரிவுள்ள நான் கேட்டுப் பொறுக்க மாட்டேன். அவர்களின் வாய்க்கு வசமாகாமல் நீ இங்கே வருவாயாக என்றழைக்கின்றாள். 6

பாசு: **செந்நெலரிசி சிறு பருப்புச் செய்த அக்காரம் நறு**
நெய் பாலால் *
பன்னிரண்டு திருவோணம் அட்டேன் பண்டும்
இப்பிள்ளை பரிசறிவன் *
இன்னம் உகப்பன் நானென்று சொல்லி எல்லாம்
விழுங்கிட்டுப் போந்து நின்றான்
உன் மகன் தன்னை யசோதை நங்காய்! கூவிக்கொள்ளாய்
இவையும் சிலவே * 7

உரை: கீழ்ப்பாட்டில் கண்ணபிரான் தாயால் வருந்தியழைக்கப்பட்டும் அவளிடம் செல்லாமல் வேறொருத்தியின் வீட்டிலே புகுந்து அவள் விரத நோன்புக்கு உறுபாக சமைத்தவை அடங்கலும் வாரி விழுங்கிவிட்டு வேறு பொருளைத் தேடுபவன்போல் அபிநயித்து வெளியே வந்து நிற்க....இத்தீம்பைக்கண்ட அவள் ஆற்றமாட்டாமல் யசோதையிடம் வந்து முறையிடுகிறாள். யசோதை நங்காய்! செந்நெல் அரிசியும், சிறுபயத்தம்பருப்பும், சமயல் குற்றம் ஒன்றும் இல்லாதபடி காய்ச்சித் திரட்டி நன்றாகச் செய்த வெல்லக்கட்டியும், மணமிக்க நெய்யும் பாலும் ஆகிற இவற்றாலே பன்னிரண்டு திருவோணத் திருநாளளவு நோன்புக்கு வேண்டிய பாயஸம் பக்ஷணம் முதலியவைகளைச் சமைத்து வைத்தேன். நான் முன்பே இப்பிள்ளையின் சுபாவத்தை அறிவேன்.(நான் சமைக்கும் பக்ஷணாதிகளைத் தேவபூஜைக்கு முன்னமேயே வாரி விழுங்கிவிடுவன் என்பதை) இப்போதும் அப்படியே விரதத்திற்காகச் சமைத்தவற்றை எல்லாம் மிகுதி இல்லாமல் உண்டுவிட்டு அப்படியும் திருப்தி பெறாமல் நான் இன்னமும் உண்ண விரும்புகிறேன் என்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு வந்து மிக அடக்கமுள்ளவனைப்போல் நிற்கின்றான். இனி இவ்வாறு தீமை செய்யாதபடி உன் பிள்ளையான கண்ணனை உன் அருகில் அழைத்துக்கொள். பிள்ளைகளை தீம்பு செய்யாமல் பேணி வளர்க்க வேண்டி இருக்க அப்படிச் செய்யாமல் இப்படி வளர்ப்பதும் சில பிள்ளை வளர்க்கையோ? என்கிறாள்— 7

பாசு : **கேசவனே இங்கே போதராயே கில்லேனென்னுதிங்கே போதராயே ***
நேசமிலாதாரகத்திருந்து நீவிளேயாடாதே போதராயே *
தூசனம் சொல்லும் தொழுத்தைமாரும் தொண்டரும் நின்ற விடத்தில் நின்று *
தாய்சொல்லுக் கொள்வது தன்மம் கண்டாய் தாமோதரா இங்கே போதராயே * 8

உரை : அழகிய குழலேயுடையவனே ! (அசைந்திடும் குழலழகும் நீயுமாய் வருவதைக்கண்டு நான் மகிழும்படி இங்கே வாராய்! என்றழைக்கிருள்) மாட்டேன் என்று மறுத்துச் சொல்லாமல் இங்கே வாராய்! என்று யசோதை அழைக்க சிறிது நேரம் விளேயாடி விட்டு வருகிறேன் என்று கண்ணன் சொல்ல.... நீ விளேயாடுவதற்கு இங்கே விசாலமான இடமிருக்கிறதே ? உன் மீது அன்பு இல்லாதவர்களுடைய அகங்களிலே இருந்து விளேயாடுவதை விட்டுவிடு. அன்றியும் உன் மேல் குற்றங்குறைகள் கூறுகிற.... இடைச்சிகளுக்கு அடிமைகளானவர்களும், இடையர்களுடைய வேலேக்காரர்களுமான இழி சனங்கள் நிற்கின்ற இடங்களேவிட்டு இங்கே வாராய் என்று யசோதை சொல்லியும் அவன் வாராமையாலே (இடைச்சிகளும் இடையர்களும், தாங்கள் நேராகப்பழித்தாலும் வருத்தத்துடன் பொறுக்கலாம் கூலிக்கு உழைக்கின்ற வேலேக்காரர்கள் பேசும் பழிகளே பொறுக்க வொண்ணுது என்பது காணத்தக்கது) தாய்சொல்லுகிற பேச்சைக் கேட்டு நடப்பது பிள்ளேகளுக்கு தருமம் என்று தெரிந்துகொண்டு தாமோதரனுன கண்ணனே ! இங்கே வா ! என்றழைக்கிருள்— 8

பாசு : **கன்னலி லட்டுவத்தோடு சீடை காரெள்ளினுண்டை கலத்திலிட்டு ***
என்னகமென்று நான்வைத்துப் போந்தேன் இவன் புக்கு அவற்றைப் பெறுத்திப் போந்தான்
பின்னும் அகம்புக்கு உறியை நோக்கிப் பிறங்கொளி வெண்ணேயும் சோதிக்கின்ருன்
உன் மகன் தன்னேக் யசோதை நங்காய் கூவிக் கொள்ளாய் இவையுஞ் சிலவே * 9

உரை : கீழ்ப்பாட்டில் கண்ணன் யசோதையாலழைக்கப்பட்டும் வாராமல் மற்றெருத்தி வீட்டிற்சென்று அங்குள்ள பக்ஷணங்களே எல்லாம் சிறிதும் மிஞ்ஜாதபடி தானே புசித்துவிட்டுச் செல்ல.... அவ்விடைச்சி யசோதை பக்கலில் வந்து குறைகூறுகிருள். அசோதை நங்காய் !

கருப்புக்கட்டிப் பாகுடன் சேர்ந்த (வெல்லப்பாகு) லட்டு என்னும் பக்ஷியத்துடன் (பணியாரத்துடன்) சீடையையும், காரெள் இட்டுத் திரட்டிய எள்ளுருண்டையையும், அதற்கு உரிய பாத்திரங்களிலே நிறைத்து உறிகளிலே வைத்துவிட்டு.... என் அகம் ஆகையால் இங்கு புகுவார் யாரும் இல்லை என்று நினைத்து விசேஷமாக காவலிடாமல் நான் வெளியே வந்தேன். அவ்வளவிலே இப்பிள்ளையானவன் அவ்விடத்திலே வந்து புகுந்து அப்பணியாரங்களை எனக்கு ஒன்றும் மீதம்வைக்காமல் புசித்து விட்டு ஒன்றுமறியாதவன் போல் இங்கே வந்து விட்டான். அதிலும் திருப்தி பிறக்காமல் பின்னும் என் வீட்டினுள் புகுந்து உறியைப்பார்த்து.... புதிதாகக்கடைந்தெடுத்த நல்ல வெண்மை நிறமுள்ள வெண்ணெ இருக்கிறதாவென்று ஆராய்கின்றுன். இச்சேஷ்டைகள் எனக்குப் பொறுக்கப் போகாமையால் உன் பிள்ளையை உன் அருகில் அழைத்து வைத்துக்கொள். இப்படி இவனைத் தீம்பிலே கைவளர விட்டுருப்பது தான் ஒரு பிள்ளை வளர்க்கையோ ? (வளர்க்கும் அழகோ ?) என்கிருள்— 9

பாசு : சொல்லிலரிசிப்படுதி நங்காய் ! சூழலுடையன் உன்
பிள்ளை தானே *
இல்லம்புகுந்து என்மகளைக் கூவிக்கையில் வளையைக்
கழற்றிக்கொண்டு *
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற
அங்கொருந்திக்கு அவ்வளை கொடுத்து *
நல்லன நாவற் பழங்கள் கொண்டு நானல்லேனென்று
சிரிக்கின்ருனே * 10

உரை உன் மகன் தன்னைக் கூவிக்கொள்ளாய் என்று ஒருத்தி சொல்லி வாய் மூடுவதற்குள் மற்ருெருத்தி வந்து கண்ணன் தன் வீட்டிற்செய்த தீங்குகளைச் சொல்லி முறைப்படுகிருள்— யசோதைப் பிராட்டியே ! உன் மகன் செய்த தீமைகளை நாங்கள் சொன்னுல் நீயோ கோபப்படுகிருய் ? உன் பிள்ளையோவென்ருல் பற்பல வஞ்சகச்செய்கைகளை உடையவனுக இருக்கின்ருனே ? என்று சொல்ல.... அப்படி அவன் என்ன தீமை செய்தான் என்று யசோதை கேட்க.... இவன் என் வீட்டினுள் புகுந்து என் மகளை பேர் சொல்லி அழைத்து அவளுடைய கையிலிருந்த வளையை பலாத்காரமாக நீக்கிக்கொண்டு போய்.... காடுகளிலிருந்து நாவற்பழங்களை இடைச்சேரித்தெருக்களில் கொண்டுவந்து விற்பனைசெய்கின்ற ஒரு பெண்பிள்ளைக்கு என்மகளு

டைய அந்த வளையைக்கொடுத்து அதற்கு பதிலாக நல்லவையாகத் தோற்றிய நாவற்பழங்களை அவளிடத்தில் வாங்கிக்கொண்டு போரும் போராதென்று விவாதித்துக்கொண்டிருக்கும்போது என்னைத் தன் அருகில் கண்டு நான் ஒன்றும் கேளாதிருக்கும்போதே உன் மகளினது கைவளையைக்களவாடியது நானல்லவென்று தானகவே சொல்லி தன் திருட்டுத்தனம் வெளியானதைத்தானே அறிந்து கொண்டு.... ஓ.... மோசம் போனேமே என்று சிரிக்கின்ருன். இதிலும் மிக்க தீமையுண்டோ ? என்கிருள்— 10

பாசு : **வண்டுகளித்திரைக்கும் பொழில் சூழ் வருபுனல்**
காவிரித்தென்னரங்கன் *
பண்டவன் செய்த கிரீடை எல்லாம் பட்டர்பிரான்
விட்டுசித்தன் பாடல் *
கொண்டிவைபாடிக்குளிக்கவல்லார் கோவிந்தன் தன்
அடியார்களாகி *
எண் திசைக்கும் விளக்காகிநிற்பார் இணையடி என்
தலை மேலனவே * 11

உரை : இப்பாட்டில் பகவத் விஷயத்திலே நான் பேசின இப்பாசுரங்களைப்பாடி ஆடி உத்தமபாகவதர்களாய் எங்கும் புகழ்பெற்று விளங்குமவர்களின் திருவடிகளை நான் முடிமேலணிவேன் என்கிருர்— வண்டுகள் தேனைப்பருகிக்களித்து ஆரவாரங்கள் செய்கின்ற சோலைகளாலும் அச்சோலைகளுக்காகப் பெருகிவருகின்ற நீரையுடைத்தான காவேரி நதியாலும் சூழப்பெற்ற அழகிய திருவரங்கத்தில் நித்ய வாஸம் பண்ணுகிற வைபவத்தையுடையனன பெருமான்.... விபவாவதாரமாகிய முற்காலத்திற் செய்த லீலைகளெல்லாவற்றையும் விஷயமாகக்கொண்டு விஷ்ணுவை நெஞ்சில் கொண்டவராய் பிராம்மணேத்தமரான பெரியாழ்வார்பாடின இப்பாட்டுக்களை அனுஸந்தானமாகக் கொண்டு பாடி அதனல் பக்திமேலிட்டு கூத்தாடவல்லவர்களாய் கண்ணபிரானுக்கு அடியவர்களாய் எட்டுத்திக்குக்களிலும் உள்ள இருள் நீங்கும்படி அத்திக்குக்களுக்கு விளக்காக நிற்குமவர்களுடைய திருவடி இணைகளானவை என்னுடைய முடியின் மேல் வீற்றிருக்கத் தக்கவை—

அடிவரவு— **வெண்ணை வருக திரு கொண்டல் பாலை போதர் செங்நெல் கேசவன் கன்னல் சொல்லில் வண்டு ஆற்றில்—**

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

பெரியாழ்வார் திருமொழியில்

மூன்றும் பத்தில்—மூன்றுந்திருமொழி

சீலைக்குதம்பை

அவதாரிகை : யசோதை... தான் கண்ணபிரானைக் காட்டில் கன்று மேய்க்கப் போகவிட்டு.... பின்பு அவனது பிரிவாற்ருமையால் தான் செய்த கொடுமையைக் கூறிவருந்திக்கொண்டே பகற்போதை எல்லாம் ஒருவாறு கழித்துவிட்டு.... மாலைப்பொழுதில் கன்றுகளை மேய்த்துவிட்டு மீண்டும் வருகின்ற கண்ணபிரானது எதிரில் சென்று.... அவனது திருமேனியின் எழிலையும் அலங்காராதிகளையும் தான்கண்டு மகிழ்ந்து பிறரையும் காணச்செய்து தான்பெற்ற பெருமையைச் செல்லி.... அவனைத்தான் காட்டிற்குப் போகவிட்டதற்காக வருந்தி.... இனி நீ கன்றுகளின் பின்னுல் காட்டிற்குச்செல்ல வேண்டாம் என்று சொன்னவகையை ஆழ்வாரும் தம்மை அவளாக பாவித்து இப்பாசுரங்களில் பாடி மகிழ்கிருர்.

அவைகளிற் சில–இங்கு எழுதப்பட்டது.

பாசு : **சீலைக்கு தம்பை ஒரு காது செந்நிற மேல்த்தோன்றிப்பூ ***
கோலப்பனைக்கச்சும் கூறையுடையும் குளிர்முத்தின் கோடாலமும் *
காலிப்பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடத்தை வந்து காணீர் *
ஞாலத்துப்புத்திரனைப் பெற்ருர் நங்கை மீர் !
நானே மற்ருருமில்லை * 1

உரை : யசோதைப் பிராட்டி கண்ணனபிரானை வேண்டியழைத்து இருகாதிலும் திரியையிட்டு கன்று மேய்ப்பதற்கனுப்ப.... அவன் காட்டிலே ஒரு காதில் திரியைக்களைந்து விட்டு செங்காந்தள் என்னும் தனக்கு உகந்த ஒரு பூவை அணிந்து கொண்டு வர அவ்வழகைக் கண்ட யசோதை.... இச்சேரியிலிருக்கின்ற ஆய்ப்பெண்களே! ஒரு காதிலே சீலைத்தக்கையையும் (துணித்திரியையும்) மற்றொரு காதில் செங்காந்தள்ப்பூவையும் அணிந்து கொண்டு பட்டு உடுப்பையும் அது நழுவாமைக்காக அழகிய பெரிய கச்சுப்பட்டையையும் குளிர்ச்சியான முத்துக்களால் கட்டப்பெற்ற பிறைபோல் வளைந்திருக்கின்ற ஆரத்தையும் தரித்துக்கொண்டு.... கன்றுகளின் பின்னே வருகின்ற.... கடல் நிறம் போன்ற நிறத்தையுடைய கண்ணனது கோலத்தை வந்து

பாருங்கள். (இக்கோலம் காண எத்தவம் செய்ய வேண்டுமோ ?) இப்பூமண்டலத்தில்.... பிள்ளையை பெற்றவர்களுள் சிறந்த பிள்ளை யைப் பெற்றவள் என்று சொல்லத்தக்கவள் நான் ஒருத்தியேயாவேன் மற்ருெருத்தி இல்லை, என்று புகழ்ந்து மகிழ்கிருள். 1

பாசு : காடுகளூடு போய்க்கன்றுகள் மேய்த்து மறியோடி.
கார்கோடல்பூச்
சூடிவருகின்ற தாமோதரா! கற்றுத்தூளிகாண்
உன்னுடம்பு *
பேடை மயிற்சாயல் பின்னைமணாளா! நீராட்டமைத்து
வைத்தேன் *
ஆடி அமுதுசெய் அப்பனுமுண்டிலன் உன்னோடு
உடனே உண்பான் * 3

உரை : கண்ணபிரானே! நீ பற்பல காடுகளிடைப் புகுந்து கன்று கள் மேய்க்கும்போது அவைகள் அங்குமிங்கும் துள்ளிச் சிதறி ஓட.... அவற்றை ஓடவிடாமல் மறிக்கைக்காக முன்னே ஓடி அக் கன்றுகளை மேய்த்து....பெரிதான காந்தள்ப் பூக்களை முடியில் அணிந்துகொண்டு மீண்டும் வருகின்ற உனது திருமேனி எல்லாம் அக் கன்றுகளின் கால்களால் கிளப்பப்பட்ட தூசுகள் படிந்து அழுக்காகக் காண்கிறது. அப்பனே! இந்த உன் உடம்பை குளிப்பாட்டுவதற்காக அதற்கு வேண்டியவற்றை ஸித்தப்படுத்தி வைத்திருக்கின்றேன். ஆகையால் நீ நீராடி அமுது செய்ய வருவாயாக. உன்னோடுகூட உணவு அருந்தவேணுமென்று உன் தந்தையும் இதுவரை உண்ணமல் காத்தி ருக்கிருர். ஆதலால் விரைவில் நீராடி அமுதுண்ணவா! என்று யசோதை கண்ணனிடத்தில் உள்ள உள்ளன்பு ததும்பிப் பொங்க அழைக்கின்ருள். 3

பாசு : கடியார் பொழிலணி வேங்கடவா! கரும்போரேறே!
நீயுகக்கும் *
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக்கொள்ளாதே
போனாய் மாலே *
கடிய வெங்கானிடைக் கன்றின்பின் போன சிறுக்
குட்டச் செங்கமல *
அடியும் வெதும்பி. உன் கண்கள் சிவந்தாய் அசைந்
திட்டாய் நீ எம்பிரான் * 4

உரை: மலர்களின் பரிமளம் (வாசனை) நிறைந்த சோலைகளையுடைய அழகிய திருவேங்கடமலையில் எழுந்தருளி இருப்பவனே! பாரதப் போரில் யுத்தம் செய்ய முயன்ற காளை ரிஷபம்போல் செருக்குடன் இருக்குமவனே! கன்றுகளிடத்தில் மிகுந்த பிரியமுள்ளவனே! எனக்குத் தலைவனுமான கண்ணனே! நீ கன்று மேய்க்குமிடமான காடுகளின் கொடுமையை நான் அறிந்து....உனக்கு நீ விரும்புகிற குடையும், செருப்பும், வேய்ங்குழலையும் கொடுத்தும் நீ அவற்றைக் கொள்ளாமல் கன்றுகளின் பின்னே போனாய். இப்படிக் கடுமை யான காட்டிலே கன்றுகளைத் தொடர்ந்து சென்றதால் சிறு பிள்ளை யாகிய உன்னுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகள் செருப் பில்லாமையால் கொதிக்கப்பெற்றன. மேல் குடை இல்லாமையாலே கண்களும் சிவந்தன. நீ இருந்த இடத்திலிருந்தே கன்றுகளை—குழ லூதி அழைத்து கிட்டச் சேர்த்துக்கொள்ள வேய்ங்குழல் இல்லாமை யாலே அங்கும் இங்கும் அலைந்து தட்டித் திரிந்ததனால் உன் உடம் பும் இளைக்கப்பெற்றாய். இதுவும் நான் செய்த வினையோவென்று வருத்தம் கொள்கிறேன். 4

பாசு: **புற்றரவல்குல் அசோதை நல்லாய்ச்சி தன் புத்திரன் கோவிந்தனை ***
கற்றினம் மேய்த்து வரக்கண்டு கந்து அவள் கற்பித்த மாற்றமெல்லாம் *
செற்றமிலாதவர் வாழ்தரு தென்புதுவை விஷ்ணு சித்தன் சொல் *
கற்றிவை பாடவல்லார் கடல்வண்ணன் கழலிணை * காண்பர்களே * 10

உரை: புற்றிலே வளர்கின்ற பாம்பின் படத்தையொத்த அல்குலை உடையவளாய், யசோதை என்னும் பெயரையும் உடையவளாய், பிள்ளையின் விஷயத்தில் நன்மையே உடையவளுமான ஆய்ச்சியான வள் தன் மகனான கண்ணபிரானைக்....காட்டிலே கன்றுகளின் திரளை மேய்த்துவிட்டு மீண்டும் வரக்கண்டு மனம் மகிழ்ந்து தன் மகனைப் பார்த்து இன்னபடி செய்யென்று கட்டளை இட்டுக் கூறிய வார்த்தை களை எல்லாம்....பொருமையற்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் வாழுமிடமான ஸ்ரீவில்லிபுத்தூரின் அதிபர் பெரியாழ்வார் அருளிச்செய்த இப் பாசுரங் களை ஆசார்யமுகமாகக் கற்று வாயாரப்பாட வல்லவர்கள் கடல் போன்ற நிறத்தவனான எம்பெருமான் ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருவடி இணைகளைக் கண்டு அனுபவிக்கப் பெறுவார்கள்.

அடிவரவு— சீலை கன்னி காடு கடி பற்றார் அஞ்சுடர் பன்றி கேட்டு திண்ணார் பற்று தழை—

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

மூன்ரும் பத்தில்—நான்காந்திருமொழி

காலிகள் மேய்த்து வருங்கண்ணனைக்கண்டு ஆயக் கன்னியர்கள் காமுறுதல்—

தழைகளும் தொங்கலும்

அவதாரிகை : கீழத் திருமொழியில் யசோதையிட்ட கட்டளைப்படி கண்ணன் தனது ஜன்ம நக்ஷத்திர சுபதின உத்ஸவம் கொண்டாட வேண்டி ஏழு தினங்கள் ஸர்வாபரண வஸ்திர பீதாம்பர சிகி பிஞ்சா லங்கிருதனாய்....வீட்டில் உள்ளவர்கள் உத்ஸவத்திற்கு வேண்டிய சகல காரியங்களையும் ஸித்தப்படுத்த....பெண்கள் மங்களப் பாட்டுக் கள் பாட உத்ஸவ விக்கிரகம்போல் வீற்றிருந்து அங்குற்ற அனைவ வருக்கும் மன மகிழ்ச்சியை அளித்து, பிறகு பண்டு போலவே காட்டுக்குப்போய் அங்கு ஆநிரைகளை மேய்த்த மகிழ்ச்சியாலே தன்னை வகை வகையாக அலங்கரித்துக்கொண்டு குழலூதுவதும் இசை பாடுவதுமாய் தனது தோழன்மாருடன் பெரிய ஓலக்கமாக ஆயர்பாடிக்கு மீண்டும் வரும் கோலத்தைக்கண்டு இடைப்பெண்கள் அக் கண்ணன்பால் காமுற்ற வகையை....ஆழ்வார் தம்மை அப்பெண் களாக பாவித்து இப்பாசுரங்களைப்பாடி இன்புறுகிருர்.

பாசு : **தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும் தண்ணுமை**
எக்கம் மத்தளி தாழ்பீலி *
குழல்களும் கீதமுமாகி எங்கும் கோவிந்தன் வருகின்ற
கூட்டம் கண்டு *
மழைகொலோ வருகின்றதென்று சொல்லி மங்கைமார்
சாலக வாசல் பற்றி *
நுழைவனர் நிற்பனராகி எங்கும் உள்ளம்விட்டு ஊண்
மறந்தொழிந்தனரே * 1

உரை : கண்ணன்....காலி கன்றுகளை மேய்த்துவிட்டு தன்னோ டொத்த நிறத்தனரான ஆயிரந்தோழன்மாருடன் கூடி....பலவகைப் பட்ட மயிற்பீலிக் குடைகள் (மயில் தோகையினல் கட்டிய குடை கள்) நாற்ப்புறங்களிலும் நிறைந்திருக்க மிருதங்க வாத்தியங்களினு டையவும் ஒரு தந்தியையுடைய மத்தளி வாத்தியங்களினுடையவும் இலைக்குழல் வேய்ங்குழல் இவற்றின் பாட்டுக்களுடையவும் ஒலிகள்

எங்கும் பரவ பெரிய விசிறிகளும் கொண்டு இப்படிக்கொத்த சம்பிரமத்துடன்....கண்ணபிரான் கன்று மேய்த்து வருகின்ற பெரிய திருவோலக்கத்தைப் பார்த்து யுவதிகளான இடைப்பெண்கள் மேகக்கூட்டங்கள்தான் பூமியில் நடந்து வருகின்றதோவென்று சந்தேகித்து வீட்டின் சன்னல் வாயில்களில் சென்று பற்றி கண்ணனைக் காணவேண்டிய அவாவினல் சிலர் சாளர வாயிலின்மேல் விழுவாரும், சிலர் மாமிமார் முதலியோருக்கு அஞ்சி திகைத்து நிற்பாருமாய் ஆகி கண்ணன் நடந்துசென்ற வழியே தங்கள் நெஞ்சையும் செல்லவிட்டு ஆஹாரம் உண்பதையும் மறந்துவிட்டார்கள். (பரவசமாக ஆகிவிட்டார்கள் என்பது) 1

பாசு: வல்லிநுண் இதழன்ன ஆடைகொண்டு வசையறத்
திருவரை விரித்துடுத்து *
பல்லிநுண் பற்றுக உடைவாள் சாத்திப்பணைக்கச்சுந்திபல
தழை நடுவே *
முல்லை நன்நறுமலர் வேங்கைமலரணிந்து பல்லாயர்
குழாம் நடுவே *
எல்லியம் போதாகப் பிள்ளைவரும் எதிர்நின்று அங்கு
இனவளை இழவேல்மினே * 2

உரை: (இடைச்சேரியிலுள்ள தோழிமார், ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொள்ளும்பாசுரம் இது) நந்தகோபதனயனை கண்ணன்.... மெல்லிய இதழ்ப்போன்ற ஸுகுமாரமான வஸ்திரத்தைக் கொணர்ந்து தனது திருவரையிலே ஒழுங்காக விரித்துச் சாத்திக் கொண்டும், அதன்மேல் பெரிய கச்சுப்பட்டையைக் (தற்காலத்தில் பெல்ட் என்று வழங்கப்படுவது) கட்டிக்கொண்டும், அதன்மேல் பல்லியானது சுவரிலே பற்றிக்கிடப்பதுபோலே உடம்போடு பிறந்ததன்றி வைத்துக் கட்டினதல்லவென்று தோற்றும்படி கத்தியை நெருக்கமாகத் தரித்துக்கொண்டும், அழகும் நறுமணமுள்ளதுமான முல்லைப்பூவினலும். வேங்கைப்பூவினலும். தொடுத்த மாலையைச் சாத்திக்கொண்டும், பல இடைப்பிள்ளைகளுடைய கூட்டத்தின் நடுவில் மயிலிறகினல் கட்டிய பல குடைகளின் நிழலிலே அந்திப்பொழுதாகிய இவ்வேளையில் இத்தனை சம்பிரமத்துடன் இவ்விடைச்சேரி வழியாக மன்மதனுக்கும் மன்மதன்போல் விளங்கா நின்று வருவன். அவன் வரும் வழியில் எதிராக நின்று அவனது அழகை கண்டமாத்திரத்தில் வியாமோஹம் கொண்டு உடல் இளைத்து கையில் அணிந்

துள்ள வளைகளை இழவாதேயுங்கள். (கண்ணனிடத்தில் இடைப் பெண்களுக்கு வியாமோஹம் பிறந்தால் அவனுடன் அவர்களுக்கு ரமிக்கை அரிது அச்சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டால் அவர்களுடைய விருப்பம் கைகூடாததால் மனமுடைந்து உடல் இளைத்து கை வளையல்களை நழுவ விடுகின்றனர் என்பது தாத்பர்யம்.)

பாசு: **சுரிகையும் தெறிவில்லும் செண்டு கோலும்**
மேலாடையுந் தோழமார் கொண்டோட *
ஒரு கையால் ஒருவன் தன் தோளையூன்றி ஆநிரை
இனம் மீளக்குறித்த சங்கம் *
வருகையில் வாடியபிள்ளை கண்ணன் மஞ்சளும்
மேனியும் வடிவும் கண்டாள் *
அருகே நின்றாள் என்பெண் நோக்கிக்கண்டாள் அது
கண்டு இவ்வூர் ஒன்றுபுணர்க்கின்றதே— 3

உரை: (இடைச்சேரியிலிருக்கும் ஒரு பெண்பிள்ளையின் தாய் சொல்லும் பாசுரம் இது.) கண்ணபிரான் காட்டில் கன்றுகளை மேய்த்து விட்டு மீண்டும் வரும்போது அவனுக்கு வேண்டினபோது கொடுக்கைக்காக அவனோடு ஒத்த ஆயிரம் பிள்ளைகள். உடைவாளையும், சுண்டுவில்லையும், (கல் முதலியவற்றை வைத்து அடிக்கும் சிறு வில்) நுணியில் பூச்செண்டு கோர்த்த கோலையும். (விளையாட்டுத்தடி) மேல் உத்தரீயத்தையும், கையில் கொண்டு பின்னே தொடர்ந்துவர, கண்ணன்....ஒரு தோழனுடைய தோளை ஒரு கையிலே பற்றிக்கொண்டு, மற்றொரு கையினால் எண்ணிறந்த பசுக்கள் தன் பக்கலிலிருந்து விலகாமலிருப்பதற்கும், தூரத்திற்சென்ற பசுக்களை கிட்ட அணுகுவதற்கும் ஊதவேண்டிய சங்கை ஏந்திக்கொண்டும் வரும்போது அப் பாலகிருஷ்ணனுடைய பற்றிய மஞ்சள் மயமான திருமேனியையும், வாட்டத்தை அடைந்துள்ள அங்க சௌந்தரியத்தின் சோபையையும் அவனுக்குச் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த என் மகள்....முதலில் அவனைப் பொதுவாகப் பார்த்தாள். பிறகு இத்தனை பேர்களில் இவனொருத்தன் இவ்வளவு லக்ஷணமுள்ளவனாக இருக்கின்றானே என்று அபூர்வ வஸ்து தரிசனம்போல் கொஞ்சம் குறிப்பாகப் பார்த்தாள். உலகத்தில் அபூர்வ வஸ்துவைப்பார்ப்பது எல்லாருக்கும் இயல்பு தானே? இவ்வளவே நிமித்தமாகக் கொண்டு இச்சேரியில் உள்ளவர்கள் எல்லாரும் அவனுக்கும் இவளுக்கும் அடியோடு இல்லாத ஒரு சம்பந்தத்தை ஏற்றி வம்பு கூறுகின்றனர். இதற்கு என்ன செய்வது? என்கிறாள்.

பாசு: **குன்றெடுத்து ஆநிரை காத்தபிரான் கோவலனுய்க்**
குழலூதியூதி *
கன்றுகள் மேய்த்துத்தன் தோழரோடு கலந்துடன்
வருவானைத் தெருவில் கண்டு *
என்றும் இவனையொப்பாரை நங்காய்! கண்டறியே
னேடி! வந்து காணுய் *
ஒன்றும் நில்லா வளைகழன்று துகிலேந்தின முலையும்
என்வசமல்லவே * 4

உரை: கீழ்ப்பாட்டில் சொன்ன பிரகாரம் கண்ணன்....காலி மேய்த்துவிட்டு பெருத்த சம்பிரமத்துடன் எழுந்தருளுகின்ற தெருவில் நின்றுகொண்டிருந்த ஒரு பெண்பிள்ளை கண்ணனுடைய எழில் மிகும் வடிவைக்கண்டு களிப்படைந்து இவனுடைய வடிவை நம் தோழியும் கண்டுகளிக்க வேண்டுமெனக்கருதி வீட்டினுள் கிடக்கும் ஒரு தோழியை அழைத்து—பூர்த்தியான பருவமடைந்த தோழியே! எந்த நாளிலும் இவனைப்போன்று ஒருவரையும் ஒப்பாகச் சொல்லவொண்ணுத ஒரு லக்ஷண புருஷன் இத்தெருவில் வருகின்ருன் விரைவில் இங்கே ஓடிவந்து பார் என்று சொல்ல....அவள் அவன் யார்? எங்கிருப்பவன்? என்று கேள்விகேட்டு வருவதற்கு சிறிது தாமஸிக்க.... மேல் அவள் தனக்கு உண்டான விகாரத்தைச் சொல்லுகிருள். ஒருவன் இவ்விடைச்சேரியில் நந்தகோபனுக்குப் பிள்ளையாகப் பிறந்து ....இந்திரனுக்கு இட்ட பூஜையைத் தடுக்க....அவ்விந்திரன் பசிக் கோபத்தினல் விடா மழையைப் பெய்வித்தபோது கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்து பசுக்களின் திரளைக் காத்தருளிய கண்ணபிரான் என்று சொல்ல....அத்தோழி அவன் அவ்வளவு லக்ஷணமுள்ளவனே? என்ன....அவள் பேதாய்! இல்லையாகில் நான் இவ்வாறு விகாரமடைவேனே? பார்! காட்டில் பலகால் குழலை ஊதி யூதி கன்றுகளை மேய்த்துவிட்டு தனது தோழர்களுடன் கூடிக்கொண்டு இவ் வீதி வழியே வருகின்ற கண்ணபிரானை நான் கண்ட வளவிலேயே என் அரையிலுள்ள புடவை அவிழ்ந்து நழுவுகிறது. கை வளைகளும் கழண்டு விழுகின்றன. எனது இள முலைகளும் நிற்க்கின்றவாக இல்லை. என் செய்ய? 4

பாசு: **சுற்றி நின்ருயர்கள் தழைகளிடச் சுருள் பங்கி**
நேத்திரத்தால் அணிந்து *
பற்றி நின்ருயர் கடைத்தலையே பாடவும்
ஆடக்கண்டேன். அன்றிப்பின் *

மற்றொருவற்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்
சோலை எம்மாயர்க்கல்லால் *
கொற்றவனுக்கு இவளாமென்றெண்ணிக் கொடுமின்கள்
கொடீராகில் கோழம்பமே * 5

உரை : மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்று உறுதியுடன் நின்ற ஆண்டாளைப்போன்ற ஓர் ஆய்ச்சி இவள். சொல்லுவதாவது — இடைப்பிள்ளைகள் சுற்றிச் சூழ்ந்துகொண்டு மயில்த்தோகைக் குடைகளை பாங்காகப் பிடித்துக் கொண்டுவர தனது சுருண்ட குழல்களை எடுத்துக்கட்டி மயில்ப்பீலிக் கண்கபளாலே அலங்கரித்துக்கொண்டு, இடைப்பிள்ளைகளின் கூட்டத்தில் முன்புறத்தில் நின்றுகொண்டு பாட்டுப்பாடிக்கொண்டும் கூத்தாடிக் கொண்டும் மிக்க வீறுபாடுடன் வரக்கண்டேன். அவ்வளவிலே மயக்கமும் மோஹமும் கொண்டேன். இனிமேல் அவனுக்கொழிய வேறொருவனுக்கு உரியவளாக என்னைத்தாய் தந்தையர் பேசுவதை நான் பொறுக்கமாட்டேன். யார்க்கொழிய வென்றால்? திருமாலிருஞ்சோலையில் நித்யவாஸம் பண்ணுகிற எனது தலைவனான கண்ணனுக்கு ஒழிய மற்றவற்கென்னைப் பேசவொட்டேன் என்கிறாள். இதைக்கண்ட இடைச்சிகள் அவள் தாய்தந்தையை நோக்கி தாய்மார்களே! நம் மகளான இவள் அத்தலைவனுக்கே உரியவள் என்று நிச்சயித்து அவனுக்கே தாரை வார்த்துக் கொடுத்து விடுங்கள். கொடாமற்போனீர்களேயாகில் உங்களுக்கு என்றைக்கும் சித்தயந்தியின் வரலாறுபோல மனக்குழப்பமேயாகும். சித்தயந்தி என்கிற ஓர் ஆய்மகள் பெரியோர்களின் காவலுக்குள் அகப்பட்டுக் கண்ணனைப் பெறமாட்டாமல் இருந்த இடத்திலேயே, உருகி உள்ளம் நைந்து முடிந்து போயினள். அப்படிக்கானால் உங்களுக்கு என்னாளும் மனக்கலக்கமேயாகுமன்றோ? என்று சொல்கிறார்கள். 5

பாசு : **சிந்தூரமிலங்கத்தன் திருநெற்றிமேல் திருத்திய**
கோறம்பும் திருக்குழறும் *
அந்தரமுழவத்தன் தழைக்காலின் கீழ் வருமாயரோடு
உடன்வளை கோல் வீச *
அந்தமொன்றில்லாத ஆயப்பிள்ளை அறிந்தறிந்து
இவ்வீதி போதுமாகில் *
மந்து கொண்டானென்று வளைத்து வைத்துப் பவளவாய்
முறுவலும் காண்போம் தோழீ! * 6

உரை : கண்ணபிரான்பால் தான் மிகுந்த காதல்கொண்டு அவனைப் பிரிந்து தரித்திருக்கமாட்டாதிருக்க அவனால் மிகவும் உபேக்ஷை (அலக்ஷியம்) பண்ணப்பெற்ற ஒரு ஆய்ச்சி சொல்லும் பாசுரம் இது —வாராய் தோழி! தனது திருநெற்றியில் சோபிதமான சிந்தூரமும் அதன்மேல் பிரகாசமாகச் சாத்தின திலகப்பொட்டும். அதற்குப் பொருத்தமான குழல்கத்தையும். விளங்க....ஆகாச மடங்கலும் மத்தளங்களின் ஓசைகள் நிறையவும். மயிற்பீலிக்குடைகளாகிற குளிர்ந்த சோலையின்கீழே—இத்தியாதி அலங்கார வகைகளை அழகு பெற அமைத்துக்கொண்டு தனது தோழர்களான இடைப்பிள்ளைகளுடன் வளைந்த தடிகளை வீசி விளையாடிக்கொண்டு எல்லையற்ற அழகுடன் கூடிய இடையப்பிள்ளையான கண்ணன்....அவனை விட்டுச் செல்லாத என்னுடைய மன நிலைமையையும் என்னைவிட்டுச் செல்லும் படியான தன்னுடைய மன நிலைமையையும்தான் அறிந்துவைத்தும் லஜ்ஜையற்று இத்தெரு வழியே வருவானாகில் அவனை....நாங்கள் தோழிமாருடன் பந்தாடிக் கொண்டிருக்கையில் இவன் புகுந்து எங்கள் பந்தை வலிய பிடுங்கிக்கொண்டு போனான் என்று முறையிட்டு அவனை வழிமடக்கி எங்கள் பந்தைத்தந்தாலொழிய போக மாட்டோம் என்று ஸாஹஸம் செய்தால் அவன் திடுக்கிட்டு நிற்பன். இதென்ன ஸாஹஸம் என்று வியந்தும் சிரிப்பன். இந்த யுக்தியால் அவனுடைய பவளம்போன்ற அதரத்தையும், புன்சிரிப்பையும் நாம் கண்டு அனுபவிப்போம் என்கிறாள். 6

பாசு : **சாலப்பல் நிரைப்பின்னே தழைக்காவின் கீழ் தன்**
திருமேனி நின்றொளிதிகழ *
நீல நல் நறுங்குஞ்சி நேத்திரத்தாலணிந்து
பல்லாயர் குழாம் நடுவே *
கோலச் செந்தாமரைக்கண் மிளிரக் குழலூதி
இசைபாடிக்குனித்து ஆயரொடு *
ஆலித்து வருகின்ற ஆயப்பிள்ளை அழகு கண்டு
என் மகளயர்க்கின்றதே * 7

7 வது பாசுரத்தின் உரை கண்ணனது வடிவழகில் ஈடுபட்டு உணர்ச்சியற்று ஸ்தம்பம்போல் (கம்பம்போல்) திகைத்து நிற்கும் ஒரு ஆயப்பெண்ணின் தாய் சொல்லும் பாசுரம் இது. அனேகம் பசுத்திரள்களின் பின்னே மயிலறகுக்குடைகளாலாய சோலையின் கீழே தனது திருமேனி ஒளிவீசி விளங்கும்படி நின்று....நீல நிறத்துடன் சுருண்டதும் நீண்டதுமான அமைப்புடன் நறுமணம் வீசுகின்ற குடிலகத்தையை மயில்த்தோகைகளினால் அலங்கரித்துக்கொண்டு

பல இடையர்களின் கூட்டத்தின் நடுவில் அழகிய செந்தாமரை இதழ்போன்ற தனது திருக்கண்கள் துடிக்க....புல்லாங்குழலூதிக் கொண்டும், அதுக்குத்தக்கபடி பாட்டுக்களை பாடிக்கொண்டும் கூத்தாடிக்கொண்டும் இடைப்பிள்ளைகளுடனே மகிழ்ந்து வருகின்ற இக் கண்ணபிரானுடைய வடிவழகை என் மகள் பார்த்து அறிவழிந்து திகைத்து நிற்கின்றாளே? என்ன அதிசயம்? என்று கேழ்க்கிறாள். 7

பாசு: சிந்தூரப் பொடிக்கொண்டு சென்னியப்பித்திருநாம
மிட்டங் கோரிலையந்தன்னால் *
அந்தரமின்றித்தன்னெறி பங்கியை அழகிய
நேத்திரத்தாலணிந்து *
இந்திரன் போல் வரும் ஆயப்பிள்ளை எதிர்நின்றங்
கினவளை இழவேலென்ன *
சந்தியில் நின்றுகண்டீர் நங்கைதன் துகிலொடு
சரிவளை கழல்கின்றதே! 8

உரை: கண்ணபிரான் வரும் வழியில் எதிர்த்தட்டாக நின்று நோக்கி அவனைக் காமுற்று அம் மனோரதம் நிறைவேறப்பெறாமல் உடனே உடலிளைத்து வளை கழன்றவர் பலபேருண்டு அவர்களைப்போல நீயும் அங்கு நின்று வளைகளை இழக்காதே என்று என் மகளுக்கு நான் முறையிட்டுச் சொல்லியும் கேளாமல் போய் வளையையும் துகிலையும் தோற்றுத் தவிக்கின்றாளே? என்று ஒரு பெண்ணின் தாய் இரங்கும் பாசுரம் இது—சிந்தூரப்பொடியைக்கொண்டு தனது திரு முடியிலே தூவிக்கொண்டும், நெற்றியில் ஒருவகை இலையினாலே நாமம்போலச் சாத்திக்கொண்டும் நெறித்து நிற்கின்றதான திருக் குழல்களை (கேசத்தை) அழகிய கண்களுள்ள மயிலிறகினால் நெருங்க அலங்கரித்துக்கொண்டும், தேவேந்திரன்போல ஊர்வலம் வருகின்ற கண்ணனுக்கு எதிர்முகமான இடத்தில் நின்றுகொண்டு கைவளைகளை நீ இழக்க வேண்டாம் என்று என் மகளை நோக்கி நான் உறுத்திச் சொல்லியும் அந்தப்பெண் அவன் வரும் வழியில் நின்று தனது துகி லுடன் வளையல்களும் கழன்று இழந்திருக்கின்றாளே? இதென்ன அநியாயம்? என்கிறாள். 8

பாசு: வலங்காதில் மேல் தோன்றிப் பூவணிந்து மல்லிகை
வனமாலை மௌவல் மாலை *
சிலிங்காரத்தால் குழல்தாழவிட்டுத் தீங்குழல்
வாய்மடுத்தூதியூதி *

அலங்காரத்தால் வரும் ஆயப்பிள்ளை அழகுகண்டு என்மகள் ஆசைப்பட்டு *
விலங்கி நில்லாது எதிர் நின்றுகண்டீர் வெள்வளை கழன்று மெய்ம் மெலிகின்றதே * 9

உரை : வலது காதில் செங்காந்தள்ப்பூவையும், (திருமார்பில்) காட்டு மல்லிகை மாலையையும், முல்லைப்புஷ்ப மாலையையும், அணிந்து கொண்டு, கேசங்களை அலங்காரமாக முதுகில் தொங்கவிட்டுக் கொண்டு இனிமையான வேய்ங்குழலை திருவதரத்தில் வைத்து வகை வகையாக ஊதிக்கொண்டு இத்தகைய அலங்காரங்களோடே வரு கின்ற கண்ணபிரானுடைய வடிவழகை என் மகள் பார்த்து....அவனி டத்தில் காமங்கொண்டு (இவ்வடிவழகு கண்டவர்களை மயக்கும் என்று புறம்பே செல்லாமல்) அவனுக்கு எதிர்முகமாக நின்றதால் தனது சங்கு வளைகளும் கழன்று உடலும் இளைத்தாள் என்று ஒரு ஆய்பெண்ணின் தாய் சொல்லுகிருள். 9

பாசு : விண்ணின் மீது அமரர்கள் விரும்பித்தொழ மிறைத்து ஆயர்பாடியில் வீதியூடே *
கண்ணன் காலிப்பின்னே எழுந்தருளக்கண்டு இளவாய்க்கன்னிமார் காமுற்ற *
வண்ணம் வண்டமர் பொழில் புதுவையர் கோன் விட்டு சித்தன் சொன்ன மாலைபத்தும் *
பண்ணின்பம் வரப்பாடும் பத்தருள்ளார் பரமான வைகுந்தம் நண்ணுவரே * 10

உரை : ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா....பரமபதமான ஸ்ரீவைகுண்டத்திலே வாசம் செய்யும் நித்ய ஸூரிகளால் ஆதரவுடன் ஸேவை செய்து கொண்டு இருக்கச் சேயும் அவர்களையும் உதாஸீனம் செய்து திரு வாயர்பாடியில் வந்து அவதரித்து தெருவின் கண் பசுக்களின் பின்னே திருவோலக்கமாக வருகின்றபொழுது அவனழகை யுவதி களான இடைப்பெண்கள் பார்த்து காமவிகாரமடைந்தபடியை.... வண்டுகள் மொய்க்கும் சோலைகளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான பெரியாழ்வார் அருளிச்செய்த பாமாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் இனிமையாக இசையுடன்கூட பாடுகின்ற பக்தர்களா இருப்பவர்கள் லோகோத்தரமான ஸ்ரீவைகுண்டத்தை அடைவார்கள் என்று பலன் சொல்லி தலைகட்டுகிருர்—

அடிவரவு— தழை வல்லி சுரிகை குன்று சுற்றி சிந்தூரம் சால சிந்தூரப் பொடி வலம்விண் அட்டு—

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

மூன்ரும் பத்தில்—ஆருந்திருமொழி

கண்ணன் குழலிசைச் சிறப்பு—வேய்ங்குழலூதற் சிறப்பு—

நாவலம் பெரிய

அவதாரிகை : ஸ்ரீ நந்தகோபர் மகனுகப்பிறந்த கண்ணபிரான் தன் ஜாதிக்கு உரியவாறு காலிகள் மேய்த்துவரும் நாளில் ஒருநாள் பிருந்தாவனத்திலே நின்று குழலூத அக் குழலிசையைக்கேட்ட இடைப்பெண்கள் பட்டபாடுகளேயும், மேலுலகத்திலுள்ள தேவமாதர் களும் விகாரமுற்றதையும், திர்யக் ஜந்துகளும் திகைத்து நின்றபடி யையும், கட்டைமரமும் மகிழ்வுற்றுத் துளிர்த்ததையும் ஆழ்வார் தனித் தனியே பேசி அக்குழலோசையின் அதிசயத்தை அனுபவிக்கி ருர்—இத்திருமொழியில்.

பாசு : **நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கைமீர்காள் !**
இது ஓரற்புதம் கேளீர் *
தூவலம்புரியுடைய திருமால் தூயவாயில் குழலோசை
வழியே *
கோவலர் சிறுமியர் இளங்கொங்கை குதூகலிப்ப
உடலுளவிழ்ந்து எங்கும் *
காவலும் கடந்து கயிறுமாலேயாகி வந்து கவிழ்ந்து
நின்றனரே * 1

உரை : அழகிய வனப்புள்ளதும் விசாலமாகப் பறந்து கிடப்பதும் சிறப்படைந்ததுவுமான இந்த ஜம்பூத்தீவினில் தவப்பயனல் பிறந்த பெண்களே! ஒரு ஆச்சரியமான இச்சங்கதியை செவிசாய்த்துக்கேளுங் கள். என்ன அற்புதமோ ? வென்ருல்....புனிதமான ஸ்ரீ பாஞ்ச ஜந்யம் என்கிற சங்கத்தையுடைய லக்ஷ்மீபதியான கண்ணபிரானு டைய அழகிய பவளவாயில் வைத்து ஊதப்பெற்ற புல்லாங்குழலினு டைய ஓசையைக்கேட்ட இடைப்பெண்கள் வீட்டிலுள்ள பெரியோர் களான.... மாமியார் மாமஞர் தாய் தந்தையர்களுடைய காவலேயும் மீறி அவ்விசைவழியே உடலும் உள்ளமும் குலேந்து அவர்களுடைய இளமுலேகளானது நாங்கள்— முன்னே போகிருேமென்று நெறித்து ஆசைப்பட்டு நிற்க கண்ணன் குழலூது மிடத்தே புகுந்து திரள்திரளாக ஒரு கயிற்றில்த் தொடுத்த பூமாலேயைப்போல வரிசையாக

வந்து கண்ணனைக்கண்டு.... நாம் நமது ஆசையை அடக்கமாட்டாமல் இப்படி வந்தோமே என்று லஜ்ஜையுற்று முகங்கொண்டு அவனைப்பார்க்கமாட்டாமல் தலைகவிழ்ந்து நின்றனர். இதிலும் மிக்க அற்புதமுண்டோ ?— 1

பாசு : **இடவணரை இடத்தோளோடு சாய்த்து இருகை**
கூடப் புருவம் நெரிந்தேற *
குடவயுறுபட வாய்கடை கூடக் கோவிந்தன் குழல்கொடு
ஊதின போது *
மடமயில்களொடு மான்பிணைபோலே மங்கைமார்கள்
மலர்க் கூந்தல் அவிழ *
உடைநெகிழ ஓர்கையால் துகில்பற்றி ஒங்கியோடரிக்
கண்ணோட நின்றனரே * 2

உரை : கண்ணபிரான் தனது இடதுபக்கத்து மோவாய்க்கட்டை இடது தோள் பக்கமாகச் சாய்த்தும் இருகைகளும் குழலோடு கூடவும், புருவங்கள் நெறித்துமேலே கிளர்ந்திருக்கவும் வயிறுனது குடம் போலக்குமிழ்த்து வரவும், வாயானது இரண்டருகும் குவியவும், இவ்வாறுன நிலைமையில் நின்று வேய்ங் குழலைக்கொண்டு ஊதின போதிலே.... அவ்விசை கேட்ட.... அழகிய மயில்களையும் மான்பேடுகளையும் போன்ற இடைப்பெண்கள் தங்களுடைய மலரணிந்த கூந்தல் முடி அவிழ்ந்து அலையவும், அரைப்புடவையானது நழுவவும் நழுவிய அத்துகிலை ஒரு கையாலும் அவிழ்ந்த கூந்தலை ஒரு கையாலும் பற்றிக்கொண்டு ஓடிவந்து துவண்டு செவ்வரி கருவரிகள் ஓடுகின்ற கண்கள்.... கண்ணன் பக்கலிலே ஓடப்பெற்று.... இருந்தவிடத்தில் நின்றே உடல் விகாரமடைந்து நின்றனர். 2

பாசு : **வானிள வரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன்**
மதுரை மன்னன் நந்தக்
கோனிளவரசு கோவலர் குட்டன் கோவிந்தன் குழல்
கொடு ஊதினபோது *
வானிளம் படியர் வந்து வந்தீண்டி மனமுருகி மலர்க்
கண்கள் பனிப்ப *
தேனளவு செறி கூந்தலவிழச் சென்னி வேர்ப்பச்
செவி சேர்த்து நின்றனரே *

உரை: பரமபதமாகிய ஸ்ரீவைகுண்டத்திற்கு யுவராஜனும், அப்பரமபதத்தில் உள்ள நித்திய ஸூரிகளுக்கு பரிவு கொள்ளத்தக்க பாலப் பருவமுடைய சிறுவனாகவும், வசுதேவர்க்கு மகனாகப் பிறந்தவனும் வட மதுரைக்கு (கம்ஸன் முதலான அரக்கர்களை ஒழித்து அரசைக் கைக்கொண்டதால்) அரசனும், நந்தகோபர்க்குப் பிள்ளையாக வளர்ந்து இளவரசனும், இடையர்களுக்குப் பரிந்து நோக்கும்படியான பிள்ளையாயுமுள்ள.... கண்ணபிரான் தீங்குழலூதியவளவிலே பொன்னுலகிலுள்ள— இளமங்கையர்கள் கண்ணன் இருக்கின்ற பிருந்தாவனத்திலே கூட்டங் கூட்டமாக ஓடிவந்து அக்குழலோசையை நன்றாகக் கேட்டு தங்கள் நெஞ்சு உருகி தங்களது குவளை மலர் போன்ற அழகிய கண்களினின்றும் ஆனந்த நீர் துளித்து விழ, முடியில் அணிந்திருக்கும் மலரில் உள்ள தேனோடு கூடிய செறிந்த கூந்தலவிழ, நெற்றியில் வியர்வைதுளிக்க, இவ்வகை விகாரங்களுடன் தமது காதுகளை அக்குழலோசையிலேயே மடுத்து திகைத்து நின்றார்கள். 3

பாசு: தேனுகன் பிலம்பன் காளியனென்னும் தீப்பப்பூடுகள்
அடங்க உழக்கி *
கானகம்படி உலாவியுலாவிக் கருஞ்சிறுக்கன்
குழலூதினபோது *
மேனகையொடு திலோத்தமை அரம்பை உருப்பசியரவர்
வெள்கி மயங்கி *
வானகம்படியில் வாய்திறப்பின்றி ஆடல்பாடல் அவை
மாறினர் தாமே * 4

உரை: அண்டினவரை ஆதரிக்கும் அன்புகொண்ட கரியதிருமேனியையுடைய சிறுபிள்ளையான கண்ணன்....தன்னை நலிவதற்காக வந்த கழுதைவடிவங்கொண்ட தேனுகாசுரன் பின்னும் பிரலம்பாசுரன் காளியன் என்ற நாகம், முதலான கொடிய அரக்கர் பூண்டுகளை எல்லாம் அடிவேறற அழித்துவிட்டு பிருந்தாவனம் புகுந்து உலாவி வந்து வேய்ங்குழலூதும் போது அக்குழலிசை கேட்ட தேவமாதர்களான மேனகை திலோத்தமை, ரம்பை, ஊர்வசி முதலான அப்ஸரஸ்திரீகள், மோஹமடைந்து.... (ஆடும்பொழுது நமது நடை அழகையும், பாடும் பொழுது நமது பாட்டின் இன்பத்தையும், கண்ணபிரானது நடையழகும் குழலோசையும் வென்றன என்று வெட்கமடைந்து.... தேவலோகத்திலும் பூவுலகத்திலும் ஆடுகை பாடுகை

என்கிற இக்காரியங்களை வாயினுல் சொல்லவும் செய்யோம் என்று வாய்திறவாமல் தாமாகவே விட்டொழிந்தனர்— எனவே கண்ணபிரானுடைய வீறுகொண்ட விலாஸங்களின் திறத்திர்க்குத் தேவமாதர்களும் தோற்றவர் என்பது— 4

பாசு : முன்னரசிங்கமதாகி அவுணன் முக்கியத்தை முடிப்பான் மூவுலகில் *

† மன்னரஞ்சும் மதுசூதனன் வாயில் குழலினேசை செவியைப்பற்றி வாங்க *

நன்னரம்புடைய தும்புருவோடு நாரதனும் தம் தம் வீணை மறந்து *

கின்னர மிதுனங்களும் தம் தம் கின்னரம் தொடு கிலோம் என்றனரே * 5

உரை : முற்காலத்தில் நரஸிம்ம உருவம் கொண்டு கீர்த்திவாய்ந்த ஹிரண்யாசுரனை முடித்தவனும், மூன்று உலகத்தில் உள்ள அரசர்களும் தனக்கு முடிவணங்கத்தக்கவனுக இருப்பவனும் ஆன கண்ணபிரானுடைய வாயில் வைத்து ஊதப்பெற்ற வேய்ங் குழலினுடைய நாதமானது கேட்பவர்கள் காதுகளைப்பற்றி இழுக்க— வீணை வித்தையில் முதன்மை பெற்ற.... நல்ல வீணையைக்கையில் உடைய தும்புரு முனிவனும், நாரதமுனிவரும், தங்கள் தங்கள் வீணையையும் அவைகளின் சுரஜாலங்களையும் மறந்து நின்றனர், புகழ்பெற்றிருக்கும் கின்னர மிதுனங்களும்.... இனி நாங்கள் எங்கள் கின்னர வாத்தியங்களை தொடுவதில்லை என்று உறுதியாக உரைத்திருந்தனர். (கண்ணனது குழலின் மதுர நாதத்திற்கு.... தும்புரு, நாரத, ரிஷிகளின் வீணைகளில் நாதமும் கின்னரர்களின் கின்னரவாத்தியங்களும் கூட ஈடாக நிற்க மாட்டாதென்பதாம்.—) 5

பாசு : செம்பெருந்தடங்கண்ணன் திரள்தோளன் தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம் *

நம்பரமன் இன்நாள் குழலூதக் கேட்டவர்கள் இடருற்றன கேளீர் *

அம்பரம் திரியும் காந்தப்பரெல்லாம் அமுதகீத வலையால் சுருக்குண்டு *

நம்பரமன்றென்று நாணிமயங்கி நைந்து சோர்ந்து கைம்மறித்து நின்றனரே * 6

உரை : சிவந்து விசாலமான திருக்கண்களையுடைவனும், பருத்த தோள்களையுடையனும், தேவகியின் பிள்ளையாயும், தேவர்களுக்கு சிங்கம் போன்றவனும், நமக்கு ஸ்வாமியாகவும் பரமபுருஷனுகவும் இருக்கின்ற கண்ணன்பிரான்.... இன்றையதினம் தீங்குழலூத அதன் இசையைக் கேட்டவர்கள்.... பட்டபாடுகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்— (என்று ஆழ்வார் பொதுவாக மக்களுக்குச் சொல்லுகிருர்) என்னவென்ருல்? ஆகாயத்தில் சஞ்சரிப்பவர்களான கந்தர்வர் அனைவரும் அமுதம் போல் இனிமையான கண்ணனது குழலிசையாகிற வலையிலே அகப்பட்டு, இனிமேல் கீதம்பாடுகையாகிற பெருஞ் சுமையில் நமக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை என்று அறுதியிட்டு இதற்கு முன் பாடித்திரிந்ததற்கும் வெட்கப்பட்டு அறிவழிந்து மனம் சோற சரீரம் கட்டுக்குலைய இனிநாம் ஒருவகைத்தொழிலுக்கும் ஏற்றவர்கள் இல்லை என்று கைவிரித்து நின்ருர்கள். 6

பாசு : புவியுள் நான் கண்டதோரற்புதம் கேளீர் பூணிமேய்க்கும்
இளங்கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத்தணையான் குழலூத அமரலோகத்தளவும்
சென்றிசைப்ப *
அவியுணு மறந்து வானவரெல்லாம் ஆயர்பாடி
நிறையப்புகுந்து ஈண்டி *
செவியுணுவின் சுவைகொண்டு மகிழ்ந்து கோவிந்தனைத்
தொடர்ந்து என்றும் விடாரே—7

உரை : (ஆழ்வார் உலகமக்களைப்பார்த்துச் சொல்லுகிருர்) இப்பூலோகத்தில் நான்கண்ட ஆச்சரியம் ஒன்றுண்டு கேளுங்கள் சொல்லுகிறேன். (அது யாதெனில்) பசுக்களை மேய்கின்ற இடைப்பிள்ளைகள் திரண்டு கூடி இருக்கிற சபையிலே.... நாகசயனனுன கண்ணபிரான் இவ்வுலகில் ஊதின குழலின்னேசை தேவலோகம் வரையில் பரந்து சென்று அங்கே த்வனிக்க.... அதனைக்கேட்ட தேவர்களனைவரும் ஒருவர் தப்பாமல்.... அந்தணர்கள் யாகங்களில் தொழுது தரும் ஹவிஸ்ஸுக்களை உண்பதையும் மறந்து இடைச்சேரி நிறையும்படி திரண்டு வந்து புகுந்த கூட்டத்தின் மிகுதியினுல் ஒருவரை யொருவர் நெருக்கி நின்று கொண்டு அக்குழலோசையின் இனிய ரசத்தை செவியின் உள் நாவினுல் நன்கு பருகி மனம் களித்து கண்ணபிரான் சென்றவிடமெல்லாம் தாங்களும் பின் தொடர்ந்து

சென்று அவனை ஒரு நொடிப்பொழுதும் விட்டுப்பிரியமாட்டாமல் இருந்தனர்— இதிலும் மிக்க ஆச்சரியம் ஒன்று உண்டோ என்று ஆனந்தமடைகிறார்— 7

பாசு : சிறு விரல்கள் தடவிப்பரிமாறச் செங்கண்கோடச்
செய்யவாய் கொப்பளிப்ப *

குருவெயர்ப்புருவம் கூடலிப்பக் கோவிந்தன் குழல்
கொடு ஊதினபோது *

பரவையின் கணங்கள் கூடுதுறந்து வந்து சூழ்ந்து
படுகாடுகிடப்ப *

கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்
திறங்கிச் செவியாட்டகில்லாவே * 8

உரை : இன்னும் கேளுங்கள் என்று சொல்லுகிறார். கண்ணன் தனது சிறிய கைவிரல்கள் குழலின் துளைகளைத் தடவிக்கொண்டு சஞ்சரிக்கச் செய்துகொண்டும், (குழல் ஊதும்போது கைவிரல்களால் குழலின் துளைகளை மூடுவதும் மூடியவிரல்களை திறப்பதற்காக தடவி எடுப்பதும் இயல்பு) செந்தாமரை போன்ற கண்கள் வக்கிரமாகவும், சிவந்த பவழம் போன்ற வாய் வாயினுள் நிறைந்த காற்றினாலே குமிழ்போன்று நிற்கவும், அங்கும் இங்கும் உலாவி உலாவி குழலூதுவதால் வியர்வை அரும்பிய புருவம் மேற்கிளர்ந்து வளைந்திருக்கவும். இவ்வாறான நிலைமையோடு குழல் ஊதும்போது அவ்வோசையைக் கேட்ட பக்ஷிகளின் கூட்டங்கள் தாம் இருக்கும் கூடுகளை விட்டு ஓடிவந்து கண்ணனைச் சூழ்ந்து கொண்டு காட்டில் வெட்டு வீழ்த்திய மரங்கள் போல ஆடாது அசையாது நிலத்தில் விழுந்து கிடந்தன. பசுக்கூட்டங்களும் மெய்மறந்து கால்களைப் பரப்பிக்கொண்டும் தலைகளையும் தொங்கவிட்டுக்கொண்டும் உணர்ச்சியற்று காதுகளை அசைக்கவும் செய்யாமல் நின்றன கண்ணனது வேணுகான நாதமானது உலகில் சேதனம் அசேதனம் முதலான சமஸ்தமான பொருள்களையும் இரும்பைக் காந்தம் இழுத்தும்கொள்ளுவது போல வசீகரித்துக்கொள்ளும் அற்புத சக்தி வாய்ந்தது என்பது காணத்தக்கது—

பாசு : **திரண்டெழுதழை மழை முகில் வண்ணன் செங்கமல**
மலர் சூழ்வண்டினம்போலே *
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த முகத்தான் ஊதுகின்ற
குழலோசை வழியே *
மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த
புல்லும் கடைவாய் வழி சோர *
இரண்டு பாடும் துலுங்காப் புடைபெயரா எழுது
சித்திரங்கள் போல நின்றனவே * 9

உரை : ஆகாயத்தில் திரண்டெழுந்து தழைத்து நிற்கின்ற நீருண்ட மேகம் போன்ற வடிவையுடைய கண்ணபிரான்.... செந்தாமரைப் பூவைச் சூழ்ந்து மொய்க்கின்ற வண்டுத்திரளைப் போன்று சுருண்டும் கருநிறத்தையுமுடைய கேசங்கள் (குழல்கள்) தாழ்ந்து அலைகின்ற முகத்தையுடையவனை இருந்து ஊதுகிற குழலின் ஓசை வழியிலே அகப்பட்டு மான்கணங்கள் அவ்விரசானுபவத்தால் அறிவழிந்து மேய்ச்சலையும் மறந்து புல்தின்னுமல் இருந்ததுவுமன்றி தின்பதற்காக வாயில் கவ்விய புல்லையும் கடைவாய் வழியாக நழுவ விட்டுக் கொண்டும், முன் பின் ஆகிய இரண்டு பக்கங்களிலும் கால்களை அசைக்காமலும், அடிபெயர்த்து இடமாட்டாமலும் சுவரில் எழுதப் பட்ட சித்திரப்பதுமை போலத்திகைத்து நின்றன— 9

பாசு : **கருங்கண் தோகை மயிற்பீலியணிந்து கட்டி நன்குடுத்த**
பீதகவாடை *
அருங்கல வுருவினாயர் பெருமான் அவனொருவன்
குழலூதின போது *
மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும் மலர்கள் விழும்
வளர்கொம்புகள் தாழும் *
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற பக்கம்
நோக்கி அவை செய்யும் குணமே * 10

உரை : கருத்த கண்களைக்கொண்ட தோகைகளையுடைய மயில்களின் இறகுகளைச் சிரஸின் மேல் அணிந்துகொண்டு, நன்ருக அழுத்தமாக உடுத்திய பீதாம்பரத்தையும், அருமையான ஆபரணங்களையும் அணிந்த திருமேனியை உடைய ஆயர் பெருமானுன கண்ணனொரு வன்.... வேணுகானம் செய்தபோது அந்த நாதத்தைக்கேட்டு அறி வற்ற அசேதனங்களான மரங்களும்கூட ஒன்றுசேர நின்று உள்ளம்

உருகிய வகை தோற்ற.... கண்ணன் குழலூதிக்கொண்டு நிற்கும் பக்கங்களில் ஒரு பக்கம் தமது மகரந்த தாரைகளைப் பெருக்கின, மற்றொரு புறம் புஷ்பங்களை நிலை குலைய உதிர்த்து வீழ்த்தின. இன்னொரு புறம் மேல் நோக்கி வளர்கின்ற கொம்புகளைத் தாழ்த்தி.... தாழ்த்திய கொம்புகளைக் (கண்ணனைக் கைகூப்பி வணங்கு வாரைப் போல) குவித்து உருக்கமாக நின்றன, இவ்வாறெல்லாம் அந்தமரங்கள்.... கண்ணன் நிற்கும் அந்த அந்தப்பக்கங்களை நோக்கிச் செய்கின்ற வழிபாடுகள் இருந்தபடியை என்னென்று சொல்வது ? என்று வியப்படைகிறார்— 10

பாசு : குழலிருண்டு சுருண்டேறிய குஞ்சிக் கோவிந்தனுடைய
கோமளவாயில் *
குழல் முழைஞ்சுகளினூடு குமிழ்த்துக் கொழித்திழிந்த
அமுதப் புனல் தன்னை *
குழல் முழவம் விளம்பும் புதுவைக்கோன் விட்டுசித்தன்
விரித்த தமிழ்வல்லார் *
குழலை வென்ற குளிர்வாயினராகிச் சாதுகோட்டியுள்
கொள்ளப்படுவாரே * 11

உரை : கருத்தும், சுருண்டும், சிரஸில் நிரம்ப வளர்ந்திருக்கின்ற கேசத்தையுடையவனான கண்ணபிரானுடைய (கோமளம்) அழகிய வாயில் (அதரத்தில்) வைத்து ஊதுகிற வேய்ங்குழலினுடைய துளைகளிலே கண்ணபிரானுடைய வாயமுதமானது நீர்க்குமிழி போலக் குமிழ்த்து உடனே அது உடைந்து திவலையாகக் கொழித்துக்கொண்டு மேற்கிளம்பின அமுத ஜலத்தைக்... குழலோசையோடு ஒத்து பரம போக்கியமாக அருளிச் செய்தவரும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவருமான பெரியாழ்வார் விஸ்தாரமாகவுரைத்த இத்தமிழ்ப் பாசுரங்களை ஓதுபவர்கள் (பயில்பவர்கள்) இக்குழலோசையின் குளிர்ச்சியைக் காட்டிலும் மேலாகும்படியான குளிர்ந்தவாய் மொழியையுடையராய் வாசுதேவனான கண்ணனின் கல்யாண குணங்களை பரம போக்கியமாகச்சொல்லும் வல்லமை பெற்று அப்பரமனின் அடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டியிலே (கூட்டத்திலே) சேர்ந்து கொள்வார்கள்— என்று பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார்— 11

அடிவரவு— நாவல் இடவான் தேனுகன் முன் செம்பெரும் புவி சிறு திரண்டு கருங் குழல் ஐய—

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

நான்காம் பத்தில்—இரண்டாந்திருமொழி

திருமாலிருஞ்சோலை மலைச் (வைபவம்.) சிறப்பு

அலம்பா வெருட்டா

அவதாரிகை : ஆழ்வார்... வண்ணமாடங்கள் என்று தொடங்கி கண்ணனுடைய குணாதிசயங்களையும் பரிபூர்ணமாகப்பாடி அனுபவித்து அவற்றோடுகூட இராமபிரானுடைய குணாதிசயங்களையும் அனுபவித்துப்பாடித் திருப்த்தராய், பிறகு:அவனின் விபவ அவதாரங்களைக் கண்ணால் காணவேண்டுமென்கிற அவா இருப்பினும் ஆழ்வார் காலத்தில் அதுகிடைக்கக் கூடாதவையாக இருந்தமையால் எம்பெருமான் அர்ச்சாவதாரமாக எழுந்தருளி இருக்கிற திருப்பதிகளில் அவனை அனுபவிக்க விரும்பி அவ்வெம்பெருமானுக்கு மிகவும் உகந்த ஸ்தலமாக இருக்கின்ற திருமாலிருஞ் சோலைமலையை அங்கு எழுந்தருளி இருக்கிற அழகரைக்காட்டிலும் அம்மலையே முந்துற அடையத்தக்கதென்று (ஸேவிக்கத்தக்கதென்று) எண்ணங்கொண்டு அத்திருமலையினுடைய வைபவத்தைப் பேசிப் பேசி மகிழ்கிறார்— இத்திருமொழியில்—

பாசு : **அலம்பாவெருட்டாக் கொன்று திரியுமரக்கரை ***
குலம்பாழ் படுத்துக்குலவிளக்காய் நின்ற கோன்மலை *
சிலம்பார்க்கவந்து தெய்வ மகளிர் கன்றாடுஞ்சீர் *
சிலம்பாறுபாயும் தென்திருமாலிருஞ் சோலையே * 1

உரை : தெய்வமாதர்கள் தமது பாதச் சிலம்புகள் ஒலிக்கும்படி பூலோகத்திற்கு வியந்து உகந்து வந்து நீராடும்படியான பெருமையையுடைய நூபுர கங்கை என்னும் ஆறுனது இடைவிடாமல் பெருகப் பெற்றுள்ள அழகியதும் உயர்ந்தும் பரந்ததுவுமான திருமாலிருஞ் சோலைமலையானது... பிராணிகளை நிலைகுலையச் செய்தும் பயபடித்தியும் உயிர்கொலை செய்தும் திரிந்துகொண்டிருந்த அரக்கர்களை குலத்துடன் பூண்டறப்பாழாக்கி சூரியவம்சத்து அரசர்களின் குலத்திற்கே விளக்காய் நின்ற பெருமான் எழுந்தருளி இருக்கும் இடமான திருமலையாகும்— நூபுரகங்கை என்பது முன்பு திருமால் வாமனாவதாரம் செய்து உலகளந்த காலத்தில் மேலே சத்திய லோகத்தில் சென்ற அப்பெருமானது திருவடியைப் பிரம்மதேவன் தனது கைக்கமண்டல தீர்த்தத்தால் விளக்க அத்தீர்த்தம் எம்பெருமானது பாதச்

சிலம்பினின்று தோன்றியதால் சிலம்பாறு என்று பெயருடையதா யிற்று. இது ஆன்றோரால் கொண்டாடப் பெற்ற மகிமை உடையதான தொரு திவ்யதேசம்— 1

பாசு: வல்லாளன் தோளும் வாளரக்கன் முடியும், தங்கை *
பொல்லாத மூக்கும் போக்குவித்தான் பொருந்தும் மலை *
எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து பல்லாண்டொலி *
செல்லா நிற்கும் சீர்த் தென்திருமாலிருஞ் சோலையே * 2

உரை: திருமலையின் பரப்பெங்கிலும்எல்லாவிடங்களிலும்(பல்லாண் டென்னும்) மங்களாசாஸன கோஷமானது பரவிச்செல்லும்படியான பெருமையை உடைய தென் திருமாலிஞ் சோலையானது!...வலிய ஆண் மையையுடையவனும் தவத்தின் பலத்தினல் சிவனிடத்தில் பெற்ற வாளையுடையவனுமான இராவணனுடைய தோள்களும் தலைகளும் அவனது தங்கையாகிய சூர்ப்பணகையின் கொடிய மூக்கும் அறுப் புண்டு போகும்படி பண்ணின எம்பெருமான் பொருந்தி எழுந்தருளி நித்திய வாஸம் பண்ணுமிடமான திருமலையாம்— 2

பாசு: தக்கார் மிக்கார்களைச் சஞ்சலம் செய்யும் சலவரை *
தெக்கா நெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை *
எக்காலமும் சென்று சேவித்திருக்கும் அடியரை *
அக்கா நெறியை மாற்றும் தண்மாலிருஞ் சோலையே * 3

உரை: எப்போதும் சென்று போய் திருவடி தொழுது நிற்கும் பாக வதர்களை கொடுமையான அப்படிப்பட்ட பாவக்காட்டு வழியே செல் வதில் நின்றும் விலக்கக்கூடியதும் (தனது அடியார்களான பாகவதர் களை பாபம் என்பது கிட்டவும் அணுகாமல்...எம்பெருமான் காப்பன் என்பது) தாபஹரமான குளிர்ந்தமாலிருஞ் சோலையானது– கருணை யில் எம்பெருமானை ஒத்தவர்களும் (அவனிலும்) மேற்பட்டவர்களு மாயுள்ள மஹான்களை (அதாவது தயை விஷயத்தில் எம்பெருமான் பாபகர்மாக்களையுடைய ஆத்மாக்களிடம் (மனிதர்களிடம்) சீற்ற மடைந்து ஆஸுர ஜன்மங்களில் தள்ளிவிடுவேன் என்று சொல்லக் கூடும்— பாகவதர்கள் அங்ஙனமன்றி சகல ஜனங்களிடத்திலும் ஒக்க தயாசீலராக இருப்பார் என்றதால்) இப்படியாக உள்ளவர்களை அலைத்து வருத்துகின்ற துஷ்டர்களை தெற்கு திசையிலுள்ள நரகமார்க் கத்திலே செல்லும்படி செய்கின்ற ஸ்ரீ பதியான எம்பெருமான் எழுந் தருளி இருக்குமிடமான பொன்போலப்பிரகாசிக்கும் அழகிய திரு மலையாகும்— 3

பாசு : ஆனுயர் கூடி அமைத்த விழவை, அமரர்தம் *
கோனுர்க்கொழியக் கோவர்த்தனத்துச் செய்தான்மலை *
வானுட்டில் நின்று மாமலர்க்கற்பகத் தொத்திழி *
தேனுறுபாயும் தென்திருமாலிருஞ் சோலையே * 4

உரை : சுவர்க்கலோகத்தில் உள்ளதும் பெரிய பெரிய பூக்களை உடையதுமான கற்பகவிருக்ஷத்தினுடைய பூங்கொத்துக்களில் நின்றும் பெருகுகின்ற தேன் ஆற்றை தன்னுள்கொண்டு ஓடா நிற்கிற சிலம்பாற்றின் அழகையுடைய திருமாலிருஞ் சோலையானது... பசுக்களுக்குத் தலைவர்களான இடையர்கள் ஒன்று சேர்ந்து இந்திரனுக்காக ஏற்படுத்தின ஸமாராதனையை அந்த இந்திரனுக்குச் சேரவொட்டாமல் தடுத்து கோவர்த்தனமலைக்குச் சேரும்படி பூஜை செய்தவனை கண்ணபிரானுடைய திருமலையாம்— தேவலோகக் கற்பகவிருக்ஷத்தின் பூக்களில் உள்ள தேனுறுபாய்வதால் இம்மலையின் மிக்க உயர்ச்சியைக்கூறுகிறுர்— 4

பாசு : ஒரு வாரணம் பணிகொண்டவன் பொய்கையில் * கஞ்சன்தன்
ஒரு வாரணம் உயிருண்டவன் சென்றுறையும் மலை *
கருவாரணம் தன்பிடிதுறந்தோட * கடல்வண்ணன் *
திருவாணை கூறத்திரியும் தண்மாலிருஞ் சோலையே * 5

உரை : ஒரு பொய்கைக்கரையில் கஜேந்திர ஆழ்வானுகிற ஒருயானையினிடத்து... அதனுல் செய்யப்பட்ட தோத்திரத்தை ஏற்றுக்கொண்டு அருள் செய்தவனும், கம்ஸனுடைய குவலயாபீடமென்ற ஒருயானையினுடைய உயிரை முடித்தவனுமான சோலைமலையில் உள்ள கண்ணபிரான் எழுந்தருளி இருந்து நித்திய வாஸம் பெற்றமலையானது... கறுத்த ஒருயானையானது... பிரணய ரோஷத்தினுல் தன்னுடைய பேடையானது "சினந்து தன்னை விட்டிட்டு ஓடிப்போக அதுகண்டயானையானது கடல் போன்ற நிறமுடைய அழகர் ஸ்ரீபாதத்தின் மேலானை நீ என்னை துறந்து செல்லலாகாது என்று ஆணையிட்டுச் சொல்ல"....அப்பேடையானது அவ்வாணைக்குக்கட்டுப்பட்டு அப்புறம் போகமாட்டாமல் மீண்டும் நிற்கின்ற விசேஷத்தையுடைய குளிர்ந்த திருமாலிருஞ் சோலைமலையாகும்— (அழகர் மலையில் வசிக்கின்ற பசுக்கள் பக்ஷிகள் மிருகங்கள் முதலிய பிராணிவர்க்கங்களும் தருமத்தையும் சத்தியத்தையும் மீருத புண்ணிய ஆத்மாக்கள் என்பது காணத்தக்கது.) 5

பாசு : **ஏவிற்றுச் செய்வான் என்றெதிர்ந்துவந்த மல்லரை ***
சாவத்தகர்ந்த சாந்தணிதோள் சதுரன்மலை *
ஆவத்தன மென்று அமரர்களும் நன்முனிவரும் *
சேவித்திருக்கும் தென்திருமாலிருஞ்சோலையே * 6

உரை : கம்ஸன் சொல்லிவிட்ட காரியங்களைச் செய்து முடிப்பதற்க்காக துணிந்து எதிரிட்டு வந்த முஷ்டிகன் சாணூரன் முதலான மல்லர்களை உயிர் துறந்து முடியும்படியாக நொறுக்கித் தீர்த்தவனும், கண்ணபிரானும் பலராமனும் கம்ஸன் மாளிகைக்குப் போகும்பொழுது இடைவழியில் கூனியால் பூசப்பட்ட சாந்தை (சந்தணத்தை) அணிந்து கொண்டுள்ள தோள்களையுடையவனும், சமர்த்தனுமான கண்ணபிரான் எழுந்தருளி இருக்கிற மலையானது.... பிரம்மா முதலான தேவர்களும், ஸனகர் ஸனந்தர் முதலான மஹரிஷிகளும்.... ஆபத்துக் காலங்களுக்கு உதவக்கூடிய பொருள் என்று அழகரை அபிமானித்து ஸேவித்துக்கொண்டு இருக்கும் இடமான தென்திருமாலிருஞ் சோலையாகும்— 6

பாசு : **மன்னர் மறுக மைத்துணன் மார்க்கு ஒரு தேரின்மேல் ***
முன்னங்கு நின்று மோழை யெழுவித்தவன்மலை *
கொன்னவில் கூர்வேற்கோன் நெடுமாறன் தென்
கூடற்கோன் *
தென்னன் கொண்டாடும் தென்திருமாலிருஞ்
சோலையே * 7

உரை : முன்பு பாரதப்போரில் குருதேசத்து அரசர்களுடையவும் அவர்களுக்குத்துணையாகவந்தமற்ற அரசர்களுடையவும் குடல் குழம்பும்படியாக.... தனது மைத்துனன் மாரான பாண்டவர்களுக்குத் துணையாகி வந்து ஒரு தேரின் மேலே முன்புறத்தில் நின்றுகொண்டு கடினமான பூமியாக இருந்த போதிலும் நீர்க்கால் அறிந்து விட்ட வருணஸ்திரத்தால் கீழுண்டான நீரானது மேலே குமிழியிட்டுக்கிளறி எழ அச்சமயம் குதிரைகளை விட்டு நீருட்டிப்புரட்டி யெழுப்பிக் கொண்டுவந்து தேரில்ப்பூட்டி முன்னே நிறுத்திய கண்ணபிரான் எழுந்தருளி இருக்கிறமலையானது– கொலையையே தொழிலாகஉடைய கூர்மையான வேலைத்தரித்தவனும், ராஜ நீதியை வழுவற நடத்துபவனும், பெருமை பொருந்தியவனும், அழகிய நான் மாடக்கூடல் என்கிற மதுரைப்பட்டணத்திற்குத் தலைவனும், பாண்டிய நாட்டுக்குத்

தலைவனும், மாறன் என்னும் பெயருடையவனுமான மலையத்வஜ ராஜனாலே கொண்டாடப் பெற்ற தென்திருமாலிருஞ் சோலையாம்—7

பாசு : **குறுகாத மன்னரைக் கூடுகலக்கி வெங்கானிடைச் ***
சிறுகால் நெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை*
அறுகால் வரிவண்டுகள் ஆயிர நாமம் சொல்லி
சிறுகாலைப்பாடும் தென்திருமாலிருஞ் சோலையே * **8**

உரை : இத்திருமலையைக் கிட்டி அணுகாது நாஸ்திகர் போன்றிருக்கிற அரசர்களை— அவர்களுடைய இருப்பிடத்தைக் குலைத்து அழித்து தீக்ஷ்ணமான காட்டிலே சிற்றடிவழியாக அவர்களை ஒட்டுகிற திருமால் எழுந்தருளி இருக்கிற சிறந்த மலையானது.... ஆறுகால்களையுடைய அழகிய வண்டுகளானவை விடியற்காலத்திலே எம்பெருமானுடைய ஸஹஸ்ரநாமங்களையும் அனுஸந்தித்துப்பாடுமிடமான தென் திருமாலிருஞ்சோலையாம்— (ஆறுகால் வண்டுகள் என்பது) த்வயம் என்னும் மந்திரத்தை அனுஸந்திக்கின்ற மஹானுபாவர்கள் எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடிக்கொண்டு சிற்றஞ்சிறுகாலையில் அடிபணியுமதைக்கூறும்— 8

பாசு : **சிந்தப்புடைத்துச் சொங்குறுதி கொண்டு பூதங்கள் ***
அந்திப்பலிகொடுத்து ஆவத்தனம்செய் அப்பன்மலை *
இந்திர கோபங்கள் எம்பெருமான் கனிவாயொப்பான் *
சிந்தும் புறவில் தென்திருமாலிருஞ் சோலையே * **9**

உரை : இத்திருமலையில் விஷ்ணுசம்பந்தியான நாமரூபங்களோடு பக்தியுடையனவாய்த்திரியும் பூதங்கள் அம்மலையில் யாரேனும் ஆஸ்திகர்கள் வரக்கண்டால் அவர்களை அஞ்ஜலி செய்துவிட்டு மறைந்திருக்கும் தேஹபோஷணமே பண்ணிக்கொண்டு திரியும் நாஸ்திகர்கள் வரக்கண்டால் அவர்களை அவயவங்கள் சிதறும்படி அடித்துக் கொன்று அவர்களுடைய உடலின்றும் பெருகுகிற சிவந்த ரத்தத்தைக் கொண்டு அந்திப்பொழுதிலே தம்முடைய சாதிக்குத்தக்கபடி பருகும் போது எம்பெருமானுக்கு ஆராதனமாக ஸமர்ப்பிவித்து இதுவே ஆபத்துக்கு உதவும் இடமென்று ஸேவிக்கும் இடமும் ஸ்வாமி எழுந்தருளி இருக்குமிடமுமான மலையாவது— பட்டுப்பூச்சிகள் அனைவர்க்கும் ஸ்வாமியான அழகருடைய கொவ்வைக்கனி போன்ற திருவதரத்திற்குப் போட்டியாக எல்லா இடங்களிலும் சிதறிப்பறக்கப்பெற்ற தாழ்வரைகளையுடைய தென்திருமாலிருஞ் சோலையாம்— 9

பாசு: **எட்டுத் திசையும் எண்ணிறந்த பெருந்தேவிமார் *
விட்டு விளங்க வீற்றிருந்த விமலன் மலை *
பட்டிப்பிடிகள் பகடுரிஞ்சிச்சென்று மலைவாய்த் *
தெட்டித்திளைக்கும் தென்மாலிருஞ் சோலையே * 10**

உரை: கணக்கிட முடியாதவர்களும் பெருமை பொருந்தியவர்களுமான தேவிமார்கள் எட்டுத்திக்குகளிலும் மிகவும் பிரகாசித்துக் கொண்டு இருக்க அவர்கள் நடுவில் பெருமை தோற்ற வீற்றிருக்கும் நிர்மலனான கண்ணபிரான் எழுந்தருளி இருக்கிற மலையானது.... பட்டிமேய்ந்து திரிகிற பெட்டை யானைகள் இரவிலே தம் தம் களிறுகளோடு (ஆண்யானைகளுடன்) புணர்ந்து அதனாலுண்டாகும் ரஸம் முற்றிக்களிக்குமிடமான தென்திருமாலிருஞ் சோலையாம் 10

பாசு: **மருதப் பொழிலணி மாலிருஞ்சோலை மலைதன்னை *
கருதியுறை நின்ற கார்க்கடல் வண்ணன் அம்மான்
தன்னை *
விரதங்கொண்டேத்தும் வில்லிபுத்தூர் விட்டி
சித்தன் சொல் *
கருதியுரைப்பவர் கண்ணன் கழலிணை காண்பர்களே ***

உரை: மருதஞ் சோலைகளை அலங்காரமாக உடைய திருமாலிருஞ் சோலை மலையை விரும்பி அதில் எழுந்தருளி இருக்கின்ற கருங்கடல் போன்ற நிறத்தையுடைய அழகப்பிரானை... எம்பெருமானுக்கு பல்லாண்டு பாடுவதையே விரதமாகக்கொண்டு துதிக்குமவரும் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்தவருமான பெரியாழ்வார் அருளிச்செய்து பாடிய இப்பாடல்களை விரும்பி ஓதுமவர்கள் கண்ணபிரானுடைய திருவடிகளைக்கண்டு ஸேவிக்கப்பெறுவார்கள்— என்று பலன் சொல்லுகிறார்— 11

அடிவரவு— அலம் வல்லாளன் தக்கார் ஆனுயர் ஒரு ஏவிற்று மன்னர் குறுகாத சிந்த எட்டு மருதம் உருப்பிணி—

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

நான்காம் பத்தில்—எட்டாந்திருமொழி

திருவரங்கம் பெரிய கோயிலின் மகிமை

திருவரங்கம் விஷயம்

மாதவத்தோன்

அவதாரிகை : பெரியாழ்வார்.... திருவரங்கம் பெரிய கோயிலில் ஸகல அவதார குணசேஷ்டிதங்களோடு நன்கு விளங்கும்படி எம்பெருமான் எழுந்தருளி இருப்பதைக்கண்டு ஸேவித்து அதிலேயே ஆழங்காற்பட்டு அத்திருப்பதியே தமக்கு அந்திமகாலத்தில் அடையத்தக்கதென்று கொண்டு அனுபவித்துப்பாடி இனியராகிருர் இத்திருமொழியில்—

பாசு : **மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய்**
மாண்டானை *
ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தானூர் *
தோதவத்தித்தூய்மறையோர் துறைபடியத்துளும்பி
எங்கும் *
போதில்வைத்த தேன்சொரியும் புனலரங்கமென்
பதுவே * 1

உரை : அலையையெறிகின்ற கடலிற்புகுந்து....மஹாதபஸ்வியான சாந்தீபினியினுடைய முதலைவாயிலகப்பட்டு உயிரொழிந்த பிள்ளையை அவ்வாசாரியன் தனக்கு அத்தியயனம் பண்ணுவித்ததற்கு குருதக்ஷிணையாக (அப்புத்திரன் மரணமடையும் போது இருந்த உருவம் சிறிதும் மாருதபடி அதே உருவத்துடன்)கொணர்ந்து கொடுத்தருளிய எம்பெருமானுடைய திருப்பதியானது... பரிசுத்தமாகத் தோய்த்து உலர்த்தின வஸ்திரங்களை அணிந்து நிற்பவரும், நிர்தோஷப் பிரமாணமான வேதத்தை தமக்கு நிருபகமாக உடைய ஆசாரபரர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள்... கங்கையிற் புனிதமாயகாவேரித்துறைகளில் திரள் திரளாகக் குடைந்து நீராட அதனுல் அக்காவேரி முழுதும் அலைமோதப்பெற்று அவ்வலைகளினுல் தாமரை மலர்களின் நாளங்கள் அலைக்கப்பட அம்மலர்களிலுள்ள தேனுனது பெருக அத்துடன் சேர்ந்த தீர்த்தத்தையுடைய திருவரங்கமென்னும் திருப்பதியாம்— 1

பாசு : பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும் *
இறைப்பொழிதில் கொணர்ந்து கொடுத்து
ஒருப்படுத்தவுறைப்பனூர் *
மறைப்பெருந்தீ வளர்த்திருப்பார் வருவிருந்தை
யளித்திருப்பார் *
சிறப்புடைய மறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே * 2

உரை : ஸூதிகா கிருஹத்திலேயே இறந்தொழிந்த வைதிகப்புத்திரர்கள் நால்வரையும் ஒரு நொடிப்பொழுதில் வைகுண்டத்தினின்றும் கொண்டு வந்து மாதா பிதாக்கள் கையில்க்கொடுத்து.... இப்பிள்ளைகள் எமது பிள்ளைகள் தான் என்று சம்மதிக்கச் செய்த சக்தியுடையவன் எழுந்தருளி இருக்கிற திருப்பதியாவது.... வேதங்களில்க் கூறப்பட்டுள்ள சிறந்த மூன்று அக்கினிகளையும் எப்பொழுதும் வளர்த்துக் கொண்டிருப்பவர்களும், தம் தம் திருமாளிகைக்கு எழுந்தருளுகிற ஸ்ரீவைஷ்ணவர்களை ஆதரிப்போர்களுமான சிறப்பையுடைய வைதிகர்கள் வாழப்பெற்ற திருவரங்கம் என்பதாம்— 2

பாசு : மருமகன் தன் சந்ததியை உயிர் மீட்டு மைத்துனன்மார் *
உருமுகத்தே வீழாமே குருமுகமாய்க் காத்தானூர் *
திருமுகமாய்ச் செங்கமலம் திரு நிறமாய்க்கருங்குவளை *
பொருமுகமாய் நின்றலரும் புனலரங்கமென்பதுவே * 3

உரை : மருமகன் அபிமன்யுவினுடைய புத்திரனை பரிக்ஷித்தை.... உத்தரையின் கர்ப்பத்திலிருக்கும் போதே அஸ்வத்தாமாவினுல் கருவிலிருந்த சிசு (பரிக்ஷித்) உயிர் நீக்க.... அச்சிசுவை மறுபடியும் பிழைப்பித்தவனும், மைத்துணன் மாரான பாண்டவர்களுடைய சரீரமானது பாரதயுத்தம் என்கிற நரமேதயாகத்திலே விழுந்து அழிந்து போகாதபடி ஆசார்ய ரூபியாக இருந்து ஹிதோப தேசங்களைப் பண்ணிக் காத்தருளின கண்ணபிரானுடைய திருப்பதியானது.... செந்தாமரை மலர்கள் பெரிய பெருமாளுடைய திருமுகத்திற்குப் போட்டியாகவும் நீலோத்பல புஷ்பங்கள் திருமேனி நிறத்திற்குப் போட்டியாகவும் ஒன்றுக்கொன்று எதிர் நோக்கிய முகத்தையுடைய தாய்க்கொண்டு மலரப்பெற்ற நீர்வளத்தையுடைய அரங்கம் என்பது— 3

பாசு : கூன் தொழுத்தை சிதகுரைப்பக் கொடியவள்வாய்
கடியசொல் கேட்டு *
ஈன்றெடுத்ததாயரையும் இராச்சியமும் ஆங்கொழிய *
கான்தொடுத்த நெறிபோகிக் கண்டகரைக்களைந்தானூர் *
தேன்தொடுத்த மலர்ச்சோலைத் திருவரங்கமென்பதுவே * 4

உரை : கூனேயுடைய வேலைக்காரியான மந்தரை என்பவள்.... ஸ்ரீராமனுக்கு பட்டாபிஷேக மஹோத்ஸவம் என்பதைக்கேட்டு.... அதற்கு விநாசகமாக ஆதியில் தசரதச் சக்கிரவர்த்தியிடம் கைகேயி கேட்டிருந்த இரண்டு வரங்களையும் கைகேயிக்கு ஞாபகப்படுத்தி அதில் ஒன்றில் பரதனுக்கு பட்டாபிஷேகத்தையும், மற்றொன்றில் இராமனுக்கு வனவாஸத்தையும் கேட்கும்படி உபாயங்கூறித்தூண்டின கூனியின் சொல்லைக்கேட்டு.... மஹாகுருரையான கைகேயினுடைய வாயிலுண்டான கடினமான கட்டளைபின்படி.... தன்னைப் பெற்று வளர்த்த தாயான கௌஸலையையும் இராச்கியத்தையும் கைவிட்டு அடர்ந்த காடுகளின் வழியாக தண்டகாரண்யம் சென்று அங்கு முனிவர்களுக்கு பாதகம் செய்பவர்களாய் இருந்த இராக்கதர்களை கொன்றொழித்து முனிவர்களுக்கு அருள்புரிந்த எம்பெருமான் எழுந்தருளி இருக்கிற திருப்பதியானது.... தேன் வற்ருத மலர்களையுடைய சோலைகளையுடைத்தான திரு அரங்கம் என்பதுவே— 4

பாசு : **பெருவரங்களவை பற்றிப் பிழக்குடைய இராவணனை ***
உருவரங்கப் பொருதழித்து இவ்வுலகினைக்கண்
பெறுத்தானூர் *
குரவரும்பக் கோங்கலரக் குயில் கூவும்
குளிர்பொழில் சூழ் *
திருவரங்கமென்பதுவே என் திருமால் சேர்விடமே * 5

உரை : குரவமரங்கள் அரும்பு விட்டு நிற்கவும், கோங்கு மரங்கள் மலர்ந்து நிற்கவும், குயில்கள் களித்துக்கூவும்படியாயுமுள்ள நித்திய வஸந்தமான குளிர்ந்த சோலைகளாலே சூழப்பெற்ற திருவரங்கமானது... பெருமை பொருந்திய வரங்களைப்பெற்ற பலத்தினுல்.... தேவர் முனிவர் முதலானேரிடத்து பிழைசெய்கையே இயல்பாகவுடைய இராவணனது உடல் சிந்ந பிந்நமாகும்படி போர் செய்து அவனைத்துலைத்து.... இவ்வுலகத்தை எல்லாம் காத்தருளினவனும். எனக்குத்தலைவனும், ஸ்ரீபதியுமான எம்பெருமான் சேருமிடமாகிய திருப்பதியாம்— 5

பாசு : **கீழுலகில் அசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே ***
ஆழிவிடுத்து அவருடைய கருவழித்த வழிப்பனூர் *
தாழைமடலூடுரிஞ்சித் தவளவண்ணப் பொடியணிந்து *
யாழினிசை வண்டினங்கள் ஆளம்வைக்கும்
அரங்கமே * 6

உரை: பாதாளலோகத்தில் வஸிப்பவர்களான அஸுரர்களை அடியி லிருந்து கிளம்ப வொட்டாமல் கர்ப்பமளவாக சுதரிஸன ஆழ்வானை ஏவி வேரற அழித்து... தேவர்களுக்கு அருள்புரிந்தவனும், சத்துருக் களைத் தொலைத்தலையே இயல்பாக உடையவனுமான எம்பெருமான் எழுந்தருளி இருக்கிற திருப்பதியானது.... வீணையினுடைய ஓசை போன்ற இனிய இசையையுடைய வண்டுகளின் திரள்கள் மலரும் தருணத்தில் உள்ள தாழைமடலினுள்ளே உடம்பை உரசிக்கொண்டு புகுந்து அம்மடலினுள் இருக்கும் வெளுத்த நிறத்தையுடைய மகரந் தப்பொடியை உடம்படங்கலும் பூசிக்கொண்டு அதனால் உண்டான களிப்பாலே தென தென வென்று ஆலாபனை பாடுமிடமான திரு வரங்கம் என்பதாம்— 6

பாசு: கொழுப்புடைய செழுங்குருதி கொழித்திழிந்து
குமிழ்த்தெறிய *
பிழக்குடைய அசுரர்களைப் பிணம்படுத்த பெருமானூர் *
தழுப்பரிய சந்தனங்கள் தடவரைவாய் ஈர்த்துக்
கொண்டு *
தெழிப்புடைய காவிரிவந்து அடிதொழும் சீரரங்கமே * 7

உரை: நன்கு போஷணையுள்ள வஸ்துக்களை உட்கொண்டு வளரச் செய்ததால் கொழுப்பையுடையதும் செழிப்புள்ளதுமான ரத்தமானது ஊற்றுமாறுமல்கிளர்ந்து அருவிபோல் நிலத்தில் இழிந்து குமிழி கிளம்பி அலையெறியும்படி.... உலகங்களை எல்லாம் பரஹிம்ஸையாகிய தீமைகளைச் செய்கின்ற அசுரர்களைப் பிணமாக்கி ஒழித்து உலகினைக் காத்தருளின எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் பதியானது... பெரியமலைகளிலிருந்து மனிதர்களால் தழுவமுடியாத பெரிய பெரிய சந்தன மரங்களை வேரோடு கிளப்பி இழுத்துக்கொண்டு வந்து இவற் றைக்கைக்கொண்டருள வேணும் என்று பெரிய பெருமானைப்பிரார்த் திக்கின்றதோ என்னலாம்படி இரைச்சலிடுகின்ற காவேரி நதியானது எம்பெருமானது திருவடிகளைத் தொழும் சீர்மைபெற்ற திருவரங்க நகரமாகும்— 7

பாசு: வல்லெயிற்றுக்கேழலுமாய் வாளெயிற்றுச் சீயமுமாய் *
எல்லை இல்லாத்தரணியையும் அவுணனையும்
இடந்தானூர் *
எல்லியம் போது இருஞ்சிறைவண்டு எம்பெருமான்
குணம்பாடி *
மல்லிகை வெண்சங்கூதும் மதிளரங்கமென்பதுவே * 8

உரை: வலிமையுள்ள பற்களையுடைய வராஹமாக அவதரித்தும், ஒளிபொருந்திய பற்களையுடைய நரஸிம்மமாக அவதரித்தும், எல்லை இல்லாத பூமியையும் எல்லையில்லாத தவமியற்றி ஈடற்றவரங்களைப் பெற்ற ஹிரண்யாஸுரனையும் கீண்டு உலகிற்கருள் செய்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருப்பதியானது... பெரிய சிறகுகளையுடைய வண்டுகளானது அந்திப்பொழுதிலே பெரிய பெருமானுடைய கல்யாண குணங்களைப் பாடிக்கொண்டு மல்லிகைப்பூவாகிற வெளுத்த சங்கை ஊதப்பெற்றதும், திருமதிள்களையுடையதுமான அரங்கம் என்பதாம— 8

பாசு: **குன்றுடு கொழுமுகில் போல் குவளைகள் போல்**
குரைகடல் போல் *
நின்றுடு கணமயில் போல் நிறமுடைய நெடுமாலூர் *
குன்றூடு பொழில் நுழைந்து கொடி இடையார்
முலையணவி *
மன்றூடு தென்றலுலாம் மதிளரங்கமென்பதுவே * 9

உரை: மலையினுச்சியிற்படிந்த நீர்நிறைந்த மேகம் போலவும், கருநெய்தல் பூப்போலவும், கோஷமிடுகின்ற கடல் போலவும், களிப்புடன் நின்று ஆடுகின்ற மயில்களின் திரள்கள் போலவும், இருக்கின்ற வடிவழகையுடையவனான எம்பெருமான் எழுந்தருளி இருக்கிற திருப்பதியானது.... தென்றல் காற்றானது பர்வதத்திலுள்ள சோலைகளினிடையே நுழைந்து அங்குள்ள பூக்களின் தாதுக்களை அளைந்து அதின் நறுமணத்தை அள்ளிக்கொண்டு கொடிபோன்ற இடையையுடையவர்களான பெண்களினுடைய கலவைச்சாந்தணிந்த முலைகளில் பரவி அந்தப்பரிமளத்தோடு நாற்சந்திகளிலும் உலாவப்பெற்ற மதிள் அரங்கம் என்பது— 9

பாசு: **பருவரங்களவைபற்றிப் படையாலித்தெழுந்தானை ***
செருவரங்கப் பொருதழித்த திருவாளன் திருப்பதிமேல் *
திருவரங்கத்தமிழ்மாலை விட்டுசித்தன் விரித்தன
கொண்டு *
இருவரங்கமெரித்தானை ஏத்தவல்லாரடியோமே * 10

உரை: பிரம்மா ருத்திரன் முதலியோரிடத்துப்பெற்ற பெரியவரங்களை பலமாகக்கொண்டு... திக்விஜயம் பண்ணித் தேவர்களை ஜயிப்பதர்க்காக... யுத்த ஸந்நத்தனாய் கோலாகலத்துடன் வெளிப்புறப்பட்ட

இராவணனை யுத்தத்திலே மடியும்படிபோர் செய்து ஒழித்தவனும். வீரலக்ஷ்மியைத் தனக்கு நிருபகமாகவுடையவனுமான எம்பெருமான் உறைவிடமாகிய திருவரங்கமி என்னும் திருப்பதியின் விஷயமாக.... பெரியாழ்வார் அருளிச்செய்த....ஒவ்வொரு பாசுரத்திலும் திருவரங்கம் என்கிற பெயரையுடைத்தான இப்பத்துப் பாசுரங்களாலேயும் மதுகைடபன. என்கிற இருவர்களுடைய உடலையும் திருவனந்தாழ்வானுடைய மூச்சுக் காற்றினல் எரிக்கச் செய்த எம்பெருமானைத் துதிக்க வல்லவர்களுக்கு தாஸராய் அடிமை செய்யக்கடவோம்— 10

அடிவரவு— **மாதவ பிறப்பு மருமகன் உடன் பெரு கீழ் கொழுப்பு வல்லெயிறு குன்று பரு மரவடி—**

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

நான்காம் பத்தில்—ஒன்பதாம் திருமொழி

திருவரங்கம் பெரிய கோயிலின் மகிமை

மரவடியை

அவதாரிகை : கீழ்த்திருமொழியில் திருவரங்கத்தின் மகிமையை அனுபவித்துப்பாடிய படியே இத்திருமொழியிலும் அத்திருப்பதியின் மகிமையையே திரும்பவும்பாடி இன்புறுகிறர்....திருவரங்கநகரின் மகிமை வாயினுற்சொல்லி முடியாததன்றே ? ஆதலால் மறுபடியும் ஓரளவு பாடி அனுபவிக்கிறர்—

பாசு : **மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப்போய்**
வானோர் வாழ *
செருவுடைய திசைக்கருமம் திருத்திவந்து உலகாண்ட
திருமால் கோயில் *
திருவடிதன் திருவுருவும் திருமங்கை மலர்க் கண்ணும்
காட்டி நின்று *
உருவுடைய மலர் நீலம் காற்றுட்ட ஓசலிக்கும்
ஒளியரங்கமே * 1

உரை : இராமபிரான்... தன்னை அயோத்திக்கு வந்து முடிசூடி அரசாளும்படி சித்திரகூட மலையில் வந்து பணிந்து வேண்டின பரதனுக்கு நான் தந்தை சொல்லை நிறை வேற்றுமல் அரசாள இசைய

மாட்டேன் என்று சொல்லி... பரதனுக்கு தான் வனவாசம் கழிந்து திரும்பவந்து அரசை ஏற்றுக்கொள்வேன் என்றுறைத்ததை உறுதியாக நம்பும் பொருட்டு தமது ஸ்ரீ பாதுகைகளை அடகாக அளித்து.... தேவர்கள் வாழுமாறு சித்திர கூடத்தைவிட்டுப் பக்கத்தில் உள்ள ஆரண்யங்களுக்குப் போய் ராவணுதிராக்ஷஸர்கள் எல்லாரும் கூடிக்கொண்டிருக்கிற தெற்குத்திக்கில் செய்யவேண்டிய யுத்தகாரியங்களை குறைவரச்செய்து முடித்துவிட்டு பிராட்டியான சீதாதேவியுடன் அயோத்திக்கு வந்து முடிசூடி ராஜ்ஜியபரிபாலனம் செய்த ஸ்ரீபதியானவர் எழுந்தருளியிருக்கிற கோயிலாவது.... ஸர்வஸ்வாமியான பெரிய பெருமாளுடைய திருமேனி நிறத்தையும், பெரிய பிராட்டியின் மலர்ந்த திருக்கண்களின் நிறத்தையும் போலப் பிரகாசிக்கின்ற அழகு பொருந்திய கருநெய்தல் பூக்கள் காற்றிஞல் அசைகப்பட்டு அசைந்து கொண்டிருக்கிற ஒளியையுடைய திருவரங்கமென்பதாம்— 1

பாசு : **தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளா கிலும்**
சிதகுரைக்கு மேல் *
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்று
செய்தாரென்பர் போலும் *
மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத்திசை
நோக்கி மலர்க்கண் வைத்த *
என்னுடைய திருவரங்கற் கன்றியும் மற்றொருவர்க்கு
ஆளாவரே ? * 2

உரை : எம்பெருமானுக்கு தமது அடியார்கள் விஷயத்தில் ஏதேனும் அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்.... அச்சீற்றத்தை தனது சலுகையிஞல் தணியச்செய்கிற ஸ்ரீ மஹாலக்ஷ்மியான பெரிய பிராட்டியார் தாமே அடியார்கள் செய்த குற்றங்களை எடுத்துச் சொல்லத் தொடங்கிஞலும் எனக்கு அடிமைப்பட்டவர்கள் அக்குற்றங்களைச் செய்ய மாட்டார்கள் (நாம் செய்யும் குற்றத்தைப் பொறுப்பதற்கு எம்பெருமான் இருக்கிறர் என்று சில குற்றங்களைச் செய்தாலும்) அவர்கள் நன்மையையே தான் செய்தார்கள் என்று சொல்பவரும், ஐஸ்வர்யம் பொருந்திய விபீஷணுழ்வானுக்கு அவனித்துள்ள கிருபையின் அதிசயம் தோற்ற மதிள்களையுடைய இலங்கைக்கு நேர்முகமாக, (தென் திசை இலங்கை நோக்கி) என்றபடி தெற்கு முகமாக மலர்ந்த திருக்கண்களை வைத்து அருள் செய்தவனும், எனக்கு ஸ்வாமியுமான பெரிய பெருமாளை விட்டு வேறொருவருக்கு ஆட்படுவார் யாரேனுமுண்டோ ?— என்று அதிசயமாகச் சொல்லுகிறர் ஆழ்வார்— 2

பாசு : கருளுடைய பொழில்மருதும் கதக்களிறும்
பிலம்பனையும் கடியமாவும் *
உருளுடைய சகடரையும் மல்லரையும் உடைய
விட்டு ஓசை கேட்டான் *
இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றி
வைத்து ஏணி வாங்கி *
அருள் கொடுத்திட்டு அடியவரை ஆட்கொள்வான்
அமரும் ஊர் அணியரங்கமே 3

உரை : கிருஷ்ணனைக் கொல்ல வேணும் என்கிற கோபத்தையுடையதுகளான.... மனதைக்கவரும்படி வீட்டின் பின்புறத்தில் சோலையாக நிற்கும் இரட்டை மருதமரங்களையும், மிக்க கோபத்தையுடைய குவலயாபீடமென்னும் யானையையும், பிரலம்பாசுரனையும், மிகவும் குரூரனை குதிரைவடிவாய் வந்த கேசி என்னும் அரக்கனையும், உருண்டு உருண்டு வந்த சகடாசுரனையும், மல்லர்களையும், வதம் செய்தவனும், கீர்த்திபெற்றவனும், அடியார்களை.... இருளைப் போக்குகின்றதும், வீசுகின்ற கிரணங்களையுடையதுமான சூர்யமண்டலத்தினுள்ளே ஏறச்செய்து அங்கு நின்றும் அர்ச்சிராதிமார்க்கமாக பரமபதத்திற்குக் கொண்டுபோய் அங்கு அவர்களைத் தன்பக்கலில் வைத்துக்கொண்டு தன்னுடைய உபாயத்வத்தை நீக்கி அவர்கள் அவ்விடத்தில் நின்றும் மீளாதபடி கிருபை செய்து தமது... கைங்கர்யலாபத்திற்கு அவர்களை உறுப்பாக அடிமைகொள்ளுமவனுமான எம்பெருமான் எழுந்தருளி அமர்ந்திருக்கிற திருப்பதியானது அழகு வாய்ந்த திருவரங்கம் என்பதாம்— 3

பாசு : பதினாறாமாயிரவர் தேவிமார் பணிசெய்ய * துவரை
என்னும் *
அதில் நாயகிகராகி வீற்றிருந்த மணவாளர் மன்னு
கோயில் *
புதுநாண்மலர்க்கமலம் எம்பெருமான் பொன்வயிற்றில்
பூவே போல்வான் *
பொது நாயகம் பாவித்து இறுமாந்து பொன் சாய்க்கும்
புனலரங்கமே * 4

உரை : ஸ்ரீ துவாரகை என்றும் பட்டணத்தில் ஆயர்மங்கைகள் பதினாறுயிரம் தேவிமார்கள் பணிவிடைசெய்ய அவர்களுக்கு நாயகராக அவர்களின் நடுவிலே எழுந்தருளி இருந்த மணவாளப்பிள்ளை....

(அழகிய மணவாளப் பெருமாளாய்) நித்தியவாஸம் பண்ணுகிற கோயிலானது... அப்போதலர்ந்த அழகிய தாமரை மலரானது எம் பெருமானுடைய பொன்போன்ற திருநாபியிலுள்ள தாமரைப்பூவோடு ஸமம் பெறுவதர்க்காக தாமே சகலத்திற்கும் தலைமை வகிப்பதாக நினைத்து அந்த நினைவாலே கர்வங்கொண்டு மற்றதாமரைப்பூக் களின் அழகை எல்லாம் அலட்சியம் செய்து இறுமாந்து நிற்கின்ற நீர்வளத்தையுடைய திருவரங்கமாம்— 4

பாசு : **ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய் அவனியாய் அருவரைகளாய் ***
நான் முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த்தானுமானான் *
சேமமுடைய நாரதனார் சென்று சென்று துதித்திறைஞ் சக்கிடந்தான் கோயில் *
பூமருவிப்புள்ளினங்கள் புள்ளரையன் புகழ்குழறும் புனலரங்கமே * 5

உரை : இப்பாசுரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு காலத்தில் நாரத மஹ ரிஷிக்கு தமது சர்வ ஆதிக்கத்திலும் வீறுடைமையை விளக்கிக்காட்டு வதற்காக... அம்முனிவர் கங்கைக்கரையில் வசித்து கங்கையில் நீராடி நித்தியானுஷ்டானங்கள் செய்து வருகையில் ஒரு நாட்காலையில் சூரியனுதித்த போது கங்கையின் நீரிலுள்ளே பார்க்க மிகவும் அழ கானதும் உடல் முழுவதும் பாசி படிந்திருப்பதும், மிகப்பெரிதாக இருப்பதுமான ஒரு ஆமையாகி இருக்க முனிவர் அந்த ஆமையைக் கண்டு சிறிது சிந்தித்து அவ்வாமையைப் நோக்கி... இப்படி நீரின் உள்ளே ஒன்றையும் சிந்தியாமல் கவலையற்றுத்திரிகின்ற நீ, அற்புத மான சரீரத்தையுடையவனாயும், கிருதார்த்தனாகவும், ஆகிறாய் என்று நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன் என்று சொல்ல... ஆமை அவ ரைப்பார்த்து ஒரு மனிதன் பேசுவதுபோல வாரீர் முனிவரே ! என்னி டத்தில் என்ன ஆச்சரியம் ? நான் எப்படி கிருதார்த்தனாவேன் ? என்னைப்போன்ற பதினாயிரம் பிராணிகள் சஞ்சரிக்கின்ற கங்காநதி யன்றோ அப்படியாவது? என்று சொல்ல.... பிறகு முனிவர் கங்கையை நோக்கி ஆமையிடம் சொன்னது போலவே சொல்ல...அதைக்கேட்ட கங்கையானது ஒரு வடிவுடன் தோன்றி.... என்னைப்போல் பல்லா யிரம் நதிகள் சென்று சேர்வதற்கிடமான கடலன்றோ அங்ஙனமாவது

எனக்கு ஒன்றுமில்லை என்ன.... பிறகு அவர் கடலை நோக்கி அவ்வாறே சொல்ல... கடலும் நீர் சொன்னவை இரண்டும் எனக்கில்லை, நான் பூமியின் மேல் வாஸம் பண்ணுகிறேன். பூமிக்குத்தான் அவையிரண்டும் என்று சொல்ல....பிறகு அவர் பூமியைப்பார்த்துப்புகழ்ந்து அப்படியே சொல்ல.... பூமி நான் அப்படிப்பட்டவள் அல்ல, எனக்கு ஆதாரமாக இருக்கின்ற பர்வதங்கள் தான் அப்படிப்பட்டவை என்று சொல்ல பிறகு அவர் பர்வதங்களைக்கிட்டி அங்ஙனமே சொல்ல அவைகளும் பிரஜாபதியான பிரம்மதேவன்தான் இவை இரண்டையுமுடையவன் என்று சொல்ல... பிறகு அவர் பிரம்மதேவனிடம் சென்று தோத்திரம் செய்து புகழ்து பிரம்மனே ! ஆச்சரிய பூதனும் கிருத கிருத்யனுகவும் இருக்கின்றாய் என்ன.... இப்படி என்னைப்புகழுவதேன் ? உலகம் யாவற்றையும் என்னையும் தரிக்கின்ற வேதங்களன்றோ அப்படிப்பட்டவை என்று பிரம்மதேவன் சொல்ல... பிறகு அவர் வேதங்களைக்கிட்டி நீங்களன்றோ ஆச்சரிய பூதரும் தன்யரும் என்று சொல்ல... அவ்வேதங்கள் நாங்கள் யாகங்களுக்காக சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ஆதலால் எங்களுக்கு சிறந்த கதி அந்த யாகங்களன்றோ அப்படிப்பட்டவை என்ன பிறகு அவர் யாகங்களைப்பார்த்து நீங்களே தந்யர்கள் ஆச்சரிய பூதர்கள் என்று சொல்ல யாகங்கள் நீர் சொன்ன இரண்டும் எங்களிடம் இல்லை, விஷ்ணுவிடத்தில்தான் அவை உள்ளன அவ்விஷ்ணுவே எங்களுக்குச் சிறந்தகதி என்று சொல்ல... பிறகு முனிவர் பூமியில் துவாரகையில் வந்து ஸ்ரீ கிருஷ்ணனைக்கண்டு ஸேவித்து நீரே ஆச்சரியரும் தந்யரும் ஆகின்றீர் என்று விண்ணப்பம் செய்ய... அதற்கு ஸ்ரீ கிருஷ்ணன்... உத்தரமாக, தக்ஷிணைகளோடே கூட நான் ஆச்சரிய பூதனுகவும், தந்யனுகவும் ஆகின்றேன் என்று அருளிச் செய்த வார்த்தைகளை முற்பகுதியில் ஆழ்வார் சொல்லுகிறார், அப்படிக் கொத்த பிரம்ம நிஷ்டையையுடைய நாரதமுனிவர் பலகாலும் சென்று தோத்திரம் செய்து வணங்கும்படி பள்ளிகொண்டிரா நின்ற எம்பெருமானுடைய கோயிலானது.... அன்னம் முதலிய பறவைகள் நீர்பூக்களில் அமர்ந்திருந்து பறவைகளுக்குத் தலைவனுன பெரிய திருவடி என்னும் கருடனுடைய கீர்த்தியை தங்கள் உருவற்ற பாஷையால் பேசப்பெற்றதும் நீர்வளத்தையுடையதுமான திருவரங்க நகரமாம் இப்பாசுரத்தில் சர்வசக்தியுடைய எம்பெருமான் உலகத்தை படைக்கும்போது ஸ்தாவர ஜங்கம ஸத்வங்கள் ஒன்றுக்கொன்று ஆதாரமுள்ளவைகளாக இருக்குமாறு சிருஷ்டிசெய்த பெருமையை ஸ்ரீ நாரத பகவான் அறியுமாறு உறைத்தவரலாற்றை ஆழ்வார் அனுபவித்துச் சொல்லியிருக்கிறார்— 5

பாசு : மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து
அவர்களையே மன்னராக்கி *
உத்தரை தன் சிறுவனையும் உய்யக்கொண்ட
உயிராளன் உறையும் கோயில் *
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும்
பரந்த நாடும் *
சித்தர்களும் தொழுதிறைஞ்சத் திசை விளக்காய்
நிற்கின்ற திருவரங்கமே * 6

உரை : (தமது) மைத்துனன்மாரான (அர்ஜ்ஜுனனுக்கு தமது தங்கை சுபத்திரையை கொடுத்து மணம் செய்வித்ததால் பாண்டவர்கள் மைத்துனன் உறவு ஆனுர்கள்) பாண்டவர்களின் பத்தினியாகிய த்ரௌபதியை.... அவள் துர்யோதனுதிகளை வதம் செய்து முடித்த பிறகே இக் கூந்தலை முடிப்பேன் அதுகாலம் வரை இவ்விரித்த கூந்தலை முடியேன் என்று துரியோதனனுடைய சபையில் துச்சாதனனுல் தான் வாஸ்திரஹரணம் செய்யப்பட்டபொழுது செய்த சபதத்தை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு தாமே தூது சென்றும், யுத்தத்தை துவக்கிவைத்தும், சத்துருக்களான கௌரவர்களை.... பாண்டவர்களைக்கொண்டே போர்செய்வித்து கொன்றொழித்து திரௌபதியின் விரித்த கூந்தலை முடிக்கச் செய்தும், அப்பாண்டவர்களுக்கே முடிசூட்டி அரசாளச் செய்தவரும், அபிமன்யுவினுடைய மனைவியான உத்தரையின் கர்ப்பத்திலேயே உயிரற்று கரிக்கட்டையாக ஆகிய பரிக்ஷித்தை உயிர்பெற்று எழுந்திருக்கும்படி செய்தவனும், எல்லா உயிர்களுக்கும் தலைவனுனுமான எம்பெருமான் வாஸம் செய்கின்ற கோயிலானது.... பக்தர்களும், ஸந்நியாஸிகளும் (துவக்கமில்லாது) உண்டாகிய வேதத்தை வாக்கில் கொண்டுள்ள ரிஷிகளும் விசாலமான நாட்டிலுள்ள மற்றும் பலரும், நித்தியமுக்தர்களும் தொழுது வணங்கும்படி எல்லாத்திக்குக்களுக்கும் விளக்காக விளங்குகின்ற திரு அரங்கநகரமாம்— 6

பாசு : குறட்பிரம்மசாரியாய் மாவலியை குறும்பதக்கி
அரசு வாங்கி *
இறைப்பொழுதில் பாதாளம்கலவிருக்கை கொடுத்து
கந்த எம்மான் கோயில் *
எறிப்புடைய மணிவரைமேல் இள ஞாயிறு எழுந்தாற்
போல் அரவணையின் வாய் *
சிறப்புடைய பணங்கள் மிசைச் செழுமணிகள்
விட்டெறிக்கும் திருவரங்கமே *

உரை : ஸர்வேஸ்வரன் (வாமனுவதாரம் செய்து) குள்ள பிரம்மசாரியாக வந்து அவதறித்து.... மகாபலியினுடைய யாகசாலைக்கு எழுந்தருளி அவனுடைய செருக்கை அடக்கி இந்திரனுடைய வேண்டுகோளை நிறைவேற்றிவைக்கும் பொருட்டு அந்தமகாபலிச்சக்கிரவர்த்தியின் ராஜ்யமாக இருந்த பூமி முழுவதையும் தன்னுடையதாகும்படி யாசித்து தானமாகப்பெற்று (மூன்றடிமண்) பூமி வேண்டுமென்று யாசித்து தானம் பெற்றபின் எம்பெருமான் திரிவிக்கிரமனுக வளர்ந்து கீழுலகம் மேல் உலகம் எல்லாவற்றையும் இரண்டடியில் அளந்து கொண்டு மூன்ருவதடிக்கு இடமில்லாமையால் அவனுடைய சிரஸ்ஸையே இடமாகக்கொண்டு தமது திருவடியை வைத்து அவனை சிறிது நேரத்தில் பாதாள உலகத்தில் தள்ளி அதுவே அவனுக்கு போக பூமியாக ஆக்கிவைத்து தேவராஜனை திருப்தி செய்தோம் என்று மகிழ்ந்த எனது தலைவனுன பெருமான் எழுந்தருளி இருக்கிற கோயிலாவது.... மிக்க ஒளியையுடைய நீலரத்தின பர்வதத்தின் மேல், பால சூரியர்கள் உதித்தாற்போல திருவனந்தாழ்வானின் அழகு வாய்ந்த படங்களின் மேல் செழுமை வாய்ந்த ரத்தினங்களானது மிகவும் ஜொலிக்கப்பெற்ற திருவரங்கமாகும்— (அழகிய மணவாளப் பெருமானின் நிறம் கறுத்ததாதலால் அவர் சாய்ந்து கிடக்கின்ற திருவனந்தாழ்வானும் அவருடைய நிழலினுல் கறுத்துத்தோன்றுவதாலும் அவனுடைய பணங்களில் உள்ள ரத்தினங்கள் பிரகாசிப்பது பால சூரியர்கள் நீலரத்னபர்வதத்தின் மேல் உதித்தாற்போல என்று சொல்லுகிருர்— 7

பாசு : **உரம் பற்றி இரணியனை உகிர்நுதியால் ஒள்ளியமார்**
புறைக்க வூன்றி *
சிறம்பற்றி முடி இடியக்கண்பிதுங்க வாயலரத்
தெழித்தான் கோயில் *
உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடிபோல்
உயர்ந்து காட்ட *
வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்
தலைவணங்கும் தண்ணரங்கமே * 8

உரை : தேவர்களிடம் உயர்ந்த வரங்களைப் பெற்றிருப்பதால் செருக்கடைந்திருக்கின்ற ஹிரண்யாஸுரனுடைய அழகியமார்பை... தமது நகங்கள் உள்ளே பொத்தும் போகும்படியாக கைகளால்பற்றிக் கொண்டு அவனது தலையிலிருக்கும் கிரீடம் பொடிபடும் படியாகவும்

கண்கள் பிதுங்கும்படியாகவும், வேதனை பொருக்கமாட்டாமல் வாய் விரியும்படியாகவும், தலையைப்பிடித்து நெறித்து, (தமது பக்தருன பிரக லாதனுடைய விரோதியை முடித்தோம் என்கிற மகிழ்ச்சியால் ஆர வாரம் செய்த எம்பெருமான் உறைகின்ற கோவிலானது... செழிப் பான தாமரை மலர்கள்... மேலுலகை அளப்பதற்கு உயர்ந்த எம் பெருமான் திருவடியைப் போல உயரவளர்ந்து விளங்கவும், வரம் புடன் சேர்ந்து விளைந்து நிற்கும் கதிரையுடைய செந்நெல்லானது தாள்களை நீட்டி தலைவணங்கி நிற்கப்பெற்றதுமான குளிர்ந்த திரு வரங்க நகரமாகும்— 8

பாசு : **தேவுடையமீனமாய் ஆமையாய் ஏனமாய் அரியாய்க் குறளாய் ***
மூவுருவிராமனுய்க்கண்ணனுய்க் கற்கியாய் முடிப்பான் கோயில் *
சேவலொடு பெடையன்னம் செங்கமல மலரேறி உசலாடி *
பூவணைமேல் துதைந்தெழுசெம் பொடியாடி விளையாடும் புனலரங்கமே * 9

உரை : ஜோதியுடைய மச்சமாயும், கூர்மமாயும், வராகமாகவும், நர சிம்மமாகவும், வாமனனுகவும், பரசுராமன், தசரதராமன் பலராமன் ஆகிய மூன்று ராமனுகவும், கிருஷ்ணனுகவும், கல்கியாகவும், திருவ வதாரங்கள் எடுத்து துஷ்டர்களான விரோதிகளை ஒழித்தருளின எம்பெருமான் எழுந்தருளி இருக்கிற கோவிலானது.... அன்னப் பேடையானது தனது புருஷனுன ஆண் அன்னத்துடன் செந்தாமரை மலராகிய புஷ்ப சயனத்தின் மேலேறி அம்மலரை அசைத்து ஊசலா டிக்களித்து ஒன்றுடொன்று புணர்ந்து அதனுல் மலரினின்றும் கிளர்ந்த செம்பொடியில் மூழ்கி விளையாடிக்கொண்டிருக்கின்ற நீர் வளமுடைய திருவரங்க நகராம்— 9

பாசு : **செருவாளும் புள்ளாளன் மண்ணுளன் செருச்செய்யும் நாந்தகமென்னும் ***
ஒருவாளன் மறையாளன் ஓடாத படையாளன் விழுக்கையாளன் *
இரவாளன் பகலாளன் என்னையாளன் ஏழுலகப்பெரும் புரவாளன் *
திருவாளன் இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கமே * 10

உரை : அசுரர்களுடன் போர் புரியும் காலத்தில் தானே போர் செய்வதில் திறமையுள்ள.... பக்ஷிராஜனுகிய பெரிய திருவடிக்குத் தலைவனும், (கருடனுக்கு) தன்னுல் படைக்கப்பட்ட லீலாவிபூதியாகிய பிரபஞ்சத்தை ஆளுமவனும், தன்னை அண்டினவர்களின் விரோதிகளை எதிர்த்து யுத்தம் செய்யவல்ல நாந்தகம் என்னும் ஒப்பற்ற தொரு வாளையுடையவனும், நான்கு வேதங்களுக்கும் தலைவனும், போர்க்களத்தில் புறம்காட்டி ஓடாத வீரசேனைகளையுடையவனும், சிறந்த உதாரமுடையவனும், இரவு பகல் இரண்டு காலத்தையும் கடத்துமவனும், தனது அதீனமாக உடையவன் எனக்குத் தலைவனும், ஏழு உலகங்களாகிற சிறந்த பெரிய பூமிகளை ஆளுபவனும், மகாலக்ஷ்மியான பெரிய பிராட்டியைத்தேவியாக ஆளுமவனுமான எம்பெருமான் திருவுள்ளம் உவந்து திருக்கண் வளருகிற கோயிலானது திருவரங்க நகரமாகும்— 10

பாசு : **கைந்நாகத்திடர் கடிந்த கனலாழிப்படையுடையான்**
கருதுங்கோயில் *
தென்னுடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம்
திருப்பதியின்மேல் *
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன் விரித்த
தமிழுரைக்கவல்லார் *
எஞ்ஞான்றும் எம்பெருமானிணையடிக்கீழ் இணைபிரியா
திருப்பர்தாமே * 11

உரை : பெரிய துதிக்கையையுடைய (யானையின்) கஜேந்திராழ்வானுடைய துன்பத்தை போக்கிய திருவாழியாழ்வானை ஆயுதமாக அணிந்துள்ள எம்பெருமான் விரும்பி எழுந்தருளி இருக்கப்பெற்ற கோயிலாய் தென்னுட்டிலும் வடநாட்டிலும் உள்ளவர்கள் எல்லாரும் ஸேவிக்குமாறு அமைந்திருக்கிற திருவரங்கமென்னும் திருப்பதி விஷயமாகப் பொய்யாமொழியாய் எப்போதும் மெய்யே சொல்லுகின்ற நாவையுடையவரும், பலனை விரும்பாது அடிமை செய்பவருமான பெரியாழ்வார் அருளிச்செய்த இத்தமிழ்ப் பாசுரங்களை ஓதுபவர்கள்... எம்பெருமானுன பரமபத நாதனுடைய ஒன்ருேடொன்ருெத்த திருவடிகளின் கீழ் எந்நாளும் நித்ய முக்தர்களின் திரளாகிற துணையைப் பிரியாமல் அவர்களோடு கூடி வாழ்ந்திருப்பார்கள்— 11

அடிவரவு—மரவடி தன் கருன் பதினுறு ஆமை மைத்துணன் குறள் உரம் தேவு செரு கைந்நாக துப்பு—

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்—

பெரியாழ்வார் பாசுரங்கள் முற்றும்.



ஸ்ரீ ஆண்டாள்.

சுபமஸ்து—ஸ்ரீஜய நம :

ஸ்ரீ ஆழ்வார்கள் அருளிச்செய்த

திவ்யப்பிரபந்தப் பாசுரங்களின் தெளிவுரை.

ஸ்ரீ ஆண்டாள் வைபவ வரலாறு.

கலியுகத்திலே பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வார் திருத்துழாய்ப் பாத்தியமைக்கும் பொருட்டு ஒருநாள் கணகட்டி திரு நந்தவனத்தைக் கொத்திக்கொண்டிருக்கையில் ஆடி மாதம், பூர நக்ஷத்திரம் கூடின நந்நாளில் ஸ்ரீ தேவி அம்சமான ஒரு மகள் (பெண் குழந்தை) துளசிமலரில் தோன்ற அவளைக் கண்ட ஆழ்வார் நித்திய தரித்திரனுக்கு நவநிதியும் கிடைத்தாற்போல பெருங்களிப்படைந்து அப்பெண்ணருங்கலத்தை இரு கரங்களிலும் வாரி எடுத்து தாம்பெற்ற மகளாகவே பாவித்துச்சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்து வந்ததோடு அவளுக்கு கோதை என்று நாமகரணம் இட்டு பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் செய்து பரம ஞானத்தையும் போதித்து வந்தார். அக்கோதையும் தந்தையும் மற்றோரும் கண்டு வியக்கும்படி இளமை தொடங்கி எம்பெருமான் பக்கலில் பக்திப் பெரு வேட்கைகொண்டு அவனையே தான் மணம் செய்துகொள்ளக்கருதி எம்பிரானது மகிமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல் துதித்தல் முதலியன செய்கிற அச்சுரிகுழற்கோதை....நாள் தோறும் தனது தந்தை வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்துவதற்காக கட்டிவைத்த திருமாலையை அவரில்லாத சமயம் பார்த்து எடுத்துத் தனது கண்டத்தில் (குழலில்) தரித்துக்கொண்டு சிறந்த ஆபரணங்களையணிந்து உயர்ந்த பட்டாடையுடுத்து தன்னை அலங்கரித்துக்கொண்டு அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கின்றேனே இல்லையோவென்று அவ்வொப்பனையழகை கண்ணாடியிலே கண்டுகந்து தந்தையார் வருவதற்குமுன் மலர்மாலையைக் களைந்து முன் போலவே செண்டாகச்சுற்றி பூக்கூடையில் நலங்காமல் வைத்து வந்தாள். இரகசியமாக நடக்கிற இச்செய்தியை அறியாதவராய் ஆழ்வாரும் மாலையைக் கொண்டுபோய் சுவாமிக்குச் சாத்திவர பெருமானும்

பிரீதியுடன் ஏற்றருளினன். இங்ஙனம் பலநாட் கழிந்தபின் ஒருநாள் வெளியில்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டும் வந்தபொழுது பூமாலையைக் கோதை சூடி இருத்தலைப்பார்த்துக் கோபம்கொண்டு பெண்ணே! நீ செய்கிற இது மிக்க அபசாரமான காரியம். இனி இவ்வாறு செய்தற்கு நினைப்பும் கொள்ளாதே என்று நங்கைக்கு நற்புத்திசொல்லி அன்று வடபத்திரசாயிக்கு மாலை சாத்தாமல்....திருப் பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததற்கு மனம் வருந்தி இருந்தார். அன் றிரவில் ஆலிலைத்துயில்வோன் ஆழ்வாரது கனவில்தோன்றி இன்று நீர் நமக்கு மாலை கொண்டுவராதிருந்தது ஏன்? என்று வினவ....அவர் தம் திருமகளது பொருந்தாச் செய்கையை விண்ணப்பம் செய்ய... அது கேட்டு அப்பெருமான் அவள் சூடிக்கொடுத்த மாலையே நறு மணம் மிகுந்து நமது உள்ளத்திற்கு தனி உகப்பானது இனி அத் தகைத் தொடையலையே நமக்குக்கொண்டு வருவாய் என்று அருளிச் செய்தனன். உடனே கண்விழித்த விஷ்ணுசித்தர் அம் மங்கையை மலர்மங்கை என்றே எண்ணி அவள் திறத்தில் அளவிலா அன்பு கொண்டு அவற்றை ஆண்டுவருகிற அவள்—அனைத்துலகத்திற்கும் அன்னையாகிய அவற்றை ஆண்டுவருகிற இலக்ஷ்மி தேவியின் அம்ச மென்ற காரணத்தால் ஆண்டாள் என்றும், மாதவனுக்கு உரிய மாலை யைத்தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்த காரணத்தால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெயரிட்டு அழைத்து வந்தார். அந் நாச்சியார் தனது பருவம் வளரும்தோறும் ஞான பக்திகளும் கூடவே வளரப்பெற்று தனக்கு ஏற்ற காதலனைக் கருதிய கடல் வண்ணன் விஷயமான வேட்கை மிஞ்சியவளாகி ஒருகணப்பொழுதும் அவனைக் கூடா திருக்கப்பொறுமல்....கண்ணனது பிரிவையாற்றுத கோபஸ்திரீகள் போலத் தானும் நோன்பு நூற்று உயிர்தரிப்பவளாய் அவ்வபிப்பிராயத்தைத் திருப்பாவை (நாச்சியார் திருமொழி) என்கிற 30 பாசுரங்கள் கொண்ட திவ்யப்பிரபந்தத்தை அருளிச்செய்து மார்கழி மாதம் 30 நாளும் பாவை நோன்பு நூற்று கண்ணனது வரவை எதிர் நோக்கி இருக்கையில் இவளுக்கு விவாகத்திற்கு ஏற்ற பருவம் வந்த தையும் இவளது பக்தியுள்ளத்தையும் கண்டு தந்தையார் இவளுக்கு ஏற்ற கொழுநனை எப்படித்தேடுவது என்று கவலைப்பட்டு ஆண்டாளை அழைத்து நீ யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகிருய் என்று வினவ ஆண்டாள் நான் எம்பெருமானுக்கே உரியவளாக இருக்கிறேன். மானிடவர்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்று உறுதியாகச் சொல்ல....அது கேட்டு விஷ்ணுசித்தர் நூத்திஎட்டு திருப்பதிகளிலும்

நித்யவாஸம் செய்கின்ற எம்பெருமான்களுடைய வைபவத்தை விளங்க எடுத்துக்கூறி வருகையில்....ஆண்டாள்....வடமதுரையில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானது வரலாற்றைக் கேட்டவளவிலே மயிர்சிலிப்பும், திருவேங்கடமுடையானது வரன்முறையை செவியுற்ற பொழுது முகமலர்ச்சியும், திருமாலிருஞ்சோலை மலையழகரது வடிவழகை அறிந்தமாத்திரத்தில் மனமகிழ்சியும், ஸ்ரீ ரங்கனுதரது மகிமை செவியில் பட்டவுடன் அளவற்ற ஆனந்தமடைந்து நிற்க....அப்பொழுது அந்தந்தத் திருப்பதியில் உள்ள எம்பெருமான்களெல்லாரும் இவளது சுயம்வரத்தை உத்தேசித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளி இவளது ஞானக்கண்ணுக்கு விஷயமாகி விளங்க...இவள் அவர்களுள் ரங்கநாதனிடத்தே மனத்தைச் செலுத்தி அவனுக்கே தன்னை மணமகளாக நிச்சயித்து அவனையே சர்வகாலமும் சிந்தித்திருந்தாள். இதனைக்கண்ட ஆழ்வார் நம்பெருமாள் இவளைக் கடிமணம் புரிதல் கைக்கூடுமோ என்று கவலைகொண்டிருக்கையில்.... திருவரங்கச்செல்வன் இவளுடைய சொப்பனத்தில் எழுந்தருளி உமது திருமகளை கோயிலுக்கு அழைத்துக்கொண்டு வாரும் நாம் அவளை அங்கீகரிப்போம் என்று அருளிச்செய்ய—அதனல் விஷ்ணுசித்தர் வியாகூலம் நீங்கி மனமகிழ்ந்திருக்க....ஸ்ரீ ரங்கநாதனது ஆக்ஞையால் கோயில் ஸ்தானீகர் பரிஜனங்கள் எல்லாரும் ஆண்டாளை அழைத்துவர சகல மங்கள மங்கள வாத்தியங்களோடும், சத்ர சாமராதிகளோடும் நவரத்தினப் பல்லக்கையும் உடன்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்குச்சென்று எல்லாப் பரிகரத்தாரும் பெரியாழ்வாரையடுத்து நம்பெருமாளது அருளப்பாட்டை விண்ணப்பம்செய்ய ....கருணமிருதமான அவ்வார்த்தையைச் செவியாரக்கேட்டுச் சந்தோஷமடைந்த விஷ்ணுசித்தர் வடபெருங்கோயிலுடையாள் சன்னதியிலே அழகிய மணவாளனது நியமனத்தை விண்ணப்பம்- செய்து அநுமதிபெற்றுப் பிரயாணமாயினர். இச்செய்தி கேட்ட பாண்டிய அரசன் வல்லபதேவனும் இம்மஹோத்ஸவத்தைத் தானும் காண வேண்டி சகல சைன்யங்களுடனும் கூடி புறப்பட்டான். பட்டர் பிரான் ஆண்டாளை மணிச்சிவிகையில் எழுந்தருளப்பண்ணி மங்கள வாத்திய கோஷத்துடன், ஆண்டாள் வந்தாள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள், சுரும்பார்குழற் கோதை வந்தாள். திருப்பாவை பாடிய செல்வி வந்தாள், பட்டர்பிரான் புதல்வி வந்தாள். வேயர்குலவிளக்கு வந்தாள் என்று பல சின்னங்கள் பணிமாற மெய்க்காப்பாளர் உடன் சூழ்ந்து நிற்க....தாமும் அரசனுமாக இரு

புறத்தும் இருந்து அழைத்து வந்து திருவரங்கம் பெரிய கோயிலை யடைந்து பெரியபெருமாள் முன் மண்டபத்தில் பிராட்டியை நிறுத்திப் பெருமாளை ஸேவிக்கப் பண்ணுகையில்....அத்திருமாலின் திவ்ய ஸௌந்தரியம் இரும்பைக்காந்தம் இழுப்பதுபோல ஆண்டாளைக் கவரத்தொடங்கியதனால் சூடிக்கொடுத்த நாச்சியார் சிலம்பார்க்கச் சீரார்வளையொலிப்பக் கொடி ஏறிடையாடக் கயல்போல் மிளிரும் கடைக்கண் பிறழ அன்னமன்ன நடைகொண்டு ஆனந்தக்கடலி லாழ்ந்து திருவரங்கன் திருவடிவருடக்கருதி நாகபர்யங்கத்தை மிதித்தேறி நம்பெருமானது திருமேனியிலே அந்தர்ப்பவித்து அவனை என்றும் பிரியாதிருப்பவளாக ஆயினள். அவ்வண்ணம் அரும்பேறு பெற்றதைத் தரிசித்த ஆழ்வார் முதல் அனைவரும் அதிசயித்து நிற்கையில்....அரங்கன் அர்ச்சக முகமாக ஆழ்வாரை அழைத்து க்ஷீர சமுத்திரராஜன்போல நீரும் நமக்கு மாமனாராக ஆய்விட்டீர் என்று முகமன் கூறி விடை கொடுத்தருள ஆழ்வாரும்....

ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் *
திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான் *
பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும்பிள்ளை பெற்ற வசோதை *
மருமகளைக்கண்டுகந்து மணாட்டுப்புறம் செய்யுங் கொலோ? * என்று

போர உகந்து அரிதிற்பிரிந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று முன்போலவே வடபெருங்கோயிலுடையான் கைங்கர்யத்தில் நிரதராய் எண்பத்தைந்து வருஷகாலம் வாழ்ந்திருந்து பேரானந்தப் பெரும்பத மடைந்தனர்—

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஆண்டாள் மங்களாசாசனம்.

திருவாடிப்பூரத்து செகத்துதித்தாள் வாழியே *
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே *
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே *
பெரும் பூதூர்மாமுனிக்குப் பின்னானாள் வாழியே *
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுறைத்தாள் வாழியே *
உயரரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே *
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே *
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே *

சுபமஸ்து.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழிகள்

அவதாரிகை: ஸ்ரீ ஆண்டாள் கண்ணபிரானைப் பெறுகைக்காக மார்கழித்திங்கள் முழுவதும் பாவை நோன்பு நூற்று அவன் கலவியை எதிர்பார்த்தும் அவன் வந்து கலக்கக் காணுமையால் காதலர்களை சேர்த்து வைக்கவல்ல காமனைக் குறித்து தைத்திங்களில் பூசை செய்யவேண்டி தரைவிளக்கி சித்திரக்கோலம் எழுதி மண்டப மமைத்து காமதேவனை எழுந்தருளச் செய்து பத்து பாசுரங்களால் இரைஞ்சித் தொழுது பூசித்து தைத்திங்கள் முடிந்ததும் மாசி முதலில் அத்தேவன் எழுந்தருளுகிற வீதியில் அழகுண்டாவதற்கு நன்றாக அலங்கரித்து.... திருவாய்பாடியில் ஆய்ச்சிகள் சிற்றில் (நுண்ணியமணலால் சிறிய வீடுகள்) இழைப்பது (கட்டிவிளையாடுவது) என்கிற விளையாட்டில் ஊன்றி அன்யபரராக இருக்கையில் கண்ணபிரான் வந்து அச்சிற்றிலையழிக்க முயல.... அதைத்தடுத்துப் பேசின ஆய்ச்சிகளின் பாவனையடைந்து இப்பாசுரங்கள் அருளிச்செய்யப்படுகிறது.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செயலில்

இரண்டாந்திருமொழி

நாமமாயிரம் ஏத்த

பாசு: **நாமமாயிரம் ஏத்த நின்ற நாராயணு! நரனே! உன்னை ***
மாமிதன் மகனுகப்பெற்ருல் எமக்கு வாதை தவிருமே *
காமன் போதருகாலமென்று பங்குனி நாள் கடைபாரித்தோம் *
தீமை செய்யும் சிரீதரா! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே * 1

உரை: ஆயிரம் நாமத்தை சொல்லி நித்திய ஸூரிகள் துதிக்கும்படியாக இருக்கின்ற நாராயணனே! சக்கிரவர்த்திருமகனுக மானிடவுடல் கொண்டு பிறந்தவனே! ஏற்கெனவே தீம்புசெய்பவனுன உன்னை... மாமி தன் மகன்(கணவன்) பர்த்தாவாகப்பெற்ருல் எங்களால் துன்பம் அனுபவித்து முடியுமோ? என்கிருர்கள். இது கேட்ட கண்ணபிரான்... நானு தீம்பு செய்பவன்? நான் உங்களுடைய நினைவே இல்லாமலிருக்க என்வாவை எதிர்பார்த்து நீங்களன்ருே சிற்றிலிழைக்கிறீர்கள் என்ன... அதைக்கேட்ட ஆய்ச்சிகள். அப்பனே! நீ அப்படி

நினைக்கவேண்டாம் நாங்கள் உனக்காகச் சிற்றில் இழைக்கிறோமல்லோம், நிகழ்வது பங்குனி மாத மாதலால் காமதேவன் வீதிவலம் வரக்கூடுமென்று அவன் வரும் வீதியில் சிற்றில் இழைத்து அலங்கரிக்கின்றோமேயொழிய உன்னைக் குறித்துச் செய்கிறோமில்லை என்ன அதைக்கேட்ட கண்ணன்—நீங்கள் செய்வது அன்னியன் பொருட்டென்றால்? நான் அதை அழிப்பதும் அன்னியன் பொருட்டுத்தான் என்று சொல்லி சிற்றிலையழிக்கப்புக.... ஆய்ச்சிகள் சர்வதா தீம்புகள் செய்யும் சுபாவமுள்ளவனே! ஸ்ரீ லட்சுமீபதியான கண்ணபிரானே! நாங்கள் அமைக்கின்ற மணற்கொட்டகங்களை நாங்கள் விளையாடுமிடத்தில் வந்து நீ அழிக்கவேண்டாமென்று தடுக்கின்றனர்— 1

பாசு: **இன்று முற்றும் முதுகு நோவ இருந்திழைத்த**
இச்சிற்றிலை *

நன்றும் கண்ணுற நோக்கி நாங்கொளும்
ஆர்வம் தன்னைத்தணிகிடாய் *

அன்றுபாலகனாகி ஆலிலை மேல்த்துயின்ற
எம்மாதியாய் *

என்றும் உன்தனக்கு எங்கள் மேல் இரக்க
மெழாதது எம்பாவமே * **2**

உரை: கண்ணபிரானே! நீ ஸர்வ சக்தியுள்ளவனாதலால் எந்த அரிய காரியங்களையும் ஸங்கல்பமாத்திரத்தினால் சிறிதும் வருத்தமில்லாமல் படைக்கவல்லவன் நாங்களோ அறிவொன்றுமில்லாத ஆயர் குலத்தில் பிறந்த அபலைகள் இன்றைய தினம் முழுவதும் முதுகு நோக உட்கார்ந்து கொண்டு சிருஷ்டித்த இந்தச் சிற்றிலை நீ நன்றாகக் கண்ணை ஊன்ற வைத்துப்பார்த்து நாங்கள் கொண்டிருக்கும் ஆசையைத் தணியச்செய் என்று ஆய்ச்சிகள் சொல்லியும் அதனைக் கேளாமல் கண்ணன் சிற்றிலை அழிப்பதாக முயல.... அதுகண்ட ஆய்ச்சிகள்... நாயகனே! முன்பு மஹாப் பிரளயம் வந்தகாலத்தில் குழந்தைவடிவுகொண்டு உலகத்தை எல்லாம் வயிற்றிலே வைத்துக்காத்து பாலகனாய் ஆலிலையில் கண்வளர்ந்தவனும், எங்களுக்குத்தலைவனுமான கண்ணபிரானே! எக்காலத்திலும் உனக்கு எங்கள்மேல் தயவு பிறவாமலிருப்பது நாங்கள் பண்ணின பாவத்தின் பயனேயாகும் என்று உள்ளம் வெதும்புகின்றனர்... 2

பாசு : **குண்டு நீருறைக் கோளரீ ! மதயானை கோள்**
விடுத்தாய் ! உன்னைக் *
கண்டு மாலுரு வோங்களைக் கடைக்கண்களாலிட்டு
வாதியேல் *
வண்டல் நுண்மணல் தெள்ளியாம்வளைக்கைகளால்
சிரமப்பட்டோம் *
தெண் திரைக்கடற்பள்ளியாய் ! எங்கள் சிற்றில்
வந்துசிதையேலே 3

உரை : மிக்க ஆழமான கடலிலே நாகத்தின் அணையில் சாய்ந்து இருப்பவனும், மிடுக்குடையை சிங்கத்தைப் போன்றவனும், மதம் மிகுந்த கஜேந்திரனுக்கு (முதலையால் நேர்ந்த) துன்பத்தை நீக்கி அருள் செய்தவனுமான கண்ணபிரானே ! அடியார்களின் துயரைத் தீர்க்கவல்ல உன்னைக்கண்டு ஆசை கொள்ளும் எங்களைக் கடைக் கண்களால் பார்த்து இம்சிக்கவேண்டாம் நாங்கள் வண்டலிலுள்ள நுண்ணிதான பொடி மணல்களைக்கொண்டு வளையல்கள் அணிந்த கைகளால் புடைத்து (சிற்றில் இழைக்க) மிகவும் கஷ்டப்பட்டோம். தெளிந்த அலைகளையுடைய திருப்பாற்கடலைப் படுக்கையாக உடைய வனே எங்கள் சிற்றில் வந்து சிதையேல்— 3

பாசு : **பெய்யுமா முகில்போல் வண்ணா ! உன்தன் பேச்சும்**
செய்கையும் எங்களை *
மையலேற்றி மயக்க உன்முகம் மாயமந்திரம் தான்
கொலோ ? *
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு உன்னைநோவ
நாங்கள் உரைக்கிலோம் *
செய்யதாமரைக்கண்ணினாய் ! எங்கள் சிற்றில்
வந்து சிதையேலே * 4

உரை : மழையைப் பொழிவதற்கான நீருண்டமேகம் போன்ற நிறத்தையுடையவனே ! உன்னுடைய பணிவான வஞ்ஜக வார்த்தை களும், கள்ளக்குழைவுகளும். எங்களைப் பித்தேறச் செய்து மிகவும் மயக்குகிறது, அங்ஙனமாவதற்கு உன்னுடைய முகமானது மாயமந் திரமோ ? செக்குப்பொடியோ ? சின்னத்தனமுடைய சிறுமியர் இவர் கள் என்று நீ சொல்லுவாய் என்கிற பயத்தால் நாங்கள் உன்னைக் குறித்து மனம் புண்படும்படி ஒன்றும் உரைக்கவில்லை... சிவந்த தாமரை இதழ் போன்ற கண்களுடையவனே ! எங்கள் சிற்றிலைச் சிதைக்கவேண்டாம்— 4

பாசு : வெள்ளை நுண்மணற்கொண்டு சிற்றில்
விசித்திரப்பட * வீதிவாயய்த் *
தெள்ளி நாங்களிழைத்தகோலம் அழித்தியாகிலும்
உன்தன் மேல் *
உள்ளமோடியுருகலல்லால் உரோடமொன்று
மிலோம் கண்டாய் *
கள்ளமாதவா! கேசவா! உன்முகத்தன கண்களல்லவே *5

உரை : கபடச் செய்கைகளையுடைய கண்ணபிரானே! கேசவனே! மன்மதனுக்கு சிறிதும் மனம் கோணவொண்ணுதென்று நிலாப் போல் வெண்மையான சிறுமணல்களைக்கொண்டு அவன் வருகிற தெருவிலே அனைவரும் கண்டு ஆச்சரியப்படும்படி அழகாகக் கட்டிய சிற்றிலாகிற கோலத்தை நீ அழித்தாலும், அதற்காக... எல்லாவற்றிர் கும் மேலான இவன் இப்படிச் செய்கிருனே? என்று எங்களுடைய நெஞ்சு உருகி நீராய்போகுமொழிய உன்மேலே ஒரு துளியும் கோபம் கொள்ளமாட்டோம், உன் முகத்திலுள்ளவை மெய்யான கண்களேயாகில் இச்சிற்றிலை அன்புடன் நோக்குதலன்றோ கண் படைத்ததற்கு பிரயோஜனம்? 5

பாசு : முற்றிலாத பிள்ளைகளோம் முலைபோந்திலாதோமை,
நாள்தொறும் *
சிற்றில்மேலிட்டுக்கொண்டு 'நீ' சிறிதுண்டு
திண்ணென நாம் அது *
கற்றிலோம் * கடலையடைத்து அரக்கர் குலங்களை
முற்றவும் *
செற்று * இலங்கையைப் பூசலாக்கிய சேவகா!
எம்மை வாதியேல் * 6

உரை : கண்ணபிரான் இன்னது செய்தான் என்று பிறருக்குச் சொல்ல முடியாதபடி சில குறும்புகளைச் செய்ப அது கண்ட ஆய்ச் சியர்... அப்பனே! சமுத்திரத்தில் அணைகட்டி (லங்கைக்குச்சென்று) அரக்கர் குலங்களை வேரறவொழித்து இலங்கையை தொம்ஸம் செய்த வீரச்செயலுடையவனே! பருவம் நிரம்பாத இளம்பிள்ளைகளாய் இன் னும் கொங்கை குவிந்தெழாத எங்களை... நீ நாள் தோறும் சிற்றில் விஷயமான ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு எங்கள் திறத்து செய்யும் குறும்புகள் சிலது இருக்கிறது, அவற்றின் கருத்தை அறியும் படி ஆசமர்த்தை நாங்கள் கற்றுக்கொள்ளவில்லை ஆகையால் அபலை களாகிய எங்களை துன்பப்படுத்தாமல் எட்டப் போகவேணும் என் கிருர்கள்— 6

பாசு : **பேதம் நன்கறிவார்களோடு இவைபேசினுல் பெரிது இன்சுவை ***
யாதுமொன்றறியாத பிள்ளைகளோமை நீ நலிந்து என்பயன் *
ஓதமா கடல்வண்ணு ! உன் மணவாட்டிமாரொடு † சூளுறும் *
சேதுபந்தம் திருத்திஞய் ! எங்கள் சிற்றில் வந்து சிதையேலே 7

உரை : கண்ணன்... ஆயர் சிறிமிகளை நோக்கி குறும்பாகச் சில வார்த்தைகளைச் சொல்லிச் சிற்றிலைக் கலைக்க முயல அது கண்ட அவர்கள் அப்பனே ! உன் பேச்சின் கருத்தை நன்ருக அறிய வல்ல வர்களோடு இப்பேச்சுக்களைப் பேசிஞல் நீ ஒன்று சொல்ல அவர்கள் ஒன்பது சொல்ல மிகவும் போக்கியமாக (ரஸமாக) இருக்கும். கபட மற்று வார்த்தைகளின் எவ்வகையான கருத்தையும் அறியமாட்டாத சிறு பெண்களான எங்களை நீ வருத்தமுறச் செய்வதஞல் என்ன பயன் ? என்று சொல்லச் செய்தேயும் அவன்.... மேல் மேலும் கலைக் கப்புக... அலை எழும்புகிற பெரிய கடலையொத்த நிறத்தையுடைய வனே ? சமுத்திரத்தில் அணைகட்டினவனே ! கண்ணபிரானே ! உன் னுடைய பத்தினிகளின் மேல் ஆணை எங்கள் சிற்றிலை சிதைக்கலா காது என்கிருர்கள்— 7

பாசு : **வட்டவாய்ச் சிறுதூதையோடு சிறு சுளகும் மணலும் கொண்டு ***
இட்டமா விளையாடு வோங்களை சிற்றிலீடழித்து என்பயன் *
தொட்டுதைத்து நலியேல்கண்டாய்; சுடர்ச் சக்கரம்கையி லேந்திஞய்! *
கட்டியும் கைத்தால் இன்ஞமையறிதியே கடல் வண்ணனே! 8

உரை : ஆய்ச்சிகள் கண்ணனை நோக்கி.... ஒளிவீசுகிற சுதர்சனுழ் வானைத்திருக்கையில் தரித்திருப்பவனே ! கடல் போன்ற நிறமுடைய வனே ! கண்ணனே ! வட்டவடிவமானவாயையுடைய சிறிய பானை யோடு சிறிய முச்சிலையும், மணலையும் கொண்டுவந்து இஷ்டப்படி விளையாடுகிற எங்களுடைய சிற்றிலை உபயோகப்படாதபடி மறுபடியும் அழிப்பதஞல் என்ன பயன் ? கையால் தொட்டும் காலால் உதைத் தும் இம்சிக்காமல் போய்விடு என்று சொல்ல....அதுகேட்ட கண்ண பிரான்.... ஆய்ச்சிகாள் ! இச்சிற்றிலை நான் கையாலும் காலாலும்

உதைத்தழிப்பதால் எனக்கு ஒன்றும் பயனில்லை என்பது மெய்யே உங்களைத் தீண்டுவதன்றோ எனக்குப் பிரயோஜனம் என்று அவர்களைத்தீண்ட.... ஆய்ச்சிகள் ஆகா நீ எத்தனை ஸ்திரீகளைத் தீண்டிவந்தாயோ ? எங்களைத் தீண்டாதே! எட்ட நில் என்ன.... நான் சர்வேச்வரன் என்பதில் உங்களுக்கு சந்தேகமா ? நான் தீண்டுவது உங்களுக்கு நலிவாக ஆகிவிட்டதா ? என்ன... அது கேட்ட ஆய்ச்சிகள்.... நீ மெய்யே சர்வேச்வரன் ஆகிறாய் என்றாலும் இப்போது எங்கள் நெஞ்சு உன்மேல் வெருப்புண்டு இருப்பதால் உனது ஸ்பரிசம் ருசிக்கவில்லை, நெஞ்சு கசத்துப்போனால் கரும்புக்கட்டியும் ருசிக்காது என்பதை நீ அறிவாய் அல்லவா ?— 8

பாசு : முற்றத்தூடு புகுந்து நின்முகம்காட்டிப் புன்முறுவல்செய்து
சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ?
கோவிந்தா!
முற்றமண்ணிடம் தாவி விண்ணுற நீண்டளந்து *
கொண்டாய் எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம் நின்றவர்
என்சொல்லார் 9

உரை : ஆய்ச்சிகள்... கண்ணபிரானுடைய கண்ணுக்குக்கெதிரில் நின்றால் அவன் பொறுக்கவொண்ணாத தீமைகளைச் செய்கின்றானென்றஞ்சி அவனுக்குத் தெரியாதபடி ஒவ்வொருவராக ஏகாந்தமான ஒரு முற்றத்தில் புகுந்து கதவையடைத்து அவனுக்குப் புகுவதற்கு வழி இல்லாமல்பண்ணி விளையாடுகிறார்கள். அம் முற்றத்திலே தங்கள் கூட்டத்தின் நடுவிலே கண்ணபிரான் வந்து நிற்கக் கண்டு நாம் இவனுக்குத் தெரியாமல் வந்தோமென்று நினைத்திருப்பது அழகிதாக இருக்கிறது. நமக்கும் முற்பட இவன் வந்து நிற்கின்றான்! இவன் கையில் அகப்பட்டோமே என்று சிந்தித்து நிற்கின்ற ஆய்ச்சிகளிடம் தனித்தனியே சென்று நங்காய்! நீ எப்படி இங்கு வந்தாய்? கால்கள் நோகின்றனவோ? என்று சில பேச்சைச் சொல்லி முகத்தையும் விளங்கக் காட்டுகின்றான் கண்ணன். அதைக்கேட்ட ஆய்ச்சிகள், தங்கள் எண்ணம் வீணாய்விட்டதே என்று வெட்கமடைய கண்ணன் புன்சிரிப்புச் சிரிக்கிறான். அதுகண்ட ஆய்ச்சிகள்... கோவிந்தனே! ஒரு திருவடியால் பூமண்டலம் முழுவதையும் தாவியளந்து...ஸ்ரீவைகுண்டம் வரையில் மற்றொரு திருவடியினால் ஓங்கி மேலுலகங்களையும் அளந்துகொண்டவனே! நாங்கள் ஏகாந்தமாக

விளையாடுகிற முற்றத்தில் நுழைந்து உனது திருமுகத்தை எங்களுக்குக் காட்டி புன்சிரிப்புச் சிரித்து எங்கள் சிற்றிலோடுகூட நெஞ்சையும் அழிக்கின்றுயோ? அந்தமட்டிலும் நிற்காமல் கலவிக்கும் ஆரம்பித்தால் அருகில் நின்று பார்ப்பவர்கள் என்ன சொல்லமாட்டார்கள்? என்று கேட்கிருர்கள்— 9

பாசு : **சீதைவாயமுத முண்டாய்! எங்கள் சிற்றில் நீ சிதையே லென்று ***
வீதிவாய் விளையாடும் ஆயர் சிறுமியர் மழலைச்சொல்லை*
வேதவாய்த் தொழிலார்கள்வாழ் வில்லிபுத்தூர் மன் விட்டு சித்தன்தன் *
கோதைவாய்த் தமிழ்வல்லவர் குறைவின்றி வைகுந்தம் சேறுவரே 10

உரை : சீதைப்பிராட்டியின் அதர அமிருதத்தை பானம் செய்தவனே! நாங்கள் மிக்க சிரமப்பட்டு இழைக்கும் சிற்றிலை நீ அழிக்காது போகவேணும் என்று...(மன்மதன்)வருவானென்று தெருவை அலங்கரித்து விளையாடுகின்ற இடைப்பெண்களுடைய இளம் பருவத்திற்குரிய மெல்லிய சொல்லைக் கருத்திற்கொண்டு...வேதத்தை உச்சரிக்கின்ற வாய் உடையவர்களும், வைதிகத்தொழிலைச் செய்பவர்களுமான பரம பக்தர்கள் வாழுமிடமான ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான பெரியாழ்வாருடைய திருமகள் ஆண்டாளுடைய திருவாக்கிலிருந்து பிறந்த இத்தமிழ்ப் பாசுரங்களை ஓதுபவர்கள் குறைவற்று வாழ்ந்து முடிவில் பரமபதத்தைச் சேரப்பெறுவர்— 10

அடிவரவு— **நாமம் இன்று குண்டு பெய் வெள்ளை முற்றில் பேதம் வட்ட முற்றச் சீதை கோழி—**

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செயலில்—
ஐந்தாம் திருமொழி.

எம்பெருமானுடைய வரவுக்காக குயிலைக் கூவும்படி வேண்டுதல்.

மன்னுபெரும் புகழ்.

அவதாரிகை : சூடிக்கொடுத்த நாச்சியாரான ஆண்டாள் தனது இச்சை பூர்த்தியாகவேண்டி காமனைத்தொழுது அவன் வரும் வீதியலங்கரித்து அவனுக்கு இருக்கையமர்த்தி தனது மனோபாவனையி

னுல் வீற்றிருக்கச்செய்து பூசித்து கண்ணனைத் தன்னேடு கூட்டு விக்க வேண்டுமென்று பிருர்த்திக்கிருள். இவ்வாறு பிருர்த்தித்த பின்பும் கண்ணன் வருவான் என்கிற உறுதி ஏற்படாமையால்.... தனது ஆவல் சிறிது அடங்குமாறு கூடல் இழைத்தல் என்கிற ஒரு வகை குறிபார்த்து சமாதானமடைய விருப்பம்கொண்டு கூடலிழைத் துப்பார்த்தும் சமாதானம் உண்டாகாமல் கண்ணனிடம் கொண்ட காதல் அளவுமீறிய துன்பத்தைக்கொடுப்பதால் இனிக் கண்ணனைக் காணுமல் தரித்திருக்கவொண்ணுதென்று கண்டு சோலையில் வசிக் கின்ற குயிலையழைத்து கண்ணனை தன்னிடம் வரக்கூவியழைக்கு மாறு வேண்டுகிருள். இத்திருமொழியில்—

பாசு: மன்னுபெரும் புகழ்மாதவன் மாமணிவண்ணன்
மணிமுடி மைந்தன் *
தன்னை உகந்தது காரணமாக என் சங்கிழக்கும்
வழக்குண்டோ? *
புன்னை குருக்கத்திநாழல் செருந்திப் பொதும்பினில்
வாழும் குயிலே! *
பன்னி எப்போதும் இருந்து விரைந்துஎன் பவளவாயன்
வரக்கடவாய் 1

உரை: புன்னை, குருக்கத்தி, கோங்கு, செருந்தி, முதலான பலவகை மரங்கள் நிறைந்த சோலையிலே வாழ்கின்ற குயிலே! நித்தியமாய், அளவில்லாத புகழையுடையவனுய், லக்ஷ்மீபதியாய், நீலமணிபோன்ற நிறத்தையுடையவனுய், நவமணிகளும் பதித்துச்சமைத்த கிரீடத்தை யுடையவனுய், மிடுக்குடன் கூடியவனுன எம்பெருமானைக் காதலித் தது காரணமாக எனது உடல் இளைத்து கையில் வளையல்கள் கழன்றுபோவது உலகத்தில் நியாயம் உண்டா? (இது அநியாயமாகத் தான் இருக்கிறது இதற்கு நான் என்செய்வேன் என்கிருயோ?) பவழம்போன்ற சிவந்த அதரத்தையுடையனுன எனது துணைவன் என்னிடம் வந்துசேரும்படி இரவு பகல் எப்போதும் அவனது நாமங் களைச் சொல்லிக் கத்திக்கொண்டு சீக்கிரமாக வரக் கூவவேணும்— 1

பாசு: வெள்ளைவிளிசங்கு இடங்கையில்கொண்ட விமலன்
எனக்கு உருக்காட்டான் *
உள்ளம்புகுந்து என்னை நைவித்து நாளும் உயர்பெய்து*
கூத்தாட்டுக் காணும் *
கள்ளவிழ்செண்பகப் பூமலர் கோதிக்கனிதிசை
பாடும் குயிலே! *
மெள்ளவிருந்து மிழற்றி மிழற்ருது என் வேங்கடவன்
வரக்கூவாய் 2

உரை : தேன் பெருகுகின்ற செண்பகப்பூக்களில்.... ஸாரமில்லத அம்சத்தைத்தள்ளி ஸாரமுள்ள அம்சத்தைப்பருகி அனுபவித்து மிகுந்த களிப்படைந்து அக்களிப்புக்கு ஒக்க இசைகள் பாடுகின்ற கோகிலமே! அப்பழுக்கற்ற சுத்தமான வெண்மை நிறமுடையதாய். (பகவத்க் கைங்கர்யத்தில் ருசியுடையவர்களை) அழைப்பதான ஸ்ரீ பாஞ்ச ஜன்யம் என்னும் சங்கை இடது கையிலே ஏந்திக்கொண்டிருக்கிற பரமபுருஷன், தனது திவ்யமங்கள சொரூபத்தை ஸேவிக்க எனக்குக்காட்டமாட்டேன் என்கிறுன். ஆனல் என்னுடைய இருதயத்தினுள்ளே வந்து புகுந்து என்னை நைந்துபோகும்படி பண்ணி அத்துடன் என்னை முடிந்துபோகவொட்டாமல் இன்னமும் துன்பப் படுத்துவதற்க்காக நாள்தோறும் பிராணனை வளரவைத்து என்னைத் தத்தளிக்கச்செய்து வேடிக்கை பார்க்கின்கிருன். ஆகையால் நீ, மழலைச்சொற்களைச் சொல்லிக்கொண்டு விளையாட்டுச் சேஷ்டைகளைப் பண்ணுமல்...என் அருகில் இருந்துகொண்டு எனக்காகத் திருவேங்கடமலையில் வந்து நிற்கின்ற எம்பெருமானை இங்கே வரும் படியாகக் கூப்பிடவேணும்— 2

பாசு : **மாதலிதேர் முன்பு கோல்கொள்ள மாயன்**
இராவணன் மேல் * சரமாரி *
தாய் தலை அற்றற்று வீழத்தொடுத்த தலைவன்
வரவெங்கும் காணேன் *
போதலர்காவில் புதுமணம் நாறப் பொறிவண்டின்
காமரம் கேட்டு * உன் *
காதலியோடு உடன் வாழ்குயிலே ! என்
கருமாணிக்கம் வரக்கூவாய் * 3

உரை : சிறந்த பூக்கள் மலர்கின்ற சோலையிலே புதிதான நறுமணம் வீச.... அழகிய வண்டினது காமரம் என்கிற இசையைக் கேட்டுக் கொண்டு உன் பேடையுடன் கூடி வாழ்கிற குயிலே! (முன் காலத்தில்) மாதலியானவன்... இராவணனுடைய தேரின் முன்னே கோலைக் கொண்டு தன் தேரை நடத்த (அத்தேரிலிருந்து) மாயயுத்தம் செய்ய வல்ல மாயாவியான இராவணன் மேலே அவனுடைய பிரதானமான தலை பலகாலும் அற்றற்று விழும்படியாக பாணவர்ஷத்தைப் பிரயோகம் செய்த எம்பெருமானது வரவை எத்திக்கிலும் காணேன். ஆதலால் நான் இச்சிக்கின்றவனும், எனக்கு போக்கியனுனவனுமான எம்பெருமானை இங்கே வரும்படியாக நீ கூவவேணும்— 3

பாசு : என்புருகி இனவேல் நெடுங்கண்கள்
இமைபொருந்தா பல நாளும் *
துன்பக்கடல் புக்கு வைகுந்தனென்பது ஓர்
தோணிபெருது உழல்கின்றேன் *
அன்புடையாரை பிரிவுறு நோயது நீயும் அறிதிகுயிலே !
பொன்புரைமேனிக் கருளக்கொடியுடைப் புண்ணியனே
வரக்கூவாய் * 4

உரை : ஓ குயிலே ! எனது எலும்புகளெல்லாம் உருகிப்போகின்றன சிறந்த வேல்போன்ற விசாலமான எனது கண்களும் சற்றும் மூடுவதில்லை (இரைப்பொழுதும் நித்திரை கொள்வதில்லை) நெடுங்காலமாக எம்பெருமானது பிரிவாகிற துக்கக்கடலிலே அழுந்தி அதிலிருந்தும் மீள ஸ்ரீ வைகுண்டநாதன் என்கிற ஒரு தோணியை அடையப் பெருமல் அக்கடலுக்குள்ளேயே தட்டித்தடுமாறிக்கொண்டிருக்கின்றேன். அன்பர்களைப்பிரிவதால் உண்டாகும் துக்கத்தை நீயும் அறிவாயல்லவா ? பொன் போன்ற திரு மேனியையுடையவனைத் தர்மமே வடிவெடுத்தவன் எனப்படுகிற கண்ணபிரானை இங்கே வரும்படி கூவு— 4

பாசு : மென்னடை யன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத்தூருறைவான் தன் *
பொன்னடி காண்பதோ ராசையினல் என்-பொரு
கயற்கண்ணிணை துஞ்சா *
இன்னடிசிலொடு பாலமுதூட்டி எடுத்த என்
கோலக்கிளியை *
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே !
உலகளந்தான் வரக்கூவாய் * 5

உரை : மந்த நடையையுடைய அன்னப்பறவைகள் எங்கும் திரிந்து விளையாடுவதற்கு இருப்பிடமான ஸ்ரீ வில்லிபுத்தூரில் நித்தியவாஸம் செய்கின்ற எம்பெருமானுடைய அழகிய திருவடிகளைக் காணவேண்டுமென்கிற ஆசையினுலே.... சண்டை இடுகின்ற இரண்டு கெண்டை மீன்கள் போன்ற எனது கண்கள் உறக்கம் கொள்வதில்லை, ஓ குயிலே ! திரிவிக்கிரமனுக வளர்ந்து உலகங்களை எல்லாம் அளந்து கொண்ட பெருமான் இங்கே விரைவில் வரும்படி கூவு அப்படிக் கூவுவாயாகில்? கன்னலமுதும், பாலமுதம் ஊட்டி வளர்க்கின்ற எனது அழகிய கிளியை உன்னோடு தோழமைப்படுத்திவைப்பேன்— 5

பாசு : எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் இருடீ
கேசன் வலி செய்ய *
முத்தன்ன வெண்முறுவல் செய்யவாயும்
முலேயும் அழகழிந்தேன் நான் *
கொத்தலர்காவில் மணித்தடம் கண்படை
கொள்ளும் இளங்குயிலே என் *
தத்துவனே வரக்கூகிற்றியாகில் தலேயல்லால்
கைம்மாறிலேனே 6

உரை : (அழகும் நறுமணமும் கூடிய) பூங்கொத்துக்கள் மலருமிட மான சோலேயிலே மனதிற்குகந்த அழகானவொரு இடத்திலே உறங்குகின்ற சிறுகுயிலே! எல்லாத்திக்குகளிலும் தேவர்கள் வணங் கித்துதிக்கும்படியான பெருமை வாய்ந்தவனும் கண்டாருடைய இந்திரி யங்களே எல்லாம் கொள்ளேகொள்ளுமவனுமான எம்பெருமான்... தன்னே எனக்குக்காட்டாமல் மிடுக்குகள் செய்கிருன். அதனுல் அவனுடைய வடிவைக்காணுத ஏக்கத்தால் நான் (எனது) முத்துப் போல் வெளுத்த முறுவலும் சிவந்த அதரமும் முலேயும் ஆகிய இவை கள் அழகழிந்துபோய் விகாரப்பட்டேன். நான் உயிர்தரித்திருப்பதற்கு மூலகாரணமான அந்த எம்பெருமானே இங்கே வரும்படி கூவுவாயே யானுல்? என் வாழ்நாள் முழுவது என் தலேயை உன் காலில் வைத் திருப்பதைத்தவிர வேருெரு பிரதி உபகாரமும் செய்ய அறியேன்—6

பாசு : பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானேப்
புணர்வதோராசையினுல் * என்
கொங்கைகிளர்ந்து குமைத்துக்குதூகலித்து
ஆவியை ஆகுலம் செய்யும் *
அங்குயிலே! உனக்கென்ன மறைந்துறைவு?
ஆழியும் சங்கும் ஒண்தண்டும் *
தங்கிய கையவனே வரக்கூவில் நீ சாலத்தருமம்பெறுதி 7

உரை : ஓ அழகிய குயிலே! அலே மோதலேயுடைய திருப்பாற்கடலில் பள்ளிகொண்டருளும் எம்பெருமானேடே கூட வேணுமென்று உண் டான ஆசையினுல் எனது முலேகள் பருத்து மிக்க உத்ஸாஹம் கொண்டு எனது உயிரை உருக்கித்துன்புறுத்துகின்றன. ஓ குயிலே என் கண்ணுக்குப்புலப்படாமல் நீ மறைந்திருப்பதனுல் உனக்கு என்ன பிரயோஜனம்? திருவாழியும், திருச்சங்கும், கதையும், பொருந் திய திருக்கைகளேயுடைய எம்பெருமானே இங்கே வரும்படி நீ கூவு வாயாகில் மிகவும் தர்மகாரியத்தை எனக்குச் செய்தாயாவாய்— 7

பாசு : **சார்ங்கம் வளையவலிக்கும் தடக்கைச் சதுரன்**
பொருத்த முடையன் *
நாங்கள் எம்மிலிருந்தொட்டிய கச்சங்கம் நானும்
அவனும் அறிதும் *
தேங்கனி மாம்பொழில் செந்தளிர் கோதும்
சிறு குயிலே! திருமாலை *
ஆங்கு விரைந்தொல்லைக் கூகிற்றியாகில் அவனை
நான் செய்வன காணே * 8

உரை : இனிமையான பழங்களையுடைய மாந்தோப்பில் சிவந்த மாந் துளிர்களை வாயால் கொத்துகின்ற இளங்குயிலே! தனது வில்லை வளைத்து இழுக்கும் சக்தியையுடைய பெரிய திருக்கைகளையுடைய வனும், சகலவித சாமர்த்திய முழுடையவனுமான எம்பெருமான் பிரணய ரீதியிலும் வல்லமையுடையவன். அவனும் நானும் ஆக இரு வரும் சேர்ந்திருந்து எங்களுக்குள் ரஹஸ்யமாக செய்து கொண்ட சங்கேதத்தை நாங்களிருவருமே அறிவோம் மற்றொருவரும் அறியார் வெகுதூரத்திலிருக்கின்ற லக்ஷ்மீபதியை மிகவும் சீக்கிரமாக வருமாறு நீ கூவவில்லையாகில் அவன் இங்கு வந்த பிற்பாடு அவன் விஷயத்தில் நான் செய்யப்போகிற மிறுக்குகளை நீயே காண்பாய்— 8

பாசு : **பைங்கிளி வண்ணன் சிரீதரனென்பது ஓர்**
பாசத்து அகப்பட்டிருந்தேன் *
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ்குயிலே!
குறிக்கொண்டு இது நீ கேள் *
சங்கொடு சக்கரத்தான் வரக்கூவுதல் பொன்வளை
கொண்டுதருதல் *
இங்குள்ள காவினில் வாழக்கருதில் இரண்டத்
தொன்றேல் திண்ணம் வேண்டும் * 9

உரை : மிகுந்த ஒளியையுடைய வண்டுகளானவை மதுபான மயக் கத்தாலே இசைபாடுகின்ற சோலையிலே களித்து விளையாடுகிற கோகிலமே! நான் சொல்லுகிற இதை பராக்காக இல்லாமல் ஸாவ தானமாகக்கேள். நான் பசுமையான கிளியைப்போன்ற நிறத்தை யுடையவனான ஸ்ரீபதி என்கிற ஒரு வலையிலே சிக்கிக்கொண்டு கிடக் கிறேன். நீ இந்தச் சோலையிலே வாழக்கருதுகிறாயாகில்? திருவாழி திருச்சங்குகளைத்தரித்தவனான எம்பெருமானை இங்கே வரும்படி கூவுதல், அல்லது நான் இழந்த பொன்வளையல்களைக்கொண்டு வந்து கொடுத்து என்கையில்த்தங்கும்படி செய்தல். இவை இரண்டுள் ஏதாவது ஒரு காரியம் நீ கட்டாயம் செய்தே ஆகவேண்டும்—

ஆண்டாளின் மெலிந்த கரங்களிலிருந்து கழிந்துபோன வளையல்கள், திரும்பவும் கையில்தங்கவேண்டுமேயானல் எம்பெருமானுடன் சேர்க்கை கிடைத்தாலன்றி சாத்தியமாகாது ஆகையால் எம்பெருமானை வறுமாறு கூவவேண்டும். அவன் வருகையால் என் மெலிந்த கரங்களும் பருத்து வளையல்களும் தங்கவேண்டும்மென்பது கருத்து— 9

பாசு : **அன்றுலக மளந்தானை யுகந்து அடிமைக்கணவன்**
வலி செய்ய *
தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை நலியும்
முறைமை அறியேன் *
என்றும் இக்காவில் இருந்திருந்து
என்னைத் + ததைத்காதே நீயும் குயிலே ! *
இன்று நாராயணனை வரக்கூவாயேல் இங்குத்தை
நின்றும் துரப்பன் 10

உரை : மகாபலிச் சக்கிரவர்த்தி கொழுத்து வாழ்ந்திருந்த அக்காலத்திலே மூன்று உலகங்களையும் அளந்து கொண்டவனுன எம்பெருமான் விஷயத்திலே நான் கைங்கர்யத்திற்கு ஆசைப்படவும் அவ்வெம்பெருமான் அந்தக் கைங்கர்யத்தில் வஞ்சனை செய்கிருன். அதனுலே நான் நொந்துகிடக்கிற சமயத்தில்... தென்றல் காற்றும் பூர்ணசந்திரனும் என்னை உள்ளே பிளந்து புகுந்து கொண்டு துன்புறுத்துகிற வகையை அறிகிலேன், ஓ குயிலே! என்னுடைய க்ஷேமத்தை விரும்புகிற நீயும் தினமும் இந்தச் சோலையிலே இடைவிடாமல் இருந்து கொண்டு ஏற்கெனவே மெலிந்திருக்கிற என்னை ஹிம்ஸை செய்யாமலிரு. இன்றைக்கு ஸ்ரீமன் நாராயணன் இங்கே வரும்படி அவனை நீ கூவாமல் போனுயாகில் இந்தச் சோலையிலிருந்து உன்னை நான் துரத்திவிடுவேன்— 10

பாசு : **விண்ணுற நீண்டு அடிதாவிய மைந்தனை வேற்கண்**
மடந்தை விரும்பி *
கண்ணுற என் கடல் வண்ணனை வரக்கூவு
கருங்குயிலே ! என்ற மாற்றம் *
பண்ணுறு நான் மறையோர் புதுவைமன்னன்
பட்டர் பிரான் கோதை சொன்ன *
நண்ணுறு வாசகமாலை வல்லார் நமோ
நாராயணுய வென்பரே 11

உரை. வேல் போன்ற கண்களையுடையவளும் பெண்மைக்குரிய குணங்கள் நிறைந்தவளும், ஸ்வரங்கள் பிரதானமாகவுடைய நான்கு வேதங்களையும் ஓதின ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழ்கிற ஸ்ரீவில்லிபுத்தூருக்குத்தலைவரான பெரியாழ்வாருடைய மகளுமான ஆண்டாள்.... பரமாகாசத்தளவும் திருவடியானது போய்பொருந்தும்படியாக நெடுகவளர்ந்து உலகங்களை வியாபித்த மிடுக்கையுடைய எம்பெருமானை... ஆசைப்பட்டு.... ஓ கரிய குயிலே! கடல் போன்ற நிறத்தையுடைய என் காதலனை நான் ஸேவிக்குமாறு நீ கூவு என்று நியமித்த பாசுரமாக அருளிச்செய்த யாவரு முகக்கும் இந்த ஸ்ரீஸூக்திமாலையை ஓதுபவர்கள் எம்பெருமானுக்கு அந்தரங்க ஸேவகராகப்பெறுவார்கள் இப்பாசுரங்களை அனுசந்த்ானம் செய்பவர்களுக்கு.... திரு அஷ்டாஷரமந்திரத்தை அனுஸந்திப்பவர்களுக்கு எது பயனோ? அதுவே பயனுமென்பது— 11

அடிவரவு— மன்னு வெள்ளை மாதவி யென்பு மென்னடை எத்திசை பொங்கிய சார்ங்கம் பைங்கிளி அன்று விண் வாரணம்—

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செயலில் ஆருந்திருமொழி

அவதாரிகை: ஆண்டாள் அல்லும் பகலும் அநவரதமும் கண்ணனது நினைவாகவே அவனிடத்தில் ஈடுபட்டு அளவிலாத காதல் கொண்டு வருந்திக்கொண்டிருக்குமளவில் ஒரு நாள் இரவில் ஆண்டாள் நித்திரை செய்கையில்.... கண்ணன் ஸக பரிவாரங்களுடனும் ஸர்வ அலங்காரத்துடனும் ஸ்ரீ வில்லிபுத்தூரில் வந்து ஸாஸ்திரம் சொல்லும் முறையில் தன்னை விவாகம் செய்துகொண்டதாக ஸ்வப்பனம்கண்டு பொழுது விடியும் சமயம் கண்விழித்துக்கொண்டு தான் சொப்பனத்தில் கண்ட இன்பங்களை தன் உயிர்த்தோழியுடன் கூறுகின்றாள் இப்பத்துப்பாசுரத்திலும்—

ஆண்டாள் அருளிச்செயலில் ஆருந்திருமொழி

வாரணமாயிரம்:—

பாசு: **வாரணமாயிரம் சூழவலஞ்செய்து நாரண நம்பி**
நடக்கின்றான் என்று எதிர் *
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும் தோரணம்
நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான் 1

உரை : எனது உயிர்த்தோழியே ! சகல குணங்களும் நிறைந்தவருன ஸ்ரீமன் நாராயணன்.... ஆயிரக்கணக்கில் யானைகள் சூழ்ந்துவர பிரதக்ஷிணமாக இங்கே எழுந்தருளுகிருன் என்று வாத்தியகோஷங் களால் அறிந்து பட்டணம் முழுதும் அவனுக்கு எதிர்முகமாக பொன் மயமான பூர்ண கும்பங்களை வைத்து தோரண ஸ்தம்பங்கள் நாட்டி இருக்க நான் சொப்பனத்தில்கண்டு அனுபவித்தேன்—இன்னும் 1

பாசு : நாளை வதுவை மணமென்று நாளிட்டு பாளைகமுகு
பரிசுடைப் பந்தற்க்கீழ் *
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ ! நான் 2

உரை : தோழீ ! நாளைக்கு விவாஹ மஹோத்ஸவம் என்று முகூர்த்த நாள் நிச்சயித்து பாளைகளோடு கூடின பாக்கு மரங்களால் அலங் காரம் செய்த மணப்பந்தலில் நரஸிம்மனென்றும், மாதவனென்றும், கோவிந்தன் என்றும் திருநாமங்கள் பூண்ட ஒரு யௌவனபுருஷன் பிரவேசிப்பதை நான் கனவில்கண்டேன்—மற்றும் 2

பாசு : இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் வந்திருந்து
என்னை மகள்பேசி மந்திரித்து *
மந்திரக் கோடியுடித்தி மணமாலை அந்தரி சூட்டக்
கனாக் கண்டேன் தோழி ! நான் 3

உரை : இந்திரன் முதலான தேவர்களுடைய கூட்டங்கள் எல்லாம் இப் பூவுலகில் இந்த இடத்தில் வந்திருந்து என்னைக் கல்யாணப் பெண்ணாகப் பேசி நிச்சயித்து அதற்கு மேல் ஸம்பந்திகள் ஒருவர்க் கொருவர் செய்து கொள்ளவேண்டிய ஏற்பாடுகள் விஷயமாக பேசி முடிவு செய்து கொண்ட பிறகு எனக்கு துர்க்கையாகிற நாத்தனார் கல்யாணப்புடவையை உடுத்தி பரிமளம் மிகுந்த புஷ்பங்களையும் சூட்ட தோழீ ! நான் கனவில்கண்டேன் — துர்க்கையானவள் கண்ணபிரானுக்கு உடன்பிறந்தவளாதலால் ஆண்டாளுக்கு நாத்த னாராக ஆனாள்—

பாசு : நால்த்திசைத்தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி *
பூப்புனைக் கண்ணிப் புனிதனோடு என் தன்னை காப்பு
நாண் கட்டக் கனாக் கண்டேன் தோழீ ! நான் 4

உரை : தோழீ ! இன்னும்— பரிசுத்தர்களும் வைதீகர்களுமான பல அந்தணர்கள்–நான்கு திசைகளிலிருந்தும் நாநாவகையான புண்ணிய தீர்த்தங்களைக்கொண்டு வந்து ஸகலவித ஸௌபாக்கியங்களும் உண்டாவதற்காக தம்பதிகளாகிய எங்களை அத்தீர்த்தங்களால் பலகாலும் புரோக்ஷித்து வேதவாக்கியங்களை எடுத்து ஓதி ஆசீர்வாதங்கள்செய்து பல வகைப் புஷ்பங்கள் புனைந்த மாலையையுடையவனாய் பரமபாவனனான கண்ணபிராளுேடு என்னை இணைத்து கங்கண நூல் கட்டும் நிலைமையை நான் கனவில் கண்டேன்–கண்டு உளம் மகிழ்ந்தேன் 4

பாசு கதிரொளிதீபம் கலசமுடனேந்தி சதிரின மங்கையர்
தாம் வந்து எதிர்கொள்ள *
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டு எங்கும்
அதிரப்புகுதக் கனாக் கண்டேன் தோழீ ! நான் 5

உரை : பின்னும் தோழீ ! பருவத்தாலும் வடிவழகாலும் மிக்க எழில் வாய்ந்த இளம் மாதர்கள் சூரியனுடைய ஒளி போன்ற ஒளியுடைய மங்கள தீபங்களையும் பொன்னாலாகிய பூர்ணகும்பங்களையும் கையில் ஏந்திக்கொண்டு எதிர்கொள்ள.... மதுரை மாந்தர்க்கு அரசனான கண்ணபிரான்.... பொற்பாதுகைகளைத்திருவடியில் சாத்திக்கொண்டு பூமி எங்கும் அதிரும்படி ஸந்தோஷமாக நடந்து எழுந்தருளுவதைக் கனவில் நான் கண்டேன் என்கிருள்— 5

பாசு : மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத முத்துடைத்
தாமம் நிரைதாழ்ந்த பந்தற்க்கீழ் *
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம்பற்றக் கனாக் கண்டேன் தோழீ ! நான் 6

உரை : என்ன ஆச்சரியம் தோழீ ! மத்தளம் முதலான வாத்தியங்கள் அடிக்கவும், ரேகைகளையுடைய சங்குகளை ஊதவும் மைத்துனன் முறையையுடையவனாய் பரிபூரணனான (மது சூதன்) கண்ணபிரான் முத்துக்கள் கோத்தமாலைத்திரள்கள் தொங்கவிடப்பெற்ற பந்தலின் கீழே வந்து என் கைத்தலத்தைப்பற்றி என்னைப் (பாணிக்கிரஹணம்) விவாகம் செய்து கொள்ளக் கனவில்கண்டேன் என்கிருள்— 6

பாசு : வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல்படுத்துப் பரிதிவைத்து *
காய்ச்சின மாகளிறன்னான் என்கைபற்றி தீவலம்
செய்யக்கனாக் கண்டேன் தோழீ ! நான் 7

உரை : பிறகு தோழீ ! நன்ருக வேதம் ஓதின வைதிகர்கள் வேத வாக்கியங்களை உச்சரிக்க... அந்தந்தக் காரியங்களுக்கான மந்தி ரங்களைக் கொண்டு பசுமையான இலைகளையுடைய நாணல்புல்லை அங்கங்கே அமைத்து மிக்க சினங்கொண்ட மத்த கஜம் போல் செருக்குடைய கண்ணபிரான் என்கையைப்பிடித்துக்கொண்டு அக்கி னியைச் சுற்றிவலமாக வரக்கனவில்கண்டேன்— 7

பாசு : இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்ருவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி *
செம்மையுடைய திருக்கையால் தான்பற்றி அம்மி
மிதிக்கக் கனுக் கண்டேன் தோழீ ! நான் 8

உரை : இப்பிறவிக்கும் இனிமேல் வரும் பிறவிகள் எல்லாவற்றிற்கும் நமக்கு சரணமடையத்தக்கவனும் யாவருக்கும் மேலாக இருப்ப வனும் சகல கல்யாண குணங்கள் நிறைந்தவனும் நாராயணனுமான கண்ணபிரான்.... அழகிய செந்தாமரைமலர் போன்ற தனது திருக் கையினுல் எனது காலைப்பிடித்து அம்மியின் மேல் எடுத்து வைக்க தோழீ ! நான் கனவில் கண்டேன்—என்கிருள்— 8

பாசு : வரிசிலைவாள்முகத்து என்னைமார்தாம் வந்திட்டு
எரி முகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி *
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என்கை வைத்து
பொரி முகந்தட்டக் கனுக்கண்டேன் தோழீ ! நான் 9

உரை : அழகிய வில் போன்ற புருவத்தையும் ஒளிபொருந்திய முகத் தையுடையவர்களுமான எனது தமயன்மார்கள் வந்து அக்கினியை நன்ருக ஜ்வலிக்கச்செய்து அதன் முன்னே என்னை நிறுத்தி... ஒரு காலத்தில் நரஸிம்ஹமுகத்தையுடையவனுய் அவதரித்த அச்சுதனுன கண்ணபிரானுடைய திருக்கையின் மேலே என்னுடைய கைகளை வைத்து பொரிகளை அள்ளி அவ்வக்கினியில் பரிமாற தோழீ! நான் கனவில்கண்டேன்— 9

பாசு : குங்கும மப்பி குளிர்சாந்தமட்டித்து மங்கள வீதி
வலம் செய்து மண நீர் *
அங்கு அவனேடும் உடன் சென்று அங்கு ஆனை
மேல் மஞ்ஜன மாட்டக்கனுக் கண்டேன் தோழீ! நான் 10

உரை : மற்றும் தோழி! எங்களுக்கு அக்கினியின் முன்பாக நின்றதால் உண்டான வெப்பம் தீர... குளிர்ந்த குங்குமக் குழம்பையும் சந்தனச் சேற்றையும் திருமேனி எங்கும் கனக்கப்பூசி இந்தத்திருக் கோலத்தோடெ இருவரும் சேர்த்தியாய் யானையின் மீதேறி அலங்காரங்கள் செய்து விளங்குகிற திருவீதிகளிலே வலம் வந்து (ஊர் வலம் வந்து) வஸந்த ஜலத்தினுல் (எங்கள் இருவரையும்) திருமஞ்ஜனம் ஆட்டப் பெற்றதாகக் கனவில் கண்டேன் என்கிருள்— 10

பாசு : **ஆயனுக்காகத்தான் கண்டகனுவினை வேயர் புகழ்**
வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொல் *

தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர். வாயும் நன்
மக்களைப் பெற்று மகிழ்வரே **11**

உரை : வேயர் குலத்தவரால் புகழப்பட்டவரும் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குத் தலைவருமான பெரியாழ்வாருடைய திருமகள் ஆண்டாள் தான் கோபால கிருஷ்ணனுக்கு வாழ்க்கைப்பட்டதாகக் கனுக்கண்டதைக்குறித்து அருளிச்செய்த தமிழ்த் தொடரான இந்தப்பத்துப் பாட்டுக்களையும் ஓதுபவர்கள் நற்குணங்கள் அமைந்த புத்திரர்களைப் பெற்று ஆனந்தமாக வாழ்வார்கள்— 11

அடிவரவு— வாரணம் நாளை இந்திரன். நாற்றிசை கதிர் மத்தளம் வாய் இம்மை வரிசிலை குங்குமம் ஆயன் கர்ப்பூரம்—

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம் :—

ஆண்டாள் அருளிச்செயலில் ஏழாந்திருமொழி

கர்ப்பூரம் நாறுமோ?

அவதாரிகை : எம்பெருமானுடைய திருப்பவழவாயில் நித்திய வாஸம் பண்ணுகிற பாஞ்ச ஜன்யம் என்னும் சங்கைப்பார்த்துக்கூறும் பாசுரங்கள்—

பாசு : **கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?**
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?

மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே! 1

உரை : கம்பீரமாகவும் வெறுப்பாகவும் இருக்கின்ற ஸ்ரீ பாஞ்ச ஜன்யமே! குவலயாபீடமென்கிற யானையின் கொம்பை முறித்த கண்ணபிரானுடைய திருவதரத்தின் ரஸத்தையும் வாஸனையும் பற்றி ஆசையோடே உன்னை நான் கேட்கின்றேன். அப்பெருமானுடைய சிவந்த அழகிய பவளம் போன்ற திருவதரமானது பச்சைக்கற்பூரம் போல் பரிமளமாக இருக்குமோ? அல்லது தாமரைப்பூப் போலே பரிமளமாக இருக்குமோ? மதுரமான ரஸத்தையுடையதாக இருக்குமோ? இன்னபடி இருக்கும் என்று எனக்குச் சொல்லு— 1

பாசு : **கடலில் பிறந்து கருதாது பஞ்சசனன் உடலில்**
வளர்ந்து போய் ஊழியான் கைத்தலத்
திடரில் குடியேறித்தீயவசார் நடலைப்பட முழங்குந்
தோற்றத்தாய் நற்சங்கே **2**

உரை : இப்பாசுரத்தில் அதிசயத்துடனும் கொஞ்சம் அஸூயையுடனும் சொல்லுகிருள். அழகான சங்கே! நீ உப்பு சமுத்திரத்திலே பிறந்து அங்கிருந்து பஞ்சசனனென்ற அசுரனுடைய உடலுக்குள்ளே போய் வளர்ந்தாய்? இப்படி மட்டமாகப் பிறந்த இடத்தையும் வளர்ந்த இடத்தையும் நினையாமல்.... எம்பெருமானுடைய கைத்தலமாகிற உயர்ந்த இடத்திலே போய்குடி புகுந்துகொண்டு கொடிய அசுரர்கள் துன்பப்படும்படியும் குடல் குழம்பும்படியாகவும் கோஷம் செய்யும் படியான மேன்மையுடையதாக இருக்கின்ருய் உன் பெருமையே பெருமை....ஆனல் அக்கண்ணபிரானும் யது குலத்தில்பிறந்து, திருவாய்பாடியில் வளர்ந்து, ஸ்ரீ துவாரகையை படைவீடாகச் செய்து கொண்டு குடியேறினவன்தானே?— 2

பாசு : **தடவரையின் மீதே சரற்கால சந்திரன் இடையிவாவில்**
வந்து எழுந்தாலேபோல நீயும் *
வட மதுரையார் மன்னன் வாசுதேவன் கையில்
குடியேறி வீற்றிருந்தாய் கோலப்பெருஞ் சங்கே! **3**

உரை : அழகிய பெரிய சங்கே! சரத்காலத்துச் சந்திரன் பௌர்ணமி நாளில் பெரிதான உதய கிரியிலே வந்து உதித்தாற்போல நீயும் வட மதுரையிலுள்ளார்க்கு அரசனான கண்ணபிரானுடைய திருக்கரத்தில் குடிபுகுந்து உன் மேன்மை எல்லாம் தோற்ற இருக்கின்ருய்— 3

பாசு : **சந்திர மண்டலம் போல் தாமோதரன் கையில்**
அந்தரமொன்றின்றி ஏறி அவன் செவியில் *
மந்திரம் கொள்வாயே போலும் வலம்புரியே
இந்திரனும் உன்னோடு செல்வத்துக்கேலானே **4**

உரை : வலம்புரிச் சங்கே ! கண்ணபிரானது கையிலே சந்திரமண்டலம் போலே விளங்கா நின்று ஒரு நொடிப்பொழுதும் அத்திருக்கையை விட்டுப்பிரியாமல் இருந்து கொண்டு அவனது திருச்செவியோடே அணைந்தாப் போல் இருப்பதனல் அவனுடைய காதில் ஏதோ ரகசியம் ஓது பேசுகிருய் போலிருக்கின்ருய். சிறந்த செல்வம் பெற்றவனுகப் புகழப்படுகின்ற இந்திரனும் உன் செல்வத்திற்கு இணையாக மாட்டான்— 4

பாசு : உன்னேடு உடனே ஒரு கடலில் வாழ்வாரை இன்னுர் †
இணையா ரென்னு எண்ணுவாரில்லைகாண் *
மன்னுகி நின்ற மதுசூதன் வாயமுதம் பன்னுளும்
உன்கின்ருய் பாஞ்ச சன்னியமே ! 5

உரை : ஓ சங்கே ! நீ பிறந்த ஒரே கடலில், உன்னேடு கூட உன்னைப்போலவே வாழப்பிறந்தவர்கள் மற்றும் பல பேர் இருக்க....அவர்களை ஒரு பதார்த்தமாக நெஞ்சிலும் யாராவது நினைப்பாருண்டா ? இல்லை. நீ ஒருவன் மாத்திரம் ஸர்வஸ்வாமியயிராநின்ற கண்ணபிரானுடைய திருவாயின முதத்தை பல காலமாக அல்லும் பகலும் அருந்துகின்ருய் ஆகையால் நீயே பாக்கியசாலி உன்னுடைய பாக்கியம்—என்று கொண்டாடுகிருள்— 5

பாசு : போய்த்தீர்த்தமாடாதே நின்ற புணர்மருதம் சாய்த்
தீர்த்தான் கைத்தலத்தே ஏறிக்குடிகொண்டு *
சேய்த்தீர்த்தமாய் நின்ற செங்கண்மால் தன்னுடைய
வாய்த்தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் வலம்புரியே ! 6

உரை : வலம்புரிச் சங்கே ! வெகுதூரம் வழி நடந்து போய் கங்கை முதலிய புண்ணியதீர்த்தங்களிலே நீராடுகையாகிற கஷ்டங்கள் படாமல் நாரத சாபத்தாலே மரமாய் நின்ற இரட்டை மருத மரத்தை முறித்துத்தள்ளின கண்ணபிரானுடைய திருக்கைத்தலத்திலேறி அங்கே நித்தியவாஸம் பண்ணிக்கொண்டு லோகோத்தரமான தீர்த்தமாகிய புண்டரீகாக்ஷனுடைய (கண்ணபிரானுடைய) வாயமுதமாகிற புண்ய தீர்த்தத்திலே சதாகாலமும் படிந்து நீராடும் பாக்கியம் பெற்றிருக்கிருய் உனது அதிருஷ்டமே அதிருஷ்டம்— 6

பாசு : செங்கமல நாண்மலர் மேல் தேனுகரும் அன்னம்
போல் செங்கண் கருமேனி வாசுதேவனுடைய *
அங்கைத்தலமேறி அன்னவசஞ்செய்யும்
சங்கரையா ! உன் செல்வம் சால அழகியதே ! 7

உரை : சங்குகளிற் சிறந்த பாஞ்சசன்னிய மென்னும் சங்கே! அப்போதலர்ந்த செந்தாமரைமலரில் படிந்து தேனைப்பருகுகின்ற அன்னப் பறவை போன்று.... சிவந்த கண்களையும், கறுத்த திருமேனியையு முடைய கண்ணபிரானது கைத்தலத்தின் மீதேறி கண்துயில் கொள்கின்ற உன்னுடைய செல்வமானது மிகவும் சிறந்ததாக இருக்கிறது. 7

பாசு : **உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்**
கண்படை கொள்ளல் கடல் வண்ணன் கைத்தலத்தே*
பெண்படையார் உன்மேல் பெரும் பூசல் சாற்றுகின்றார்
பண்பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே! 8

உரை : ஓ சங்கே! நீ செய்வது சிறிதும் நியாயமில்லை. ஏனென்றால் உலகங்களை எல்லாம் அளந்தவனான கண்ணபிரானுடைய திருவாயிலுள்ள அமுதத்தை உண்பதும் கடல்போன்ற நிறத்தையுடைய அவனது கைத்தலத்தில் உறங்குவதுமாக இருக்கின்றாய்! இப்படி ஊணுமுறக்கமும் உனக்கு அங்கேயேயிருப்பதனால்... இப்படி எம்பெருமானோடு சதா போது போக்கவேணுமென்று ஆசைப்படுகின்ற பெண் குலத்தவர்கள் அனைவரும் (திருவாய்பாடியிலுள்ள கோபியரும், மதுரையிலுள்ளாரும்) உன் விஷயமாக இப்பாவி இப்படிச் செய்கிறாளே என்றும் எங்கள் ஜீவனத்தை இவள் கொள்ளை கொள்ளுகிறானென்றும் பெருங்கூச்சலிடுகிறார்கள். இது உனக்குத்தகுதியல்ல. 8

பாசு : **பதினாறுமாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப ***
மதுவாயில் கொண்டாற்போல் மாதவன் தன்வாயமுதம் *
பொதுவாக உண்பதனைப் புக்கு நீ யுண்டக்கால் *
சிதையாரோ? உன்னோடு செல்வப்பெருஞ் சங்கே! 9

உரை : பெரிய செல்வம் படைத்த சங்கமே! நீ அல்லும் பகலும் உன்கிற கண்ணபிரானது வாயமுதம் உனக்கொருவனுக்கே உரிமைப் பட்டதன்று, பதினாறுயிரம் தேவிமார்கள் அக்கண்ணபிரானுடைய வாயமுதத்தை நாம் பருகவேணுமென விரும்பி எதிர்பார்த்திருக்கையில்.... பகவத் சம்பந்திகள் எல்லாரும் பொதுவாக உண்ண வேண்டிய அமிருதத்தை நீ ஒருவனே புகுந்து தேனை உண்கிறாப்போல் உண்டால் அவர்கள் உன்னோடு பிணங்காதிருக்கமுடியுமோ? அவர்களுடைய மனவருத்தத்திற்கு நீ ஆளானால் உன்னை ஸாது கோஷ்டியில் மதிக்கமாட்டார்கள் என்கிறாள்— 9

பாசு: பாஞ்ச சன்னியத்தைப் பற்பனுபனேடும் *
வாய்ந்த பெருஞ்சுற்ற மாக்கிய வண்புதுவை *
ஏய்ந்த புகழ்பட்டபிரான் கோதைத்தமிழ் ஈரைந்தும் *
ஆய்ந்தேத்தவல்லா ரவரும் அனுக்கரே— 10

உரை: திருச்சங்கை எம்பெருமானேடே கிட்டின பெரிய உறவை யுடையதாக வார்த்தை சொன்ன அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த வளும், நிறைந்தபுகழையுடையவளும் பெரியாழ்வாருடைய திருமகளு மான ஆண்டாள் அருளிச்செய்த இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தையும் அனுஸந்தித்து இப்பாசுரங்களால் எம்பெருமானைத்துதிக்க வல்லவர் கள் பாஞ்சசன்னியம் போல அவனுக்கே அந்தரங்கராவார்கள்— 10

அடிவரவு— கனுப்பூரம் கடல் தடவரை சந்திரன் உன்னேடு போய் செங்கமலம் உண்பது பதினறு பாஞ்ச வின்—

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்:—

ஆண்டாள் அருளிச்செயலில் பத்தாந்திருமொழி

கார்க்கோடல் பூக்காள்

அவதாரிகை: ஆண்டாளின் கண்ணெதிரில் வந்து தோன்றின கார் (கருமேகங்கள்) நன்ருக மழைபொழிந்தன, உடனே வர்ஷா காலத் தில் புஷ்பிக்கக்கூடிய புஷ்பங்களெல்லாம் புஷ்பிக்கத் தொடங்கின. இவை இவளுடைய இந்தவிரக தசையிலே வந்து தோற்றவும் இவளு டைய ஆற்ருமை மிகுந்து உயிருடன் தப்பிப் பிழைக்க முடியாத அவஸ்த்தை ஆயிற்று அதனல் மிகவும் துவண்டு போய் பேசுகிற பாசுரங்களாக இருக்கிறது இத்திருமொழியில்—

பாசு: கார்க்கோடல் பூக்காள்! கார்க்கடல் வண்ணன்
என்மேல் உம்மைப் *
போர்க்கோலம் செய்து போரவிடுத்தவன் எங்குற்ருன்?
ஆர்க்கோ இனிநாம் பூசலிடுவது? அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லேன்
அந்தோ! * 1

உரை : கோடல் பூக்கள் என்று ஒரு புஷ்பஜாதி உண்டு, அது காந் தள்பூ என்றும் சொல்லப்படும் அவை கார்காலத்திலே மிகுதியாக மலரும், அப்புஷ்ப ஜாதியில் கறிய நிறமுள்ள பூக்களும் உண்டு அவை ஆண்டாளுக்கு கண்ணனது திருநிறத்தை நினைப்பூட்டி அவனை மிகவும் வருத்துவதால் அவைகளைப்பார்த்துப் பேசுகிருள்— ஓ கறுத்த காந்தள்ப்பூக்களே ! என்னைக்கொலை செய்வதற்கென்று உங்களை யுத்தத்திற்குத் தகுந்த மாதிரி அலங்கரித்து என் மேலே பாயும்படி அனுப்பிய கறுத்த கடல் போன்ற வடிவையுடையனுன கண்ணபிரான் எங்கே இருக்கிருன் ? என்று வினவ... அசேதனங் களான அப்பூக்கள் மறுமொழி ஒன்றும் சொல்லாதிருக்கவே இப்பூக் களும் நம்மை லக்ஷியம் செய்யவில்லையே என வருந்தி பூக்களே ! உங்களால் மிகவும் நலிவுபட்ட நான் இனிமேல் யாரிடத்தில் போய் என்துயரை முறையிட்டுக்கொள்ளுவதோ தெரியவில்லை. அழகிய திருத்துழாய் மாலைக்கு ஆசைப்பட்டு ஓடுகின்ற நெஞ்சையுடைய வளாக இருக்கின்றேனே ! ஐயோ ! என்செய்வேன்— 1

பாசு : **மேல் தோன்றிப்பூக்காள்! மேலுலகங்களின் மீது போய் ***
மேல்தோன்றும் சோதி வேத முதல்வர் வலங்கையில் *
மேல் தோன்றும் ஆழியின் வெஞ்சுடர் போலச்சுடாது எம்மை *
மாற்ருேவைப்பட்டவர் கூட்டத்து வைத்துக் கொள்கிற்றிரே— 2

உரை : கீழே கோடல்பூக்கள் பண்ணின ஹிம்ஸையைப் பொறுக்க மாட்டாமல் அவற்றிலிருந்து கண்ணை மீட்டு மேலொருபக்கத்திலே வைக்க அங்கே மேல் தோன்றிப்பூக்கள் மலர்ந்து தோன்றின. அவை எம்பெருமானுடைய சிரிப்பை நினைப்பூட்டி நலியவே அவற் றைப்பார்த்துப் பேசுகிருள். உயரப்பூத்திருக்கிற காந்தள் பூக்களே! மேலுலகங்கள் யாவற்றையும் கடந்து அவற்றுக்கு மேற்பட்டு விளங் குகின்ற...தனது சோதி என்கிற பரமபதத்தில் எழுந்தருளி இருக்கிற வேதப்பொருளால் காணத்தக்க பரம புருஷனுடைய வலதுதிருக் கரத்திலே விளங்குகின்ற திருவாழியாழ்வானுடைய உக்கிரமான தேஜஸ்ஸைப்போலே தகிக்காமல் என்னை.... ப்பிரகிருதிமண்டலத்தை நீங்கின அடியார்களுடைய கூட்டத்திலே கொண்டு போய்சேர்ப் பீர்களா ?— 2

பாசு : **கோவை மணாட்டி! நீ உன் கொழுங்கனிகொண்டு எம்மை***
ஆவிதொலைவியேல் வாயழகர் தம்மை யஞ்சுதும் *
பாவியேன் தோன்றிப் பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல்
நாவுமிரண்டுள † வாய்த்து நாணிலியேனுக்கே * **3**

உரை . மேல்புறங்களினின்றும் கண்ணை மீட்டு பக்கங்களில் நோக்குகிருள், அங்கே ஒரு செடியிலே கோவைக் கொடிபடர்ந்து பழுத்துக் கிடந்து அக்கனிகள் எம்பெருமானுடைய திருவதரத்தை நினைப்பூட்டவே அவற்றைப்பார்த்துப் பேசுகிருள். அம்மா! கோவைக் கொடியே! உன்னுடைய அழகிய கனிகளைக்காட்டி என் உயிரை சிதைக்கலாகாது, அழகியவாய்படைத்த பெருமான் விஷயத்திலே பயப்படுகின்றேன். நான் பிறப்பதற்கு முன் ஒன்றேயுரைப்பான் ஒரு சொல்லே சொல்லுவான் என்றபடி ஸத்தியவாக் உள்ளவனுக இருந்தவன்.... பாவியான நான் பிறந்த பின்பு லஜ்ஜை இல்லாதவளான என் விஷயத்திலே சேஷசாயியான பெருமாளுக்கும் தனது படுக்கையாகிற திருவனந்தாழ்வானைப்போல் இரண்டு நாக்குகள் உண்டா யின. அவன் இவ்வளவு உபேக்ஷை செய்தும் வெட்கம் கெட்டுப் போய் அவனையே நாடுகின்ற என்விஷயத்தில் சொல்லுவது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இருக்கின்ருன்— 3

பாசு : **முல்லைப்பிராட்டி ! நீ உன் முறுவல்கள்கொண்டு எம்மை ***
அல்லல் விளைவியேல் ஆழிநங்காய் ! உன்னடைக்கலம் *
கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனர் *
சொல்லும்பொய்யானுல் நானும் பிறந்தமை பொய்யன்றே4

உரை : கோவைக்கொடியை விட்டுக் கண்ணைத்திருப்பி வேருரிடத்தில் வைக்க.... அங்கே முல்லைக் கொடியானது நன்ருகப் பூத்துக் கிடந்தது அதைக்கண்டவுடன் எம்பெருமானுடைய புன்முறுவல் நினைவுக்கு வரவே ஆற்ற மாட்டாதவளாக அதின்காலிலே விழுகிருள் அம்மா! முல்லைக்கொடியே ! கோடல்பூ மேல் தோன்றிப்பூ கோவைக் கொடி இவைகளுக்கு ஒருவாறு தப்பிப்பிழைத்தோம் என்றிருக்கையில்... நீ எம்பெருமானது முறுவல் போன்ற உனது சிரிப்பைக்காட்டி என்னைத் துன்பப்படுத்தவேண்டாம்மா ! இதற்காக உன்காலிலே விழுந்து உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். வரம்புகடந்த தீங்கிழைத்து வந்த அரக்கியை (சூர்ப்பனகை) மூக்கை அறுத்துத் துரத்தின சக்ரவர்த்தித்திருமகனுடைய வார்த்தையே பொய்யாக ஆனுல் நான் பெரியாழ்வார் வயிற்றில் பிறந்ததும் பொய்யாக ஆவதன்ருே ? என்னுடைய பிறப்பு பலனுடைய தல்லவென்று வருந்துகிருள்— 4

பாசு : பாடும் குயில்காள் ! ஈதென்ன பாடல் ? நல்வேங்கட *
நாடர் நமக்கு ஒரு வாழ்வுதந்தால் வந்து பாடுமின் *
ஆடும் கருளக் கொடியுடையார் வந்து அருள் செய்து *
கூடுவர் ஆயிடில் கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே— 5

உரை : எப்பக்கம் நோக்கினுலும் ஒவ்வொரு புஷ்பம் கண்ணில் தோன்றி ஹிம்ஸைப்படுத்துகிறபடியால் கண்ணை முடிக்கொண்டால் சுகப்படலாம் என்றெண்ணி கண்ணை மூடிக்கொள்ளுகிருள், உடனே குயில்களின் பாட்டுக்கள் செவியில்பட்டன, அவற்றைக்கேட்டுத் தரிக்கமாட்டாதவளாய் அக்குயில்களை நோக்கி பாடுகின்ற குயில்களே! கடோரமான இக்கூச்சல் என்ன பாட்டு ? போறும் உங்கள்பாட்டை நிறுத்துங்கள் பரிசுத்தமான புனிதமான திருவேங்கட மலையை இருப்பிடமாகவுடைய பெருமாள் என் விஷயத்தில் வாழ்வைக்கொடுத்தால் (உங்கள் பாட்டைக்கேட்கும்படியான சக்தியைக்கொடுத்தால்) அப்பொழுது நீங்கள் இங்கே வந்து பாடுங்கள், அவருடைய வரவுக்கு ஸூசகமாக ஆனந்தத்தால் ஆடுகின்ற பெரிய திருவடியைத்வஜமாகக் கொண்டு கிருபை பண்ணி இங்கே வந்து சேர்வானுகில் அப்போது உங்களைக் கூப்பிட்டழைத்து உங்களது பாட்டுக்களைக் கேட்போம் என்கிருள்— 5

பாசு : கணமாமயில்காள் ! கண்ணபிரான் திருக்கோலம் போன்று *
அணிமா நடம்பயின்றுடுகின்றீர்க்கு அடிவீழ்கின்றேன் *
பணமாடரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள்
மணவாளர் நம்மைவைத்த பரிசிது காண்மினே— 6

உரை : சிலமயில்கள் கூட்டங்கூட்டமாக இருந்துகொண்டு கூத்தாடுவதைக்கண்டு தரிக்கமாட்டாதவளாய் அம்மயில்களை நோக்கிக் கூறுகிருள், கூட்டமாக இருக்கிற சிறந்த மயில்களே ! கண்ணபிரானுடைய அழகிய வடிவு போன்ற வடிவையுடையவர்களாக இருந்துகொண்டு அழகிய சிறந்த நாட்டியத்திலே பழகி ஆடுகின்ற உங்களுடைய காலிலே விழுந்து ஸேவிக்கின்றேன், உங்கள் ஆட்டத்தை நிறுத்துங்கள் இப்படிச் சொன்னவாறே ! அந்தோ ! பெரியாழ்வார் திருமகளாய் பெருமைவாய்ந்த நீ இப்படிச் சொல்லத்தகுமோ ? உன் காலிலன்றோ நாங்கள் விழக்கடவோம் என்று மயில்கள் மறுமொழி சொல்வதாகக்கொண்டு படமெடுத்து ஆடுகின்ற திருவனந்தாழ்வானுகிற சயனத்திலே காலமுள்ளவரையில் பள்ளிகொள்ளும் அழகிய மணவாளப் பெருமாள் எனக்கு உண்டாக்கித்தந்தவகை (லக்ஷணம்) இப்படி உங்கள் காலிலே விழும்படியாக ஆயிற்று— 6

பாசு : **நடமாடித்தோகை விரிக்கின்ற மாமயில்காள் உம்மை ***
நடமாட்டங்காணப் பாவியேன் நானோர் முதலிலேன் *
குடமாடு கூத்தன் கோவிந்தன் கோமிறைசெய்து எம்மை*
உடைமாடுகொண்டான் உங்களுக்கு
இனியொன்று போதுமே— 7

உரை : உங்கள் கூத்தை நிறுத்துங்கள் என்று மயில்களின் காலிலே இவள் விழுந்து வேண்டிக்கொண்டும் அவைகள் முன்னிலும் அதிகமாகத் தோகைகளை விரித்துக் கூத்தாடத் தொடங்கின, அவற்றை நோக்கி மீண்டும் தன் அவஸ்தையைக்கூறுகிறாள், கூத்தாடிக் கொண்டு தோகைகளை விரிக்கின்ற சிறந்த மயில்களே! உங்களுடைய கூத்தைப் பார்ப்பதற்கு பாவியான நான் ஒரு கைம்முதலும் இல்லாதவளாக இருக்கின்றேன், (எம்பெருமான் எனது எல்லா இந்திரியங்களையும் கொள்ளை கொண்டபடியால் காண்பதற்கு முக்கிய ஸாதனமான கண்ணையுடையேனல்லேன், குடக் கூத்தாடினவனான கோபால கிருஷ்ணன்....கேட்பாரற்று மிறுக்குகள் பண்ணி என்னுடைய எல்லாவற்றையும் இழந்து கிடக்கிற ஸர்வ ஸ்வத்தையும் (ஸர்வேந்திரியங்களையும்) அபகரித்துக் கொண்டவனாயிருக்க என் முன்னே கூத்தாடி என்னை இம்ஸிக்கையாகிற காரியம் உங்களுக்குத்தகாது— 7

பாசு : **மழையே மழையே! மண்புறம்பூசி உள்ளாய் நின்று ***
மெழுகூற்றினாற்போல். ஊற்றுநல் வேங்கடத்துள் நின்ற *
அழகப்பிரானார் தம்மை யென்னெஞ்சத்தகப்படத் *
தழுவநின்று. என்னைத்ததைத்துக்கொண்டு ஊற்றவும்
வல்லையே 8

உரை : ஓ மேகமே! மேற்புறத்திலே மண்ணைப்பூசிவிட்டு உள்ளே இருக்கும் மெழுகை உருக்கி வெளியில் ஊற்றுவது போல என்னை அணைந்து அன்தஸாரமான ஆத்மாவை உருக்கியழிப்பவரும் விலக்ஷணமான திருவேங்கடமலையிலே நிற்பவருமான அழகிய பெருமானை என் நெஞ்சகத்தில் நிறுத்தி நான் அணைக்கும்படி பண்ணிவைத்து பிறகு நீ வர்ஷிப்பாயாகில் அப்போதன்றோ உன்னுடைய வர்ஷம் ஆனந்தகரமாக இருக்கும் என்கிறாள்— 8

பாசு : **கடலே கடலே! உன்னைக்கடைந்து கலக்குறுத்து ***
உடலுள் புகுந்துநின்று ஊறலறுத்தவற்கு. என்னையும் *
உடலுள் புகுந்துநின்று ஊறவறுக்கின்ற மாயற்கு. என்*
நடலைகளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தியே 9

உரை : பிறகு கடலின் ஒலி ஓதம் காதில் விழத்தொடங்கிற்று. அப்பொழுது கடலை விளித்து ஒருவார்த்தை சொல்லுகிருள், ஓ கடலே! தனக்கு படுக்கையாக வாய்ந்த உன்னை மலைகளை கொணர்ந்து உன்னுள்ளே போட்டு குடல் குழம்பும்படி உன்னைக் கடைந்து கலக்கியதுமல்லாமல் உன்னுள் புகுந்து உன்னிடமிருந்த ஸாரமான அமுதத்தையும் கொள்ளை கொள்ளச் செய்தவனன்ருே ? அவன், அதுபோலவே இப்பொழுது என் உடலிலும் புகுந்திருந்து என் உயிரை அறுப்பவரான எம்பெருமானுக்கு... விண்ணப்பம் பண்ணும் படியாக.... என்துக்கங்களை எல்லாம் அவர் படுக்கையான திருவனந் தாழ்வானிடத்தில் நீ போய்ச்சொல்லவேணும் என்கிருள்— 9

பாசு : **நல்ல என் தோழி ! நாகணைமிசை நம்பரர் ***
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென் ? *
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை *
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே 10

உரை : இப்படி ஆண்டாள் பகவத் விரகத்தாலே ஆற்றமாட்டாமல் படுகிற அலமாப்பைக்கண்ட உயிர்த்தோழியானவள்... ஐயோ இவள் இப்பாடுபடுகின்ருளே இவளை நாம் எப்படித்தேற்றுவது என்று வியஸனித்திருக்கையில் அதைக்கண்ட ஆண்டாள்... எனது உயிர்த் தோழியே ! நீ அஞ்சவேண்டாம் திருவனந்தாழ்வானுகிறபடுக்கையிலே சயனித்திருக்கிற நம்பெருமாள்... பெரும் செல்வம் படைத்தவர், எல்லாரினும் மேற்பட்டவர், நாமோவென்ருல் ? மிகவும் க்ஷுத்ரரான மனிதர்களாக இருக்கின்ருேம், இப்படிப்பட்ட நாம் எப்படி அவனை அணுகமுடியும் ? ஆனுல் இதற்கும் ஓர் வழியுண்டு, ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாகரான பெரியாழ்வார்.... தமக்கு ஸ்வாதீனராக இருக்கிற அப்பெருமானை அவர் கூப்பிடும் வகையில் நீராடவாராய், பூச்சூடவாராய், காப்பிடவாராய், என்கிறபடி அழைப்பராகில் அவர் அழைத்தவாறே அவர் பதறி ஓடிவருவார் அப்போது அவனை நாம் நன்ருக ஸேவிப்போம் என்று சமாதானமடைகிருள்— 10

அடிவரவு— கார் மேல் கோவை முல்லை பாடுங் கண நடமாடி மழை கடலே நல்லதாம்—

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஆண்டாள் அருளிச்செயலில் பதினுன்காந் திருமொழி

பட்டிமேய்ந்தோர்

அவதாரிகை : தையொருதிங்களும் என்று தொடங்கி கண்ணனென்றும் கருந்தெய்வம் என்கிற கீழ்த்திருமொழியளவும் ஆண்டாள்பட்ட கிலேசமெல்லாம் தீரும்படி கண்ணபிரான் பிருந்தாவனத்தில் வந்து ஸேவைதந்தருளப் பெற்றவளாய்த் தோழிகளை நோக்கி அப்பேற்றை நீங்களும் பெற்றீர்களா ? கண்ணபிரானைக் கண்டதுண்டோவென்று கேட்பதும் ஆம் நன்ருகக்கண்ட துண்டு என்று விடையளிப்பதுமாக அமைத்து அருளிச் செய்த பாசுரங்கள் இப்பத்தும்

பாசு : **பட்டி மேய்ந்தோர் காரேறு பலதேவற்கு ஓர் கீழ்க்கன்ருய் ***
இட்டீறிட்டுவிளையாடி இங்கே போதக்கண்டீரே ? *
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி *
விட்டுக்கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே * 1

உரை : சிறைக்கூடத்தில் கட்டுண்டு கிடப்பதுபோல பரமபதத்தில் அனந்தன் மடியிலும் ஸேனமுதலியார் பிரம்பின்கீழும் பெரியதிருவடியின் சிறகின் கீழிலும் ஒடுங்கிக்கிடந்த பெருமாள் கண்ணபிரானென்கிற கறுத்தகாளையொன்று காவலில்லாமல் யதேச்சையாகத் திரிந்துகொண்டு.... பலராமனுக்கு ஒப்பற்ற தம்பியாய் சந்தோஷ அனுபவமாகப் பலவகையான கோலாஹலங்களைச் செய்து விளையாடிக்கொண்டும் இப்படிவரும்போது பார்த்தீர்களா? என்றுகேட்க... தனக்கு மிகவும் பிரீதிபாத்ரமான பசுக்களை திருப்தியாக மடக்கி மேய்த்துத் தண்ணீர் குடிப்பித்து அவற்றை மேயவிட்டு பரமானந்தத்துடன் இருப்பதை பிருந்தாவனத்தில்பார்த்தோம் (ஸேவித்தோம்) என்கிருர்கள்— 1

பாசு : **அணுங்க என்னைப்பிரிவுசெய்து ஆயர்பாடி கவர்ந்துண்ணும் ***
குனுங்கு நாறிக்குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே ?
கணங்களோடு மின்மேகம் கலந்தற்போல வனமாலை *
மினுங்க நின்றுவிளையாட விருந்தாவனத்தே கண்டோமே2

உரை : நான் வருத்தமடையும்படியாக என்னைப்பிரியவிட்டுப் போய் ஆயர்பாடியில் பிரவேசித்து வெண்ணை களவாடி உண்பவனும், அவ் வெண்ணையின் மொச்ச நாற்றம் நாறுமவனுய் இளம் ரிஷபம் போன்ற வனுமான கோவர்த்தன கிரியை குடையாய்தாங்கிய கண்ணபிரா னைக்கண்டீர்களோ ? என்று கேட்க.... மின்னலும் மேகமும் ஒன்ருே டொன்று சேர்ந்தாற்போல கறுத்த திருமேனியிலே மின்னல் போன்று வனமாலை விளங்கப்பெற்று.... தோழன்மார் கூட்டங்களோடுகூட விளையாடா நிற்பதை பிருந்காரண்யத்தில் பார்த்தோமேஎன்கிருர்கள் 2

பாசு : **மாலாய்ப்பிறந்த நம்பியை மாலேசெய்யும் மனுளனை ***
ஏலாப்பொய்களுரைப்பானை யிங்கே போதக்கண்டீரே ? *
மேலால் பரந்த வெயில் காப்பான் வினதை
சிறுவன் சிறகென்னும் *
மேலாப்பின் கீழ்வருவானை விருந்தாவனத்தே
கண்டோமே 3

உரை : பெண்களிடமிருந்து உண்டான வ்யாமையல் மோஹமே ஒரு உருவாய் பிள்ளையாய் பொருந்தாத பொய்களைச் சொல்லுகிறவனுன கண்ணபிரானை இந்த இடத்தில் வரக்கண்டீர்களோ ? என்க....மேலே பரவி இருக்கின்ற வெய்யிலை தமது திருமேனியில் படாமல்தடுப் பதற்காக.... வினதையின் பாலனுன கருடனுடைய சிறகாகிற மேல் கட்டியின் கீழ் எழுந்தருளா நின்ற அப்பெருமானை இப்பிருந்தா வனத்திலேயே ஸேவித்தோம் என்கிருர்கள்— 3

பாசு : **கார்த்தண் கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு**
படுத்து * என்னை *
ஈர்த்துக்கொண்டு விளையாடும் ஈசன் தன்னைக்
கண்டீரே ? *
போர்த்த முத்தின் குப்பாயப் புகர் மால் யானைக்
கன்றே போல் *
வேர்த்து நின்று விளையாட விருந்தாவனத்தே
கண்டோமே 4

உரை : மேகத்திலே குளிர்ந்த இரண்டு தாமரைப்பூக்கள் பூத்த னவோ என்னும்படி அமைந்திருக்கிற திருக்கண்களாகிற வலையிலே என்னை அகப்படுத்தித்தான் போகுமிடமெங்கும் எனது நெஞ்சையும் இழுத்துக்கொண்டு போய் விளையாடித்திரியுமவனுன எம்பெருமானைக் கண்டதுண்டோ வென்று கேட்க போர்வையாகப் போர்த்த முத்துச் சட்டையையுடையதாய் மிகத்தேஜஸ்ஸுடையதாய் பெரிதான யானைக் குட்டியைப்போலே வேர்வையுற்று நின்று விளையாடும்போது பிருந்தா வனத்தில் கண்டோம் என்கிருர்கள்— 4

பாசு : மாதவனென் மணியனை வலையில் பிழைத்த பன்றிபோல்*
எது மொன்றும் கொளத்தாரா ஈசன்தன்னைக்கண்டீரே? *
பீதகவாடையுடைதாழப் பெருங்கார் மேகக் கன்றேபோல்*
வீதியாரவருவானை விருந்தாவனத்தே கண்டோமே 5

உரை : லக்ஷ்மிபதியாயும் எனக்கு நீலரத்னம் போலே மிகவும் விருப்பமுடையவனும்... வலையில் அகப்பட்டுத் தப்பிப்பிழைத்த தொருபன்றி போலே செருக்குற்றவனும்...தன்னிடமுள்ள யாதொன் றையும் பிறர் கொள்ளும்படி கொடுக்காதவனுமான (ஒருவர்கைக்கும் எட்டாதவனுன) ஸர்வேஸ்வரன் கண்ணபிரானைக் கண்டீர்களா என்று கேட்கபட்டாடையாலாய திருப்பரிவட்டமும் உத்தரீயமும் தொங்கத் தொங்க விளங்கிக்கொண்டிருக்க.... பருத்துக் கறுத்திருக் கிற மேகத்திடர் (சிறிய மேகத்திறள் போலே) திருவீதி நிறைய எழுந் தருளுகின்ற பெருமானை பிருந்தாவனத்திலே கண்களாரக்கண்டோம் என்கிறார்கள்— 5

பாசு : தருமமறியாக் குறும்பனைத் தன்கைச் சார்ங்கமதுவே போல் *
புருவவட்டமழகிய பொருத்த மிலியைக் கண்டீரே ? *
உருவுகரிதாய் முகம்செய்தாய் உதயபருப்பதத்தின்மேல் *
விரியும் கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண்டோமே 6

உரை : தயை என்கிற தர்மத்தை சிறிதும் அறியாதவனும் குறும்பு செய்வதையே தொழிலாகக்கொண்டவனும், தன்கையிருக்கிறசார்ங்க வில்லைப்போல் வட்டமாயும் அழகாகவும் இருக்கிற புருவங்களை யுடையவனும், தன்னையுகந்தாரோடு பொருந்திவாழப்பெறுதவனு மான பெருமானைக்கண்டதுண்டோ ? என்க... கண்டவர் கண்களெல் லாம் குளிரும்படியும் இருண்ட வடிவையுடையவனும், செந்தாமரை போல் சிவந்த திரு முகமண்டலத்தையுடையவனும் உதயபர்வதத் தின்மேல் சூரியன் உதிக்கும் போதுள்ள பிரபாவிசேஷத்தையுடைய கண்ணபிரானை பிருந்தாவனத்தில் கண்டோம் என்கிறார்கள்—தயை யில்லாதவன் குறும்புசெய்வன் என்றெல்லாம் சொன்னது கண்ணன் தன்னை வருத்தும் செயல்களை இப்பாசுரத்தில் சொல்லுகிருள் என்பது கருத்து— 6

பாசு : **பொருத்த முடைய நம்பியை புறம் போல் உள்ளும் கரியானை**
கருத்தைப்பிழைத்து நின்ற அக்கருமாமுகிலைக்கண்டீரே? *
அருத்தித்தாரா கணங்களால் ஆரப் † பெருகு வானம்போல் *
விருத்தம் பெரிதாய் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே 7

உரை : பற்றுடைய அடியவர்க்கு எளியனாக பொருத்தமுடைய ஸ்வாமியாய், உடம்புபோலே உள்ளமும் கறுத்திருப்பவனாய் நான் எண்ணுமெண்ணத்தை பொய்யாகச் செய்பவனாய், (நான் அவனே அடைக்கலமென்று நம்பி இருக்கிற நம்பிக்கையைப் போக்கடிப்பவனாய் என்பது) கருத்துப் பெருத்த முகில் போன்றவனான அக்கண்ணபிரானைக் கண்டதுண்டோவென—விரும்பத்தக்க நக்ஷத்திரக்கூட்டங்களாலே எங்கும் நிறைந்திருக்கிற ஆகாசம்போலே பெருங்கூட்டமாக எழுந்தருளுகிற அப்பெருமானை பிருந்தாவனத்தில் கண்டோமே என்கிறார்கள்— 7

பாசு : **வெளிய சங்கொன்றுடையானைப் பீதகவாடையுடையானை ***
அளி நன்குடைய திருமாலை ஆழியானைக்கண்டீரே ? *
களிவண்டு எங்கும் கலந்தாற்போல் கமழ் பூங்குழல்கள் தடந்தோள் மேல் *
மிளிர நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே 8

உரை : கறுத்த திருமேனியில் அதற்கு நேர்மாறான சுத்தவெண்மையான பாஞ்சசன்னியமென்கிற ஒரு சங்கை கையில் உடையவனாயும், பீதாம்பரத்தை உடையாகக்கொண்டவனும், பரிபூர்ணமான கிருபையை உடையவனும், திருவாழி ஆழ்வானையுடைவனும், லக்ஷ்மிபதியுமான கண்ணனைக் கண்டீர்களோ ? வென்க ஆம் மதுபானத்தாலே களித்துள்ள வண்டுகளானவை எப்புறத்திலும் பரம்பினாற்போலே (பரவினாற்போலே) பரிமளம் வீசுகின்ற அவனது அழகிய குழல்களானவை பெரிய திருத்தோள்களின் மேலே தாழ்ந்து அசைந்து விளங்க பிருந்தாவனத்தில் விளையாடுவதைக் கண்டோம் என்கிறார்கள்— 8

பாசு: **நாட்டைப் படையென்றயன் முதலாத்தந்த நளிர்மா மலருந்தி ***
வீட்டைப்பண்ணி விளையாடும் விமலன் தன்னைக் கண்டீரே ? *
காட்டை நாடித்தேனுகனும் களிறும் புள்ளுமுடன் மடிய *
வேட்டை யாடி வருவானை விருந்தாவனத்தே கண்டோமே 9

உரை: சிறிது இடத்தைத்தானே ஸ்ருஷ்டி செய்து.... மேலுள்ளவைகளை எல்லாம் (உலகங்களை எல்லாம்) நீங்கள் ஸ்ருஷ்டி செய்யுங்களென்று பிரமன் முதலான பிரஜாபதிகளைப் படைத்த குளிர்ந்த பெரிய மலரையுடைய திருநாபியாகிற வீட்டை நான்முகனுக்கு இருப்பிடமாக உண்டாக்கித்தந்து இதுவே லீலையாக இருப்பவனும், பரமபாவனனுமான பெருமானைக்கண்டீர்களா ? வென்றுகேட்க.... ஆம் கண்டோம். தேனுகாசுரனும் குவலயாபீடயானையும், பகாசுரனும் உடனே மாண்டு போகும்படி காட்டிற்சென்று வேட்டையாடிவரும் அப்பெருமானை விருந்தாவனத்தில் கண்டோம் என்கிறுர்கள்— 9

பாசு: **பருந்தாள் களிற்றுக்கு அருள்செய்த பரமன் தன்னைப் பாரின் மேல் ***
விருந்தாவனத்தே கண்டமை விட்டு சித்தன் கோதை சொல் *
மருந்தாமென்று தம்மனத்தே வைத்துக்கொண்டு வாழ்வார்கள் *
பெருந்தாளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியாதென்று மிருப்பாரே 10

உரை: பருத்த கால்களையுடைய கஜேந்திரனுக்கு கிருபைபண்ணின திருமாலை இப்பூமியிலே.... நெடுநாள்துடித்து பிருந்தாவனத்திலே பிறகு பெருமானுடைய ஸேவையைப்பெற்று துயர் தீர்ந்து பரமானந்தமடைந்து பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் அருளிச்செய்த இப்பாசுரங்களை பிறவியாகிற நோய்க்கு மருந்தாகக்கொண்டு தங்கள் சிந்தையிலே அனுஸந்தானம் செய்து கொண்டுவாழுமவர்கள் பெருமை பொருந்திய திருவடிகளையுடைய எம்பெருமானுடைய இணையடிக்கீழ் எந்நாளும் பிரியாதிருப்பர்— 10

அடிவரவு— பட்டி அலுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம் பொருத்தம் வெளிய நாட்டைப் பருந்தாள் இருள்—

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமொழிகள் முற்றும்.

குலசேகரப்பெருமாள் வரலாறு.

சேரநாட்டில் கோழிக்கோடு என்னும் ஸமஸ்தானத்தை அரசாண்ட திருடவ்ரதன் என்ற அரசன் வெகுநாளாகவும் பிள்ளைப் பேறில்லாத குறையால் திருமாலுக்கு விசேஷமான ஆராதனங்களைச் செய்து கொண்டிருக்க அதன்பயனக அவனுக்கு ஒரு புத்திரன்.... கலியுகம் பிறந்த 28 ஆம் வருஷமான பராபவ வருஷத்து மாசி மாதத்தில் சுக்ல பக்ஷத்துத் துவாதசியும், வியாழக்கிழமையும் கூடின சுப தினத்தில் புனர்வசு நக்ஷத்திரத்திலே பட்டத்து இராணியினிடத்தில் திருவஞ்சிக்களமென்ற ஊரில் கௌஸ்து வாம்ஸமாய் அவதரித்தனன் அதையறிந்த அரசன் ஆனந்தக்கடலில் ஆழ்ந்து இம்மகன் தன் குலத்திற்குச் சிரோபூஷணம்போல சிறப்புற்று யாவராலும் கொண்டாடத் தக்கவனெனக்கொண்டு உரிய காலத்தில் நாமகரணம் செய்து குலசேகரன் எனப்பெயரிட்டான். பின்பு அவ்விள மகன் சுக்லபக்ஷத்துச் சந்திரன் போல் வளர்ந்து தக்கபருவங்களில் சௌளமும் உபநயனமும் தந்தையால் செய்விக்கப்பெற்று, நல்லாசிரியரைக்கொண்டு நான்கு வேதங்களையும் ஆறு ஸாஸ்திரங்களையும், தனுர்வித்தையையும், மற்றும் அரசர்க்கு உரிய நீதி நூல்களையும், யானை குதிரை தேரேற்றம் முதலிய நூல்களையும், சிறிது காலத்திலேயே முற்றக்கற்று வல்லனுயினுன், அம்மைந்தனது திறத்தைக்கண்ட காவலன் களிப்புக்கொண்டு அவனுக்கு இளவரசு முடிசூட்டினன், பின்னர் குலசேகரன் நால்வகைச்சேனையோடு படை எடுத்துச்சென்று சோழன்' பாண்டியன், முதலிய அரசர்களை வென்று அவர்களது நாடுகளைத் தன் வசப்படுத்தி சேர, சோழ, பாண்டியமென்னும் தமிழ் நாடு மூன்றுக்குந்தலைமை பூண்டதனுல்... கொல்லிக்காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன், குலசேகரன் என்ற பல பிருதுகளைப்பெற்று மீண்டு வந்தனன், பிறகு த்ருடவ்ரத மகாராஜா குமாரனுக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் செய்து க்ஷத்திரிய ஜாதி முறைப்படியே தான் உயர் கதிபெறும் பொருட்டு தவம் செய்யத் தபோவனம் சென்ருன். மன்னவ குமாரனும் நடுவு நிலை தவருது சிறியவற்றைப் பெரியவை நலியாதபடி இராமராச்சியமென்னுமாறு அரசாண்டு ஒரு உத்தமப் பெண்மணியை மணந்து திருமாலின் தேவிமார் மூவருள் நீளாதேவியின் அம்சமான கிளை என்னும் ஒரு புத்திரியையும், த்ருடவ்ரத

னென்று பிதாமகன் பெயரையேயுடைய ஒரு புத்திரனையும் பெற்றுக் கவலையற்றிருக்கையில்... இம்மை மறுமை வீடு என்னும் மூவின்பங்களையும் தரவல்ல முதலும் முடிவும் அற்ற முழு முதற்கடவுள் யாரோ என்று பரதத்வ விசாரத்தில் இறங்கி பல பண்டிதர்களுடனே சுருதி ஸ்மிருதி இதிஹாஸம் புராணம் முதலிய ஸகல கலைகளையும் பரிசோதித்துப்பார்த்துவர.... அவ்வரசனை ஆட்கொண்டு உய்விக்கக்கருதிய கருணாநிதியான கமலக்கண்ணனது திருவருள் நோக்கத்தால் ஸ்ரீ மகாவிஷ்ணுவே சிறந்த தெய்வமென்கிற சத்தியமான சித்தாந்தம் அவனது ஞானக்கண்ணுக்குத் தெள்ளிதிற் புலப்பட்டது. இப்படி எம்பெருமானை எல்லாவுயிர் கட்கும் இறைவனாக அறிந்து அவனது அனந்த கல்யாண குணங்களாகிய பெருங்கடலில் ஆழ்ந்து நெஞ்சுருகி ஈடுபட்ட இந்தக் குலசேகராழ்வார் திருமாலின் விபவாவதாரங்களில் ஸ்ரீ ராமாவதார கிருஷ்ணாவதாரங்களிலும் அர்ச்சாவதாரத்தில் திருவரங்கம் திருவேங்கடம் முதலிய திவ்ய தேசத்து எம்பெருமான்களிடத்திலும் பக்திப்பெருங்காதல் கொண்டு ஸ்ரீ ராமாயண காலக்ஷேபத்தையே தமக்குப்பொழுது போக்காகப்பெற்றும் ஸ்ரீ வைஷ்ணவர்களைக்கண்டால் எதிர்கொண்டு அழைத்து வந்து விசேஷமாக உபசரித்தும் நமது திருமாளிகைத் திருவாராதனத்தில் எழுந்தருளி இருக்கிற ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கும் ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமிக்கும் நித்திய நைமித்திக உத்ஸவங்களைக் குறைவறச்செய்து கொண்டும் இருந்தார். இவர் இராமாயண காலக்ஷேபம் செய்து வருகையில் ஸ்ரீராமன் தண்டகாரண்யத்தில் கரதூஷணாதிகளுடன் போர்புரிய ஒருவனாகவே துணையின்றிச் சென்றானென்பதையும், பஞ்சவடியில் இராவணன் சீதாதேவியை தூக்கிச் சென்றானென்பதையும், புராணிகர் சொல்லிக்கொண்டு வரும்போது, இராமனிடத்தில் உள்ள அபாரபிரேமையினால் வெகுகாலத்திற்கு முன்பு நடந்த சரித்திரத்தை அன்றுதான் நடக்கின்றதாக நினைத்து இப்படிப்பட்ட சங்கடகாலத்தில் என்னப்பனுக்கு உதவி செய்யாமலிருப்பேனாவென்று தமது சேனைகளை எல்லாம் போருக்குச் சித்தமாய் முன் செல்லும்படி பணித்து தாமும் ஜனஸ்தானத்தை நோக்கிப் புறப்பட்டார். அச்சமயம் யாவரும் திடுக்கிட்டு நிற்கையில் அதி நிபுணரான ஆசிரியர் அந்தந்த சந்தர்பங்களில் ஸ்ரீ ராமன் பகைவரைவென்று வெற்றியுடன் மீண்டுவர சீதாபிராட்டியும் இளையபெருமாளும் களிப்படைந்ததைச் சொல்லி அது கேட்ட ஆழ்வார் ஆனந்தமடைந்து சேனையைத்திருப்பிக்கொண்டு பிரயாணத்தை நிறுத்தினர், பின்னும் இவ்வாழ்வார் பகவானுடைய கைங்கரி

யத்தைக்காட்டிலும் அவனடியார்களுடைய கைங்கரியமே சிறந்த தெனக்கொண்டு அனேக ஸ்ரீ வைஷ்ணவர்களைத் தனது அரண்மனை யில் அழைத்து வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தொண்டுசெய் வதே தனது பாக்கியமென்று கருதி குறைவற அவர்களை உபசரித்துக் கொண்டிருந்தான், இப்படி இருக்கையில் அவரது மாளிகையில் திருவாராதனம் செய்யப்படுகிற ஸ்ரீ ராமபிரானது திருவாபரணம் ஒன்று களவுபோக.... சிலர் ஸ்ரீ வைஷ்ணவர்களைச் சந்தேகிக்க....அது கண்ட அரசன் பாகவதர்களான வைஷ்ணவர்கள் ஒரு காலத்திலும் இம்மாதிரியான குற்றங்களோ அபசாரங்களோ செய்யமாட்டார்கள் என்று சத்தியம் செய்து பாம்புக்குடத்தில் கையிட்டு நிருபணம் பண்ணி கள்வாடினவர்களையும் கண்டுபிடித்து ஆபரணத்தைக்கைப் பற்றினான்.

பின்பு குலசேகரர் பொய்ம்மைக்கு இடமான அரசாட்சியில் இருத்தற்கு இஷ்டப்படாமல் தமது குமாரனான த்ருடவ்ரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து அரசை அவனிடம் ஒப்புவித்து... தாம் திரு வரங்கம் பெரிய கோயிலுக்குச் சென்று நம்பெருமாளை சேவித்து அவ்வழகிய மணவாளனையே தனக்கு உரிய மணவாளனாகக்கொண்டு தம் திருமகளை அப்பெருமானுக்கே மணம் செய்வித்து தாம் பகவத் பாகவதகைங்கர்யங்களை நித்தியமும் செய்து கொண்டு அத்திருப்பதி யில் சில காலம் இருந்தார். பிறகு மற்றும் சில திவ்ய தேசங்கட்கு யாத்திரை செய்ய எண்ணி... திருவேங்கடம். திருவயோத்தி, திருச் சித்திரகூடம், திருமாலிரும் சோலை முதலிய திருப்பதிகட்குச் சென்று அங்காங்கு எழுந்தருளி இருக்கிற பெருமாளைச் சேவித்து அப்பால் நம்மாழ்வாரது அவதாரஸ்தலமான திருக்குருகூருக்கு அருகிலுள்ள பிரமதேச மென்னும் ஊரையடைந்து அங்கு ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி சன்னிதியில் சில காலம் திருத்தொண்டு செய்து கொண்டிருந்து தமது அறுபத்தேழாவது பிராயத்தில் பரமபதமடைந்தார்—இவர் எம் பெருமானை அனுபவிக்கும்போது அவ்வனுபவத்தாலாகிய ஆனந்தம் உள்ளடங்காமல் வெளிப்பட அதைக்கொண்டு அருளிச்செய்த பிர பந்தங்கள் முகுந்தமாலை என்னும் வடநூலும், பெருமாள் திருமொழி என்னும் தமிழ்நூலுமாம் இவற்றால் இவர் வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லவரென்பது விளங்கும். இவர் இராமபிரானுடைய இன்ப துன்பங்களை தமது சுக துக்கங்களாகக் கருதியதனால் இவர்க் குப் பெருமாள் என்று பெயர் வழங்கும்—

அஞ்சன மாமலைப்பிறவி ஆதரித்தோன் வாழியே *
அணியரங்கர் மணத்தூணை யடைந்துய்ந்தோன்வாழியே *
வஞ்சி நகரந்தன்னில் வாழவந்தோன் வாழியே *
மாசிதனிற் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே *
அஞ்சலெனக் குடப்பாம்பி லங்கையிட்டான் வாழியே *
அனவரத மிராமகதை யருளுமவன் வாழியே *
செஞ்சொல் மொழி நூற்றஞ்சும் செப்பினன் வாழியே *
சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே *

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் :—

ஸ்ரீ குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி

உடையவர் அருளிச்செய்த தனியன்

பாசு : இன்னமுத மூட்டுகேன் இங்கேவா பைங்கிளியே *
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் * பொன்னஞ்
சிலை சேர்நுதலியர் வேள் சேரலர் கோனெங்கள்
குலசேகரனென்றே கூறு.

உரை : அழகான பச்சைக்கிளியே ! உனக்கு இனிமையான அமிர்தத்தை உண்ணத்தருகிறேன் என்னருகில்வா ! தென்திருவரங்கத்தைக் குறித்து இனிய கவிகளை அருளிச்செய்யவல்லவரும் கல்யாண குணசாலியுமான மஹானுபாவர்... யாவரும் விரும்பத்தக்கதாய் அழகியதான புருவத்தை நெற்றியிலேயுடைய மாதர்கட்கு மனோஹரரான சேரவம்சத்தவர்களுக்கெல்லாம் ராஜா.... நம்முடைய குலத்துக்குச் சிரோ பூஷணமான குலசேகராழ்வார் என்று இதையே நீ பேசிப் பிதற்றிக்கொண்டிருக்க வேணும்—இவ்விருத்தம் குலசேகரப்பெருமாள் விஷயமாக ஸ்ரீ இராமானுஜர் துதித்துப்பாடியது—

பெருமாள் அருளிச்செயலில் எட்டாந்திருமொழி

மன்னுபுகழ்

அவதாரிகை : ஆழ்வார் ஒவ்வொரு திவ்யதேசங்களாகச் சென்று அங்காங்கு அர்ச்சாவதாரமாக எழுந்தருளி இருக்கிற எம்பெருமான்களைச் சேவித்துக்கொண்டு திருக்கண்ணபுரத்திருப்பதிக்கு வந்து அங்கு எழுந்தருளி இருக்கிற ஸ்ரீ ராமனைத்தரிசித்தவுடனே.... அவ்வவதாரத்தில் மனஞ்செல்லப்பெற்றவராய் தம்மை கௌஸல்யையாகப்பாவித்து அவள் அவ்விராமபிரானைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுக்கூறின முறையில் இத்திருமொழி அருளிச்செய்கிறார்—

பாசு : **மன்னுபுகழ் கொஸலைதன் மணிவயிறு வாய்த்தவனே ! ***
தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவித்தாய் !
செம்பொன் சேர் *
கன்னி நன்மாமதிள் புடைசூழ் கணபுரத்தென்
கருமணியே ! *
என்னுடைய இன்னமுதே ! இராகவனே ! தாலேலோ 1

உரை : ஸர்வேச்வரனைப் பிள்ளையாகப் பெற்றாள் என்ற நிலை நின்ற புகழையுடைய கௌஸல்யையின் அழகிய வயிற்றிலே பிள்ளையாக அவதரித்தவனே இலங்கைக்கிறைவனான ராவணனுடைய பத்துத் தலைகளையும் சிதறச்செய்தவனே ! செம்பொன்னினால் செய்யப்பட்ட தாயும் அழிவில்லாததாயும் விலக்ஷணமாய் பெரிதான மதிள்களாலே நாற்புறமும் சூழப்பட்டதாயும் இருக்கிற திருக்கண்ணபுரத்தில் எழுந்திருளி இருக்கிற நீலரத்னம் போன்ற எம்பெருமானே ! எனக்கு போக்யமான அமிர்தமாக இருப்பவனே ! ஸ்ரீ ராமனே ! ரகுகுலதிலகனே ! உனக்குத் தாலாட்டு— 1

பாசு : **புண்டரீக மலாதன்மேல் புவனி எல்லாம் படைத்தவனே ***
திண்டிறலான் தாடகைதன் உரமுருவச் சிலை வளைத்தாய்*
கண்டவர் தம்மனம் வழங்கும் கணபுரத்தென் கருமணியே
எண்டிசையுமாளுடையாய் ! இராகவனே ! தாலேலோ 2

உரை : திருநாபியிலே தோன்றி மலர்ந்த தாமரைப்பூவின்மேல் பிரமனைத் தோற்றுவித்து அவன் முகமாக உலகங்களெல்லாவற்றையும் ஸிருஷ்டித்தவனே ! மிக்க பலத்தையுடையவளான தாடகையினுடைய மார்பைத்துளைக்கும்படியாக வில்லை வளைத்து அம்பை எய்தவனே ! உன்னை ஸேவித்தவர்கள் தங்கள் மனத்தைத் தாங்களே இசைந்து கொடுப்பதற்குத்தகுந்த... கணபுரத்து என் கருமணியே ! எட்டுத் திக்குகளிலும் முள்ளவர்களையும் அடிமை கொண்டருளுமவனே ! இராகவனே ! தாலேலோ— 2

பாசு : **கொங்குமலி கருங்குழலாள் கௌஸலைதன் குலமதலாய்!***
தங்கு பெரும்புகழ்ச்சனகன் திருமருகா ! தாசரதீ ! *
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்து என் கருமணியே! *
எங்கள் குலத்து இன்னமுதே ! இராகவனே ! தாலேலோ 3

உரை : பரிமளம் மிகுந்த கறுத்த கூந்தலுடையவளான கௌஸல்யை யினுடைய சிறந்த புத்திரனுனவனே ! பொருந்திய பெருங்கீர்த்தியை யுடைய ஜனகமகாராஜனுக்கு மருமகனுனவனே ! சக்கிரவர்த்தித்திரு மகனே ! கங்கா நதியிற்காட்டிலும் சிறந்த தீர்த்தங்களையுடைய திருக் கண்ணபுரத்தில் நித்யவாசம் செய்கிற என் நீல மணியே! எங்கள் ராஜவம்சத்துக்கெல்லாம் இனிமையான அமுதம் போன்றவனே ! இராகவனே ! தாலேலோ— 3

பாசு : **தாமரை மேலயனவனைப் படைத்தவனே! தயரதன் தன் ***
மாமதலாய்! மைதிலிதன் மணவாளா ! வண்டினங்கள் *
காமரங்களிசைபாடும் கணபுரத்து என் கருமணியே ! *
ஏமருவும் சிலைவலவா ! இராகவனே ! தாலேலோ— 4

உரை : திரு நாபிக்கமலத்திலே பிரமனைப்படைத்தவனே ! தசரத னுக்கு மூத்தகுமாரனே! சீதாபிராட்டிக்கு பர்த்தாவானவனே! வண்டு களின் கூட்டங்கள் காமரமென்னும் இசை பாடிக்கொண்டிருக்கப் பெற்ற திருக்கண்ணபுராத்தில் எழுந்தருளி இருக்கிற அம்புகள் பொருத்திய ஸ்ரீ சார்ங்கமென்கிற வில்லை ஆள வல்லவனே ! இராக வனே ! உனக்குத் தாலாட்டு— 4

பாசு : **பாராளும் படர் செல்வம் பரத நம்பிக்கேயருளி ***
ஆராவன் பிளையவனோடு அருங்கானம் அடைந்தவனே! *
சீராளும் வரைமார்பா ! திருக்கண்ணபுரத்தரசே ! *
தாராளும் நீண்முடி என் தாசரதீ ! தாலேலோ— 5

உரை : பூமி முழுவதையும் ஆட்சி புரிகையாகிற பெரிய இராஜ்ஜிய சம்பத்தை பரதாழ்வானுக்கே விட்டு வைத்துவிட்டு.... குறையாப் பக்திப்பெருங்காதலையுடைய லக்ஷ்மண ஸ்வாமியுடன் கூட கல்லும் முள்ளும் கரடி புலி பாம்புகளும் நிறைந்து புகுவதற்கருமையான காட்டிற்குச் சென்றவனே ! வீரலக்ஷ்மி வாசம் செய்யும் மலை போன்ற திருமார்பையுடையவனே ! திருக்கண்ணபுரத்தரசனுக இருப்பவனே ! மாலைகள் சூடிய சிறந்த திருமுடியை உடையவனே ! என் தசரதன் மைந்தனே ! தாலேலோ— 5

பாசு : **சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கானமடைந்தவனே**
அற்றவர் கட்கு அருமருந்தே ! அயோந்தி நகர்க்கு
அதிபதியே ! *
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்து என் கருமணியே! *
சிற்றவைதன் சொற்கொண்ட சீராமா ! தாலேலோ— 6

உரை : எல்லா உறவினரும் பட்டணவாசிகளும், பின்னே தொடர்ந்து வர மிகப்பழய காலத்துக்காடான தண்டகாரண்ணியம் சென்றடைந்தவனே! உன்னையன்றி வேறு தெய்வம் இல்லை என்று அற்றுத்தீர்ந்த பரம பக்தர்களுக்கு ஸம்ஸாரமாகிற நோயைத்தணிக்க அருமையான மருந்து போன்றவனே! அயோத்தி நகரத்திற்கு அரசனே! ஞானிகள் வாழ்வதற்கு இடமான திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளி இருக்கிற நீலரத்தினமணிபோல அழகிய பெருமானே! சிறியதாயாகிய கைகேயினுடைய சொல்லை ஏற்றுக்கொண்ட ஸ்ரீராமனே! தாலேலோ 6

பாசு : **ஆலினிலைப்பாலகனுய் அன்று உலக முண்டவனே! ***
வாலியைக்கொன்று அரசு இளையவானரத்துக்கு
அளித்தவனே ! *
காலின் மணி கரையலைக்கும் கணபுரத்து என்
கருமணியே ! *
ஆலி நகர்க்கதிபதியே ! அயோத்திமனே ! தாலேலோ—

உரை : முன்பு ஒரு காலம் மஹாப்பிரளயம் வந்த போது ஓர் ஆலிலை மேல் குழந்தை வடிவாய் இருந்து உலகங்களை எல்லாம் பிரயைத்தில் அழிந்து போகாமல் திருவயிற்றில் வைத்துக்காத்தவனே! நீவன வாஸம் செய்த காலத்தில் வாலியை வதம் செய்து அவனது தம்பியான சுக்கிரீவனுக்கு அரசைக்கொடுத்தவனே! கால்வாய்களில் உள்ள ரத்தினங்களை கரையிலே கொண்டு கொழித்துக்கொட்டுகின்ற திருக்கண்ணபுரத்தில் வாழ்கின்ற என் கருமணியே! திருவாலி திருநகரிக்குத்தலைவனே ! அயோத்திமாநகருக்கு அரசே ! தாலேலோ— 7

பாசு : **மலையதனுல் அணைகட்டி மதிளிலங்கை யழித்தவனே ! ***
அலை கடலைக்கடைந்து அமரர்க்கு அமுதருளிச்செய்தவனே
கலைவலவர் தாம்வாழும் கணபுரத்து என் கருமணியே ! *
சிலைவலவா ! சேவகனே ! சீராமா ! தாலேலோ— 8

உரை : மலைபோன்ற பெரிய பெரிய கற்களைக்கொண்டு சமுத்திரத்தில் அணைகட்டி யாவராலும் அழிக்க முடியாத அரண்களையுடைத்தான லங்காபுரியை பாழ்படுத்தினவனே! அலையெறிகின்ற திருப்பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தருள் புரிந்தவனே! ஸகல சாஸ்திரங்களையும் அறிந்தவர்கள் வாசம் செய்கின்ற திருக் கண்ணபுரத்தில் எழுந்தருளி இருக்கிற என் கருமணியே! ஸ்ரீ சார்ங்க மென்னும் வில்லைச்செலுத்தவல்லவனே! மஹா வீரனே! ஸ்ரீ ராமா! தாலேலோ— 8

பாசு : **தளையவிழும் நறுங்குஞ்சித் தயாதன் தன் குலமதலாய்! ***
வளையவொரு சிலையதனால் மதிளிலங்கையழித்தவனே! *
களை கழுநீர் மருங்கலரும் கணபுரத்து என் கருமணியே! *
இளையவர்கட்கு அருளுடையாய்! இராகவனே!தாலேலோ9

உரை : கட்டு அவிழ்ந்து அலையும்படியான நறுமணமுள்ள மயிர் முடியையுடையனன தசரதச்சக்கிரவர்த்தியின் குலத்திற்குச் சிறந்த திருக்குமாரனே! பிரும்மாஸ்திரம் முதலான தேவதாஸ்திரங்களெல் லாம் அந்நகரில் பட்டவுடன் முனை மழுங்கிப்போக யாவற்றிற்கும் மேலான ஒப்பற்ற வில்லானது வளைய அந்த வில்லாலே எவராலும் அழிக்க முடியாத மதிள்களையுடைய இலங்கை நகரை அழித்தவனே! களையாகப்பறித்து வீசிய செங்கழுநீர்கள் வீசிய இடத்திலேயே சுற்றிலும் மலரும்படியான செழுமை பெற்ற திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளி இருக்கிற எம்பெருமானே! வாலியின் தம்பி சுக்கிரீவன் திறத்திலும் இராவணன் தம்பி விபீஷணனிடத்திலும் இளைத்திருப் பவர்கள் (ஸாதுக்களானவர்கள்) திறத்திலும் அருள்புரிபவனே! இராகவனே தாலேலோ— 9

பாசு : **தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே! ***
யாவரும் வந்து அடிவணங்க அரங்கநகர்த்துயின்றவனே *
காவிரிநல்நதிபாயும் கணபுரத்து என் கருமணியே! *
ஏவெரிவெஞ்சிலைவலவா! இராகவனே! தாலேலோ— 10

உரை : திருவரங்கம் பெரிய கோயிலில் பள்ளிகொண்டிருப்பவனே! தேவர்களையும் அசுரர்களையும் எண்திசைகளையும் ஸ்ருஷ்டி செய்து, யாவர்களும் வந்து திருவடியில் வணங்கும்படி திருவரங்கத்தில் கண் துயில் பவனே! காவேரி என்கிற சிறந்த நதிபாய்கின்ற திருக்கண்ண புரத்தில் வாசம் செய்கின்ற என் கருமணியே! அம்புகள் தொடுத்து அழகாக இருப்பதுவும் சத்துருக்களுக்குக் கொடியதாகவும் இருக் கின்றவில்லை ஆளவல்லவனே! இரகுகுலதிலகனே! தாலேலோ- 10

பாசு : கன்னி நன் மாமதிள் புடைசூழ் கணபுரத்து என்
காகுத்தன் *
தன்னடிமேல் தாலேலோ வென்றுரைத்த தமிழ்மாலே *
கொன்னவிலும் வேல்வலவன் குடைக்குலசேகரன்
சொன்ன *
பன்னிய நூல் பத்தும்வல்லார் பாங்காயபத்தர்களே— 11

உரை : என் ஸ்வாமியான இராம பிரான் விஷயமாக கௌஸல்யை தாலாட்டிச் சொன்ன வார்த்தைகளைக்கொண்டு.... கொலைத்தொழில் புரிகின்ற வேலாயுதத்தைச் செலுத்த வல்லவரும். குடையையுடைய வருமான குலசேகராழ்வார் சாஸ்வதமாயும், சிறந்ததாயும் அழகியதுமான மதிள்கள் நாற்புரமும் சூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே அருளிச்செய்து பரவியதான தழழ்ப்பாமாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் அனுஸந்தானம் செய்பவர்கள் நிலை நின்ற பக்தர்களாவார்கள் என்று பலன் சொல்லித்தலைக்கட்டுகிறார்— 11

அடிவரவு— **மன்று புண்டரிக கொங்கு தாமரை பார் சுற்றம் ஆலின் மலை தனை தேவர் கன்னி வள்தாள்—**

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.

தொண்டரடிப்பொடியாழ்வார்

வைபவம் வரலாறு

உயிர்கட்கு ஜீவாதாரமாகவுள்ள பயிர்வளத்துக்குப் பிரதான காரணமான நாட்டுச் செழிப்பைக் காவேரிப்பாய்சலால் நன்கு பெற்று அந்நீர்வளத்தை மிகுதியாகவுடைமையால் புனனாடு என்று புகழ்பெற்ற சோழநாட்டிலே பாடல்பெற்ற விஷ்ணுஸ்தலங்கள் நாற்பதில் புள்ளம் பூதங்குடி என்கிற திவ்யதேசத்திற்கருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் திருப்பதியிலே கலியுகம் இருநூற்று எண்பத்தொன்பதாவதான பிரபவ வருஷத்தில் மார்கழி மாதத்தில் கிருஷ்ணபக்ஷசதுர்த்தசி கூடின செய்வாய்கிழமையில் கேட்டை நக்ஷத்திரத்தில் வைஜயந்தி என்கிற வனமாலையின் அம்சமாய்....வைதிகோத்தமரான ஒரு முன் குடுமிப்பிராம்மணருடைய திருக்குமாரராய்

அவதரித்தார். நாராயணனது கடாக்ஷத்தால் அவதரித்த அவ்வந்தண குமாரருக்குத் தந்தையார் விப்ரநாராயணரென்று பேரிட்டுச் சௌளம் உபநயனம் முதலிய வைதிகச் சடங்குகளைச் செய்வித்து வேத சாஸ் திரங்களைப் பயிற்றுவிக்க.... அவர் நான்மறைகளையும் ஆறு சாஸ்திரங் களையும் கசடறக்கற்று அக்கல்விக்கு ஏற்ப சுத்த சத்துவகுணமே தலை எடுத்து ஞானவைராக்கியங்கள் வளரப்பெற்றுத் தந்தைதாயர்க்கு மிக்க மகிழ்ச்சி தந்து வாழ்ந்து வந்தார். அப்படி இருக்கையில் ஸ்ரீ சேனை நாதன் ஸ்ரீ வைகுண்டத்தினின்றும் எழுந்தருளி அவருக்கு ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு உரிய ஸமாஸ்ரயணம் முதலிய சடங்குகளைச் செய்து சென்றனர்.

அப்பொழுது திருமந்திரார்த்தத்தை அறிந்த விப்பிரநாராயணர் கருணைக்கடலான கமலாகாந்தனது குணமிருதத்திலே ஆழ்ந்த சிந்தை யுடையாராய் அதனால் இம்மை இன்பத்தை இகழ்ந்து விவாஹத்தில் விருப்பமற்று பிரம்பச்சரிய ஆச்ரமத்திலேயே நின்று திவ்ய தேசங்களிற் சென்று எம்பெருமானை ஸேவிக்கக்கருதி அவற்றில் முதலதான திருவரங்கம் பெரிய கோயிலை அடைந்தார் அங்கு உபயகாவேரி மத்தியிலே சேஷசயனத்திலே பள்ளிகொண்டுள்ள பெருமாளைச் சேவித்து நிற்க.... அந்த நம்பெருமாள் தம்முடைய வடிவழகினால் இவரைத்தம் பக்கம் மிகுந்த பக்தியுடையராம்பாடி செய்தருளினர். இவரும் தமது வாணால் வீணாளாகாதபடி ஒப்புயர் வற்ற அப்பெரு மானுக்கு உற்றகைங்கரியம் செய்யக்கருதி பெரியாழ்வார் போலவே தாமும் பெருமாளுக்குப் புஷ்பம் திருத்துழாய் சாத்துதலையே திருப்பணியாகக்கடைப்பிடித்து ஒரு திருநந்தவனத்தை அப்பதியிலே செழிப்பாக அமைத்து காலந்தோறும் பலவகைப் பூ மாலைகளையும் திருத்துழாய் நன் மாலைகளையும் கட்டி அழகிய மணவாளனுக்குச் சாத்திக் கண்குளிரக்கண்டு மகிழ்ந்து கொண்டு தமது நிலைக்கு ஏற்பப்பிராமண கிருகங்களில் அன்னபிக்ஷை வாங்கியுண்டு ஜீவித்து வந்தார். இங்ஙனமிருக்கையில் திருவரங்கத்திற்கு வடக்கிலுள்ள உத்தமர் கோவில் என்னுமிடத்தில் வசித்து வந்த தேவதேவி என்னும் தாஸியானவள் ஒரு நாள் பாங்கிமாரோடும் தன் தமக்கை யுடனுங் கூட உறையூர் சென்று சோழராஜனது சபையில் நிருத்த கீதங்களை நிகறற நிகழ்த்தி அளவற்ற செல்வத்தைப் பெற்று மிக்க செருக்குடன் மீண்டு வருகையில் இவ்வாழ்வாருடைய அச்சோலையின் சிறப்பை நாற்புறமும் நன்றாக உற்று நோக்கி

அம்மலர்ச்சோலையை தனக்கு உரியதாக்கி அதில் பூக்கொய்தும் புனல் விளையாடியும் பொழுது போக்கி மனமகிழ விரும்பி நிற்கையில் ஒரு பக்கத்தில் விப்பிரநாராயணர் திருப்பரிவட்டத்துடனும் பன்னிரண்டு திருமணகாப்புக்களுடனும் தாமரைமணி துளஸிமணி மாலைகளுடனும் பூஞ்செடிகளுக்குப் பாத்திகட்டித் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றாள். உடனே அவள் அவரருகில் வந்து முன்னின்று அவரைத்தொழுது தனது தேஹசௌந்தரியத்தைக் காட்டி குறிப்பாக தனது விருப்பத்தைத் தெரிவித்தாள், விஷயாந்தரங்களிற்குருடராகிய அவர் அவளைக்கண்ணெடுத்தும் பாராது திரஸ்கரித்துத் தவது கைங்கர்யத்தில் கருத்தூன்றி இருந்தனர். அதைக் கண்ட தேவதேவி ஆச்சரியமுற்று, தன் தமக்கையுடன் அரசர் முதலிய பலரையும் எளிதில் வசப்படுத்துகிற ரூபலாவண்யமுடைய நான் சென்று எதிரில் நிற்கவும் பாராதிருக்கின்ற இவன் பித்தனோ? பேடனோ? என்று கூற.... அதற்கு அவள்.... பித்தனுமல்லன், பேடனுமல்லன், ஸ்வாமி கைங்கர்யத்திற்பற்றின சித்தமுடைய மகாவிரக்தன் இவனை வசப்படுத்த உன்னாலாகாது என்று சொன்னவளவிலே வடிவழகில் இறுமாப்புடைய தேவதேவி இவரை நான் வசீகரியாமல் விடுவதில்லை என்று உறுதிகூறி பிறகு தனது ஆபரணங்களை எல்லாம் கழற்றிக் கொடுத்துத் தோழியரோடு தமக்கையையும் அனுப்பிவிட்டு தனியே மெல்லிய செங்காவிச் சேலையுடுத்து கபட எண்ணத்துடன் அவரை அடுத்து திருவடிகளில் விழுந்து நமஸ்காரம் செய்து ஸ்வாமி! அடியேன் முன் செய்த தீவினையால் தாஸிகுலத்திற் பிறந்தவர் இருந்தும் அக்குலத்தொழிலை வெறுத்து தேவரீரது திருவடிகளில் சரணமடைந்து தேவரீருக்க (தாஸ்யம்) தொண்டு செய்து உய்வுபெற நாடிவந்துற்றேன் என்று மிக்க வணக்கத்துடன் விண்ணப்பம் செய்தாள் அவர் அவளது கபடசித்தத்தை உணராமல் அவளது வேண்டுகோளுக்கு உடன்பட்டு அனுமதித்தார் அவளும் அவர் உண்டுசேவித்த அன்னத்தைப்புசித்தும் திருத்துழாய் முதலியவற்றிர்க்கு பாத்தி கொத்தியும் நீர்பாய்ச்சியும் மற்று முள்ள குற்றேவல்களைச் செய்தும் தனது மென்மொழிகளாலும் மேனிமினுக்கினாலும் அவரது மனதைக் கவர்ந்து அரங்கனிடத்தில் நிலைத்த சிந்தையை அகற்றித் தன்பால் திருப்பிக்கொண்டு பல மாதங்கள் அவருடன் இருந்து பிறகு பொருளில்லாத அவரைக்கைவிட்டு தனது கிருகத்திற்ச் சென்று சேர... அவர் அவளது பிரிவாற்றாமைக்கு வருந்தி நிற்குமளவில் அரங்கன் ஸன்னிதில் உள்ள ஒரு பொன்வட்டில் களவுபோன காரணமாக

இராஜகத்தார் புலன் விசாரிக்கையில் இவர் மேல் சந்தேகம் கொண்டு சிறைபிடிக்க.... அந்த சமயத்தில் பிராட்டியாகிய ஸ்ரீ ரங்கநாயகி பெருமாளை நோக்கி நமக்குப்பலகாலமாக பணிவிடைசெய்து வந்த பரமபக்தனுகிய விப்பிரநாராயணனை தேவரீர் மாயைக்கு இலக்காக் கலாமோ? இவ்வடியவனை தேவரீர் லீலைக்கு விஷயமாக்காமல் கிருபைக்குப் பாத்திரமாக்கியருளவேண்டுமென்று வேண்ட பெருமான் அதனை அங்கீகரித்து அரசனுடையவும் கோயில் அர்ச்சகருடையவும் கனவில் தோன்றி.... தாஸி இடத்தில் காதல்கொண்ட இவ்வந்தணனுடைய கருமத்தைக் கழித்தற்பொருட்டு பொன்வட்டிலை நாமே களவாடினேம் உண்மையில் இவன் கள்வனல்லன் பரிசுத்தனே என்று தெரிவிக்க... அரசன் துயிலுணர்ந்து கனுத்தோற்றத்தை சபையிலுள்ளவர்க்கு வியப்புடன் வெளியிட்டு விப்பிரரை விடுவித்து உபசரித்து அனுப்பிவிட்டான். பிறவிப்பெருஞ் சிறையினின்றும் விடுபடுதற்கு ஒரு முற்குறியாக காவல் விடுபெற்ற பிராமணர் தமது துளவத்தொண்டு துறந்து வைதிகவொழுக்கமும் மறந்து வேசி மயக்கத்தில் ஆழ்ந்து அலைந்து பரிபவப்பட்டதை நினைத்து நினைத்து பச்சாதாபப்பட்டு பிராயசித்தம் செய்துகொள்ள முயன்று பெரியோர்களைச் சார்ந்து தமது தோஷங்களுக்குப் பிராயசித்தம் இன்னதென்று துணிந்து கூறி அருளவேணும் என்று பிரார்த்திக்க....அவர்கள் பல நூல்களை ஆராய்ந்து சகல பாபங்களும் பரிஹாரமாவதற்கு ஏற்ற பிராயசித்தம் பாகவதர்களுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தை உட்கொள்வதே என்று உய்யுமாறுகூற அங்ஙனமே அவர் அதனைப்பெற்றுப் பருகி பரிசுத்தராயினர். ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸ்ரீ பாததூளியாய் அவர்கட்குக் கீழ்படிந்து ஒழுகிவர, அவர் தமக்கு அதுவே நிரூபகமாகத் தொண்டரடிப்பொடி என்ற திருநாமம் பெற்றனர். அப்பால் தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு ஸ்ரீ ரங்கநாதன் தத்வஜ்ஞானமளித்துத் தனது பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்சசை என்கிற ஐவகை நிலையையும் விளக்கியருள அவர் அவற்றில் அர்ச்சாவதாரத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு திருவரங்கத்து நம் பெருமாளையல்லது பிறிதொரு பொருளை அறியாராய் அப்பிரானுக்கே துளவத்தொண்டு பூண்டு வாழ்ந்து தமது அனுபவத்தைப் பிரபந்த மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்கக்கருதி நாற்பத்தைந்து (45)பாசுரங் கொண்ட திருமாலை என்பதும் பத்துப் - 10. பாசுரங்கொண்ட திருப்பள்ளி எழுச்சி என்பதுமான திவ்யப் பிரபந்தங்களை அருளிச்செய்து உலகத்தாரை வாழ்வித்து நூற்றைந்து பிராயம் ஸ்ரீரங்கத்திலேயே வாழ்ந்திருந்து அனந்தரம் நலமந்தமில்லதோர் நாட்டை அடைந்தார்—

தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே சரணம்—

மண்டங்குடியதனில் வாழவந்தோன் வாழியே *
மார்கழியிற் கேட்டைநாள் வந்துதித்தான் வாழியே *
தெண்டிரைசூழ் அரங்கரையே தெய்வமென்றுள் வாழியே *
திருமாலையொன்பதஞ்சும் செப்பினான் வாழியே *
பண்டு திருப்பள்ளி எழுச்சி பத்துரைத்தான் வாழியே *
பாவையர்தன் கலவிதன்னைப் பழித்த செல்வன் வாழியே *
தொண்டுசெய்து துளபத்தால் துலங்கினான் வாழியே *
தொண்டரடிப் பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே *

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலையில் சிலவற்றை இங்கே எழுதப்படுகிறது.

தனியன் திருவரங்கப்பெருமானரையர் அருளிச்செய்தது

பாசு : **மற்றொன்றும் வேண்டா மனமே! மதிளரங்கர்** *
கற்றினம்மேய்த்த கழலிணைக்கீழ் . உற்ற *
திருமாலை பாடும் சீர்தொண்டரடிப்பொடி . எம் *
பெருமானை எப்பொழுதும் பேசு — *

உரை : நெஞ்சே! நீ உஜ்ஜீவிப்பதற்க்காக வேறு ஒரு புருஷார்த்தத்தையும் பற்றவேண்டாம், பாகவதர்கட்கு அடிமை செய்வதையே நிருபகமாகக் கொண்டவரும், ஏழுமதிள்கள் சூழ்ந்துள்ள ஸ்ரீ ரங்கத்துக்குத்தலைவரான நம்பெருமாளுடைய (கிருஷ்ணாவதாரத்தில்) கன்றுகளின் கூட்டங்களை மேய்த்த இரண்டு திருவடிகளின் கீழே சம்பந்தம் பெற்ற திருமாலை என்னும் திவ்யப்பிரபந்தத்தை பாடியருளினவரும், கல்யாணகுணங்களையுடையவருமான தொண்டரடிப்பொடியாழ்வாரை (இவ்வாழ்வார் நம்பெருமாள் திருமுடிக்கு மாத்திரம் மாலைசூடினவரல்லர், திருவடிகட்கும் திருமாலை ஸமர்ப்பித்தவர்.) ஸர்வகாலமும் அவர் திருவடிகளே உனக்குத்தஞ்சமென்று அனுஸந்திக்கக்கடவாய்.

திருமாலை திருவரங்கத்து எம்பெருமான் விஷயம்.

காவலில் புலனை

பாசு : **காவலில் புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து***
நாவலிட்டு உழிதருகின்றோம் நமன் தமர் தலைகள்மீதே *
மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ ! நின்நாமம் கற்ற *
ஆவலிப்புடைமை கண்டாய் அரங்கமா நகருளானே 1

உரை : எல்லா உலகங்களையும் பிரளய காலத்தில் திருவயிற்றிலே வைத்து பிரளயம் நீங்கின பிறகு அவற்றை வெளிப்படுத்தி அடியார்களைக்காத்தருளும் திறம் நன்கு விளங்குமாறு கோயிலில் கண்வளரும் ஜகத்காரண பூதனே ! உன் திருநாமத்தை நான்கற்றதனால் பெற்ற பேற்றின் கனத்தைக்கண்டாயோ ? ஆஹா என்னைத் தீயவழியிற் செலுத்தி உனக்கு விலக்காக்கின பஞ்சேந்திரியங்களையும் வெளியிற் செல்லாதபடி சிறையில் அடைத்து இத்தனை நாளாக இவற்றை அமுக்கி ஆளமுடியாதபடி தடையாய் கிடந்த பாபராசிகளை வெகு தூரம் உதறித்தள்ளி இதனால் நாகபாதையினின்றும் பயம் தவிர்ந்து உனது நாமம் கற்றிருக்கிற தைரியதால் ஜயகோஷம் செய்து கொண்டு யமபடர் (கிங்கரர்) களின் தலைமேல் அடியிட்டுத்திரிகின்றோம் எனது செருக்கு எனது செருக்கு எப்படிப்பட்டது பாராய் ! என்கிறார்— 1

பாசு : **பச்சைமாமலை போல்மேனி பவளவாய் கமலச்செங்கண் ***
அச்சுதா ! அமரரேறே ! ஆயர்தம் கொழுந்தே என்னும் *
இச்சுவை தவிரயான்போய் இந்திரலோகம் ஆளும் *
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா
நகருளானே ! 2

உரை : ஸ்ரீ ரங்கம் என்கிற நகரில் நித்யவாசம் செய்பவனே !—

உரை : பசுமை, நீலம், கருமை, என்ற நிறங்களை உவமையாகக் கூறுவது கவிமரபு. எம்பெருமானுடைய கானமேகத்திருவுருவத்திற்கு பச்சை மாமலையை உவமை போன்ற சிவந்த திருவாயையும், செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுமுடைய அச்சுதனே ! தேவர்களுக்கும் தேவர்களான அனந்தன், கருடன், விஷ்வக்ஸேனர் முதலியவர்களுக்குத்தலைவனே ! இடையர் குலத்தில்தோன்றிய இளங்குமாரனே ! (மேன்மைக்கு எல்லை நிலமான பிராட்டி பெரிய திருவடி

முதலானுர்க்கு நியாமகனுயிருப்பது போலவே தாழ்மைக்கு எல்லை நிலமான இடையருக்கும் எளியவன் என்று தோன்றுகைக்காக அமர ரேறே! ஆயர்தம் கொழுந்தே என்ருர்.) என்று எனது வாயினுல்ச் சொல்லுவதனுல் எனக்கு உண்டாகிற இந்த அனுபவருசியை விட்டு விட்டு...(எம்பெருமானது குணங்களை அனுபவிக்க வேண்டியதில்லை அவனுடைய திருநாமங்களைக் கூறுதல் மாத்திரமே சுவை தருவதற் குப் போதுமென்பது) ஆகையால்த்தான் முற்பாசுரத்தில் நின் நாமங்கற்ற ஆவலிப்புடைமை கண்டாய் என்கிருர்.— நான் இவ்வுல கத்தினின்றும் நீங்கிப் பரமபதத்திற்குச் சென்று ஆளுகின்ற.... (இந்திரன் முதலிய சொற்கள் பரமாத்மாலவயே குறிக்கு மென்பது வேதாந்திகளின் கொள்கையாதலால் இந்திரலோகமாளும் என்கிருர்) அந்த அனுபவருசியை அடைவதா இருந்தாலும் அதனை விரும்ப மாட்டேன். என்கிருர்— 2

பாசு: **மற்றுமோர் தெய்வமுண்டே ? மதியிலாமானிடங்காள்!** *
உற்ற போதன்றி நீங்கள் ஒருவனென்று உணரமாட்டீர் *
அற்றமேலொன்றறியீர் அவனல்லால் தெய்வமில்லை *
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே *

உரை: பெறுதற்கறிய மானிட ஜன்மத்தைப் பெற்றிருந்தும் ஈடேறு வதர்க்கு உரியதான பரமாத்மாவைப்பற்றிய தத்துவ ஞானம் இல்லாத மனிதர்களே! நான் சொல்லுகிறவனைத்தவிரவும் சரணமாக அடையக் கூடிய வேறு ஒரு தெய்வம் உண்டோ? (இல்லை) நீங்கள் சரண மடைந்த அந்த க்ஷுத்ர தேவர்கட்கும், உங்களுக்கும் ஒரு ஆபத்து நேர்ந்த காலத்திலல்லாமல் மற்றைக்காலத்தில் நான் சொல்லுகிற இவன் ஒருவனே கடவுள் என்பதை அறியமாட்டீர்கள். நீங்கள் இப்படி அறியாமைக்குக் காரணம் என்ன வென்ருல்? வேதத்தின் (மறைபொருளின்) உட்கருத்தை சிறிதும் அறியமாட்டீர்கள். இனி முடிவுப்பொருளை நீங்கள் உணருமாறு கூறுகிறேன், அந்த எம்பெரு மான் தவிர சரணமடையக்கூடிய தெய்வம் வொருன்று இல்லை ஆகை யால் கன்றுகளின் கூட்டங்களை மிக்க உகப்போடு மேய்த்த எமது சுவாமியான ஸ்ரீ கிருஷ்ணனுடைய இரண்டு திருவடிகளையும் நீங்கள் சரணமாகப் பற்றுங்கள்— 9

ஸாஸ்திரக்ஞானமில்லாமல் ருத்திரன் காளி துர்க்கை என்கிற தேவதாந்தரங்களை சர்ணடைந்து உபாசித்தல் வீணே பலனற்ற செய்கை, இகம்பரம் இரண்டிலும் நமக்கு வேண்டிய பலனளிக்க வல்ல ஸ்ரீ கிருஷ்ணனை உபாசித்து நற்கதியடையுங்கள் என்கிறார்—

பாசு: **வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை *
**கொண்டல் மீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை*
**அண்டர் கோன் அமரும்சோலை அணிதிருவரங்கமென்னா
**மிண்டர் பாய்ந்து உண்ணும் சோற்றை விலக்கி
நாய்க்கிடுமினீரே 14

உரை: வண்டுகளின் கூட்டங்கள் கானம் செய்யப்பெற்ற சோலைகளை யுடையதும், மயில்களின் கூட்டங்களானவை கூத்தாடுகின்ற சோலை களையுடையதும், மேகங்கள் மேலே வந்து படிந்து நிற்கின்ற சோலை களையுடையதும், குயில்களின் கூட்டங்கள் ஒன்றை யொன்று கூவி அழைத்துக்கொண்டிருக்கின்ற சோலைகளையுடையதும், தேவர்கட் கெல்லாம் தலைவனான ஸ்ரீ ரங்கநாதன் நித்யவாஸம் பண்ணப்பெற்ற அழகிய சோலைகளை ஆபரணமாகவுடையதுமான ஸ்ரீ ரங்கம் என்று வாயாலே சொல்லவும் கூடமாட்டாத மூர்க்கர் மேல் விழுந்து உண்ணும் சோற்றை.... அரங்கநாதன் தங்களை காப்பதற்க்காகவே திருக் கோயிலில் பள்ளிகிடக்க அந்த உபகாரத்தையறியாது அவனுடைய தேசத்தை ஒருதரமும் வாயினால் உச்சரிக்காத நன்றிகெட்டவர்களுக்கு இடுகிற சோற்றை.... விலக்கி ஒரு நாள் ஒருபிடி சோறிட்டவன் வாசலைப்பற்றிக்கிடக்கும் அத்தனை நன்றியறிவுடைய நாய்க்கு இடுங் கள் என்கிறார்— அரங்களையும் அவன் ஊறையும் நினையாது கேவலம் தேஹபோஷணத்திலேயே ஊன்றிக்கிடப்பவர்கள் நாய்க்கும் கீழ்கடை யானவர்கள் என்பது தாத்பர்யம்— 14

பாசு: **குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாதம் நீட்டி *
**வடதிசைப் பின்புகாட்டித் தென்திசை இலங்கை நோக்கி*
**கடல் நிறக்கடவுளெந்தை அரவணைத்துயிலுமா கண்டு *
**உடலெனக்கு உருகுமாலோ! என்செய்கேன் ?
உலகத்தீரே 19

உரை: உலகத்தில் உள்ளவர்களே! கடல் போன்ற கருநிறத்தை யுடைய கடவுளான எம்பெருமான்... மேற்குத்திக்கில் திருமுடியை வைத்தும், கிழக்குத் திக்கில் திருவடிகளை நீட்டியும், வடக்குத்திக்கிலே

தனது பின்புறத்தைக்காட்டியும், தெற்குத்திக்கில் தனது அந்தரங்க பக்தருன விபீஷணுழ்வான் வாழுமிடமான இலங்கையை அன் போடு பார்த்துக்கொண்டும்... இப்படி நாற்றிசையிலுள்ளாருக்கும் தனது ஸம்பந்தமுண்டாம்படி திருவனந்தாழ்வானுகிறபடுக்கையில் யோகநித்திரை செய்யுந்தன்மையைக் காண்பதனுல் எனது உடல் நீராய்க்கரைந்து உருகுகிறது, ஐயோ நான் என்ன செய்வேன்? என்று உலகத்தாருக்கு வியப்போடு அறிவிக்கின்றனர்— 19

பாசு: **பாயும் நீரரங்கம் தன்னுள் பாம்பணைப்பள்ளிகொண்ட** *
மாயனுர் திருநன்மார்வும் மரகதவுருவும் தோரும் *
தூய தாமரைக்கண்களும் துவரிதழ்பவளவாயும் *
ஆயசீர் முடியும் தேசும் அடியரோர்க்கு அகலலாமே 20

உரை: பெருக்கெடுத்துப் பாய்கின்ற காவேரி சூழ்ந்த பெரிய கோயிலிலே சேஷ சயனத்திலே கண் வளர்ந்திருக்கின்ற ஆச்சரிய சக்தி வாய்ந்த எம்பெருமானது பிராட்டி வாழ்கின்ற அழகாய மார்பும், மரகதமணி போன்ற திருமேனி நிறமும், திருத்தோள்களும், பரிசுத்த மான தாமரை மலர்போன்ற திருக்கண்களும் சிவந்த அதரமும் பவளம் போன்ற வாயும், உயர்ந்த வேலைப்பாடுள்ள கிரீடமும், இவற்ருல் உண்டான ஜோதியும், இப்படி ஸகல அவயவ சௌந்தரியமும் நன்கு விளங்கும்படி சாய்ந்தருள்கின்ற எம்பெருமானது திவ்ய தேஜஸ்ஸைக்காணப்பெற்ற சொரூபக்ஞானமுடைய தாஸர்களுக்கு இவற்றை இழந்து விலகத்தகுமோ? தகாது என்பது— 20

பாசு: **கங்கையிற் புனிதமாய காவிரிநடுவுபாட்டுப்** *
பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள் *
எங்கள் மாலிறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும் *
எங்ஙனம் மறந்து வாழ்கேன் - ஏழையேன் ஏழையேனே 23

உரை: உபய காவேரி மத்தியிலே ஸ்ரீரங்கத்தில் சயனித்திருக்கும் அழகிய மணவாளனது திருக்கோலத்தைக் கிட்டினுல் அனுபவிக்க மாட்டாமலும். பிரிந்தால்த் தரிக்கமாட்டாமலும் உள்ள பேதமை குணத்தைக்கொண்ட நான்....கங்காநதியைக் காட்டிலும் பரிசுத்தி யுடையதாகிய காவேரிநதியினது நடுவு இடத்திலே....கோயிலைக்கட்டு கிரேமென்கிற பெருமகிழ்ச்சி தோன்ற பெரிய கிளர்த்தி

கொண்டு அந்நதியின் நீர்பெருக்கு எங்கும் பரவிப்பாய்வதற்கிடமானதும், அழகிய சோலைகளையுடையதுமான கோயிலிலே அடியவரான எங்களிடத்தில் பேரன்பு உடையவனும், ஸர்வ ஸ்வாமியாயும் ஸகல வஸ்துக்களான சராசரங்களையும் ஆளவல்ல திறமையுடையவனுமாகிய ஸ்ரீரங்கநாதன் சயனித்திருப்பதாகிய ஒப்பற்ற பள்ளிகொண்ட திருக்கோலத்தை ஸேவிக்கப்பெற்ற பின்பும் அந்தக்கிடக்கையழகை மறந்துபோய் எவ்வாறுயான் தரித்திருப்பேன்? ஒன்றும் செய்யமாட்டாது திகைத்தவனுகவே நிற்பேன் — மறக்க மருந்துண்டாகில்க் கொடுங்கள் என்கிருர்— 23

பாசு : **குளித்து முன்றனலை யோம்பும் குறிகொளந்தணமை தன்னை** *
ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன் *
களிப்பது என்கொண்டு? நம்பீ! கடல்வண்ணு கதறுகின்றேன் *
அளித்தெனக்கருள்செய் கண்டாய் அரங்கமா நகருளானே! **25**

உரை : ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் நித்தியவாஸம் செய்பவனே! உதயத்தில் நித்திரை தெளிந்து ஸ்நானம் பண்ணி மூன்று அக்னிகளை(கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணுக்கினி)என்ற மூன்று விதமான அக்னிஹோத்திரங்களை ஆராதித்து வளர்ப்பதற்குரிய யோக்யதையைத் தருவதும், கஷ்டப்பட்டுக் காப்பாற்றத்தக்கதுமான பிராம்மணத் தன்மையை பாழாக்கிவிட்டேன். ஆத்மவிஷயக்ஞானமும் என்பக்கல் இல்லை. உன்பக்கல் உள்ளது கபடபக்தியே ஒழிய உண்மையான பக்தி சிறிதும் இல்லை. இப்படி இருக்கக் கடல்வண்ணு! நம்பீ! இனி நான் உய்வுபெற விறகு ஏது? நான் எதைக்கொண்டு ஆனந்தமடைவேன்? ஏதாவது ஸ்வல்பம் கைம்முதலாவது என்னிடத்தில் இருக்குமாகில் பேற்றில் எனக்கு அதிகாரமுண்டு. ஆனுல் கைமுதல் உள்ளவர்களைத்தான் ரக்ஷிப்பதென்று உனக்கு நியதியுண்டாகில் திருக்கோயிலிலே வந்து சாய்ந்தருழுவானேன்? எனது துக்கத்துக்குப் போக்குவீடாக வாய்விட்டுக் கூப்பிடுகின்றேன். ஆதலால் என் விஷயத்தில் மிகவும் கிருபைசெய்து அருளவேணும்—உன்னுடைய

ஒப்புயர்வற்ற கருணைக்கு என்னைத்தவிர வேறு விஷயமுண்டோ? என்பது கருத்து— 25

பாசு : **ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை *
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி! *
காரொளி வண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன் *
ஆருளர்? களைகண் அம்மா! அரங்கமா நகருளானே! 29**

உரை : அரங்கமாநகரில் திருக்கண் வளர்ப்பவனே! தேவரீர் உகந்திருக்கும் ஸாளக்கிராமம். பெரிய கோயில். திருமலை. பெருமாள் கோயில் முதலிய திவ்ய தேசங்களிலே எனக்குப் பிறவியும் நேரவில்லை. தேவரீருக்குத் திருப்பல்லாண்டு பாடுகை முதலானவற்றுக்காக கொடுப்பதற்கு ஒரு குழியளவு காணியுமில்லை. உன்னைத் தவிர வேறு பந்துக்களுமில்லை. தோழன்மார் முதலானவர்களும் ஒருவருமில்லை. தேவரீருடைய திருவடிகளையும் தஞ்சமாகப் பற்றுதவனாக இருக்கின்றேன். மிகச்சிறந்தவனே! மேகத்தின் காந்தி போன்ற திருமேனிநிறமுடையவனே! ஸ்ரீ கிருஷ்ணனே! இப்படி அகிஞ்சனனாகிய (ஒரு கைம்முதலுமில்லாத நான்) வேறு புகலற்று உன்னையே கூப்பிடுகின்றேன். ஸ்வாமீ! உன்னையொழிய வேறு ரக்ஷகர் யார் இருக்கிறார்? நீதான் என்னைக் கடைத்தேறச் செய்ய வேண்டும் என்கிறார்— 29

பாசு : **மனத்திலோர் தூய்மை இல்லை வாயிலோரின் சொல்லில்லை *
சினத்தினால் செற்றம்நோக்கித் தீவிளிவிளிவன்வாளா *
புனத்துழாய் மாலையானே! பொன்னிசூழ் திருவரங்கா! *
எனக்கினிக்கதி என் சொல்லாய் என்னையாளுடைய கோவே! 30**

உரை : தனி நிலத்திலே வளர்ந்து செவ்வியதான திருத்துழாய் மாலையை அணிந்துள்ளவனே! காவேரியாலே சூழப்பட்ட ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருப்பவனே! அடியேனை அடிமையாகக்கொண்ட ஸ்வாமியானவனே! காமம்: குரோதம், லோபம் முதலான பல துர்க்குணங்கள் நிறைந்த என் மனஸ்ஸிலே தெளிவும் சித்த சுத்தியும் கொஞ்சமும் இல்லை. நாலுபேர் பார்த்து இவன் நல்லவன் என்று, மாறு தப்பிப்போயும் ஒரு நல்லவார்த்தை வாயில் வருவதில்லை.

காரணமற்று கோபத்தினுல் பிறரைப்பகைமை தோற்றப்பார்த்து மிக்க கொடுமையாக வார்த்தை சொல்லா நிற்பேன். இப்படிப்பட்ட துர்க்குணங்கள் நிறைந்த எனக்கு இனிமேல் என்னகதி அருளிச் செய்யவேணும் என்று பிரார்த்திக்கிருர்— 30

பாசு : ஆர்த்துவண்டலம்பும் சோலை அணிதிருவரங்கந் தன்னுள் *
கார்த்திரளனைய மேனிக்கண்ணனே! உன்னைக்காணும் *
மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில் துரிசனுய *
மூர்க்கனேன் வந்து நின்றேன் மூர்க்கனேன் மூர்க்கனேனே 32

உரை : வண்டுகள் பலவகைப்பட்ட மலர்களில் பெருகும் தேனைப் பருகுவதற்காக ஆரவாரம் செய்துகொண்டு அலைந்துகொண்டிருக்கின்ற சோலைகளால் சூழ்ந்து அழகுபெற்றிருக்கிற திருவரங்கம் பெரிய கோயிலில் பரம போக்யமாய் பள்ளிகொண்டருளுகின்ற மேக சமூகத்தை ஒத்த திருமேனியையுடைய பெருமானே! நேரில் உன்னை தரிசிக்கக்கூடிய கர்மயோகம், பக்தியோகம், புண்ய க்ஷேத்திரவாசம், திருநாம சங்கீர்த்தனம் முதலிய உபாயமொன்றையும் அறியமாட்டாதவனுய் மனிதர்க்களுக்குள் கள்ளனுய் பிடிவாத குணத்தை விடமாட்டாத அடியேன் வேறு புகலற்று தேவரீர் திருமுன்பே வந்து நின்றேன். மூர்க்கனுகிய என்னுடைய தன்மையை நன்ருகக் கடாக்ஷித்து எனது பாபங்களைப்போக்கி உனது கிருபைக்குப் பாத்திரனுக்கிக் கொள்ளவெண்டுமென்று பிரார்த்திக்கிருர்— 32

பாசு : திருமறு மார்ப! நின்னைச் சிந்தையுள் திகழவைத்து *
மருவிய மனத்தராகில் மாநிலத்து உயிர்களெல்லாம் *
வெருவரக்கொன்று சுட்டிட்டு ஈட்டிய வினையரேலும் *
அருவினைப்பயனதுய்யார் அரங்கமா நகருளானே! 40

உரை : ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும், ஸ்ரீ வத்ஸமென்கிற மறுவையும் மார்பில் அணிந்துள்ளவனே! அரங்கமாநகருளானே! இப்பெரிய பூமண்டலத்திலே உள்ள ஜீவாராசிகளெல்லாம்—ஜகத்தெல்லாம் நடுங்கும்படியான கொடிய பரஹிம்ஸை முதலிய தீயச்செயல்களை பண்ணி விசேஷமாக சம்பாதித்துக்கொண்ட பாவங்களையுடையவர் களானுலும் உன்னைத் தங்கள் நெஞ்சில் விளங்கும்படி வைத்துக்

கொண்டு திருடமான அன்பையுடையராக இருப்பரேயானால் அவர்கள் தாங்கள் செய்த மஹாபாதகங்களினுடைய பலனை(தண்டனைகளை) அனுபவிக்கமாட்டார்கள். 40

பாசு: **வளவெழுந்த வளமாட மதுரைமாநகரந்தன்னுள் ***
கவளமால் யானைகொன்ற கண்ணனை அரங்கமாலைத் *
துளவத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல் *
இளையபுன் கவிதையேலும் எம்பிரார்க்கினியவாறே 45

உரை: அழகு மிகுந்திருப்பதும் வெண்மை நிறமுடையதுமான மாடங்களையுடைய பெருமைவாய்ந்த வடமதுரையில்...கவளங் கவளங்களாக உணவுகளையுண்டு மதம் பிடித்ததும் கொழுத்ததுமான குவலயாபீடமென்னும் கம்ஸனது யானையைக்கொன்ற ஸ்ரீ கிருஷ்ணனாகிய....கோயிலிலே கண்வளரும் எம்பெருமானைக்குறித்து....திருத்துழாய்க் கைங்கர்யத்தில் நிஷ்டரும் இயற்கையாகவே தாஸத்வத்தில் நின்றவருமான தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலையாகிய இத்திருமொழி மிகவும் குற்றம் குறைகளையுடைய கவித்வமாயிருந்தபோதிலும் பெரிய பெருமாளுக்கு பரமபோக்யமான ஆராவமுதமாக இருக்கும் என்கிறார்— 45

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்—

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

திருப்பள்ளி எழுச்சி

அவதாரிகை: கீழ்ப்பிரபந்தமாகிய திருமாலையில் இவ்வாழ்வார் தாம் விஷயாந்தரங்களினின்றும் தமது நெஞ்சை மீட்டு பகவத்விஷயத்திலே சேர்த்தது முதலாகத் தாம்பெற்ற பேறுகளைச் சொல்லிக்கொண்டு வந்து பகவத் பாகவத வைபவத்தை விரிவாக அருளிச்செய்து, எம்பெருமானோடே அணைந்து ஆனந்திக்கப் பெறவேணுமென்று அவாக்கொண்டு பெரியபெருமாளருகே செல்லவும் சென்றவிடத்திலே பெருமாள் திருக்கண் நோக்குதல், கை நீட்டி அணைத்தல், குசலபிரச்நம் பண்ணுதல், ஒன்றும் செய்யாதே பள்ளிகொண்டிருக்க...இக்கண்வளர்த்தியானது தம்பக்கல் அநாதரத்தாலன்று. இவரை நம்பக்கலில் ஆட்படுத்திக்கொள்ளும் வழியாது என்ற இச்சிந்தையோடே திருக்

கண் வளர்க்கிறுன் என்று கண்டு. அவ்வெம் பெருமானைத் திருப் பள்ளியுணர்த்தி அடியனை பாகவத பர்யந்தமான கைங்கரியத்தைக் கொண்டருள வேணுமென்று பிரார்த்திக்கிறதாயிற்று இப்பிரபந்தம்.

திருப்பள்ளி எழுச்சி

தனியன் திருவரங்கப்பெருமானரையர் அருளிச்செய்தது

விருத்தம் : **மண்டங்குடி என்பர் மாமறையோர் மன்னிய சீர் ***
தொண்டரடிப்பொடித் தொன்னகரம் வண்டு *
திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானை பள்ளி *
யுணர்த்தும்பிரானுதித்தவூர் *

உரை : வண்டுகள் நெருங்கிப் படிந்திருக்கின்ற கழனிகள் சூழ்ந்த அழகிய திருவரங்கத்துப் பெரிய பெருமாளைத் திருப்பள்ளியுணர்த்து மவராய், பரம உபகாரகராய், தொண்டரடிப்பொடி என்னும் திரு நாமமுடையாரான ஆழ்வார் அவதரித்த திவ்ய தேசமானது சிறந்த வைதீகர்கள் பொருந்தி வாழ்வதற்கீடான சீர்மையுடைய மண்டங்குடி என்கிற அனுதியான நகரமாகும் என்று பெரியோர் கூறுவர்-ஆழ்வார் களைக்காட்டிலும் அவர்கள் அவதாரஸ்தலமே அடைவதற்கு மேம்பா டுடைய்து என்ற விசேஷார்த்தம் உணரத்தக்கது.

கதிரவன்குணதிசை

பாசு : **கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தனைந்தான்**
கனையிருளகன்றது காலையம் பொழுதாய் *
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவரரசர்கள் வந்து வந்தீண்டி *
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும் *
அதிர்தலில் அலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 1

உரை : பொழுது விடிந்தற்கடையாளங்களையும் திருப்பள்ளி எழுந்தி ருக்க வேண்டிய காரணங்களையும் கூறி உணர்த்துகின்றுர். திருவரங் கத்தில் பள்ளிகொண்டருளும் ஸ்வாமியே ! சூரியன் கிழக்குத் திக்கிலே உதயகிரியின் கொடுமுடியில் வந்து கூடினன். இரவில் அடைந்திருந்த இருளானது நீங்கியொழிந்தது. அழகிய காலைப்பொழுதாகி சிறந்த புஷ்பங்களெல்லாம் விரிந்து தேன்வெள்ளமிடுகின்றன. இந்திரன்

குபேரன் முதலிய தேவர்களும், இராஜாக்களும் தம் தம் பதவிகளில் நின்றும் நழுவுதல் வாராமைக்காகத் தேவரீர் திருவடி தொழுகைக்கு ஒருவருக்கொருவர் முற்பட்டுத்திரண்டு வந்து....பள்ளியுணர்ந்தவாறே நம்மை முதலில் நோக்கவேணுமென்னுமாசையாலே தேவரீரது திருக் கண்ணோக்கான தெற்குத்திக்கிலே நிறைந்து நிற்கின்றனர். இவர் களோடு கூடவந்த இவர்களது வாஹனமாகிய பெரிய ஆண் யானைக் கூட்டங்களும், பெண் யானைத்திரள்களும், பேரிவாத்தியங்களும் சப் திக்கும்போது...எத்திசையிலும் அலையெறிகின்ற சமுத்திரகோஷத்தை ஒத்திருக்கின்றது. ஆதலால் திருப்பள்ளியை விட்டு எழுந்திருக்க வேணும் என்று பிரார்த்திக்கிறார். 1

பாசு : **கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக்**
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ ? *
எழுந்தனமலரணைப்பள்ளி கொள்ளன்னம் *
ஈன்பனி நனைந்த தமிருஞ்சிறகுதறி *
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய் *
வெள்ளுயிறுற அதன்விடத்தினுக்கனுங்கி *
அழுங்கிய ஆனையினருந்துயர் கெடுத்த *
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே 2

உரை : கீழ் திசைக்காற்றானது செழுமையுள்ள கொடியுடைத்தான முல்லைச் செடியில் மலர்ந்த அழகிய மலர்களை அணைந்து கொண்டு நறுமனத்துடன் இதோ வீசுகின்றது. இக்காற்று வீசவே தாமரை அல்லி முதலிய புஷ்பசயனத்திலே உறங்குகின்ற ஹம்ஸ மிதுநங்கள் இரவெல்லாம் மழைபோல் பெய்த பனியினாலே நனைந்த தங்களுடைய அழகிய இறகுகளை உதறிக்கொண்டு பொழுது புலர்ந்தது என்று உறக்கம் விட்டெழுந்தன. முன்பு முதலையினுடைய பாழிபோன்ற பெரியவாயிலுள்ள வெளுத்த கோரப்பற்கள் தனது காலில் ஊன்ற அம்முதலையினுடைய பல்விஷத்தினால் மிகவும் நோவுபட்ட கஜேந்தி ராழ்வானுடைய பெரிய துக்கத்தை போக்கி அருள் செய்த அரங்கநகர்க் கரசே! இன்று அடியோர்களைக் காத்தருள்வதர்க்காக பள்ளியெழுந் தருளவேணும் என்கிறார். 2

பாசு : **சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்** *
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி *
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ *

பாயிருளகன்றது பைம்பொழிற் கமுகின் *
மடலிடைக்கீறி வண்பாளைகள் நாற *
வைகறை கூர்ந்தது மாருதமிதுவோ *
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை *
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே 3

உரை : காணும் இடமெங்கும் சூரியக்கிரணங்களானவை பரவிவிட்டன. ஆகாயத்தில் நெருங்கிய நக்ஷத்திரங்களினுடைய மிக்கப்பிரகாசமானது குறைவுபட்டு மிக்க ஒளியுடைய இக்குளிர்ந்த சந்திரனும் ஒளி மழுங்கினன். பரந்த இருட்டானது நீங்கிற்று. இந்த விடியற்காலைக் காற்றானது பசுமை தங்கிய சோலைகளிலுள்ள பாக்கு மரங்களினுடைய மடல்களைக் கீறி விரிந்த அப்பாளைகளின் பரிமளத்தை முகந்துகொண்டு வீசுகின்றது. பெருந்த மிடுக்கையுடைத்தாய் தேஜஸ்ஸுடன்விளங்குகின்ற திருவாழியை அழகிய திருக்கையிலேயுடைய அரங்கத்தம்மா! தேவரீரது அழகை நாங்கள் கண்டுகளிக்கும்படி பள்ளியெழுந்தருள வேணும் என்பது 3

பாசு : மேட்டிளமேதிகள் தளைவிடும் ஆயர்கள் *
வேய்ங் குழலோசையும் விடைமணிக்குரலும் *
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள் *
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை *
வாட்டிய வரிசிலை வானவரேறே ! *
மாமுனிவேள்வியைக் காத்து. அவபிரதம் *
ஆட்டிய அடுதிற லயோத்தியெம்மரசே ! *
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே 4

உரை : உயர்ந்ததும் இளங்கன்றுயிருப்பதுமான எருமைகளை மேய்ச்சலுக்காகக் கட்டவிழ்த்து விடுகிற இடையர்கள் ஊதுகிற புல்லாங்குழலின் ஓசையும், எருதுகளின் கழுத்தில் கட்டியுள்ள மணிகளினுடைய ஒலியும் ஆகிய இவ்விரண்டும் கூடின சப்தமானது திக்குகளிலெல்லாம் பரவி விட்டது. தடாகங்களிலுண்டான தாமரை முதலியவற்றில் வண்டுகளின் திரள்கள் ஆரவாரம் செய்துகொண்டு கிளம்பிவிட்டன. இராக்ஷஸவர்க்கத்தை உருவழித்த அழகிய சார்ங்கத்தையுடைய தேவாதி தேவனே! விஸ்வாமித்திர மஹரிஷியினுடைய யாகத்தை நிறைவேற்றிவைத்து அவபிருதஸ்நாநம் செய்வித்தவனும் விரோதிகளை ஒழிக்கவல்ல மிடுக்குடையவனும், அயோத்தியாபுரியை ஆளுகையாலே எங்களுக்கு ஸ்வாமியுமான அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே 4

பாசு : புலம்பின புட்களும் பூம்பொழில்களின்வாய் *
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி *
கலந்தது குணதிசைக்கனைக் கடலரவம் *
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல்கொண்டு அடியிணைப்பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா ! *
இலங்கையர்கோன் வழிபாடு செய்கோயில் *
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 5

உரை : புஷ்பங்கள் மலர்ந்திருக்கின்ற சோலைகளிலுள்ள பறவைகளும் விழித்துக்கொண்டு ஆரவாரம் செய்கின்றன. இரவு கழிந்தது; உதய காலமானது வந்தது. கீழ்த்திசையிலே கோஷிக்கின்ற கடலினுடைய ஓசையானது எங்கும் பரவுகிறது. தேனைப்பருகிக்களிக்கின்ற வண்டுகள் சப்தித்துக்கொண்டிருக்கிற பலவகைப் பூக்களாலே தொடுக்கப்பட்ட அழகிய அலங்கனல் மாலைகளை ஏந்திக்கொண்டு தேவர்கள், தேவரீருடைய அடிஇணைகளில் பணி மாறுகைக்காக வந்து நிற்கின்றனர் ஆகையாலே அப்பனே! லங்கேஸ்வரனான விபீஷணன் தாஸவிருத்தி பண்ணுகிற கோயிலிலே கண்வளரும் எமது ஸ்வாமியே! பள்ளியெழுந்து அருள வேணும். 5

பாசு : இரவியர் மண்நெடுந் தேரோடுமிவரோ ? *
இறையவர் பதினொரு விடையரும் இவரோ ? *
மருவிய மயிலின் அறுமுகன் இவனோ ? *
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி *
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும் *
குமரதண்டம் புகுந்து ஈண்டிய வெள்ளம் *
அருவரை யனையநின் கோயில்முன் இவரோ ? *
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே 6

உரை : லக்ஷணமாய பெரிதான தேரோடுகூட பன்னிரண்டு சூரியர்களும் (த்வாதச ஆதித்யர்) ஜகத்துக்கு நிர்வாஹகர்ளான பதினோரு ருத்திரர்களும், ஏறு மயில் வாஹனத்தையுடைய தேவசேனாதிபதியான ஸுப்ரமணியனும், மருத்கணங்களான ஒன்பதுபேரும், அஷ்டவசுக்களும், மற்றுமுள்ள தேவதைகளெல்லாம் தேவரீரது முதற் கடாக்ஷ வீக்ஷணத்தை விரும்பி ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு வந்து நெருங்கி நிற்கின்றனர். இவர்களுடைய வாஹனமான குதிரைகள்

பூண்ட இரதங்களும் தேவஸேனாஸமூகங்களும் பாட்டும் கூத்துமாக வந்து புகுந்து நெருங்கி இருக்கிற திரளானது பெரிய மலைபோன்ற கோயில் வாசலில் தேவரீர் திருக்கண்முன் நிற்கின்றது. ஆகையால் அரங்கநகர்க்கதிபனே! பள்ளியெழுந்தருளாயே. 6

பாசு: **அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ? ***
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ? *
இந்திரனானையும் தானும் வந்திவனோ? *
எம்பெருமான் உன் கோயில் வாசல் *
சுந்தரர் நெருங்க விச்சாதரர் நூக்க *
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான் *
அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ? *
அரக்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே 7

உரை: எமக்கு ஸ்வாமியான தேவரீருடைய திருக்கோயிலின் வாசலிலே தேவந்திரனும் அவனது வாஹனமான ஐராவதயானையும் வந்திருப்பதுமன்றி தேவர் உலகிலுள்ள ஸகல தேவர்களும், இவர்களுடைய பரிவாரங்களும், மஹா தபஸ்விகளான ஸநகாதி மஹரிஷிகளும், மருத்கணங்களும், யக்ஷர்களும்...கந்தர்வர்கள் நெருங்கவும் வித்யாதரர்கள் தள்ளவும் தேவரீருடைய திருவடிகளை தொழுவதற்காக வந்து நிற்கின்றனர். தியானபாவசராய் ஆகாசமும் பூமியும் இடைவெளி இல்லாமல் இருக்கின்றது. அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே 7

பாசு: **வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க ***
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா *
எம்பெருமான் படிமக் கலங் காண்டற்கு *
ஏற்பனவாயின கொண்டு நன்முனிவர் *
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ? *
தோன்றினன் இரவியும் துலங்கொளிபரப்பி *
அம்பர தலத்தினின்று அகல்கின்றது இருள்போய் *
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே 8

உரை: தேவரீருக்கு ஸமர்ப்பிக்க மிக்க மனமுள்ள அருகம்புல்லும், சிறந்த சங்கநிதி பதுமநிதிகளையும் கையிலே வைத்துக்கொண்டு தேவர்களும், காமதேவனும், ஒளிமிகுந்த கண்ணாடி முதலானதை ஸ்வாமியான தேவரீர் கண்டருளுகைக்கும், இன்னும் திருவாராதனத்

திற்குத் தகுதியுள்ள உபகரணங்கள் எல்லாவற்றையுங்கொண்டு மஹரிஷிகளும், தும்புருநாரதர்களும் வந்து நிற்கின்றனர். சூரியனும் தனது மிக்க தேஜஸ்ஸை எங்கும் பரவச்செய்து கொண்டு உதய மானுன். இருளானது ஆகாசத்தினின்றும் நீங்கிப்போயிற்று. அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளால்— 8

பாசு : **ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி *
யாழ்குழல் முழவமோடு இசை திசை கெழுமி *
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள் *
கந்தருவரவர் கங்குலு ளெல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
ஆதலின் அவர்க்கு நாளோலக்கம் அருள
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே 9**

உரை : நாதம் நன்ருக அமைந்தது ஒரு பழுதுமில்லாத சிறுபறையும் ஒத்தைத்தந்தியையுடைய வாத்தியமும், மத்தளமும், வீணையும்,புல்லாங் குழலுமாய் திக்குகளெல்லாம் முழங்க...இசையுடன் சேர்ந்து பாட்டுப் பாடக்கடவரான கின்னரர்களும், கருடர்களும், கந்தர்வர்களும், இதோ மற்றுமுள்ள மஹரிஷிகளும், தேவர்களும், சாரணர்களும், யக்ஷர் களும் ஸித்தர்களும், தேவரீருடைய திருவடிகளில் வணங்குகைக் காக....இரவெல்லாம் நெருக்கத்தில் வருந்தி மயக்கமுற்றனர். ஆகை யாலே அவர்களுக்கு பகல் ஓலக்கம் (சீரிய சிங்காதனத்தில் கோஷ்டியு டன் விற்றிருந்து ஸேவை தருதல்)அருள அரங்கநகர் வாசனே! பள்ளி யெழுந்தருளாய். 9

பாசு : **கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தன இவையோ? *
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனே *
துடி இடையார் சுரிகுழல் பிழிந்துதறித் *
துகிலுடுத்தேறினர் சூழ்புனலரங்கா! *
தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து *
தோன்றியதோள் தொண்டரடிப்பொடி யென்னும் *
அடியனை அளியனென்றருளி உன்னடியார்க்கு *
ஆட்படுத்தாய்! பள்ளியெழுந்தருளாயே 10**

உரை : காவேரி தீர்த்தத்தாலே சூழப்பட்ட ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந் தருள்பவனே! பரிமளமுடைய தாமரைப் பூக்கள் நன்ருக மலர்ந்து

விட்டன. தாமரையை மலர்த்தவல்ல ஸூரியனுனவன்....கோஷம் செய்கையே இயல்பாகவுடைய கடலிலே உதயகிரியிலே வந்து தோன் றினன். (கதிரவன் கடலில் முளைத்தான் என்றும், மலையினுச்சியில் முளைத்தான் என்றும் பழமொழி உபமானமாகச் சொல்லப்படுவது) உடுக்கை போன்ற மெல்லிய இடையையுடைய மாதர்கள்....விடியற் காலத்திலே எழுந்து காவிரியில் நீராடி தமது சுருண்ட மயிர்முடியை நீர்பசையறபிழிந்து உதறிவிட்டு தம்தம் ஆடைகளை உடுத்துக்கொண்டு கரையேறிவிட்டார்கள். ஒழுங்காக கட்டிய திருத்துழாய் மாலையும், பூக் குடலையும் விளங்குகிற தோளையுடைய தொண்டரடிப்பொடி என்கிற திருநாமமுடைய தாஸனுகிய அடியேனை கிருபை பண்ணு வதற்கு உரியபாத்திரம் என்று திருவுளம்பற்றி அங்கீகரித்து தேவரீ ருடைய நித்ய கிங்கரர்களான பகவதர்களுக்கு ஆளாக்கவேணும் அதற்க்காக பள்ளியெழுந்தருள வேணும். 10

அடிவரவு— கதிர் கொழு சுடர் மேட்டு புலம்பின இரவியர் அந்தரம் வம்பு ஏதம் கடி அமலன்—

தொண்டரடிப்பொடி யாழ்வார் திருவடிகளே சரணம்—



திருப்பாணுழ்வார் வைபவ வரலாறு.

கங்கையிற் புனிதமாய காவிரி நதி.... தன்னில் நீராடியவற்கும், தன்கரையில் வாழ்பவர்க்கும் மாத்திரமேயன்றித் தனது தீர்த்தத்திற்பரிசித்த காற்றுச் செல்லுமிடமவ்வளவும் உள்ளார்க்கும் முத்திதரவல்ல மகாப்பிரபாவத்தையுடைய பொன்னிநதி பாயப்பெறுவதலால் ஒப்புயர்வற்ற தூய்மைபெற்ற சோழவள நாட்டிலே ராஜநகரங்கள் ஐந்தினுள் ஒன்ருனதும், தர்மாவர்மாவென்னும் செம்பியனுக்குக் குமாரியாக நீளாதேவி அவதரித்த இடமானதுமான, உறையூரிலே, துர்மதி வருஷத்தில் கார்த்திகை மாதத்து ரோகிணி நக்ஷத்திரத்திலே திருமாலினது ஸ்ரீவத்ஸத்தின் அம்ஸமாய் ஒருவர் ஓர் அந்தணனது கழனியிலே நெற்பயிர்க்கதிரில் அவதரித்தார். பிறவாது பிறந்த அத் தெய்வக்குழந்தையை அவ்வூரில் பஞ்சம சாதியிற் பாணர் குலத்துப் பிறந்தாைெரு வன்பார்த்து நமது நல்வினைப்பயனென்று மகிழ்ந்து எடுத்துக்கொண்டு போய் மலடுதீர்ந்து மருவிய காதல் மனையாளுந்தானுமாக.... பசுவின் பால் முதலிய பரிசுத்த ஆகாரங்களையே கொடுத்துப் போஷித்து வந்தான்.

அங்ஙனம் வளர்ந்த இவர் திருமாலருளால் தோன்றியவராதலால் இயற்கையாகவே உலகப்பற்றற்று மதுசூதனனது பாதாம்புஜத்திற்கு தம் மனத்தை மதுகரமாக்கியது மன்றி.... தாம்புகுந்த குலத்திற்கு ஏற்ற யாழ்ப்பாடலிலும் தேர்ச்சிபெற்று அதனுல் பாணர் என்றே பேர் கூறப்பட்டு நாரதபகவான்போல ஞானவைராக்கியங்

களோடு சங்கீத சாமர்த்தியமும் முதிர்ந்து நின்றார், இவ்வாறிருக்கையில் விஷ்வக்ஸேனர் இரகசியமாக எழுந்தருளி இவர்க்குத் திருவிலச்சினை சாதித்துச் சென்றார். அதனால் மகாபாகவதோத்தமராகிய இவர் ரங்கநாதனுக்குப் பாடல்த் திருத்தொண்டு செய்ய உத்தேசித்துப் புறப்பட்டு தாம் தாழ்ந்த குலத்தில் வளர்ந்தவராதலால் உபயகாவேரி மத்தியிலுள்ள ஸ்ரீ ரங்கதிவ்ய க்ஷேத்திரத்தில் அடிவைப்பதற்குத் துணியாமல் தென்திருக்காவேரியின் தென்கரையில் திருமுகத்துறைக்கெதிரிலே யாழுங்கையுமாக நின்றுகொண்டு நம் பெருமானைத் திசை நோக்கித் தொழுது அவ்வாதிபகவன் விஷயமாக அனேக திவ்யகீதங்களை கண்டமும் கருவியுமொக்க கேட்பவர் செவியும் மனமும் குளிர எம்பெருமான் திருவுள்ள முகக்க கின்னரகந்தர்வாதியர் வியக்கப்பாடிக்கொண்டிருப்பார். இப்படி பக்தியால் பரவசப்பட்டு நெஞ்சம் நெக்குருகக் கண்களில் ஆனந்த அருவி சொறிய உடலில் மயிர்க்கூச்செறிய நாடோறும் வைகறையிலே வந்து இசை பாடாநிற்கையில்.... ஒரு நாள் திருவரங்கச் செல்வனுக்குத் தீர்த்தகைங்கரியம் செய்கிற லோகஸாரங்கர் என்னும் அந்தணர் தலைவர் திருமஞ்ஜனத்தீர்த்தம் கொண்டுவருவதற்கு பொற்குடத்தை எடுத்துக்கொண்டு பொன்னித்துறையை அடைகையில் அருகிலிருந்த இந்தப் பாணரைப்பார்த்து அருவருத்து எட்டச்செல் என்று பலமுறை பணித்தும் இவர் இவ்வுலகத்தொடர்பை மறந்திருந்ததனால் அம்மொழியை செவியுறாமல் (காதிற்கேளாமல்) வாளாநின்றிட்டார். அச்செய்தியைக் கேள்வியுற்ற சாதியபிமானம் மிக்க பல பிராஹ்மணர்கள் ஓடிவந்து போ போ என்று பல முறை கூறவும் அது செவியிற்படாமையால் பாணகுலதிலகர் சிறிதும் பெயராமல் நிச்சலமாய் இராகம் பாடிக்கொண்டிருக்க அது கண்டு சிலர் வியந்து இவன் ஞானயோகியல்லன் கானயோகிபோலும் என்று நினைத்துப் போக.... முரட்டுகுண முடைய சிலர் எப்படியும் இப்பொழுது இவனை இடம் விட்டுத்துரத்தாது விடுவதில்லை என்று வீரவாதம் செய்து இவர் மேல் பல கற்களை எடுத்து இடைவிடாது ஒருங்கே எறிய அக்கற்கள் இவருடைய மெல்லுடல் மேல் நன்கு பட்டிடவும்.... இவர் பக்திவசப்பட்டதனால் சிறிதும் பரிசவுணர்ச்சி இன்றிச் சலியாதிருந்தார். அது கண்டு அமரர் கோன் போல அனைவரும் அஞ்சி அகன்றனர். அப்பொழுது இவரது உடம்பிலும் உள்ளத்திலும் கிஞ்சித்தும் வருத்தம் காணப்படவில்லையாயினும் பக்தர்களது அந்தரங்கத்தில் அமர்ந்திருக்கின்ற அரங்கநாதனது திருவுள்ளம் மிகக்கலங்க திருநெற்றியில் இரத்தப்பெருக்

குற்றது. அதனை நோக்கிய அர்ச்சகர் மிகவும் பயந்து கோயிலதிகாரி களுக்கு அறிவிக்க.... அவர்களும் இவ்வுற்பாதச் செய்தியை அரசனுக் குத் தெரிவிக்க.... அரசனும் மந்திரிகளோடு பலவிதமாக ஆராய்ந்தும் காரணங்காணுது கவன்று ஸ்வாமி திருவடியிலே பாரத்தை வைத் திட்டு வாளாவிருந்தான். பிறகு திருவரங்கேசன்... பாணரைப் பெருமைப்படுத்தவும், பகவத்பிராப்திக்கு ஜாதிமுக்யமன்று பக்த் தியே அமையும் என்ற ஸாஸ்திர ஸாரப்பொருளை நடத்திக்காட்டவும் திருவுள்ளங்கொண்டு லோக ஸாரங்கரது கனவில் தோன்றி நமக்கு நல்லன்பரான பாணப்பெருமாளை இழிவாக நினையாமல் நீர் சென்று தோள்களில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வாரும் என்று நிய மிக்க... அவரும் கண்விழித்தவளவிலே சொப்பனத்தில் ஸ்வாமி நியமித்ததை நினைந்து அதிசயித்து அப்படியே செய்து தாம் பேறு பெறக்கருதி அச்செய்தியை அங்குள்ளார் யாவருக்கும் தெரிவித்து அவர்களும் உடன் வரச்சென்று.... திரு முகத்துறையிலே தீர்த்த மாடித் தௌத வஸ்திர முடுத்துப் பன்னிரண்டு திருமண் காப்பு களணிந்து காலைக்கடன் கழித்து கரையேறிப்பாணர் வழக்கமாக நிற்க்கின்றயிடத்துச் சென்று அவர் திருவடிகளிலே சாஷ்டாங்கமாக தெண் டனிட்டு... தேவரீரைத் தம்மிடத்துக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வரவேண்டுமென்று நம்பெருமாள் அடியேனுக்குக் கட்டளை யிட்டருளினுர் என்று சொல்ல பாணர்தலைவர் நீசனுன அடியேன் திருவரங்க நகரை மிதித்திடுவேனே? என்று தம் சாதி இழிவைச் சொல்லி மறுத்திட்டனர். தேவரீர் மதித்திடவேண்டாம். அடியேனது தோளில் ஏறியருளும் என்று பிரார்த்திக்க.... அது கேட்டவளவிலே யாழ்பாணர் அளவிறந்த அச்சங்கொண்டு உடல் நடு நடுங்கி சொற் குழறி மகாபரிசுத்த மூர்த்தியான தேவரீர் அடியேன் திறத்து இங்ங னம் கூறவொண்ணுது பாகவதர் பாதத்துக்குச் சிரத்தைப் பீடமாக்கு தற்கு உரிய யானே இக்கொடுந்தொழில் புரிவேன்? இது செய்து பாகவதாபசாரப்படுதலினும் எரிவாய் நரகத்து அழுந்துவது நலமன்றோ என்று மிக்க வினயத்துடன் கூறினுர். அதன் பின் அருந்தவர் பகவன் நியமனத்தை விண்ணப்பப் செய்து அது கடத்தற்கு உரியதன்று எனப்பகர்ந்து நிர்ப்பந்திக்க.... பின்னர் வீணைப்பாடகர் கடவுள் கட்ட ளைக்கு யாதும் மாறுகூறமாட்டாமல் கூப்பியகையராய் அனந்தசயன னுக்கே தம்மை அர்ப்பணம் செய்து பரதந்திரராய் நின்றிட்டார். அதன் பின் முனிவரர் பாணநாதரைத் தோளிலேற்றிக்கொண்டு.... முக்தனுய்ப் போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருளிவித்துக்கொண்டு

திருமாமணி மண்டபத்திற்குச் செல்லுமாறுபோலச் சென்று ரங்கநாதனது திருமுன்பே இறக்கிவிட்டனர். உடனே முனிவாஹனர் (பாணர்) அணியரங்கனது திவ்ய மங்கள விக்கிரகத்தை திருவடி முதல் திருமுடிவரையில் நேத்திரானந்தமாக ஸேவித்து அதில் ஆழ்ந்து அதன் அழகை அனுபவித்து அவ்வனுபவாதிசயத்தைப் பின்புள்ளார்க்கும் தெளிவாக்கும் பொருட்டு, அமலனுதி பிரான், என்ற திவ்யப்பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளி அதன் இறுதியில்,

கொண்டல் வண்ணனைக் கோவலனுய் வெண்ணை *
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை *
அண்டர் கோன் அணியரங்கன் என்னமுதினைக் *
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணுவே *

என்ற துணிபை வெளியிட்டு உலகத்தாரை வாழ்வித்து மிகவும் உகப்போடு நிற்கையில் பெரிய பெருமாள் அத்திருமேனியோடு அவரை அங்கீகரித்தருளத் திருப்பாணுழ்வார் அனைவருங்காண அப்பிரானது திருவடிகளிலே ஐக்கியமாய் காய்ந்த இரும்பு உண்ட நீராயினர். அரங்கனை யாழிசையால் மகிழ்வித்த இவ்வாழ்வார் இவ்வுலகில் வாழ்ந்திருந்தது ஐம்பது வருஷ காலமென்பர்—

திருப்பாணுழ்வார் திருவடிகளே சரணம்—

உம்பர்தொழு மெய்ஞ்ஞானத் துறையூரான் வாழியே *
உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்தவள்ளல் வாழியே *
வம்பவிழ்தார் முனிதோளில் வத்தபிரான் வாழியே *
மலர்க்கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே *
அம்புவியில் மதிளரங்க ரகம்புகுந்தான் வாழியே *
அமலனுதிபிரான் பத்தும் அருளினுன் வாழியே *
செம்பொனடி முடியளவும் சேவிப்போன் வாழியே *
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே *

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

அமலனாதிபிரான்

திருமலை நம்பிகள் அருளிச்செய்த தனியன் (விருத்தம்)

பாசு : **காட்டவேகண்டபாத கமலம் நல்லாடை உந்தி** *
தேட்டரு முதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய் *
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித்தனிபுகுந்து *
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தான் பரவினோமே *

உரை : லோகஸாரங்க முனியின் தோளின் மேல் ஏறி தனியே உள்ளே புகுந்து அம்முனிவர் காண்பித்த படியே கண்டு ஸேவிக்கப்பட்ட.... திருவடித் தாமரைகளும், உயர்ந்த திருப்பீதாம்பரமும், திருநாபியும் கிடைத்தற்கு அரிதான பொன் அரைநாணும், பிராட்டி வாழ்கிற மார்பும் கழுத்தும், சிவந்தவாயும், சோர்வு இல்லாத திருக்கண்களும், ஆகிய இவற்றோடு கூடிய திருமேனியை இசையுடன் கூடிய பாசுரங்களின் அனுஸந்தானத் தோடு கூடி ஸேவித்து ஆனந்தமடைந்த... திருப் பாணாழ்வாருடைய அடி இணைகளை துதிக்கின்றோம்—என்று ஆழ்வா ரிடத்து தமக்குள்ள ஆர்வத்தை திருமலை நம்பிகள் வெளியிடுகிறார்.—

அமலனாதிபிரான்-அழகிய மணவாளனது
திருமேனியழகில் பாதாதி கேசாந்தமாக ஈடுபடுதல்.

பாசு : **அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை யாட்படுத்த** *
விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில்
வேங்கடவன் *
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்
தம்மான் திருக் *
கமலபாதம் வந்து என் கண்ணிலுள்ளன
வொக்கின்றவே 1

உரை : பரிசுத்தனாகவும், ஜகத்திற்கு ஆதிகாரண பூதனாய், உபகார கனாய், இழி குலத்தவனான என்னைத் தனது அடியார்களான பாகவ தர்களுக்கு ஆட்படுத்தி ஒரு சீரிய பொருளாக்குகையாலே வந்த சிறந்த புகழையுடையவனாய், நித்திய ஸூரிகட்குத் தலைவனாக இருந்து கொண்டு தன்னை அண்டினவர்கட்காக பரிமளம் மிக்க சோலைகளை

யுடைய திருவேங்கடமலையில் வந்து தங்கியவனாய் தன்னை வந்தடைபவர்க்கு எளிதில் கிட்டான் என்கிற குற்ற மற்று அண்டினவர்க்கடிமையாகிற பரதந்திரத்தை வெளியிட்டு நிற்பவனாய், அடியாருடைய குற்றத்தைக் காண்கையாகிற தோஷமில்லாது வாத்ஸல்யத்தோடு கூடினவனாய், சேஷ சேஷி முறை (தலைவன் சேவகன்) நழுவாதபடி நியாயமே செல்லும் நிலமான பரமபதத்திற்கு நிர்வாஹகருய்.... உயர்ந்த மதிள்களையுடைய கோயிலில் கண்வளர்கின்ற ஸ்வாமியான அழகிய மணவாளனுடைய திருவடித்தாமரைகளானவை தானாகவே வந்து என் கண்ணுக்குள்ளே புகுந்துகொண்டனபோலிருக்கின்றனவே?—1

பாசு: **உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற** *
நிவந்த நீள் முடியன் அன்று நேர்ந்த நிசாசரரை *
கவர்ந்தவெங்கணைக் காகுத்தன் கடியார்
பொழிலரங்கத்தம்மான் அரைச் *
சிவந்த ஆடையின்மேல் சென்றதாம் என் சிந்தனையே 2

உரை: கீழ்ப்பாட்டில் திருக்கமலபாதம் வந்து என்றதும், இப்பாட்டில் ஆடையின் மேல் சென்றதாம் என் சிந்தனையே என்றதும், முதலில் எம்பெருமான் தானாக ஆழ்வாரை அடிமைகொள்ள மேல் விழுந்தபடியும், பிறகு ஆழ்வார் ருசிகண்டு தாம்மோல் விழுகிறபடியும் இவற்றால் தோற்றும்—

மகிழ்ச்சியோடு கூடிய மனத்தையுடையவனாய்கொண்டு மகாபலியிடம் மூவுலகங்களையும் யாசித்து அளந்து அண்ட கடாஹத்தளவும் சென்று முட்டும்படி உயர்த்தியையடைந்த பெரிய திருமுடியையுடையவனாயும், முற்காலத்தில் எதிர்த்து வந்த ராக்ஷதர்களை உயிர் வாங்கின கொடிய அம்புகளையுடைய இராமபிரானாயும், மணம் மிக்க சோலைகளையுடைய ஸ்ரீ ரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனுமான எம்பிரானுடைய திருவரையில் சாத்திய பீதாம்பரத்தின்மேல் (பட்டுவஸ்திரம்) என்னுடைய நினைவானது பதிந்து விட்டது— 2

பாசு: **மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்** *
சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையாள் *
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேலயனைப்
படைத்ததோரெழில் *
உந்தி மேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே 3

உரை : சபல சித்தமுடைய ஸம்ஸாரிகளுடைய நெஞ்சமானது ஒரு நிலையிலில்லாமல் ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றுகிறது போல குரங்குகள் ஒரு கிளையில் நின்றும் மற்றொரு கிளையில் பாயப்பெற்ற வட திசையிலுள்ள திருவேங்கடமென்னும் திருமலையிலே தேவாதி தேவர்களும் வந்து கைங்கர்யங்கள் பண்ணவும் பக்தர்கள் பூக்களைக் கொண்டு ஆராதிக்கவும், அவற்றைப்பெறுகைக்காக அங்கே நித்ய ஸந்நிஹிதனாக நிற்பவனும், பெரியகோயிலிலே ஆதிசேஷனாகிய படுக்கையையுடையமனுமான அழகிய மணவாளனுடைய செவ்வானம் போன்ற நிறத்தையுடைய திருப்பீதாம்பரமும், அப்பீதாம்பரத்தின் மேலே பிரமனைப்படைத்த ஒப்பற்ற அழகையுடைய திருநாபிக் கமலமும் ஆகிய இவற்றின் மேல் படிந்து விட்டதே என்னுடைய மனஸ்ஸிலே விளங்குகிற ஆத்மசொரூபம்— 3

பாசு : **சதுரமாமதின் சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து ***
உதிரவோட்டி ஓர் வெங்கணை யுய்த்தவன் ஓதவண்ணன் *
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான்
திருவயிற்று *
உதரபந்தம் என்னுள்ளத்துள் நின்று உலாகின்றதே 4

உரை : (செறிவும், திண்மையும், உயர்த்தியுமுடைத்தாய் அஷ்டதிக்பாலகர்களுக்கும் எட்டிப்பார்க்கவொண்ணாத) நாற்சதுரமான மதிள்களாலே சூழப்பட்ட லங்காநகரத்திற்கு அரசனான இராவணனை முதல் நாள் யுத்தத்தில் தோற்று ஓடும்படி செய்து.... மறுநாட்போரில் அவனது தலைபத்தும் உருண்டுபோம்படி ஒப்பற்ற கூர்மையான அஸ்திரத்தை பிரயோகித்தவனும், கடல் போல் குளிர்ந்ததும் சியாமளமுமான திருமேனியுடையவனும், வண்டுகளானது மதுரமாக இசைபாட அதற்குத்தகுதியாக சிறந்த மயில்கள் கூத்தாடப்பெற்ற திருவரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்வாமியுமான அரங்கநாதனுடைய திருவயிற்றில் சாத்தி இருக்கிற உதரபந்தம் (அரை நாண்) என்னும் ஆபரணமானது என் நெஞ்சினுள் நிலைத்து நின்று உலாவுகின்றது ஆஹாஹா— 4

பாசு : **பாரமாய பழவினைப்பற்றறுத்து என்னைத்தன் ***
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான் *
கோரமாதவம் செய்தனன்கொல் அறியேன்
அரங்கத்தம்மான் *
வாரமார்பதன்றோ அடியேனை ஆட்கொண்டதே 5

உரை காலமுள்ள வரையிலும் பிராயச்சித்தம் பண்ணினுலும் கழிக்க வொண்ணுதபடி வளர்ந்து தாங்கக்கூடாத சுமையாயிருக்கின்ற எனது அநாதியான பாபங்களின் சம்பந்தத்தைத் தொலைத்து அதனுல் பாபம் நீங்கப்பெற்ற என்னைத்.... தன்னிடத்தில் அன்பு உடையவனுகப் பண்ணிவைத்தான் ஸ்ரீ ரங்கநாதன். இப்படிச் செய்து வைத்ததுமல்லாமல் அடியேனுடைய நெஞ்சத்திலும் குடிபுகுந்து கொண்டான் இப்படிப்பட்ட பாக்கியத்தைப் பெறுதற்கு உறுப்பாக நான் முற்பிறவியில் உக்கிரமான பெரிய தொருதபஸ்ஸை செய்திருப்பேனே என்னவோ? அறிகிலேன், ஸ்ரீ ரங்கநாதனுடைய.... பிராட்டியையும், முத்து ஹாரத்தையுமுடைய அத்திருமார்பன்றே? தாஸனுன என்னை ஆட்படுத்திக்கொண்டது— 5

பாசு : **துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய** *
வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேய அப்பன் *
அண்டரண்ட பகிரண்டத்து ஒருமாநிலம்
எழுமால்வரை முற்றும் *
உண் கண்டம் கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே 6

உரை : ஒரு துண்டாக இருக்கிற (அர்த்த சந்திரன்) கலாமாத்திரமான வெளுத்த சந்திரனை முடியிலே தரித்திருக்கிற சிவனுடைய பிச்சை எடுத்துத்திரிந்த பாதகத்தைப் போக்கினவனும், அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் வாழ்வதற்கிடமான சோலைகள் சூழப்பெற்ற.... திருவரங்கப் பெருநகரிலே பொருந்தி இருக்கின்ற ஸ்வாமியுமான அரங்கநாதனுடைய.... ஸகல பதார்த்தங்களையும் பிரளய வெள்ளத்தினின்றும் தப்பவைக்க....அண்டத்துக்கு உட்பட்ட தேவாதி வர்க்கங்களையும், அண்டங்களையும், அண்டாவரணங்களையும், ஒப்பற்ற மகாபிருதிவியையும் எழு குலபர்வதங்களையும், இன்னும் சொல்லிச் சொல்லாத மற்றெல்லாவற்றையும் உண்ட (அமுதுசெய்த) திருக்கழுத்தைக் கண்டீர்களா? தாஸனுன என்னை உஜ்ஜீவிப்பது (கரை ஏற்றுவது) 6

பாசு : **கையினுர் சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்** *
மெய்யனுர் துளபவிரையார் கமழ்நீள்முடி எம் *
ஐயனுர் அணியரங்கனுர் அரவினணைமிசை
மேய மாயனுர் *
செய்யவாய் ஐயோ † என்னைச் சிந்தை கவர்ந்ததுவே 7

உரை : திருக்கைகளில் பொருந்தி இருக்கிற லக்ஷணமான சுழியை யுடைய திருச்சங்கையும், தீப்பறக்கின்ற திருவாழியையும் உடைய வராய், நம்போன்றவர்கள் கண்ணாரக்காணும்படியாக பச்சைமாமலை போல், பெரியதொரு மலைபோன்ற திருமேனியையுடையராய், திருத் துழாயின் நறுமணம் மிகப்பெற்று அதனால் பரிமளம் வீசுகின்ற உயர்ந்த கிரீடத்தையுடையராய், எமக்கு ஸ்வாமியாய், அழகுவாய்ந்த திருவரத்தில் கண்வளர்ந்து அருள்பவராய், அனந்தனுகிற திருப்பள்ளி யின் மீது பொருந்திய.... ஆச்சர்ய செய்கைகளையுடையவரான ஸ்ரீரங்க நாதனுடைய பவளம் போன்று சிவந்த வாயானது என்னுடைய நெஞ் சைக்கொள்ளைகொண்டது, ஐயோ என் செய்வேன்? என்கிறார்— 7

பாசு : **பரியனாகிவந்த அவுணனுடல் கீண்ட அமரர்க்கு** *
அரிய ஆதிப்பிரான் அரங்கத்தமலன் முகத்து *
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி
நீண்ட அப் *
பெரியவாய கண்கள் என்னைப் பேதமை செய்தனவே 8

உரை : மிகவும் ஸ்தூலமான (பெருத்த) வடிவைக்கொண்டு ... பிரக லாதனை நலியவந்த அஸுரனான இரணியனுடைய சரீரத்தை கிழித்துப் போட்டவனும், (எம்பெருமானுடைய அருள் ஒன்றையே நம்பி அவனு டைய சரணமே சரணம் என்ற உறுதியற்றவர்கள்) பிரமன் முதலிய தேவராகிலும் அருகில் அணுக முடியாதவனும், ஜகத்துக்குக்காரண மானவனும், மஹோபகாரகனும், கோயிலில் எழுந்தருளி இருக்கிற பரமபாவனனுமாகிய எம்பெருமானுடைய திருமுகமண்டலத்தில் உள்ள கறுத்த நிறமுடையவையாய், விசாலமானவைகளாய், பிரகாச முடையவையாய், செவ்வரி படர்ந்திருப்பனவாய், (சிறு கொடிபோன்ற சிவந்தரேகை ஓடுதல்) நீண்டிருப்பனவாய், பெருமை பொருந்தியவையு மான அந்தத்திருக்கண்களானவை அடியேனை உன்மத்தனாகச்செய்து விட்டன—என்று திருக்கண்களில் ஈடுபட்டு அதிசயப்படுகிறார்— 8

பாசு : **ஆலமாமரத்தினிலைமேல் ஒருபாலகனாய்** *
ஞால மேழும் உண்டான் அரங்கத்தரவினணையான் *
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்ல
தோரெழில் *
நீலமேனி ஐயோ நிறைகொண்டதென் நெஞ்சினையே 9

உரை : மிகப்பெரிதாய் வளர்ந்திருப்பதொரு ஆலமரத்தின் ஒரு சிறிய பசுந்தளிரிலே (இலையிலே) தனிக்குழவியாய்ப்பள்ளிகொண்டு ஏழுல கங்களையும் திருவயிற்றிலே வைத்து நோக்கினவனும், பெரியகோயி லிளே திருவனந்தாழ்வாருகிற பள்ளியின் மீது சாய்ந்தருள்பவனுமான ஸ்ரீ ரங்கநாதனுடைய.... அழகிய சிறந்த ரத்னங்களாற்செய்யப்பட்ட ஹாரமும், முத்துவடமும் ஆகிய இவை போன்ற அனேகம் திருவா பரணங்கள் அபரிமிதமாக விளங்க.... எல்லை காணமுடியாமல் இருக் கப்பெற்றதும், ஒப்பற்றதுமான அழகையுடைய கருநெய்தல் மலர் போன்ற திருமேனியானது எனது நெஞ்சினுடைய அடக்கத்தைக் கொள்ளைகொண்டு போயிற்று, ஐயோ இதற்கென்ன செய்வேன் ? மயக்கமுறுகிறேனே ? என்கிருர்— 9

பாசு : **கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ** *
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை *
அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் *
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே **10**

உரை : கானமேகம் போன்று கறுத்து கண்டாருடைய விடாயைத் தீர்க்கலல்ல குளிர்ந்ததிருமேனியுடையவனும், நந்தகோபகுமாரனாய் பிறந்து வெண்ணெ உண்ட திருவாயையுடையவனும், (பண்டு வெண் ணெயுண்ட முடை நாற்றம் வாஸனை) இன்னும் பெரிய பெருமாள் பவளவாயில் கமழ்வதாக அனுபவிக்கிருர். என்னுடைய நெஞ்சைக் கொள்ளை கொண்டவனும், நித்யஸூரிகட்குத்தலைவனும் பூமண்டலத் திற்கு அலங்காரமான திருவரங்கத்தில் கண்வளர்பவனும் . உப்புச் சாருய் எட்டாத நிலத்திலேஇருக்கிற தேவர்கள் அமுதம் போலன்றி— பரமசுலபமாகவும் எனக்குப் பரமபோக்கியமான அமுதமாக இருப்ப வனுமான அழகிய மணவாளனை ஸேவிக்கப்பெற்ற எனது கண்களா னது வேறொன்றையும் (பரமபத நாதனையும் கூட) காணமாட்டா—. அமிர்தபானம் பண்ணினவர்கள் பாலையும், சோற்றையும் கண்ணெடுத் தும்பாரார், அது போல பர வியூஹாதிகள் மற்றுமுள்ள அர்ச்சாவ தாரங்கள் ஒன்றையும் காணமாட்டாது என்கிருர்— 10

இப்பாட்டு அருளிச் செய்தவுடன் பெரியபெருமாள் ஆழ்வாரை அத்திருமேனியோடே அங்கீகரித்தருள அனைவருங்காண அப்பிரா னது திருமேனியிலே ஆழ்வார் அந்தர்பவித்து இரும்பு உண்ட நீராயினர் என்று ஸம்பிரதாயம் வல்ல பெரியோர்கள் அருளிச்செய்யக் கேட்டிருக்கையாகயிருக்கும்—

அடிவரவு— அமலன் உவந்த மந்தி சதுரம் பாரம் துண்டம் கை பரி ஆலம் கொண்டல் கண்ணி—

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

மன்னுமணவாள மாமுனிவன் மாண்புரைக்கு *
மன்னபுகழண்ணங்கராசிரியன்—சொன்ன *
அமலனாதிப்பிரான் ஆழ்பொருளாராய்வார் *
கமலைநாதன் தாட்குரைப்பர் காப்பு *

ஸ்ரீ ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்பிரபந்தப் பாசுரங்களின் தெளிவுரை

முற்றும்

பிழை திருத்தங்கள்.

பிழை	திருத்தம்	பக்கம்
மணிவண்ண	மணி வண்ணு	2
கடலுன்ன முதள்ன	கடலுள்ள முதன்ன	7
அன்புடன் கட்டியவருமான	அன்புடன் கூடியவருமான	17
எதம்பிரான்	எம்பிரான்	18
செய்யிறும்	செய்யினும்	19
பெரூமை	பெருமை	19
கடவகடவ	கூவக்கூவ	19
காதனி	காதணி	28
இவையா	இவையாம்	29
பெருமையைசெல்லி	பெருமையைச்சொல்லி	56
பனேக்கச்சும்	பணேக்கச்சும்	56
அசைந்திட்டாய்	அசந்திட்டாய்	57
பெருமையற்ற	பெருமைபெற்ற	58
பருத்தி	பருத்த	71
ஆனே	ஆணே	77
விட்டிசித்தன்	விட்டுசித்தன்	80
இவளுடைய	இவருடைய	99
கோயிலுடையாள்	கோயிலுடையான்	99
ஆசமர்த்தை	ஆனசமர்த்தை	104
கனிதிசைபாடும்	கனிந்திசைபாடும்	108
ததைத்காதே	ததைக்காதே	113
பிருங்காரண்யத்தில்	பிருந்தாரண்யத்தில்	129
பிரும்பசர்ய	பிரும்மசர்ய	142
உண்டுஸேவித்த	உண்டுசேஷித்த	143
ஒருவும் தோரும்	ஒருவும் தோளும்	149
கணிஇல்லே	காணிஇல்லே	151
என்னேயாருடைய	என்னேயாளுடைய	151
அலங்கனல்	அலங்கல்	157
எழுந்தருளால்	எழுந்தருளாய்	159
உண்கண்டம்	உண்டகண்டம்	168
திருவரத்தில்	திருவரங்கத்தில்	169
உறுதியற்றவர்கள்	உருதியுற்றவர்கள்	169